JL
Tm211, M87UP
M87·1
162063

THE

# VILLAGE SCHOOLMASTER.

# உபாத்தியாயர்.

"யதா குரு ததா சிஷியா"


Vol. I.] JANUARY, 1888.


1887-88

அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | ட்ரோபெல் | 114 |
| 2. | கணக்கு | 117 |
| 3. | வித்தியாசாலையையும் உபாத்தியாயரையும் குறித்தது | 121 |
| 4. | விஷயபாட சிக்ஷை | 124 |
| 5. | கேள்வி கேட்டல் | 127 |
| 6. | கீழ்ப்படிதல் | 128 |
| 7. | பாடசாலையில் பாட நடத்துமுறை | 129 |



80/2008

Acc. No. 162063

No. pages



Madras:

PRINTED AT THE ALBINION PRESS.

1888.

வருஷச் சந்தா தபால்கூலி உள்பட ரூபா 1

தனிப்பத்திரிகை விலை அணா 2; தபால்கூலி அணா ½.



...கற்பகம்

சென்னை 600 008

நூலகம்

THE

# VILLAGE SCHOOLMASTER.

# உபாத்தியாயர்.

1.] JUNE, 1887. [No. 1.

## பத்திரிகையின் வரலாறு.

யாமிப்பத்திரிகையை ஆரம்பிப்பதி னபிப்பிராயத்தை முன்பு பிரகாஞ் செய்த அறிக்கையின் மூலமாய் அனேகமாய் வெளியிட்டிருக்கிறோம். உபாத்தியாயர்களுக்குக் குறைகள் நேரிடும்பொழுது முறையிட்டுக்கொள்ள என்ன சாதனங்களிருக்கின்றன. எதாவது சந்தேயங்கள் தீர்த்துக்கொள்ளவேண்டுமானால் என்ன மார்க்கமிருக்கின்றது. யாம் அறிக்கையில் வெளியிட்ட அனேக சங்கதிகளோடுகூட இன்னும் அனேக பிரயோஜனங்களை யடையலாம். "இங்கிலீஷ் படித்தவர்கள் தாமே பத்திரிகை வாங்குவார்கள். பத்திரியம்படித்தா தமிழ்ப்பத்திரிகைப் பிரசுரம் செய்யப்போகிறீர்" என்று ஒருவர் சொல்ல, அதை மிகவும் இழிவாய் நினைத்து மறுத்துப்பேசுகிறோம். உபாத்திமைத் தொழிலை வகித்தவர்கள் சாதுக்களென்பதற்கும் யோக்கியரென்பதற்கும் யாதொரு சந்தேகமுமில்லை. அப்படியிருக்க அவர் இப்படிப்பட்ட அபிப்பிராயத்தை வகித்ததின் காரணமென்னவோ? ஒருவேளை இங்கிலாந்து முதலான இடங்களிலிருப்பவர்களைப்போலிவர்கள் முன்னுக்கு வரமாட்டார்களென்பதோ? எதுவாயிருந்தபோதிலும் யாமும் அவரோடு சேர்ந்து இப்பேர்க்கொத்தவைகளெல்லாம் சரிதானென்று சொல்லும்படியாய் கட்டுக்கட்டாக்கவென்பது இல்லை. ஸ்டாண்டர்ட் ஆர்டரில் புதிதாய் அனேகவிதமான பாடங்களும், புதுமுறைகளும் சொல்லியிருக்கின்றன. அவை இன்னவையென்று இந்நாயகர்களுக்கு விளங்கவில்லை. அச்சங்கடம் இன்றைய தினத்தோடு நீங்கித் தீர்ந்தெனலாம். சாதாரண கிராண்டு என்றும், மெரிட் கிராண்டு என்றும், இரண்டுவிதமான கிராண்டுகள் உண்டாயிருக்கின்றன. சரியான வழியில் கற்பித்தால் மெரிட் கிராண்டு கிடைப்பதற்கு யாதொரு தடையுமில்லை. அதற்கு வேண்டிய உபகரணங்கள் இப்பத்திரிகையின் மூலமாயும், இன்னும் யாம் பிரசுரம்செய்யப்போகும் அனேக புஸ்தகங்களின் மூலமாயும் தெரிவிப்போம். யாமாவது, மற்றவர்களாவது இவ்விஷயங்களைப்பற்றி புஸ்தகம் பட்டிருக்கிறோமென்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? இப்படி இப்பத்திரிகையாலாகும் அநுகூலங்களைப்பற்றித் திரும்பத்திரும்பச் சொல்லுவது அவசியமில்லை. யாம் சொன்ன எல்லா சங்கதிகளையும் நடத்த சித்தமாயிருக்கிறோம்; ஆனால் உங்களைக் கேட்டுக்கொள்ளுவது இவ்; ஒவ்வொரு கிராம

உபாத்தியாயரும் இதற்குச் சந்தாதாரராகவேண்டும்; அடிக்கடி கண்ட உபாத்தியாயர்களிடத்திலெல்லா மிதைப்பற்றிப் பேசவேண்டும்; ஒவ்வொரு நாமல் பாடசாலை பிள்ளையும் இதற்குச் சந்தாதாரனுகவேண்டும்; நம்ம சிநேகிதனிடத்திலிருந்தால் படித்துக்கொள்ளலாமென்று நினைக்கக்கூடாது; தன்னிடத்திலிருப்பதற்குச் சமானமில்லை. நமக்கு வேண்டும்போதெல்லா மெடுத்துப்பார்த்துக்கொள்ளலாம். அவைகளை சேகரித்துவைத்தால் பிறகு நமக்கே ஞாபகமூட்ட உதவுவதும் தவிர, நமக்குப் பிறகு மற்றவர்களுக்கும் உபயோகப்படும். சில வருஷங்களுக்குப் பின்பு இவைகளை யெடுத்துப்பார்த்தால், அக்காலத்தின் படிப்பின் நிலைமை இப்படி யிருந்ததல்லவாயென்று அறிந்துகொள்ளலாம். சென்னை இராஜதானியில் எத்தனை உபாத்தியாயர்களிருக்கிறார்களோ அத்தனைபேரும் இதற்குச் சந்தாதாரராகவேண்டுமென்பது கருத்து அப்பொழுதுபத்திரிகையின் உருவம் பெருகுமென்பதற்கு யில்லை. இவ்வளவு சொற்ப சந்தாவை யேற்படுத்தி தங்கள் காவ இம்மாதிரியே செலவழிப்பவர்களுடைய அபிப்பிராய மென்ன நிறைவேற்றுவதே எமது கடைசி பிரார்த்தனையாம்.

இப்பத்திரிகை மாத மொருமுறை பிரசுரமாகும். இதின் தபால் கூலி உட்பட வருஷத்திற்கு ரூபாய் ஒன்று. அதாவது தபால்கூலி உட்பட மாதமொன்றுக்கு ரூபா 0-1-4 இது கைவிட்டுப்போவதென்றும் நினைக்கத் தேவையில்லை. முதலில் உங்கள் கையைவிட்டுப் போவதாயிருந்தாலும் பிறகு இத்தொகையை மெரிட்டுகிராண்டாக வாங்கலாம். முன்பண மனுப்பாமல் பத்திரிகையை அனுப்போம். சென்னப்பட்டணம் உபாத்தியாயர் பத்திரிகை பத்திராதிபர் அல்லது மானேஜருக்கு என்றால் வந்து சேரும். மேற்படி ஆபீசு சென்னப்பட்டணம் ஐயாபிள்ளைத் தெரு 17-வது கெ[illegible]திருக்கிறது.

162063

## கிண்டர் கார்டன்.

இங்கிலீஷில் குழந்தைகளென்னு மர்த்தத்தைத் தரத்தக்கப் பெயரான [illegible]ர் (Children) என்னும் வார்த்தை மருவி கிண்டர் (Kinder) என்றாயிற்று. [illegible]மாதிரியாய் தோட்டமென்னு மர்த்தத்தைத் தரத்தக்க இங்கிலீஷ் மொழியாகிய கார்டன் (Garden) என்பது கார்டனுக (Garden) மருவியது. இப்பதத்தையும் ஒன்றாய்ச் சேர்த்தால் குழந்தைகள் தோட்டம் என்றாகிறது. குழந்தைகள் தோட்டமாவதென்ன? குழந்தைகளென்னும் செடிகளை வளர்க்கும் தோட்டம், அதாவது தோட்டத்தில் பூமியைக் கெல்லி, பாத்திகட்டி, காத்தையறிந்து விதைபோட்டு தண்ணீர்வார்த்து, எருவிட்டு, அது முளைத்தப்பாடு அதை அனேக இடையூறுகளினின்றும் பாதுகாத்து இப்படி செய்து அது செடியாகி, மரமாகி எப்படி பலங்கொடுக்குமோ அப்படியே குழந்தைகளுக்கும் வித்தையை அப்பியசிக்கும்படியான இடமென்பது. அதாவது அவர்களின் மனோதத்துவ விர்த்தி, சக்தி, முதலானவை யறிந்து எந்தெந்தகாலத்திற்கு எப்படி கற்பிக்கவேண்டுமோ அப்படி கற்பிப்பது. ஆகை

Tm 211, M37 UP



பால் மனோதத்துவமும் உபாத்தியாயர் அறிந்திருந்தால் அப்போது அவருக்கு பிள்ளைகளின் பிரதிவயதிலுமிருக்கப்பட்ட சக்தியை யறிந்துகொண்டு போதிக்கலாம். இவ்விஷயற்றைப்பற்றி பிரதிமாதமும் இப்பத்திரிகையில் சிறிது சிறிது பிரசுரமாகும்.

இப்படி போதிக்கும் விஷயத்தைப்பற்றி முன்னுளில் பெஸ்டலாட்ஜி என்பவரும் பின்னுளில் பிரீபல் என்பவரும் முதல் முதல் ஏற்படுத்தினவர்கள். முன் சொன்னவருக்கு சுவிட்ஜர்லாண்டும், பிரீபல் என்பவருக்கு ஜர்மனியும் பிறப்பிடம். பெஸ்டலாட்ஜியினிடத்தில் பிரீபல்சிஷியாராககூட இருந்தாகத் தெரியவருகிறது. இப்படி குழந்தைகளுக்குக் கற்பிக்கும் வித்தையைப் பற்றின ஆதிகர்த்தாக்களாகிய இவ்விருவருடைய சரித்திரத்தைப்பற்றி நமக்குத் தெரிவது மிக அவசியம். ஆனதுகொண்டு கிண்டர்கார்டன் உட்சமாசாரங்களை இன்னதென்று தெரிவிப்பதற்குமுன் அவ்விருவருடைய சரித்திரத்தைச் சொல்லுவோம். (இன்னும் வரும்.)

## மனோதத்துவமும்-வித்தியாப்பியாசமும்.

சாஸ்திரமென்பதும் (Science) செய்கையென்பதும் (Art.)

ஒருகாரியஞ்செய்வதினுலேயே, அதைப்பற்றி முன்பேகொஞ்சம் தெரிந்திருக்கவேண்டுமென்பது சாதாரணமாய் ஏற்படுகிறது. தெருந்தில்லாவிட்டால், அதைச்செய்வது கூடாமை. அப்படி தெரிந்திருப்பது நாம்செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் சாதனமாக ஏற்படுகிறது. நாம் ஒரு காரியத்தைச்செய்துமுடித்து பிரயோஜனப்படவேண்டுமானுல், அது நிறைவேறவேண்டிய சாதனங்கள் முன்பே அறிந்து எக்காரியத்துக்கு எப்படி உபயோகப்படுத்தவேண்டுமோ அதுவும் தெரிந்திருக்கவேண்டும். இது பிரதி காரியத்திலும் கிரகிக்கக்கூடிய விஷயம். தட்டானுக்குப்பொன்னை மூசையில்போட்டு கும்மட்டியில்வைத்தால் அது உருகுமென்று தெரிந்திருப்பதால் அதை அதில் வைத்து உருக்குகிறுன். வைத்தியன் காயத்துக்கு இன்ன பிளாஸ்திரிபோட்டால் ஆருமென்ற ஞானமுண்டாய் அப்படிச்செய்கிறுன். இவ்விதமாய் ஒவ்வொருதொழிற்காரனுக்கும் அந்த தொழிலைச்செய்ய முன்பாக அதைப்பற்றி ஞானமிருக்கவேண்டுமென்பது திண்ணமாய் ஏற்படுகிறது.

மேற்படி ஞானத்தை இரண்டுவிதத்தில் பெறலாம்.

(1.) நம்முடைய சொந்தஅனுபோகத்தாலாவது அல்லது மற்றவர்களுடைய அனுபோகத்தாலாவது.

(2.) அதற்குச்சம்பந்தமான சாஸ்திரங்களைப் படித்தாவது. முன்சொன்ன உதாரணத்தில் காயத்துக்குப் பிளாஸ்திரிபோடவேண்டுமென்னும்ஞானம் தன்னுடைய சுய அனுபோகத்தால் அறிந்திருக்கலாம். அல்லது அன்னியர்களுடைய அனுபோகத்தினுல் அறிந்திருக்கலாம். அல்லது சாஸ்திரங்களில் தேகத்தைப்பற்றியும் காயத்தின் சுவருபத்தைப்பற்றியும் அவைகளின் சிகிச்சையைப்பற்றியும் படித்து அறிந்திருக்கலாம்.

## உபாத்தியாயர்.

மேற்சொல்லிய இரண்டுவித ஞானங்களுக்கும் மிக வித்தியாசமுண்டு. முன்சொன்னது சரியானவழியில் ஏற்படாமல் அநேக தப்பிதங்களையுடைத்தாய் தெரியாமலிருக்கும். பின்சொன்னதோ அப்படிக்கல்லாமல் அனேகரால் பார்வையிடப்பட்டும் பரிசோதிக்கப்பட்டும் நம்பத்தகுந்ததுமாயிருக்கிறது. ஒரு வியாதிக்கு இன்னமருந்துகொடுத்தால் தீருமென்ற சங்கதி அநுபோகத்தால் அறிந்திருந்தபோதிலும் சிலவேளை ஏதோ காரணத்தால் தப்பிப்போம். அப்பொழுது தப்பிதத்தின் காரணம் தெரியாததால் நமக்குத்தைரியங்கெட்டுப்போம். சாஸ்திரசம்பந்தமான தப்படியல்ல, காரணம் நன்றாய் விளங்கும்.

இப்படி பிரதிதொழிலுக்கும் சாஸ்திரமிருக்கின்றது. சாஸ்திரமில்லாதது பூர்த்தியற்றதென்றே தீர்மானிக்கவேண்டும்.

வித்தியாப்பியாசமும் ஒரு வேலையாகையால் அதற்கும் சாஸ்திரமிருக்கவேண்டுமென்பது முன் சொல்லிக்கொண்டுவந்த சங்கதிகளால் ஏற்படுகிறது. வித்தியாப்பியாசமாவதென்ன? இப்போது இதைக்குறித்து யாம் சொல்லப்போகிற சங்கதியை நிதானித்தால் உபாத்தியாயர்களாகிய நமக்கு நாம் இதுவரைக்கும் செய்துக்கொண்டுவந்த வேலைக்காக அப்பேர்தகுமா என்று யோசித்து பின் பகவானிடத்தில் அதைப்பற்றி உத்தரவு சொல்லவேண்டியதற்காக சிந்தித்து வியசனமடைந்து "நான் இதுவரைக்கும் தெரியாமல் பாபம் செய்தேன், இனிமேல் என்னால் கூடியவரைக்கும் பலவிதத்தில் இதைப்பற்றி தெரிந்துகொண்டு உம்முடைய குழந்தைகளுக்குக் கற்பிப்பேன் என்னை மன்னியும்." என்று பிரார்த்தியுங்கள். வித்தையென்பது தெரிந்துக்கொள் என்னும் அர்த்தத்தைத்தரத்தக்கது. அப்போது வித்தியாப்பியாசமாவது பிள்ளைகளைத் தெரிந்துக்கொள்ளச்செய்வதேயாம். ஆனால் உபாத்தியாயர் என்னசெய்வது என்றால் இதற்கு காரணகர்த்தாவாயிருந்து செய்விக்கவேண்டுமென்பதே. ஆனால் இவ்வேலையை இவன் செய்வதற்குமுன்பு யார்செய்துக்கொண்டுவந்தது? பகவான். ஆகையால் நாம்செய்யும் காரியம் பகவானுக்குப்பதிலானதென்றும் அப்பேர்க்கொத்தவருடைய வேலையை நாம் வகிக்கும்போது அது எவ்வளவு முக்கியமானதென்றும் பயப்படத்தக்கதென்றும் சிறிது அறியவேண்டும். உபாத்தியாயர் வேலை அற்பமென்று சொல்லும் மூடர்வார்த்தை நமக்கேன். தாசில்தார் முதலான அதிகாரிகளுக்கு, பயப்பட்டுப் பணிவதேயொழிய வேறொன்றுமில்லை. அதில் இகபரசாதகம் யாது இருக்கிறது. உபாத்தியாயவேலையை சரியாய் நடத்தினால் தானும் இகபரசாதகத்தையடைவதும் தவிர, தன் பிள்ளைகளும் அவர்கள் குடும்பமும், அவர்களின் மூலமாய் அவர்கள் தாய்தந்தையர்களும் இகபரசாதகம் அடைகிறார்கள். "அன்னதான சமம்நாஸ்தி, வித்தியாதான ததஃபரம், அன்னந்து க்ஷணிகம்ஜீர்ணம் யாவச்சீவந்து வித்தியயா." இதன் விவரத்தைப்பற்றி இவ்விடத்தில் சொல்லிக்கொண்டே வந்தால் நாம் எடுத்தவிஷயம் விட்டுப்போம். மேலும் நம்மை ஒருவர் புகழுவாவதென்ன? நம்முடைய காரியத்தை சரியாய்ப் பூர்த்திசெய்தோமென்பதே நமக்குப் புகழாம்.—நமக்குப்பரமாநந்தமாம். மறு சஞ்சிகையில் கடவுள் எப்படி முதல் உபாத்தியாயரென்பதைப் பற்றியும் அவர் வித்தியாப்பியாசம் எப்படி பண்ணிவைக்கிறாரென்பதையும் அதேமாதிரியாய் நாமும் நடத்தவேண்டியது என்பதைப்பற்றியும் சொல்ல முயல்வோம். (இன்னும்வரும்.)

---

# முதல் ஸ்டாண்டர்ட் வகுப்புக்கு விஷய பாடக் குறிப்பு.

1

உபகரணங்கள். பட்சிகள், மிருகங்கள், பூச்சிகள் முதலானவை யிருக்கும் படங்கள்.

## ஜந்துக்கள்.

சுப்பய்யனுடையநாய் அவனோடுகூட பள்ளிக்கூடத்திற்குத் தொடர்ந்தது. அதைப் பார்த்தீர்களா? அது என்ன செய்கிறது? குதிக்கிறது, குலைக்கிறது, ஓடுகிறது. அது என்ன? நாய். அது ஏன் அப்படிஓடுகிறது, பிரம்பு ஏன் ஓடுகிறதில்லை? அதற்குப்பிராணமிருக்கிறது. இதற்குப்பிராணமில்லை. இப்படி பிராணமுண்டாய் ஓடுகிறவைகளுக்கு ஜந்துக்கள் என்று பெயர். உபாத்தியாயர் ஜந்துக்கள் என்னும் பதத்தை போர்ட்டில் எழுதவும். நாயோடுகூட இரண்டு ஜந்துக்களைச் சொல்லியபிறகு அப்பேரைக்கற்பிக்கலாம்.

II. பிறகு முன்சொன்ன நாய்தவிர இன்னும் அனேகசிறிய ஜந்துக்களின்பெயரைச்சொல்லும்படி பிள்ளைகளைக்கேட்கவும் அவர்கள் சொல்லும் அனேகபெயர்களைப்போர்ட்டில் எழுதி அவைகளை படத்தில் பார்த்துக்கண்டுபிடிக்கச்செய்து பின்வரும் விஷயங்களை அவர்கள் வாயிலிருந்து வரவழைக்கவும்.

(1.) அனேகவித ஜந்துக்களிருக்கின்றன.

(2.) சிலவற்றிற்கு நாலுகால்கள் இருக்கின்றன. அவைகள் நாய், பூனை, ஆட்டுக்குட்டி, பசு, குதிரை முதலானவைகளைப்போல் ஓடுகின்றன. இவைகளுக்கு மிருகங்கள் என்று பெயர்.

(3.) வேறுசில இறக்கைகள் உடைத்தாய், காக்காய், குருவி, பருந்து இவைகளைப்போல் பறக்கும். இவைகளுக்குப் பட்சிகள் என்று பெயர்.

(4.) மற்றசில சிறகுகளை உடைத்தாய் தண்ணீரில், வரால், கண்டை முதலானதைப்போல் நீந்துகின்றன. இவை மீன் சாதியைச் சேர்ந்தவை.

(5.) இன்னும் சிலவை பாம்பு, பூரான், அணிப்பிள்ளை முதலானவைகளைப்போல் பூமியில் நகருகின்றன. இவைகளுக்கு நகர்வன என்று பெயர்.

(6.) மற்றவை, ஈ, கொசு, எட்டுக்கால்பூச்சி முதலானவைப்போல் தரையில் ஊரும், இவைகளுக்கு ஊர்வன என்று பெயர்.

III. (1.) இதன்பிறகு பிள்ளைகளுக்குத் தெரிந்த சில ஜந்துக்களைப்படத்தில் காட்டி அவை இன்னவகுப்பைச்சேர்ந்தனவென்று கேட்கவேண்டும்.

(2.) இதானபிறகு பின்வரும் பாட்டை அவர்களுக்கு வரப்படுத்திவைக்கவும்.

ஹிந்துஸ்தானி மெட்டு.

பசுக்களோட புழுக்களூர
பாம்பு நகரவும்

பட்சிபறக்க மச்சம்நீந்த
பிள்ளைகள் நிற்கிறோம்.

## பரீட்சை.

### மெதட்.

(1.) சொல்லுவதெழுதலினாலாவதென்ன? பிள்ளைகள் எழுதுகிறபோது ஒரு பலகையை மற்றொருவன் பாற்காமல் என்னசாதனங்கள் பண்ணுவாய்?

(2.) நீ உபாத்தியாயிருக்கும் வகுப்புக்கு கால அட்டவணை (Time table) ஒன்றை ஏற்படுத்து.

(3.) பாடம் கற்பிக்கும்போது எவ்விடத்திலிருப்பாய்? அப்படி இருப்பதற்குக் காரணம் கூறு.

(4.) பிள்ளைகளுக்கு வீட்டில் படித்துக்கொண்டுவர பாடம்கொடுப்பது நன்மையா? அதைப்பற்றி விஸ்தரமாய் எழுது.

(5.) பின்னத்தில் கூட்டலைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கும்படியாய் பாடசூசிகை (Notes of lessons) ஒன்றை தயார்பண்ணு.

## ஸ்டாண்டிங் ஆர்டர்.

### முக்கியாம்சங்கள்.

அ-2-(டி) 39 (1) மாதர்கள், நார்மல் அல்லது ஆர்டினரி ஸர்டிபிகேட்டை உடைத்தாய், தாங்கள் பரீட்சைகொடுத்திருக்கும் பாஷையல்லாத வேறொரு தென்னிந்தியபாஷை ஏதாவதொன்றில் பரீட்சைக்கொடுத்தால் மூன்றுமாத சம்பளம் டைரக்டரவர்களால் ஏனும் கொடுக்கப்படும் இங்கிலீஷ்கூட வானால் 4 மாத சம்பளம்கொடுக்கப்படும்.

அதேமாதிரியாம் ஆடவருக்கும் ஒருமாதசம்பளம் ஏனும்கொடுப்பார்கள்.



## ஓரே உபாத்தியாயர் இரண்டு மூன்று வகுப்பை நடத்த முறை.

தற்காலத்தில் தெருப்பள்ளிக்கூடங்களிலும், வில்லேஜ் ஸ்கூல்களிலும், ஒரேயுபாத்தியாயர் எல்லாவகுப்புக்கும் கற்பிக்கவேண்டியதாயிருக்கிறது. பிரதிவகுப்புக்கும் ஒரு உபாத்தியாயர் இருக்கவேண்டுமென்பது நிச்சயமாயினும், அப்படி நடப்பிப்பது கூடாமை. ஜர்மனி, யுனைடெட் ஸ்டேட்ஸ் முதலான தேசங்களில் அப்படி தான் நடந்து வருகிறது. ஆனால் இவ்விடத்திலும் அப்படியே நடப்பிப்பதற்கு கவர்மெண்டார் கடங்காரராயிருக்கிறார்களென்று ரிப்பன் பிரபு சொல்லியிருக்கிறார். சிலவிடங்களில் ஒரு உபாத்தியாயர் இருப்பதே துர்லபம். ஆகையால் நாம் முடியாத சமாசாரத்தைப் பற்றி யொன்றுஞ் சொல்லாமல் தற்காலத்தில் கூடுமான ஒரு உபாத்தியாயரைக்கொண்டே பிரதி வகுப்புக்கும் வெவ்வேறு உபாத்தியாயரிருந்தா லெவ்வளவு பிரயோஜனகரமோ, அப்பிரயோசனத்தை அடையும்படி மார்க்கந்தேடவேண்டும். இப்போது சிலவிடங்களில் நடக்கிற ப்பிரகாரம் சாயங்காலம் எல்லாப் பிள்ளைகளையும் கூப்பிட்டு சிலரைக் கற்றச் சொல்லி சிலரை அடித்து அனுப்பிவைப்பது போதுமானதென்று நினைக்கக்கூடாது. ஒரு உபாத்தியாயரே இத்தனை பிள்ளைகளையும் சரியாய்க் கற்பிக்கும்படியாய் தீர்மானித்து அப்படிச் செய்வதற்குமுன் சில சங்கதிகளை யோசிப்போம்.

இன் பெண்டு ஸ்டாண்டர்டுக்கு கற்பிக்கவேண்டிய பாடங்கள் மிக கொஞ்சமாகையாலும், குழந்தைகளின் மனோதத்துவம், மிக துர்ப்பலமாயிருப்பதாலும், தினம் ஒன்றுக்கு அவர்களுக்கு மூன்று அல்லது நான்குமணிகாலம் கற்பித்தால் போதும். முதல் ஸ்டாண்டர்ட்டுக்கு மப்படியே. இதில் ஏறக்குறைய பாதிகாலம் விளையாடுவதில் போகவேண்டும். ஒருபாடம் அரைமணிக்குமேல் எப்பொழுதும் நடத்தக்கூடாது. பாடமும் விளையாட்டும் மாறி மாறி வரவேண்டும். இரண்டாவது ஸ்டாண்டர்ட்டுக்கு ஒரு மணிகாலம் விளையாட்டும், நான்குமணிகாலம் படிப்பு மிருந்தால் போதும். விளையாட்டிலும் கிண்டர்கார்டன், சம்பந்தமான மனோக்கருவிகளைப் பழக்கும்படியானவையாயிருக்கவேண்டும். அப்போது பாட்டுகள் கூட சம்பந்தப்பட்டுக் கொண்டுவந்தால் நல்லது. அப்படிக்கில்லாமல் குழந்தையின் சுபாவமறியாமல் அதன் கையில் புஸ்தகத்தைக்கொடுத்து படி படி யென்று அடிப்பது சரியல்ல. குழந்தைக்குத் தேவையில்லாத சமாசாரங்களைச்செய்து, அவர்களை நடத்தத் தெரியாத நம்மிடத்தில் என் மறுபடியும் வருகிறேன் என்று சொல்லுவார்கள். சில தாய் தந்தையர்கள் குழந்தை வீட்டில் விளையாடிக் கெட்டுப்போவதென்று நினைத்து, பகல் முழுதும் வெப்பமென்றும் குளிர் என்றும் யோசிக்காமல் பள்ளிக்கூடத் திண், தெருத்திண்ணையில் உட்காரவைத்திருப்பார்கள். பிள்ளைகளின் இளந்தேகத்தைப்பற்றியும், சுறு சுறுப்பைப்பற்றியும் தெரிந்தவர் இப்படிச் செய்யத் துணிவரோ?

ஆகையால் மேற்சொல்லிய இளங்குழந்தைகளுக்கு கற்பிக்கவேண்டிய காலத்தைப்பற்றி கவனிக்கவேண்டும். உபாத்தியாயர் ஒவ்வொரு வகுப்புக்கும் செலவழிக்கவேண்டிய காலத்தைப் பற்றியும், விதத்தைப்பற்றியும் மறு சஞ்சிகையில் தெரிவிப்போம்.

## NOTES OF LESSONS.

### இலக்கணம்-காலம் அரைமணி.

| விஷயம். | உப விஷயம். | வழி. |
|---|---|---|
| 1. மொழி யீற்று ணகரத்தின்பின் ககரம் வரின் டகரமாம். | மண் — பெண் — கண் — என்ன.<br>மண் + கலம் = மட்கலம்<br>மண் + குதிரை = மட்குதிரை<br>மண் + குடுவை = மட்குடுவை | 1. ணகரமெய் கடைசியில் வரும்படியான சில பெயர்களைப் பிள்ளைகளைக்கேட்டு அவர்கள்சொன்ன உடனே அதை போர்டில் எழுதவும். பிறகு அவைகளில் எதாவதொன்றை எடுத்துக்கொண்டு (இவ்விடத்தில் மண்ணென்பதை எடுத்துக்கொள்ளலாம்) அதோடுகூடக-முதலில் வரும்படியாயும் மண்ணோடு சேர்த்து வாசித்தால் அர்த்தம் தரத்தக்க சில பெயர்களைக் கேட்டு அவைகளை சேர்த்து வாசித்தால் என்ன மாமென்று கேட்கவும். இப்படி மூன்று அல்லது நான்கு உதாரணங் கேட்டு, அவைகளையெல்லாம் போர்ட்டிலெழுதவும். பிறகு அவைகளிலெல்லாவற்றிலும் ணகரத்திற்குப்பிற்பாடு ககரம் வந்து ணகரம் டகரமானதென்று வரவழைத்து விஷயத்திலிருக்கும் முதல் சூத்திரத்தை வரவழைக்கவும். |
| 2. மொழி யீற்று ணகரத்தின்பின் சகரம் வரின் டகரமாம். | மண் + சாடி = மட்சாடி.<br>மண் + சிலை = மட்சிலை<br>மண் + சால் = மட்சால் | 2. முன்சொன்ன மாதிரியாய் சகரம் வரும்படியான பெயர்களைக்கேட்டு இரண்டாவது சூத்திரத்தை வரவழைக்கவும். |
| 3. மொழி யீற்று ணகரத்தின்பின் பகரம் வரின் டகரமாம். | மண் + பலகை = மட்பலகை<br>மண் + பாத்திரம் = மட்பாத்திரம்<br>மண் + பாவை = மட்பாவை | 3. அதேமாதிரியாய் பகரம் வரும்படியான பெயர்களைக்கேட்டு மூன்றாவது சூத்திரத்தை வரவழைக்கவும். |
| 4. மொழி யீற்று ணகரத்தின்பின் ககர சகர பகரங்கள் வரின் டகரமாம். | | 4. மூன்றுசூத்திரத்திலும் மொழியீற்று ணகரம், டகரமாவதைக் காட்டி, க, ச, ப, எதுவந்தாலும் அப்படிதான் என்று தெரிவித்து மூன்றும் ஒரே சூத்திரமாகிய நான்காவது விஷயத்தை வரவழைக்கவும். |



## கணக்கு.

### கிராண்டினேட் கோடில் இன்பெண்ட் ஸ்டாண்டர்ட்டுக்குக் குறித்திருக்கிற பாடம்.

(1.) குண்டுகள் கோத்திருக்கும் சட்டத்தின் மூலமாயாவது அல்லது இதரவஸ்துவின் மூலமாயாவது ஒன்று முதல் பனிரண்டுவரைக்கும் எண்ணவும். பனிரண்டு முதல் ஒன்றுவரையில் தலைகீழாய் எண்ணவும்.

(2.) ஒற்றையாகவும், இரட்டையாகவும் எண்ணவும்.

(2.) 3, 4 இப்படி எண்களை இடையில் விட்டு எண்ணவும்.

(4.) கூட்டல், கழித்தல், பேர்பாதியாக்கல், இரட்டத்தனையாக்கல் முதலானவையும் கற்பிக்கவேண்டுமென்பது.

மேற்சொல்லியவற்றைச் சரியான வழியில் கற்பிக்க குறிப்புகள் பின் வருவன.

முதல் நாள் பிள்ளைகளின் கவனத்தைக் கவரும்படியான விளையாட்டுக் கருவிகளான கச்சைக்காய், வர்ணகுண்டுகள், கூழாங்கல்லுகள் இப்பேர்க் கொத்த அனேக வஸ்துக்களை வைத்துக்கொண்டு ஒன்று முதல் நான்குவரைக் கும் பின்வருமாறு எண்ணக் கற்றுக்கொடுக்கலாம்.

நான் கையிலெடுத்தது என்ன? கச்சைக்காய். எத்தனைக்கச்சைக்காய்? ஒரு கச்சைக்காய். மறுபடியும் ஒரு கச்சைக்காயை எடுத்து இது எத்தனை? ஒரு கச்சைக்காய். இந்த இரண்டையுஞ் சேர்த்து, ஒரு கச்சைச்காயும் இதகச்சைக்காயும் இரண்டு கச்சைக்காய் என சொல்லி, பிள்ளைகளைச் சொல் லச்செய்யவும். மறுபடியும் ஒரு கச்சைக்காயை எடுத்து முன்மாதிரி கேட்டு இரண்டு கச்சைக்காயும் ஒரு கச்சைக்காயும் மூன்று கச்சைக்காயெனவும் இதேமாதிரியாய் நான்கு முதலான எண்களைக் கற்றுக்கொடுக்கவும். மற்ற வஸ்துக்களை எடுத்துக்கொண்டு இதேமாதிரிசெய்யவும். ஒரே வஸ்துவினுல் மறுபடியும் கற்பித்தால் கவனங்குறையும். இப்படி எண்ணுவதே ஒன்றுல் கூட்டுவதற்குச் சமானம். அவசரப்படாமல் மெதுவாய்க் கொஞ்சம்கொஞ் சமாய் கற்பித்துவந்தால் போதும். முதலில் இரண்டு அல்லது மூன்றுவரை க்கும் கற்பித்து அது நன்றாய்த் தெரிந்தபிற்பாடு நான்குவரைக்கும் கற்பித்து இப்படி பத்துவரைக்கும் மெதுவாய்க் கற்றுக்கொடுக்கவும்.

மூன்றுவரைக்கும் எண்ணைக் கற்றுக்கொடுத்தவுடனே அதை தலைகீழாய் எண்ணைக் கற்றுக்கொடுக்கலாம்.

மூன்று குண்டில் ஒரு குண்டு எடுத்தால் மீதி எத்தனை? இரண்டுகுண் டில் ஒருகுண்டெடுத்தால் மீதி எத்தனை? இப்படியாக முதல்தலைகீழாய் எண் ணைக் கற்றுக்கொடுக்கவும். இதுவே ஒன்றுல் கழித்தலாம்.

## ஒன்றுக்கு அப்பியாசம்.

உனக்குத் தலை எத்தனை? மூக்கு எத்தனை? வாய் எத்தனை?

இ-அ.—உனக்குக் காது எத்தனை? கை எத்தனை? கால் எத்தனை? கண் எத்தனை?

இராமனுக்கு ஒரு மாம்பழம், உனக்கு ஒரு மாம்பழம் கொடுத்தால் மொத்த மெத்தனை? உன்னிடத்தில் இரண்டுமாம்பழம் இருக்கிறது எனக்கு ஒரு மாம்பழம் கொடு. மீதி எத்தனை?

எத்தனை ஒன்று சேர்ந்தால் இரண்டு?

மூ-அ.—உன் இரண்டுகையும்; என் ஒருகையும் சேர்த்தால் மொத்தமெத்தனை? ராமனுக்கொரு வாழைப்பழம், உனக்கொரு வாழைப்பழம் எனக்கொரு வாழைப்பழம்கொடுத்தால் மொத்தமெத்தனை? உன்னிடத்திலிருக்கும் மூன்று கச்சைக்காயில் ஒரு கச்சைக்காய் எடுத்தால் மீதி எத்தனை? மீதி இரண்டில் ஒன்று எடுத்துக்கொண்டால் மீதி எத்தனை?

எத்தனை ஒன்றுகள் சேர்ந்து மூன்று? என்னிடத்தில் ஒரு குண்டிருந்தால் நான் இரண்டுகுண்டு கொடுத்தால் மொத்தம் எத்தனை?

நா-அ.—உன் மூன்று கச்சைக்காயோடு நான் ஒருகச்சைக்காய்கொடுத்தால், மொத்தம் எத்தனை? உனக்கு இரண்டு கொய்யாப்பழமும் எனக்கு இரண்டு கொய்யாப்பழமும் கொடுத்தால் மொத்தம் எத்தனை? உன்னிடத்தில் ஒரு குண்டு இருக்கிறது; நான் மூன்று குண்டு கொடுத்தால் மொத்தம் எத்தனை? உன்னிடத்தில் நாலுகுண்டிருக்க நான் ஒரு குண்டெடுத்துவிட்டால் மீதி எத்தனை? மீதி மூன்றில் ஒன்று எடுத்துவிட்டால் மீதி எத்தனை?

ஐ-அ.—உன் ஒரு கையில் விரல் எத்தனை? மற்றொருகையில் விரல் எத்தனை? உன் ஒரு காலில் விரல் எத்தனை? மற்றொருகாலில் விரல் எத்தனை? உன்னிடத்தில் நான்கு குண்டிருந்தால் நானொரு குண்டுகொடுத்தால் மொத்தம் எத்தனை?

இம்மாதிரியாய் பத்துவரைக்கும் அப்பியாசங்களைக் கேட்கவேண்டியது.

பத்துகுண்டோடு ஒரு குண்டைச்சேர்த்து மொத்தம் சொல்லுவதற்கு வேறு பெயரில்லாததால் பத்தும் ஒன்றும் அல்லது சேர்த்து பதினொன்று என்று சொல்லவேண்டும்.

அதேமாதிரியாய் பத்தும் இரண்டும் பனிரெண்டு என்று சொல்லவும்.

### அப்பியாசம்.

ஒன்றும் ஒன்றும் எத்தனை? இரண்டும் ஒன்றும் எத்தனை?
மூன்றும் ஒன்றும் எத்தனை? நான்கும் ஒன்றும் எத்தனை?
ஐந்தும் ஒன்றும் எத்தனை? ஆறும் ஒன்றும் எத்தனை?
ஏழும் ஒன்றும் எத்தனை? எட்டும் ஒன்றும் எத்தனை?
ஒன்பதும் ஒன்றும் எத்தனை? பத்தும் ஒன்றும் எத்தனை?
பதினொன்றும் ஒன்றும் எத்தனை?



பனிரண்டில் ஒன்று போனால் மீதி எவ்வளவு?
பதினொன்றில் ஒன்றுபோனால் மீதி எவ்வளவு?

பத்திலொன்று போனால் மீதி எவ்வளவு? இம்மாதிரியாய் ஒன்றுவரைக்கும் கேட்கவும்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து பதினொன்று, பனிரண்டு, என எண்ணி மறுபடியும் தலைகீழாய் எண்ணவும்.

2. ஒருகுண்டோடு இரண்டு குண்டுசேர்த்தால் மொத்த மெவ்வளவு? மூன்று குண்டு. மூன்று குண்டோடு இரண்டு குண்டு சேர்த்தால் மொத்த மெவ்வளவு? ஐந்து குண்டு. ஐந்து குண்டோடு இரண்டு குண்டு சேர்ந்தால் மொத்த மெவ்வளவு? ஏழு குண்டு. ஏழு குண்டோடு இரண்டு குண்டு சேர்த்தால் மொத்த மெவ்வளவு? ஒன்பது குண்டோடு இரண்டு குண்டு சேர்த்தால் மொத்த மெவ்வளவு? பதினொரு குண்டு.

இம்மாதிரியாய் இதர வஸ்துக்களைக்கொண்டும் பழக்கவும்.

அ.—ஒன்றும் இரண்டும் எவ்வளவு? மூன்று. மூன்றும் இரண்டும்எவ்வளவு? ஐந்து. ஐந்தும் இரண்டும் எவ்வளவு? ஏழு. ஏழும் இரண்டும் எவ்வளவு? ஒன்பது. ஒன்பதும் இரண்டும் எவ்வளவு? பதினொன்று.

பிறகு ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என எண்ணவும்.

பதினொன்று மணியில் இரண்டு மணி எடுத்துவிட்ட மீதி எத்தனை? ஒன்பதுமணியில் இரண்டு மணி எடுத்துவிட்டால் மீதி எத்தனை? இம்மாதிரியாய் ஒன்றுவரைக்கும் கேட்கவும்.

இதர வஸ்துக்களைக்கொண்டும் இம்மாதிரியாய்ப் பழக்கவும்.

அ.—பதினொன்றில் இரண்டுபோனால் மீதி எவ்வளவு? ஒன்பதில் இரண்டு போனால் மீதி எவ்வளவு? இப்படி ஒன்று வரைக்கும் கேட்கவும்.

பதினொன்று ஒன்பது, ஏழு, ஐந்து, மூன்று, ஒன்று என எண்ணவும்.

இரண்டு கச்சைக்காயோடு இரண்டு கச்சைக்காய்ச் சேர்த்தால் மொத்த மெவ்வளவு? நான்கு—க. நான்கு—க. யோடு இரண்டு—க சேர்த்தால் மொத்த மெவ்வளவு? ஆறு கச்சைக்காய். இம்மாதிரியாய் பனிரண்டுவரைக்கும் கேட்கவும்.

இப்படி மற்ற வஸ்துக்களைக் கொண்டும் பழக்கவும்.

அ.—இரண்டும், இரண்டும் எவ்வளவு? நான்கு. நான்கும் இரண்டும் எவ்வளவு? ஆறு. ஆறும் இரண்டும் எவ்வளவு? எட்டு. எட்டும் இரண்டும் எவ்வளவு? பத்து. பத்தும் இரண்டும் எவ்வளவு? பனிரண்டு. பிறகு இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, பத்து, பனிரண்டு என எண்ணவும்.

பனிரண்டு மணியில் இரண்டு மணிபோனால் மீதி எவ்வளவு?

பத்துமணி. பத்துமணியில் இரண்டு மணிபோனால் மீதி எவ்வளவு? என்றிம்மாதிரியாய்க் கேட்கவும்.

அ.—பனிரண்டில் இரண்டுபோனால் மீதி எவ்வளவு? பத்தில் இரண்டுபோனால் மீதி எவ்வளவு? என்றிம்மாதிரியாய்க் கேட்டு. பனிரண்டு, பத்து எட்டு, ஆறு, நான்கு, இரண்டு எனவும்.

3. ஒரு கச்சைகாயோடு மூன்று கச்சைசேர்த்தால் மொத்த மெவ்வளவு? நான்கு-க-மூன்றுச் சேர்த்தால் மொத்த வெவ்வளவு? ஏழு கச்சைக்காயோடு மூன்று-க-சேர்த்தால் மொத்த மெவ்வளவு?

இம்மாதிரியாய் மற்ற வஸ்துக்களைக் கொண்டும் பழக்கவும்.

அ.—ஒன்றும் மூன்று மெவ்வளவு? நான்கும் மூன்று மெவ்வளவு? ஏழும் மூன்று மெவ்வளவு? பிறகு ஒன்று, நான்கு, ஏழு, பத்து, என எண்ணவும்.

பனிரண்டுமணியில் மூன்றுமணி போனால் மீதி எவ்வளவு? ஒன்பது மணியில் மூன்று மணிபோனால் மீதி எவ்வளவு? ஆறு மணியில் மூன்று மணிபோனால்மீதி எவ்வளவு? மூன்று மணியில் மூன்று மணிபோனால் மீதி எவ்வளவு?

இம்மாதிரியாய் மற்ற வஸ்துக்களைக்கொண்டு பழக்கவும்.

அ.—பனிரண்டில் மூன்று போனால் எவ்வளவு? ஒன்பதில் மூன்று போனலெவ்வளவு? ஆறில் மூன்றுபோனலெவ்வளவு? மூன்றில் மூன்று போனால் எவ்வளவு?

பனிரண்டு, ஒன்பது, ஆறு, மூன்று, என எண்ணவும்.

ஒருமணியும் நான்கு-ம-எவ்வளவு? ஐந்து மணியும் நான்கு-ம-எவ்வளவு? இம்மாதிரியாய் மற்றவஸ்துக்களைக்கொண்டு பழக்கவும்.

அ.—ஒன்று நான்குமெவ்வளவு? ஐந்தும் நான்குமெவ்வளவு? பிறகு ஒன்று, ஐந்து, ஒன்பது என எண்ணவும்.

ஒரு கச்சைக்காயும் ஐந்துகச்சைக்காயுமெவ்வளவு? ஆறு கச்சைக்காயும் ஐந்து-க-மெவ்வளவு?

இம்மாதிரியாய் இதர வஸ்துக்களைக்கொண்டும் கற்பிக்கவும்.

அ—ஒன்றும் ஐந்துமெவ்வளவு? ஆறும் ஐந்து மெவ்வளவு? பிறகு ஒன்று, ஆறு, பதினொன்று என எண்ணவும்.

ஒருமணியும் ஆறுமணியுமெவ்வளவு?

ஒருமணியும் ஏழுமணியுமெவ்வளவு?

(4.) ஒரு-ம-இரண்டு-ம-எவ்வளவு?

(1.) மூன்றுமணியும் மூன்றுமணியுமெவ்வளவு? ஆறு மணியும் நான்கு—ம—எவ்வளவு? பத்து—ம—இரண்டு—ம—எவ்வளவு?

(2.) இரண்டுமணியும் மூன்றுமணியுமெவ்வளவு? ஐந்து—ம—நான்கு ம—எவ்வளவு? ஒன்பது—ம—மூன்று—ம—எவ்வளவு?

(3.) ஒன்றும், நான்கும் எவ்வளவு?

இரண்டும், ஏழுமெவ்வளவு?

ஒன்று, இரண்டு, மூன்று எவ்வளவு?

இரண்டு, ஏழு, மூன்று எவ்வளவு?

ஐந்து, மூன்று, இரண்டு, ஒன்று?

ஏழு, ஒன்று, மூன்று, ஒன்று?

ஒன்று, இரண்டு, ஒன்று, மூன்று, நான்கு, ஒன்று? ஐந்து, ஆறு, ஒன்று?

நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று, இரண்டு? ஏழும்—ஐந்துமெவ்வளவு?

ஒன்பதும், மூன்றுமெவ்வளவு?

நான்கு ஐந்து, இரண்டு எவ்வளவு?

நான்கில் இரண்டு போனால் எவ்வளவு?

மூன்றுபோனால் எவ்வளவு? ஒறு குண்டில் ஒரு குண்டுபோனால் எவ்வளவு?

ஆறில் இரண்டுபோனலெவ்வளவு?

பத்தில் ஏழுபோனால் எவ்வளவு?

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பனிரண்டில் | 1, | 2, | 3, | 4, | 5, | 6, | 7, | 8, | 9, | 10, | 11, | 12, | போனால் எவ்வளவு. |
| பதினொன்றில் | 1, | 2, | 3, | 4, | 5, | 6, | 7, | 8, | 9, | 10, | 11, | | „ |
| பத்தில் | 1, | 2, | 3, | 4, | 5, | 6, | 7, | 8, | 9, | 10, | | | „ |
| ஒன்பதில் | 1, | 2, | 3, | 4, | 5, | 6, | 7, | 8, | 9, | | | | „ |
| எட்டில் | 1, | 2, | 3, | 4, | 5, | 6, | 7, | 8, | | | | | „ |
| ஏழில் | 1, | 2, | 3, | 4, | 5, | 6, | 7, | | | | | | „ |
| ஆறில் | 1, | 2, | 3, | 4, | 5, | 6, | | | | | | | „ |
| ஐந்தில் | 1, | 2, | 3, | 4, | 5, | | | | | | | | „ |
| நான்கில் | 1, | 2, | 3, | 4, | | | | | | | | | „ |
| மூன்றில் | 1, | 2, | 3, | | | | | | | | | | „ |
| இரண்டில் | 1, | 2, | | | | | | | | | | | „ |
| ஒன்றில் | 1, | | | | | | | | | | | | „ |

## அப்பியாசம்.

(1.) ஐந்து, ஆறு, ஒன்று மொத்தமென்ன?

(2.) நான் உனக்கு பத்துமாம்பழமும், இராமன் இரண்டுமாம்பழமும் கொடுத்தோம். அதில் நீ கோபாலனுக்கு நான்குமாம்பழமும் கொடுத்தாய். மீதி எத்தனை?

(3.) ஏழு மணியில் இராமனுக்கு மூன்றுமணியும், பாபுக்கு இரண்டு மணியும் கொடுத்தால் மீதி எத்தனை?

(4.) என்னிடத்திலிருந்து நாலு கச்சைக்காயும், இராமனிடத்திலிருந்து ஐந்து கச்சைக்காயும் வாங்கிக்கொண்டு கோபாலனுக்கு ஆறு கச்சைக்காய்க் கொடுத்துவிட்டால் மீதி எத்தனை.

(5.) நான்கு, ஐந்து, இரண்டு இவை ஒன்றாய்ச் சேர்த்து அதிலிருந்து இரண்டு, மூன்று இவை எடுத்துவிட்டால் மீதி எத்தனை.

இரண்டு குண்டுகளும் இரண்டு குண்டுகளும் எத்தனை? நாலு குண்டு.

இரண்டுமணியும் இரண்டுமணியும் எத்தனை? நாலு மணி.

இப்படி பல வஸ்துக்களைக்கொண்டு கேட்டு கடைசியில் இரண்டும் இரண்டும் நான்கு எனத் தெரிவிக்கவும்.

மூன்றும் மூன்றும்—ஆறு.
நான்கும் நான்கும்—எட்டு.
ஐந்தும் ஐந்தும்—பத்து.
ஆறும் ஆறும்—பனிரண்டு.
என கற்பிக்கவும்.

| | | |
|---|---|---|
| அதன் பிறகு இரு | ஒன்று | இரண்டு. |
| இரு | இரண்டு | நான்கு. |
| இரு | மூன்று | ஆறு |
| இரு | நான்கு | எட்டு |
| இரு | ஐந்து | பத்து |
| இரு | ஆறு | பனிரண்டு என சொல்லவும். |

## அப்பியாசம்.

(1.) உங்களிருவரில் ஒவ்வொருவனுக்கு இரண்டுமாம்பழம் கொடுத்தால் மொத்த மெவ்வளவுகொடுக்கவேண்டும்.

(2.) ஒரு தம்பிடிக்கு இரண்டு முறுக்கானால் இரண்டு தம்பிடிக்கு எத்தனை.

(3.) ஒரு தம்பிடிக்கு ஒரு வடையானால் இரண்டுதம்பிடிக்கு எத்தனை?

(4.) ஒரு தம்பிடிக்கு மூன்று கொய்யாப்பழமானால் இரண்டுதம்பிடிக்கு எத்தனை.

(5.) ஒரு மாம்பழம் நான்கு தம்பிடியானால் இரண்டு மாம்பழம் என்ன விலை.

(6.) ஒரு பென்ஸல் ஐந்து தம்பிடியானால் இரண்டு பென்ஸல் என்ன விலை.

(7.) ஒரு குல்லா ஆறுதம்பிடியானால் இரண்டுகுல்லா என்ன விலை?

என்றிப்படி அனேக கேள்விகள் கேட்க சுலபமாய்ச் சொல்லுவார்கள். அப்படி சொல்லாவிட்டால் முன்பாகங்கள் சரியாய்க் கற்பிக்கவில்லையென்று தீர்மானிக்கவேண்டும்.

இதன்பிறகு பேர்பாதிசொல்லக் கற்றுக்கொடுக்கவும். சில தின்பண்டங்களாவது, விளையாடும் வஸ்துக்களையாவது பிள்ளைகளைக்கொண்டு பாதியாய் பண்ணச்சொன்னால் செய்வார்கள். அப்படியான பாகங்களுக்கு வித்தியாசமில்லை என்றும், அந்த இரண்டுபாகங்களையுஞ்சேர்த்தால் முழுதுமாகவேண்டுமென்றும், அந்த இருபாகங்களும்சமானமானவையென்றுந் தெரிவிக்கவேண்டும். பிறகு இன்னென்னசேர்ந்து இரண்டாகிறது என தெரிவிக்கவும்?



இரண்டுமணியில் பாதியென்ன?
நான்கு குண்டில் பாதியென்ன?
எட்டுமணியில் பாதியென்ன?
பத்துமணியில் பாதியென்ன?
பனிரண்டுமணியில் பாதியென்ன?

## அப்பியாசம்.

நான்கில்பாதியென்ன? பத்தில்பாதியென்ன? ஆறு மாம்பழம் இருவருக்குச் சரியாய்ப்பங்கிட்டால் ஒவ்வொருவனுக்கு என்னவரும்? பத்து மாம்பழத்தை பங்கிட்டால் என்னவரும்?

| | | |
|---|---|---|
| பனிரண்டில் | பாதி | ஆறு |
| பத்தில் | ,, | ஐந்து |
| எட்டில் | ,, | நான்கு |
| ஆறில் | ,, | மூன்று |
| நான்கில் | ,, | இரண்டு |
| இரண்டில் | ,, | ஒன்று |

சில உதாரணங்கள் குறிப்புக்காக இவ்விடத்தில் காட்டியிருந்தபோதிலும் அவைகளைப்போல் அனேகம் புதிதாய் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

---

# எழுத்து-வாசிப்பு.

கிராண்டினேட் கோட்டில் இன்பெண்ட் ஸ்டாண்டர்ட்டுக்குக் குறித்திருக்கப்பட்ட பாடம்.

(1.) உயிரெழுத்தைப் படிக்கவும் எழுதவும் கற்பிக்கவேண்டுமென்பது. இப்படி ஏற்படுத்தியிருப்பதுச் சரியானதென்று கொஞ்சமேனும் எமக்குத் தோன்றவில்லை. எழுத்தைக் கற்பிப்பதின் கருத்து இன்னதென்று சற்று நிதானித்தால் யாம் கூறுவது விளங்கும். எழுத்துக் கற்பிப்பதாவது முன்னமே குழந்தைக்குத் தெரிந்திருக்கும் சப்தங்களுக்குக் குறிகள் கற்றுக்கொடுப்பதேயல்லாமல் சப்தம் கற்றும்கொடுப்பதல்ல. சுலபமானதிலிருந்து கஷ்டமானதைக் கற்றுக்கொடுக்கவேண்டுமாதலால் முதலில் சுலபமான குறியைக் கற்றுக்கொடுக்கவேண்டும். நம்முடைய பாஷை அ ஆ வரிசைக் கிரமமாயிருப்பது சுலபமான சப்தத்தை முதலில் எழுதி, பிறகு வரவர கஷ்டமான சப்தங்களைச் எழுதவேண்டினதால். சப்தத்தை கற்றுக்கொடுப்பதானால் அ ஆ இ ஈ என்று வரிசைக்கிரமமாய்ச் சொல்லிக்கொடுப்பது மிகவும் நன்றாயிருக்கும். தமிழில், வாசிக்கக்கற்றுக்கொடுக்கும்போதே எழுதவுங் கற்றுக்கொடுக்கவேண்டும். அப்படியிருக்க, தமிழ்ப் பாஷையிலிருக்கப்பட்ட எல்லா எழுத்துகளிலும் எழுதுவதற்கு மிகவும் கஷ்டம்தரத்தக்க அவை குழந்தை பள்ளிக்கூடத்தை மிதித்தும் மிதிக்காததுமாயிருக்கும்பொழுதே கற்

றுக்கொடுப்பது எவ்வளவும் சரியானதென்று எமக்குப்புலப்படவில்லை. சித்திரமெழுதலில்கூட முதலில் நேர்க்கோடுகளைக் கற்பித்து பிறகு வளைகோட்டைக் கற்பிக்கிறார்கள். சுபாவீகமான வழியிப்படியிருக்க நமக்குமாத்திரம் கோணவழியேன். இது விஷயத்தைப்பற்றி நன்றாய் தெரிந்திருக்கவேண்டிய சிலர் கொஞ்சம்கூட யோசிக்காமலே "அது சரிதான். நாமெல்லாமிப்படியாக படித்து கெட்டோம். வேலையில்லாதவேலை" என்று சொல்லக்கேட்டு விசனப்பட்டிருக்கிறோம். காரியம் எவ்வளவு நன்மையோ அவ்வளவு பிரதிகூலங்கள் வந்துசேரும். எழுத்தைக்கற்பிக்கவேண்டிய முறைமையைப்பற்றிச் சற்றுயோசிப்போம்.

நாம் கற்றுக்கொடுக்கப்போகிற, எழுத்து முதலிலிருக்கப்பட்ட பதத்தை, ஒரு வஸ்துவையாவது, படத்தையாவது காட்டி, அல்லது பிள்ளைகளுக்குத் தெரிந்திருக்கப்பட்டபேர்களின் மூலமாய், வரவழைத்து அப்பதத்தில், கற்றுக்கொடுக்கப்போகிற எழுத்தின் சப்தத்தைக்காட்டி, அச்சப்தத்திற்குக் குறிகற்றுக்கொடுக்கிறேனென்று, எழுத்தைக் கற்பிக்கவேண்டும். இப்படி செய்வதினால் பிள்ளைகளை கவனிக்கும்படி செய்யலாம். காட்டும்படம் அல்லது வஸ்து பிள்ளைகளுக்குக்காட்டினவுடனே உபாத்தியாயர் மற்றொன்றுஞ் சொல்லாமல் இது என்னவென்று கேட்டவுடனே அவர்கள் பேர் சொல்லத்தகுந்ததாயிருக்கவேண்டும், இல்லாவிடில் அதில்கொஞ்சமேனும் பிரயோஜனமில்லாமலிருக்கிறது மொழிய மனோ சக்திக்கு மிருந்த கெடுதிகூட உண்டாகும். எழுத்துகளைமாத்திரம் தனித்தனியாய் கற்பித்துக்கொண்டே வந்தால், வேறுவேறாயிருக்கிற எழுத்துகளை ஞாபகத்தில் பதிவிக்கவேண்டிய சாதனங்களில்லாமையால் மறந்துபோய்விடுவார்கள். ஆகையால் சிலஎழுத்துகள் கற்பித்தானவுடனே அவைகளை பதங்களிலும் அப்பதங்களை வாக்கியங்களிலும் பிரயோகிக்கவேண்டும். இப்படி எழுத்து கற்றுக்கொடுத்துக்கொண்டு போகும்போதே வாசிக்கவுந் தெரிகிறது. கற்றுக்கொடுத்ததை மறக்கார்கள். மற்றப்படி காலம் விருதாவாவதில்லை. மேலும் பிள்ளைகளுக்கு வெறும் எழுத்தைமாத்திரம் கற்றுக்கொடுத்தால் அதில் இனிப்பில்லாமையைப்பற்றி வெறுப்படைகிறார்கள். இப்படிச்செய்வதில் அனேக வஸ்துக்களின் பெயர்களும், வீட்டிலிருக்கும் வஸ்துக்கள் மனுஷர்கள் இவர்களின்பெயரும், கற்பித்தால் அவர்களுக்குக் கொஞ்சம் சந்தோஷமாயிருக்கும். இப்படிச்செய்வதில் பிள்ளைகளுக்கு கிராஹியமாகாத விஷயங்கள் ஒன்றும் நடுவில் வரக்கூடாது.

இவ்விஷயங்களைக் கற்பிக்கும் முதற் புஸ்தகத்தில் சில சித்திரப்படங்கள்கூட சேர்க்கவேண்டும்.

முதலில் இரண்டுகோட்டைமாத்திரமுடைய எழுத்தைக்கற்பிக்கவேண்டும்.

1-ம் பாடம்.

ட ட் டா.

2-ம் பாடம்.

ப ப் பா.

(இன்னும் வரும்.)

THE

VILLAGE SCHOOLMASTER.

# உபாத்தியாயர்.

Vol. I.] JULY, 1887. [No. 2.

## விஷயக் குறிப்பு.

ஜெ. டி. பௌலர் துரை அவர்கள் மூன்று மாசத்துக்கு லீவுவாங்கிகொண்டு இந்த மாதம் 12உ இங்கிலாந்துக்கு போயினார். இவருக்கு பதில் எம். யே. எல். எல். டி. பட்டம் பெற்றவராகிய பிருட்சா துரை அவர்கள் வேலை பார்த்துவருகிறார்.

***

டாக்டர் பிராட்சா துரைக்கு பதில் சென்னபட்டணம் டிப்டி இன்ஸ்பெக்டராகிய ம-ா-ா-ஸ்ரீ விஜயரங்க முதலியார் வேலைபார்த்து வரும்படியாக நியமிக்கப்பட்டிருக்கிறது. டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு இப்படி செய்வது நன்மையென்று சந்தோஷப்படினும் காயமாய் வேலை கொடுக்கிறதில்லை என்று விசனப்படுகிறோம்.

***

வித்தைக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லையென்று இன்னங் கொஞ்சகாலத்திற்குள்ளாக கவர்ன்மெண்டார் கையை கழுவிவிடுவார்கள் போலுமிருக்கிறது. கள்ளிக்கோட்டையில் இப்பொழுதிருக்கப்பட்ட கவர்ன்மெண்டு காலேஜை முனிசிபாலிடியின் வசத்தில் விட்டுவிடப்போகிறார்களாம். இது விஷயம் சரியல்லவென்பது எம் கருத்து.

***

ஒரு ஆங்கிலேய பத்திரிகையில் பொறுக்கியெடுத்த மடையர்கள் ஏழுவகையென சொல்லியிருக்கிறது. அவர்களின் குணாதிசயங்கள் பின் வருமாறும்.

(1.) அண்டைவீட்டுக்காரன் வீடு எரிந்துபோக வேண்டுமென்று தன் வீட்டில் நெருப்புவைக்கும் கோபி.

(2.) பிறர் சுகமாயிருக்கிறார்களென்கிற பொறாமையினால் தான் சுகப்படாதவன்.

(3.) கொஞ்சம் ரூபாய்க்கு ஆசைப்பட்டு தன்னைத் தூக்குப் போடுவதற்கு லோகத்துக்கு அனுமதி கொடுக்கும் கொள்ளைக்காரன்.

(4.) தன் தேகத்தில் ஏதோ வியாதி இருப்பதாய் தானே எண்ணிக்கொண்டு தனக்கு இம்சையையே தருவித்துக்கொள்வதில் திருப்தி அடைபவன்.

(5.) எரிச்சலினால் தான் தின்கிற சோற்றில் விஷத்தைப் போட்டுக் கொள்பவன்.

(6.) தன் பிள்ளை அன்னுத்தைமார்களுக்கு விருந்துபண்ணி துர்விநியோகத்தில் பணத்தை செலவழிப்பதற்காக தான் பட்டினிகிடந்து காசு சேர்க்கும் லோபி.

(7.) சமயம் வரும் காலத்தில் பஜகனென்று தன் சத்துரு ருபிக்கும்படியான வீண் புளுகு பேசுபவன்.

***

ஒரு மனிதன் வயதும் அவன் பிறந்தமாதமும் பின்வருமாறு கண்டுபிடிக்கலாம்.

உன் சினேகிதன் பிறந்தமாதம் எத்தனையாவதோ அதை இரண்டால் பெருக்கி, ஐந்து கூட்டி, ஐம்பதால் பெருக்கி, வரும் தொகையுடன் அவன் வயதைக்கூட்டிக்கொள்ளச் சொல்லி, அதில் 365 கழித்து, வந்த மீதிக்கு 115 சேர்த்துக்கொள்ளச்சொல்லி வரும் தொகையைத் தெரிந்துகொண்டால் சிநேகிதன் வயதும் அவன் பிறந்த மாதமும் சொல்லிவிடலாம். அவன் வயது 49 யாயும் அவன் ஜனித்த மாதம் பிப்ரவரியாயுமிருக்கட்டும். 2×2=4+5=9×50=450,+49=499—365=134,+115=249. அதாவது கடைசி இரண்டு எண்ணும் வயதைக்குறிக்கும். முதல் எண் மாதம். அதாவது 49 வயதும், பிப்ரவரி (2-வது) மாதம்.

## எழுத்து - வாசிப்பு. ௧

(தொடர்ச்சி)

### 3-ம் பாடம்.

பாபா. பாட. பாட்டா.
பாட்டா? பாடப்பா. பாடப்பாட.
பாபா பாட. பாபா பாடப்பாட.
பாட்டா பாடப்பாட.
பாடட்டா? பட்டப்பா.

### 4-ம் பாடம்.

ய. ய், யா.



பாய் பாயப்பாய பாபய்யா
பாட்டா பாயா? பாபா பாய். பட்டய்யா.

### 5-ம் பாடம்.

ர ர் ரா

பார். பார்ப்பார். பாரப்பா. பாபய்யர்
யார். யார் பாய்? பாபய்யர் பாய்.
பாபய்யா பாடப்பா
பாபய்யர் பாடார் ராயர் பார்ப்பார்.

### 6-ம் பாடம்.

ஈ ீ ட் + ஈ = டீ ப் + ஈ = பீ
டீ பீ யீ ரீ.

ஈயார். பீப்பாய்.
பாபய்யர் பீப்பாய் ஈயார்.
ஈரப்பாய். யார் ஈரப்பாய்.

### 7-ம் பாடம்.

ம ம் மா மீ

படம். பாடம். பீடம். மாடம். மட்ட
மாமா. மாமீ. மரம்.
பாயிரம். மாமரம். மட்டப்பாய்.
பயம். பயப்பட. பயப்படமாட்டாய். பம்பரம்.

### 8-ம் பாடம்.

பாபா பம்பரமாட பாரம்மா.
மரம் பாரம்மா.
யார் மரமப்பா?
மாமா மரமம்மா.
பாய் ஈரமா?
மாமா மாமரம் பார்.
மாமரம் பார்மாமீ!
யார் படம்?
பாட்டா படமம்மா.
யார் பாடமாட்டார்?
மாமாபாட, மாமாட, பாம்பாட பாட்டா பயப்பட்டார்.
மாமா பாடமாட்டார்.

## 9-ம் பாடம்.

ழ ழ் ழா ழீ

பழம். பாழ். பாழாய்.
மாம்பழம். பாரம்.
மாமரம் பாரய்யா.
மாம்பழம் பாரம்மா.
மாம்பழம் பாரமாய் மாமரமாட பட்டம்மா பார்.

## 10-ம் பாடம்.

ச ச் சா சீ

சாபம். சட்டம். சீழ். பாசம்.
ஈச்சம்பாய். ஈசா. ஈச்சம்பழம்.
சப்பரம். சரம். சமம். சாயம்.
ரசம். மாம்பழரசம். ஈச்சமரம்.
சாயப்பாய். ஈரமா.
பார் பரம். ஈசா.
சீசீ சீழ்பார்.

## 11-ம் பாடம்.

க க் கா கீ

காக்காய். கபடம். கசப்பாய்.
கார்ப்பாய். காடா?
காக்காய் காட்டப்பா? கம்பம்.
மாம்பழம் கசப்பா?
கார்ப்பீர் பரமஈயா.
கட்டடம் பழசாம்.
காயம் கசப்பாம்.
மரம் கீழ் பழம்பார்.

## 12-ம் பாடம்.

த த் தா தீ

தாதா. தீர்த்தம். தாய். தாடார்.
தாயாரம்மா, தீபம். தடாகம்.
பத்தா? பார்த்தார். பத்தாய்.
பத்தர். பக்தர். மத்தா?
கத்த. கப்பம்.
தம்பீ காக்காய் கத்தப்பார்.
தம்பீ காகம்பார்.



மரம்கீழ் காகம் பத்தாம்.
தாயாரம்மா! கட்டடம் கீழ்தீபம் பார்த்தாயா.

## 13-ம் பாடம்.

ந ந் நா நீ

நாய். நார். நாமம். நரம். நயம்.
நீர். மந்தம். நீந்த. நகம். நாகம்.
நாடகம்
நாம் பார்த்த நாயா.
ஈயம் நயமாம்?
மாம்பழம் நயமா?
மாம்பழம் நயமாம்.
நார் ஈரமா?
நாய் தடாகம் நீந்தப்பார்.
நீ நாடகம் பார்த்தாயா.
நீர் நாடகம் பார்த்தீரா.

## 14-ம் பாடம்.

ங ங் ஙா ஙீ

கங்கா. பாங்காய். பங்கசம்.
வங்கம். தங்கம். மாங்காய்.
தங்கம் நீ மாங்காய்ப் பார்த்தாயா?
மாங்காயா மாம்பழமா?

## 15-ம் பாடம்.

ெ எ

டெ பெ யெ ரெ மெ ழெ செ
கெ தெ நெ

தங்கம் தாயார் பெயரென்ன.
எந்த தங்கம்?
கெட்ட நாய் எங்கே.
செம்மரம், நெய், செம்பழம்.
மரம் எட்டாதா.
பழம் எட்டா?
தடாகம் நீந்தத் தகாத நாய்.
தங்கம் தெப்பமாட் பார்த்தாயா?
மகா தடாகமா?

16-ம் பாடம்.

ஏ ே

டே பே யே ரே மே ழே சே

கே தே நே

கேட்ட. கேட்கத்தகாத. பேய். அய்யே.
மேகம். சேர். தேர். நேர். தேங்காய்.
சேர்ந்த. சேர்ந்தாய்.

பேயே! நீ எங்க தங்கத்தைச் சேர்ந்தாயா?
தேங்காய்கேட்ட மாமா தடாகம் சேர்ந்தார்.

17-ம் பாடம்.

ஞ ஞ் ஞா ஞீ ஞெ ஞே.

மஞ்சப்பாய் மஞ்சத்தண்ணீர்.
தஞ்சமாநகர் நலம்.
தங்கம் கேட்டமாங்காய்ப் பத்தா?
பாபா பழம் தா, என கேட்டதா?
மாமா பழந்தா என, வாய் காட்ட,
மாமா மாம்பழம் ஈய்ந்தார்.
மாமீ! காஞ்சீ நகரம் பார்த்தாயா?

18-ம் பாடம்.

உ | ு ா

டு பு யு ரு மு மூ சு ஞு

கு து நு ஞூ.

உடுப்பு முழுச்செப்பு சீப்பு
சுக்கு துருசு அந்தம்
பசு காடு பாடு பட்டு செய்து
உழு உழுது பழுது நெய்து

பாட புத்தகம்"

முழுதும், காட்டு, காது, நுட்பம், காப்பு கமுகு, பாக்கு, முருங்கக்காய், முருங்கமரம் ஈச்சங்காய், தேங்காய், படுத்து, உடுத்து, சீப்பு, செய்.

பசுநெய் சாப்பாட்டுக்கும் மருந்துக்கும் எடுத்தது.
படம் எடுத்துக்காட்டு.
எட்டு மாம்பழம், எட்டு பாக்கு, ஏழு முருங்கக்காய் காட்டு.
பாட்டு பாடப்பாட பாம்பு படமாட்டும்.
பங்கசம், காப்புதா.
பாக்குமரம் உயரமாயிருக்கும்.
பசுமாடு எங்கே.

19-ம் பாடம்.

அ ஆ

அது. ஆடு
அடுப்பு. ஆத்துமா. அரசி. அம்மா.
அப்பா அக்கா. அய்யா. ஆயா.
மாடு. ஆடுமாடு.
அஞ்சு. பஞ்சு.
பாரதம் எடுத்துப்பார்த்தாயா.
ஆடுமாடு. அஞ்சு.
அக்கா. பஞ்சு தா.
அப்பா. ஆயா எங்கே.

20-ம் பாடம்.

டி பி யி ரி மி ழி சி கி தி நி ஙி ஞி

இடி. அடி. அடிக்கடி. மடிபிடி.
பித்தம். மயிர். சிமிழ்.
கிட்ட. காடி. கத்தி. அம்மி. பசி.
தாகம். பிசாசு. புரி. நதி.
கங்காநதி. இடுப்பு. அப்பய்யா.

காடிபாய ரங்கம்பயப்பட்டது.
பித்தம் பிடித்ததா.
இடி இடித்து வீடு இடிந்தது.
மாஞ் சாய்ந்தது.
தாகமெடுத்து, நீர்குடிக்க தடாகம்சேர்ந்தான்.
நாடகம் பார்க்கப்பார்க்க அழகாயிருக்குமாம்.
கங்காநதியில் தாகந்தீர மதுரமானசலம் குடிப்பார்.
கரும்புசாப்பிட ருசியாயிருக்கும்.
கருப்பஞ்சார் மதுரமாயிருக்கும்.

21-ம் பாடம்.

வ் வ வா வி வீ வு வெ வே

வா. வரகு. வரட்டி. வட்டம்.
வசம்பு. வேப்பமரம். வேப்பங்காய்.
வழக்கு. வடக்கு. வாய்.
வாக்கு. வாது. வம்பு. வீம்பு. வெப்பம். வேர்.

மரவேர்.
வாது என்ன?
வரட்டி வாங்கு.
வடக்கு வழி.
வனம்பார்த்து வந்துசேரும்.

வாக்குதத்தம் செய்யாதே.
சத்தியம் செய்யாதே.
வழக்கு கூடாது.
வேப்பமரம் வெப்பந்தாங்கும்.
வடக்குதிக்காய்ப் பார்த்தார்.

## 22-ம் பாடம்.

ல் ல லா லி லீ லு லெ லே

| | | | | |
|---|---|---|---|---|
| வெல்லம். | வால். | லாபம். | பல்லி. | பல்லு. |
| கல். | செல்லு. | கால். | ஆலங்காய். | |
| ஆலமரம். | செலவு. | விவரம். | | |
| இராமசாமி. | இராமலிங்கம். | புலி. | வேலி. | தாலி. |

வெல்லம் வாய்க்கு தித்திப்பாயிருக்கும்.
அம்மா பல்லி இடதுபுசத்தில் விழுந்தது அது என்ன?
அப்படி விழுந்தால் நல்லது.
வலதுபுசத்தில் விழுவது நல்லதல்ல.
அப்பா! சுவாமிக்கு உச்சவம்செய்தீரே,
அதில் உமக்கு எவ்வளவுசெலவு?
எழுபது ரூபாய் செலவாச்சுதம்மா.
சுவாமிக்கு பூஅலங்காம்அழகாயிருந்ததா.
அம்மா சுவாமி வீதியில் வரும்சமயத்தில் நீ எவ்விடத்திலிருந்தாய்.
அப்பா! நான் அப்போது பார்த்ததில்லை.

## 23-ம் பாடம்.

ள் ள ளா ளி ளீ ளு ளெ ளே

| | | | |
|---|---|---|---|
| பள்ளம். | வாள். | உள்ளே. | உளி. |
| கள்ளம். | குள்ளம். | குள்ளநரி. | பத்திரகாளி. |
| வெள்ளம். | வள்ளி. | வெள்ளி. | தெள்ளி. |
| களம். | வாளி. | முள்ளு. | கேளீர். |

பள்ளத்தில் நீர் அகப்படும்.
அவள் நாட்டுக்குவந்தாள்.
உள்ளே உளிஇருந்தால் எடுத்துவா.
இங்கே இப்படி யார்செய்தது.
பழகப்பழகப் பாலும் புளிக்கும்.
கூழ்குடித்தால் பசிநீங்கும்.
கள்ளு சாராயம் குடிப்பதுசரியல்ல.
இராத்திரியில் பால் சாப்பிடவேண்டும்.
பழம் நழுகிப்பாலில் விழுந்தது.
உழுதுபயிர்செய்து சிவனஞ்செய்தல் நலம்.

(இன்னும் வரும்.)



# மனோதத்துவம்.

இவ்விஷயத்தைப்பற்றி மறு சஞ்சிகையில் விசேஷமாய் சொல்லும்படி இச்சஞ்சிகையில் ஒன்றும் சொல்லாமல் விட்டோம்.

## கவனிப்புகள்.

உபாத்தியாயர் பாடத்தை முன்பாக வீட்டில் ஒருதடவைப் பார்த்து அதை பிள்ளைகளுக்கு இப்படி கற்பிப்பது என்று தன்மனதிலேயோ அல்லது காகிதத்திலேயோ ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது. அதாவது பாடத்தின் பிரதி சங்கதியும் நன்றய் கவனிக்கக்கூடியதாய் ஒழுங்குபடுத்தவேண்டும்.

தன் சக்தியும் பிள்ளைகளின் சக்தியும் ஒன்றென்று நினைக்கக்கூடாது. சிலர் தாங்கள் ஒருதரம் படித்து சுலபத்தில் தெரிந்துகொள்ளும் சங்கதியை பிள்ளைகளும் தெரிந்துக்கொள்வார்களென் றென்னுவார்கள். அப்படிக்கில்லாமல் பாடத்தின் விஷயம் வகுப்பின் சக்திக்கு ஏற்றதாயிருக்கவேண்டும்.

சிலர் பூகோள பாடத்தில் ராவணன் கதையும் கணக்கில் தென்னால் இராமன் கதையும் சொல்லி பொழுதைப்போக்கினால் போதுமென் றெண்ணுவார்கள். ஏதோ ஒருவிஷயம் கற்பிப்பது என்று பூகோளபாடத்தில் இதர பாடங்களையும் சம்பந்தமில்லாத விஷயங்களையும் கலக்கக்கூடாது. அதாவது பாடத்திற்குப் பொருந்தாமலும் சம்பந்தப்படாமலுமிருக்கிற விஷயங்கள் பாடத்தில் கலக்கக்கூடாது.

சிலர் விஷயங்களைத் தெளிவுபடுத்தும்போது, இரைச்சல் போட்டு, கா, கூ வென்று கத்தின போதிலும் கடைசியாய் காரியத்தில் ஒரு பிரயோஜனமுமில்லாமல் போகும். சுலபமான பதங்களைக்கொண்டு அப்பிள்ளைகளுக் கெப்படி போதிக்கவேண்டுமோ அப்படி செய்தால் தான் அவர்களுக்கு ஏதாவது தெரியும். தாங்கள் சரியாய்க் கற்றுக்கொடுத்தோமென்று தங்கள் குற்றத்தை யறியாமல் "தொண்டைபோக கற்பித்தும் இக்களிமண் தலையில் புகவில்லையே" யென்று கழியையோ அல்லது புஸ்தக கட்டையையோ எடுத்து தலைமேல் அடிக்கப்போவார்கள். இவர்களுக்கு அப்படி கோபம் வரும்போதெல்லாம் சற்று நிதானித்து தப்பிதம் நம்முடையதா மற்றவர்களுடையதா என்று நிதானித்தல் நன்மை.

மூடிபோட்ட பாத்திரத்தில் நீர்விடுவதுபோல, கிரஹிக்கச் சக்தியற்ற பிள்ளைகளுக்குப் பிரசிங்கிப்பதினாலாவ தென்ன? தான் கற்பித்த ஒவ்வொருவிஷயத்தையும் பிள்ளைகள் சரியாய் அறிந்தார்களாவென்று பார்க்கவேண்

டும், அப்படித் தெரிந்துகொள்ள பிரதி - வியாக்கியானத்தின் பிறகு கேள்வி கேட்டல் வேண்டும்.

எம்முடைய சந்தாதாரர்களுக் குண்டாகும் சந்தியங்களை எமக்குத் தெரிவித்தால் எம்மால் கூடியவரைக்கும் விடை கொடுக்கப் பிரயத்தினப்படுவோம். நார்மல்ஸ்கூல் உபாத்தியாயர்கள் தங்கள் வேலையை நடத்திவருகையில் அனேக புதிதான விஷயங்களைக் கண்டுபிடிக்கக்கூடும். அவைகளையெல்லாம் குறித்து இப்பத்திரிகையின் மூலமாய் வெளியிட மற்றவர்களும் அறிந்து பிரயோஜனப்படுவார்கள். தங்கள் தங்கள் வேலையைப்பற்றி அடிக்கடி யோசித்து அனேக விஷயங்களைக் கிரஹிப்பதே மேன்மையான கடமை.

——:0:——

## முதல் ஸ்டாண்டர்ட்டுக்குக் குறித்திருக்கிற பாடம்.

(1.) நூறு வரைக்கும் முன்னும் பின்னுமாய் எண்ணுதல்.

(2.) பத்து, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, இடை விட்டு எண்ணுதல்.

(3.) ஒன்று முதல் நூறு முதலாயுள்ள எண்களை வாசித்தல், எழுதல், பிரித்தல்.

(4.) மொத்தம் நூறுக்கு மேற்படாமல் இரண்டு வரிசைக்குள் கூட்டல்

(5.) பெருக்கல் வாய்பாடு நான்கு பனிரண்டுவரைக்குங் கற்பித்தல்.

(6.) எட்டணாவுக்கு மேற்படாமல் நாணயக்கூட்டல் மனக்கணக்காய் கற்பித்தல் முதலானவையாம்.

முன்பு பத்து வரைக்கும் கற்பித்துப் பிறகு ஒன்று சேர்த்து வேறு வார்த்தையில்லாமையால் பத்தும் ஒன்றும் பதினொன்று என்று, அப்படியே சொன்னோம். மறுபடியும் ஒன்று சேர்த்து, பத்தும் இரண்டும் பனிரண்டு எனவும், மறுபடியும் ஒறு குண்டுசேர்த்தால் பத்தோடு மூன்று சேர்த்தால்-பதின் மூன்று எனவும், இப்படி ஒன்றுகள் சேர்த்துக்கொண்டே,

| | | |
|---|---|---|
| பத்தும் | நான்கும் | பதினான்கு |
| பத்தும் | ஐந்தும் | பதினைந்து |
| பத்தும் | ஆறும் | பதினாறு |
| பத்தும் | ஏழும் | பதினேழு |
| பத்தும் | எட்டும் | பதினெட்டு |
| பத்தும் | ஒன்பதும் | பத்தொன்பது |
| பத்தும் | பத்தும் | இருபத்து அல்லது இருபது |



என்றிம்மாதிரியாய் பலவஸ்துக்களைக்கொண்டு கற்பிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| பிறகு | மூன்று | பத்து | முப்பது |
| | நான்கு | பத்து | நாற்பது |
| | ஐந்து | பத்து | ஐம்பது |
| | ஆறு | பத்து | அறுபது |
| | ஏழு | பத்து | எழுபது |
| | எட்டு | பத்து | எண்பது |
| | ஒன்பது | பத்து | தொண்ணூறு |
| | பத்து | பத்து | நூறு. |

இம்மாதிரியாய் ஒன்பது வரைக்கும் ஒன்று ஒன்று யெண்ணிக்கொண்டு போய் பத்தான பிற்பாடு பத்து பத்தா யெண்ணவும் பத்துக்கு குறைந்திருந்தால் இத்தனை பத்தும் இத்தனை ஒன்றும் என சொல்லிவிக்கவும்.

பின் வருபவைகளை பத்தாகவும் ஒன்றாகவும் பிரிக்கவும்.

நாற்பத்தி எட்டு, முப்பத்திரண்டு, ஐம்பது, எழுபத்தி நான்கு, இருபத்தியாறு, நாற்பத்தி எட்டு, பதினாறு, ஐம்பத்தி ஏழு, எண்பத்திநாலு, தொண்ணூறு.

நூறு முதற்கொண்டு ஒன்றின் கழித்தலாகிய தலைகீழாய் எண்ணக் கற்பிக்கவும்.

நூறு-பத்து பத்தாகையால் (அதாவது ஒன்பது பத்தும் ஒரு பத்து) பத்தில் ஒன்று போனால் ஒன்பது, ஒன்பது பத்து தொண்ணூறு, தொண்ணூறும் ஒன்பதும் தொண்ணூற்றொன்பது எனவும். இம்மாதிரியாய் ஒவ்வொரு விஷயத்தையும் தெரிவிக்கவும்.

பிறகு பத்து இடையில் விட்டு எண்ணக் கற்பிக்கவும் இது முன்வரும் சங்கதியால் தெரிந்திருக்கலாம். ஒரு பத்து அல்லது பத்து, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது, தொண்ணூறு, நூறு.

உம். இருபதும் முப்பதும் எவ்வளவு? இருபது இருபத்து முப்பது மூன்று பத்து இருபத்தும் மூன்று பத்தும் ஐந்து பத்து அல்லது ஐம்பது.

அம். இருபதும் ஐம்பதும் எவ்வளவு? முப்பதும் நாற்பதும் எவ்வளவு? முப்பதும் ஐம்பதுமெவ்வளவு? இருபதும் எழுபதும் எவ்வளவு? அறுபதும் இருபதும் எவ்வளவு?

### பிறகு இரண்டு இடையில் விட்டு எண்ணவும்.

பனிரண்டும் இரண்டும் பதினான்கு.

பனிரண்டு பத்தும் இரண்டு. இதோடு இரண்டு சேர்க்க பத்தும் நான்கும் பதினான்கு எனவும், பதினான்கும் இரண்டும் பதினாறு, பதினாறும் இரண்

டும் பதினெட்டு, பதினெட்டும் இரண்டும் இருபது, பதினெட்டு-பத்தும் எட்டும், இரண்டுசேர்க்க, பத்தும் பத்தும், இருபது, இம்மாதிரியாய் நூறு வரைக்கும் கற்பிக்கவும்.

### மூன்று இடையில் விட்டு எண்ணக் கற்பிக்கவும்.

பனிரண்டும், மூன்றும் பதினைந்து.

பனிரண்டு-பத்தும் இரண்டும், இதோடு மூன்று சேர்க்க பத்தும் ஐந்தும் பதினைந்து, பதினைந்தும் மூன்றும் பதினெட்டு, பதினெட்டும் மூன்றும் இருபத்தொன்று.

பதினெட்டு-பத்தும் எட்டும், இதோடு மூன்று சேர்க்க பத்தும் பத்தும் ஒன்று அதாவது இருபத்தி ஒன்று ஆகும்.

இம்மாதிரியாய் நூறு வரைக்கும் கற்பிக்கவும்.

### பிறகு நான்கு இடையில் விட்டு எண்ணவும்.

பனிரண்டும் நான்கும் பதினாறு, பதினாறும் நான்கும் இருபது, இருபதும் நான்கும் இருபத்திநான்கு இம்மாதிரியாய் நூறுவரைக்கும் கற்பிக்கவும்.

### பிறகு ஐந்தைந்து விட்டு எண்ணவும்.

பத்தும் ஐந்து பதினைந்து பதினைந்து ஐந்தும் இருபது இம்மாதிரியாய் நூறு வரைக்கும் எண்ணவும்.

இப்படி பலவிதமாய் பலதரம் செய்வதால் பிள்ளைகள் எப்பேர்க்கொத்தையும் கூட்ட நன்றாய்க் கற்கிறார்கள்.

### அப்பியாசம்.

(1.) கூட்டுக மூன்றும், ஐந்தும், ஐந்தும், நான்கும், பத்தும், எட்டும், எட்டும், ஐந்து, ஒன்றும் ஐந்தும், ஆறும் ஏழும், எட்டும் ஒன்பதும், பதின்மூன்றும் ஐந்தும்.

இம்மாதிரியாய் உபாத்தியாயர் அனேகம் செய்துகொள்ளலாம்.

———:o:———

## கிண்டர்கார்டன்.

### ப்ரோபெல் சரித்திரம்.

———•———

யாம் முன் பத்திரிகையில் ப்ரோபெல் என்றும், கிண்டர்கார்டனுக்கு ஆதி கர்த்தாவாயிருக்கப்பட்டவரின் சரித்திரத்தைக் கூறுவதாகச் சொல்லியிருந்தோம். அதை இப்போது சுருக்கமாய்ச் சொல்லி முடிக்க முயல்வோம்.



ப்ரெடரிக் ப்ரோபெல் என்பவர்1782 வருஷத்தில், தூரிங்கியன் காட்டினிலிருக்கும் ஒபெர் வியிஸ்பாக் என்னும் குக்கிராமத்தில்பிறந்தவர். பாலியமாயிருக்கும்போதே அவர்படிப்புக்கு அனேக இடையூறுகள் சம்பவித்தன. பாலியத்திலேயே தன் தாயாரை இழந்து, தகப்பனாலாவது,மற்றுந்தாயாலாவது சரியாய் பாராமரிக்கப்படவில்லை. ப்ரோபெலின் அம்மான் இவர் விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டபோதிலும், இவருடைய உபாத்தியாயர்கள் அவர் சுபாவத்தை அறியாமலே, ஒன்றுக்கும் உதவமாட்டாதவனென்று தீர்மானித்தார்கள். இப்படி இவர் பாலியத்தில் பள்ளிக்கூடத்தில் படித்து பிரயோஜனப்பட்டதாகத் தெரியவில்லை. பிறகு படிப்புக்கு உதவமாட்டாரென்பதாக ஒரு காட்டு விசாரணைக் கர்த்தரிடத்தில் வேலைக்கு அமர்த்தினார்கள். அவ்விடத்தில் இவர் செடிகளிடத்திலும் மரங்களிடத்திலும் எப்போதும் வேலையாயிருந்து தானாய் அனேக சாஸ்திர சம்பந்தமான விஷயங்களைக் கற்றார்.

இப்படியான பிறகு, சாஸ்திர விஷயங்களை பூர்த்தியாய் விசாரிக்கவேண்டுமென்கிற ஆசையினால், தன் எஜமானன் உத்தரவைப்பெற்று ஜீனா ஸர்வகலாசாலையைச் சேர்ந்தார். அவ்விடத்து போதனை இவருக்கு சரிப்படவில்லையாயினும் இக்காரியத்தினால் 30 ஷில்லிங் கடன்பட்டு ஒன்பது வாரம் சிறைச்சாலையிலிருக்கும்படியாய் நேரிட்டது.

இதன் பிறகு பயிரிடும் வேலையைத் தொடர்ந்து, அதை செய்துகொண்டிருக்க இவர் தகப்பனார் இறந்துபோனார். அப்பொழுது இவருக்கு வயது இருபதாயினும் தன் ஜீவனத்துக்குத்தானே தேடும்படி நேரிட்டது.* இது முதற்கொண்டு மூன்றரை வருஷம் வரைக்கும் அனேக வேலைகளிலிருந்தபோதிலும், அவைகளிலெதிலும் கொஞ்சமேனும் விருப்பமில்லாதவராயிருந்தார். தன்னை ஏதோ ஜனோபகாரமான, ஒரு பெரிய காரியத்தைச்செய்ய பகவான் சிருஷ்டித்திருக்கிறார் என்று தன் மனதிற்கு அடிக்கடி தானாய்பட்டபோதிலும் அது இன்னதென்று முன்னால் அவருக்கு தெரிந்ததில்லை.

சிலநாள் சென்றபின்பு இவர் சிற்பி சாஸ்திரம் கற்றுக்கொண்டு அவ்வேலையை செய்துகொண்டிருக்கும் சமயத்தில், அவ்விடத்திலிருக்கும் உபாத்தியாயரில் ஒருவர் இவர் உபாத்தியாயர் வேலைக்குத் தகுந்தவரென்று யோசித்து தனது பாடசாலையில் ஒருவேலை கொடுப்பித்தார். இதில் இரண்டு வருஷம் மிக உச்சாகத்தோடு கற்பித்துவந்து பிறகு வேறுமூன்று பிள்ளைகளுக்கு மாத்திரம் கற்பிக்கும்படி ஏற்பாடாய், அவர்களையும்அழைத்துக்கொண்டு பெஸ்டிலாட்ஸியினிடம் சுவிட்ஜர்லாண்டுக்குப்போய்ச்சேர்ந்தார்.

(இன்னும்வரும்)

———:o:———

## ஒரே உபாத்தியாயர் இரண்டு மூன்று வகுப்பை நடத்த முறை.

(முன் தொடர்ச்சி)

பிள்ளைகளின் மனோக்கருவிகளின் சக்திக்குத் தகுந்தாற்போல், அவர்களுக்குப் படிப்பிக்கவேண்டுமேயொழிய, நம்மிஷ்டத்தைப்போல் எத்தனை நாழியாயினும் கற்பிக்கத் தலைப்படக்கூடாது. அப்படி செயின், வித்தி

* இவ்விஷயம் நம்மவரில் ஒரு ஆச்சரியமல்ல.

யாப்பியாசம் என்கிற மனோக்கருவிகளை பழக்கி அவைகளைப் பலப்படுத்துகிறேமென்கிற வேலை வைத்துக்கொண்டு, அதற்கு நேர் எதிராகிய மனோக்கருவிகளை துர்ப்பலப்படுத்தும் வேலையை செய்வதாகும். சில நாளைக்கு முன்பு பிஸ்வருமாது 1886-வருடம் மேமீ 20உ டைரெக்டர் பொரோஸிடிங்ஸில் பிள்ளைகளின் வயதுக்குத் தகுந்தாற்போல வேலையிடலாமென்று பிரசுரப்படுத்தியிருக்கிறது.

| வயது. | மணி. | | | Sleep. நித்திரை. |
|---|---|---|---|---|
| | Exercise. முயற்சி. | Work. வேலை. | Leisure. அவகாசம். | |
| 7 | 8 | 2 | 4 | 10 |
| 8 | 8 | 2 | 4 | 10 |
| 9 | 8 | 3 | 4 | 9 |
| 10 | 8 | 4 | 4 | 8 |
| 11 | 7 | 5 | 4 | 8 |
| 12 | 6 | 6 | 4 | 8 |
| 13 | 5 | 7 | 4 | 8 |
| 14 | 5 | 8 | 4 | 7 |
| 15 | 4 | 9 | 4 | 7 |

முன்பு ஒவ்வொரு வகுப்புக்கும் கால அட்டவணை ஏற்படுத்தி பிறகு உபாத்தியாயர் கற்பிக்கவேண்டிய வழியை தெரிவிப்போம்.

——:0:——

## இன்பெண்டு ஸ்டாண்டர்டுக்கு கால அட்டவணை.

### காலை.

| பிள்ளைகள் வரும்போது அடெண்டன்ஸ். | மணி. | நிமி. |
|---|---|---|
| குறிக்க ... | | 5 |
| பாட்டு ... ... ... ... ... | ,, | 10 |
| வாசிப்பு ... ... ... ... ... | ,, | 20 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 20 |
| எழுதல் ... ... ... ... ... | ,, | 15 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 20 |

### மாலை.

| | | |
|---|---|---|
| கணக்கு ... ... ... ... ... | | 30 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 20 |



| | | |
|---|---|---|
| ஆப்ஜெக்ட் லெஸன் ஆகுபேஷன் அல்லது ஆக்ஷன் பாட்டுகள் ... ... ... ... ... | ,, | 30 |
| பாட்டு ... ... ... ... ... | ,, | 5 |

ஆக காலை $1\frac{1}{2}$-மணி மாலை $1\frac{1}{4}$-மணி மொத்தம் $2\frac{3}{4}$-மணிக்கு, பாடத்தில் செலவழிக்க வேண்டிய காலம் $1\frac{1}{2}$-மணி.

## முதல் ஸ்டாண்டர்டுக்கு கால அட்டவணை.

### காலை.

| பிள்ளைகள் வரும்போது அடெண்டன்ஸ். | மணி. | நிமி. |
|---|---|---|
| குறிக்க ... ... ... ... ... | ,, | 5 |
| பாட்டு ... ... ... ... ... | ,, | 10 |
| வாசிப்பு ... ... ... ... ... | ,, | 35 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 20 |
| எழுதல் ... ... ... ... ... | ,, | 20 |

### மாலை.

| | | |
|---|---|---|
| கணக்கு ... ... ... ... ... | ,, | 40 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 10 |
| ஆப்ஜெக்ட் லெஸன், ஆகுபேஷன் ஆக்ஷன் ஸாங்கு... | ,, | 30 |
| பாட்டு ... ... ... ... ... | ,, | 10 |

ஆக காலை $1\frac{1}{2}$-மணி மாலை $1\frac{1}{2}$-மணி மொத்தம் 3-மணிக்கு பாடத்தில் செலவழிக்கவேண்டிய காலம் 2-மணி நேரம்.

## இரண்டாவது ஸ்டாண்டர்டுக்கு கால அட்டவணை.

### காலை.

| பிள்ளைகள் வரும்போது அடெண்டன்ஸ். | மணி. | நிமி. |
|---|---|---|
| பாட்டு ... ... ... ... ... | ,, | 5 |
| வாசிப்பு ... ... ... ... ... | ,, | 45 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 10 |
| எழுதல் ... ... ... ... ... | ,, | 20 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 10 |
| சொல்லும் ... ... ... ... ... | ,, | 20 |

### மாலை.

| | | |
|---|---|---|
| கணக்கு ... ... ... ... ... | ,, | 45 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 15 |
| ஆப் ஜெக்ட் ஆகுபேஷன் பூகோளம் ... ... | ,, | 30 |
| பாட்டு ... ... ... ... ... | ,, | 10 |

ஆக காலை 2-மணி மாலை 1—40. மொத்தம் 3—40.மணிக்கு பாடத்திற்கு மாத்திரம் 2—40-மணி காலம்.

இம்மூன்று வகுப்பையும் காலை 7-மணிமுதல் ஒன்பது மணிவரைக்கும், மாலை 4-மணிமுதல் 5—30-மணி வரைக்கும் கற்பிக்கவேண்டும்.

கற்பிக்கவேண்டியது முதல் இரண்டு வகுப்பேயானால் மேற்சொல்லிய காலத்தில் இரண்டுவகுப்பையும் தானுப் நடத்தலாம்.

### மூன்றுவது ஸ்டாண்டர்ட்டுக்கு கால அட்டவணை.

காலை.

| பிள்ளைகள் வரும்போது அடெண்டன்ஸ். | மணி. | நிமி. |
|---|---|---|
| இங்கிலீஷ் வாசிப்பு... ... ... ... | ,, | 45 |
| எழுதல் சொல்லுவதெழுதல் ... ... ... | ,, | 15 |
| விளையாட்டு ... ... ... ... | ,, | 10 |
| நீதிமஞ்சிரி, பூகோளம் ... ... ... ... | ,, | 30 |
| சித்திரம், பாட்டு ... ... ... ... | ,, | 20 |

மாலை.

| | | |
|---|---|---|
| தமிழ் வாசகம் ... ... ... ... | ,, | 45 |
| சொல்வதெழுதல், எழுதல் ... ... ... | ,, | 15 |
| கணக்கு ... ... ... ... ... | 1 | ,, |
| ஆப்ஜெக்ட் லெஸன் ... ... ... ... | ,, | 30 |

ஆக காலை 2-மணி மாலை 2½-மணிக்கு பாடம் 4-மணி.

### நான்காவது ஸ்டாண்டர்ட்டுக்கு கால அட்டவணை.

காலை.

| பிள்ளைகள் வரும்போது அடெண்டன்ஸ். | மணி. | நிமி. |
|---|---|---|
| இங்கிலீஷ் வாசகம் ... ... ... ... | ,, | 45 |
| ஆப்ஜக்ட் லெஸன் பூகோளம் ... ... ... | ,, | 30 |
| தமிழ் இங்கிலீஷ் இலக்கணம் ... ... ... | ,, | 20 |
| இங்கிலீஷ் எழுதல் சொல்லுவதெழுதல் ... ... | ,, | 20 |
| சரித்திரம் ... ... ... ... | ,, | 5 |

மாலை.

| | | |
|---|---|---|
| நீதிமஞ்சிரி ... ... ... ... | ,, | 45 |
| எழுதல் சொல்லுவ தெழுதல் ... ... ... | ,, | 30 |
| கணக்கு ... ... ... ... ... | 1 | ,, |
| சித்திரம், பாட்டு ... ... ... ... | ,, | 15 |

ஆக காலை 2-மணி மாலை 2½-மணி ஆக மொத்தம் 4½ மணி.

மறு சஞ்சிகையில் படிப்பிக்கவேண்டிய ஏற்பாட்டைப்பற்றிச் சொல்லுவோம்.

THE

# VILLAGE SCHOOLMASTER.

# உபாத்தியாயர்.

Vol. I.] AUGUST, 1887. [No. 3.

## உபாத்தியாயர் பத்திரிகை பத்திராதிபருக்கு

ஐயா,

உலகத்திலுள்ள பற்பல தொழில்களினு மேன்மையுள்ளதெனப் பல அறிஞர்களால் அங்கீகரிக்கப்பட்ட நற்றொழிலாகிய உபாத்திமைத்தொழிலைத் தம்முன்னோரது பெரும் புண்ணியத்தாலும் தமது அருந்தவப்பெருக்காலும் பெற்ற உபாத்தியாயர்களிற் சிலர் "இது என்ன தொழில் மேய்ப்பன் ஆடுமாடுகளைத் தினந்தோறும் மேய்த்துவருவதுபோல நாமும் சிறுவர்களை நாடோறு மேய்த்துப் போராடவேண்டியது நம் தலைவிதியாயதே. ஒவ்வொருவருக்கும், பணவருவாய்க்குப் பல துறைகள் சுளுவில் காட்டியிருக்க, நமக்கேனிங்ஙனம் உபாத்திமைத்தொழிலை விதித்துக் கடவுள் வருத்துகின்றனர்," என்று பலவாறு பிதற்றக் கேட்டு, அவ்வுபாத்திமைத்தொழிலையே எத்தொழிலினும் நற்றொழிலெனக் கொண்ட என்மனமுற்ற தியக்கத்தை ஒருவாறு ஆற்றுமாறு எழுதப்புகுந்த சிலவரிகளுக்கு நும்பத்திரிகையின் ஓர் கோணத்தில் இடந்தருவீர்களென்று, உறுதியாய் நம்புகின்றனன்.

### எத்தொழிலினும் உபாத்திமைத்தொழிலே மேன்மை என்பது.

மனிதர்களால் இவ்வுலகத்தில் அனுபவிக்கப்படும் செல்வம் கல்விச்செல்வம், பொருட்செல்வமென, இருவகைப்படும். அவற்றில் பின்னர்க்கூறிய பொருட்செல்வமோ, நிலையற்றதாயும், இவ்வுலக இன்பத்திற்கு மாத்திரம் ஹேதுவாயுமுள்ளது. முன்னர்க்கூறிய கல்விச்செல்வமோ, நிலையுள்ளதும், இவ்வுலக வின்பத்திற்கேயன்றி மோட்சவுலக வின்பத்திற்கும் ஹேதுவாயுள்ளது. பொருட்செல்வமடைந்து, வரியராயுள்ளார்க்குப் பொருள்கொடுக்கு மியல்பினையுடையார்க்குப் பொருட்கொடையாளர்களென்றும், கல்விச் செல்வ மிக்கடைந்து, தம்மைவந்தடைந்த கல்வியில் வரிஞரான வித்தியார்த்திகளுச்குக் கல்விப்பொருளைக் கொடுக்கு மியல்பினையுடைய பெருமக்களுக்குக் கல்விப்பொருட் கொடையாளர்களென்றும், உபாத்தியாயர்களென்றும் பெயர் விளங்குகின்றது.

பொருட்கொடையாளர் பொருளில்லாதார்க்குப் பொருள்கொடுப்பின், அப்பொருள் கையிலுள்ளவரை அவர்களுக்கு வேண்டுமென கொண்டு சுகமடையலாகும். எவ்விதத்தாலேனும் அப்பொருளழியின் மறுபடியும் உடை

யவரிடம் போய் எற்றலாகிய இழிதொழில் புரியநேரிடும். தம்மையடைந்து யாசித்தோர் பிறரை மறுபடியும்போய் யாசியாவண்ணம் பெரும்பொருள் குவித்துவைத்து வாரிக்கொடுப்போர் எவ்வுலகினுமில்லை. அரசர்கள் போன்ற பெரும்பொருளாளர்களும் தம்மையடைந்த பலரில் சிலருக்கன்றி யாவருக்கும் பிறரிடம்போய் எற்காவண்ணம் பொருட்கு வையிதலருமை. (பிறரிட மேற்கா வண்ணமிருத்தலுக்குத் தங்குடும்பத்திற்கும் தமக்கும் வேண்டும் உண்டி ஆடைகளுக்குத் தகுந்த பணவருவாயிருப்பது போதுமானது) இங்ஙனமாகப் பொருட்கொடையாளர்கள் யாவருக்கும் திருப்திசெய்ய வல்லாரில்லையென்பதும் தங்களால் கொடுக்கப்படும் கொடையால் நீடித்த சுகமனுபவிக்க ஹேதுவில்லையென்பதும் கொடுக்கக் கொடுக்கக் குறைவடையுமென்பதும் நன்குவிளங்குகின்றன.

கல்விப்பொருட் பெருங்கொடையாளர்களென உலகமேத்தும் உபாத்திமைத்தொழிலையுடைய பெருந்தகையாரோ தம்மைவந்தடைந்த கல்வியில் வரியவர்களாகிய வித்தியார்த்திகளுக்கு எற்குமாறு அழியாப்பெருங்கல்விப் பொருளைக்கொடுத்து அதை அவர்கள் வேண்டுமளவுமனுபவித்துப் பிறருக்கும் வாரி வாரிக்கொடுப்பினும் சிறிதளவுங் குறையாது மென்மேலும் விருத்தியடையும்படி வரையாது கொடுக்கின்றார்கள். செல்வப் பொருட்கொடையாளர் தம்மை வந்தடைந்தோர்க்கு எவ்வளவு நிதிகொடுப்பினும் தாங்கள் கொடுக்கும் பொருள் பெறுவோர் நல்லறிவினரில்லாக்கால் அந்நிதியினால் பல துன்பங்களையும் எண்ணிறந்த பாவச்செயல்களையுமுண்டாக்கலாம். கல்விப்பொருட்கொடையாளர் நிதிபெறுவோர் மேற்கண்ட துன்பங்கள் எள்ளளவுமின்றி உலகிலுள்ளவரையும் பல கற்றுறைகளிற் பயின்று பெருநிதிக்குவையீட்டித் தாமுமனுபவித்துப் பாத்திரமறிந்து வரியார்க்குங்கொடுத்து உலகில் பெரும்புகழ்படைத்தோங்கி மறுமையிலும் சச்சிதானந்த சுவரூபராகிய பெருங்கருணைக் கடவுளது பரிபூரணானுக்கிரகத்தினால் மோட்சமடையும் வழியையும் நாடோறுந்தேடி அங்ஙனமே அடைவரென்பது எவராலும் மறுக்கொணாததாயிருக்கின்றது.

உபாத்திமைத் தொழில் மிக்க மேன்மையற்றதொழிலென்று சிலர் சொல்லுவதும் அங்கீகரிக்கத்தகாததே—என்னெனில் உபாத்தியாயனை நன்குமதித்து மேன்மைப்படுத்தாதார் எங்குமில்லை. எத்தகைய செல்வவானுடைய பிள்ளையும், அதிகாரஸ்தனுடைய குழந்தையும் உபாத்தியாயரிடத்தில் படிக்கவரவேண்டியது இன்றியமையாததாயிருப்பதால் அவர்களாலும் மற்றையோர்களாலும் அதிக மேன்மை பெற்றுவருகிறார்கள். அவர்களை உபசரியாத உயர்ந்த இடமும் தாழ்ந்த இடமும் கிடைக்குமோ? இத்தகைய மிக்கமாட்சிமைபொருந்திய உபாத்திமைத் தொழிலையுடையமேலோர் தம்மைத்தாமே நொந்துகொள்ளவும் பிறரால் இகழப்படவும் காரணம் அகாரணமாயிருக்கிறது. இதனினுமேமேலோரும் சேவகாவிருத்தியாகிய எவ்வித உத்தியோகஞ் செய்தலினும் உபாத்திமைத் தொழிலே நன்றெனக்கொண்டு குசலவித்தையே (உபாத்திமைத்தொழிலே) உத்தமமானதென்றும், விவசாயஞ்செய்தலும் வியாபாரஞ்செய்தலும் மத்திமமான தொழின் முயற்சியென்றும், உத்தியோகஞ்செய்தலாகிய சேவகாவிர்த்தி அதமமானதென்றும், மூட்டைசுமந்து ஜீவிப்பது செத்தபிழைப்பென்றும் கூறியிருக்கின்றனர் (சுலோகம், உத்தமம் குசலவித்யா மத்யமம் கிருஷிவாணிஜம் அதமம் சேவகாவிர்த்தி பாரகோ மிருதஜீவனம்) இப்பொழுது இந்தியாவிலும் அங்கிலேயநாடுமுதலிய பல நாகரீகதேசங்களிலும் உபாத்திமைத் தொழிலையே நற்றொழிலெனக்கொண்டு மேன்மையடைந்துவருபவர் அநேகர் இருக்கின்றார்கள். உபாத்திமைத்தொழிலால்தான் உலகஞ்சீர்பட்டு ஒழுங்காய் நடந்துவருகின்றது. அஃது இல்லாவிடில் நாகரீகமேது, அரசாக்ஷிமுறையேது; வியாபாரமேது; கடிதப்போக்குவரவேது, சட்டதிட்டங்களேது; மனிதர்கள் ஞானமடைந்து உய்யும் வழிதானேது; எவ்வித நற்றொழிலுமின்றி உலகஞ்சீர்கெட்டு இருக்குமென்பது திண்ணம். நாகரீகவிருத்தி ஒவ்வொன்றிற்கும் மூலகாரணமாயும் உலகம் ஒழுங்குபட்டு நடக்க ஆதாரபூதமாயும் சர்வலோக நாயகராகிய பரமதயா நிதியின் பேருளையடைய வழிகாட்டுதற்கு மூலஸ்தானமாயுமுள்ள கல்வியறிவைப் போதிக்கும் உபாத்திமைத் தொழிலே எத்தொழிலினும் மேன்மையெனவெண்ணி அத்தொழிலைக் கைக்கொண்டிருக்கும் மகான்கள் கொஞ்சஞ்சிரமமெடுத்துப் பாலகர்கள் தாங்கள் கற்பிக்கும் விஷயங்களை எளிதிலுணருமாறு தகுந்தவழிகளைக்கண்டுபிடித்து அங்ஙனமே கற்பிப்பது மன்னியில் மேற்கண்டவழிகளைத்தெளிவாய்க்காட்டும் புஸ்தகங்கள்—பல்வற்றையும் மேற்சங்கதிகளை போதிக்கும் பல பத்திரிகைகளையும் வாங்கிப்படித்து சுலபவழிகளை ஆராய்ந்தறிந்து இலகுவிற் பாலகர்களுக்குக் கல்வி போதித்து அவர்களை இவ்வுலகச்செல்வமும் மோக்ஷவுலகச் செல்வமும் அனுபவிக்கும்படி செய்யத் தயவு புரிவார்களென்று அன்னோரை மிக வேண்டிக்கொள்ளுகின்றனன்.

இங்ஙனம், ஓர் உபாத்தியாயன்



## வினாவிடை.

### ௬-வது பக்கத்திலிருந்தும் வினாக்களுக்கு விடை.

(1,) சொல்லுவதெழுதலினாலாவதென்ன? பிள்ளைகள் எழுதும்போது ஒருவன் பலகையை மற்றொருவன் பாற்காமல் என்ன சாதனங்கள் பண்ணுவாய?

சொல்லுவதெழுதலினாலாகும் பயன்கள் என்னெனில், சொல்லுவதை பிள்ளைகள் தப்பில்லாமல் வரையவேண்டுமென்பதும், கையெழுத்துப்படியவேண்டுமென்பதும், செவியின் கேட்கும் சக்தியை கூர்மைப்படுத்தவேண்டுமென்பனவாம்.

ஒருவன் பலகையை மற்றொருவன் பார்க்காமலிருக்க, ஒருவனுடைய முகம், மற்றொருவன் பார்க்க நிற்கச்செய்வது; அல்லது ஒருவன்மாற்றி மற்றொருவனை நிற்கச்செய்வது; உபாத்தியாயர் பிள்ளைகளையே முக்கியமாய் கவனித்துக்கொண்டிருக்கவேண்டும். இல்லையாயின் எப்படியாயினும் பிள்ளைகள் மோசஞ்செய்வார். 5 அல்லது 6 பிள்ளைகளிருக்கும் வகுப்புக்கு பெஞ்சுக்கு இருவரை உட்காரவைத்தால் போதும்.

(2.) நீ உபாத்தியாயிருக்கும் வகுப்புக்குக் கால அட்டவணை எற்படுத்து.—இதற்குமுன்பத்திரிகையை.

(3.) நீ பாடம் கற்பிக்கும்பொது எவ்விடத்திலிருப்பாய் அப்படியிருப்பதற்குக் காரணம் கூறுக.

போர்ட்டு வகுப்புக்கு இடதுபக்கமூலையிலிருக்கும் அதற்கு வலதுபக்கத்திலாவது யாவரையும் பார்க்கும்படியான வகுப்பின் நடுவிலாவது நிற்கவேண்டும்.

வேறு எவ்விடத்திலாவதிலிருந்தால் பிள்ளைகள் முழுமையையும் பார்க்க முடியாது. போர்ட்டுக்கு இடதுபக்கத்திலாவது மற்ற எந்த இடத்திலாவதிருந்தால் அடிக்கடி போர்ட்டுக்குவந்து எழுத சங்கடமேயல்லாமல் காலமும் விருதாவாகும்.

(4.) பிள்ளைகளுக்கு வீட்டில் படித்துக்கொண்டுவா பாடம் கொடுப்பது நன்மையா, அதைப்பற்றி விசிதமாய் எழுதுக.

பிள்ளைகளுக்குக் கற்பிக்காத பாடத்தைக் கொடுத்தால் அவர்கள் அதை தாங்களாய்க் கற்கப்போகிறதில்லை. அதற்கு வீட்டிலொரு உபாத்தியாயனை வைத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடில் பாடத்தைக் குட்டிபாடம் பண்ணவேண்டும். உபாத்தியாயர்களை வைத்துக்கொண்டால்கூட அவர் சாதாரணமாய் ஒரேமாதிரியாய்க்கற்பிப்பதில்லை. வீட்டில் சொல்லிக்கொடுப்பது தப்போ சரியோ நன்றாய் மனதில் பதிந்துவிடுகிறது. பாடசாலைக்குவந்தபிறகு சரியான வழியில் கற்பிக்கும் உபாத்தியாயருக்கு அது சரிப்படுவதில்லை. பிறகு வீட்டில் கற்பித்ததை மறக்கடித்து தன்னுடையமாதிரியில் கற்பிக்கவேண்டும். அதுவும் மறந்துபோகும், இதுவும் மனதில் நிற்காது. உபாத்தியாயர் நாள்முழுதும் தொண்டைபோகக்கததியும், ஒன்றும் வரவில்லையே என்பதற்கு இதே காரணம். இலக்கணத்தில் ஒன்றும் தெரியா வகுப்புக்கு இரண்டுமாதத்திற்குள் கற்றுகொடுக்கும் படிப்பை மூன்று வருஷம் குட்டிபாடமாய்க் கற்றுவந்த வகுப்புக்கு ஒரு வருஷத்தில் கற்றுக்கொடுப்பது கடினம். பிள்ளைகளுக்குப் புத்திக்கு எட்டாத ஒன்றையும் அவர்களை செய்யச்சொல்வது மிககெடுதல்.

—:o:—

## பிரதமை சிட்சை.

கவர்மெண்டார் முன்பு அனேக காலேஜுகளையும், ஹைஸ்கூல்களையும், மிடில், பிரைமரி ஸ்கூல்களையும் பாதுகாற்றுவந்திருந்தார்கள். கொஞ்சநாளைக்குமுன் நம்ம கவர்னர் ஜெனரலாயிருந்த ரிப்பன் பிரபுவானவர் தற்காலப்படிப்பின் நிலைமையை விசாரிப்பதற்காக ஒரு கமிஷனை ஏற்படுத்தினார். அதைச்சேர்ந்தவர்கள் இந்தியா முழுமையும்சுற்றி வித்தியாப்பியாசத்தில் வெகுநாளாய் அநுபோகப்பட்ட அனேகரின் அபிப்பிராயத்தை விசாரித்து கடையில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தனர். அம்முடிவினால்விளையும் நன்மை தீமையும், அதினாலுண்டாகும் இந்துதேச வித்தியாபிவிர்த்தியும் அப்பொழுது தெரிந்தில்லையாயினும் இப்போது தெரியவந்ததென்பதற்குச் சந்தியமில்லை; கொண்டிக்குதிரைக்கு சருக்கினதுசாக்கு என்றாற்போல அவ்வேற்பாடுகளினால் கவர்மெண்டாருக்கு பணத்தைமீற்க என்னென்ன அனுகூலங்களிருந்தவோ அவைகளை யெல்லாம் உடனே செய்துவிட்டனர். அதாவது காலேஜுகளையெல்லாம் எடுத்துவிட்டனர், ஹை ஸ்கூல்களை, லோகல்பண்டு முனிசிபலார் வசம் ஒப்புவித்தனர். சிலதை பொத்தியாய் எடுத்துயிட்டனர்; மிடில் ஸ்கூல்களையெல்லாம் கைகழுவவிட்டனர்; தங்கள் வசத்திலிருந்த பிரைமரிஸ்கூல்கள் சிலவேயாயினும் அவைகளையும் துறந்தனர். ஆகிய



இவைகளெல்லாம் செய்தது. தங்களுக்கும் மேல் படிப்பிக்கும் சம்பந்தம்
கூடாதென்றும், பிரைமரி ஸ்கூல்களையும் அதைச் சேர்ந்த வித்தையையும்
விர்த்திபண்ண வேண்டுமென்னுஞ் சாக்குகொண்டுபோலும். சொன்னது
போல் இதுவரைக்கும் பிரைமரிபாடசாலைகளை விர்த்திபண்ண என்ன நடத்
தியிருக்கிறார்களென்றால் ஒன்றுமில்லை. காலேஜு முதலானவைகளை எடுத்து
விடுவதிலிருந்த சுருசுருப்பு, இவ்விஷயத்தில் கொஞ்சமேனும் தோன்ற
வில்லையே. தங்களுக்கு சொந்த பாடசாலைகள் சில, கிராண்டினேட் சட்
டப்பிரகாரம் பிரைமரி ஸ்கூல்களுக்குட் உதவி, லோகல்பண்டிலிருந்தும்,
முனிசிபாலிடியிலிருந்தும் கிடைக்கிறது. படிக்கமாட்டார்கள், தங்களு
டைய பணம் செலவாகாது என்ற எண்ணத்தோடு, ஒட்டர் பாடசா
லைகளுக்கும் குரும்பர் பாடசாலைகளுக்கும் கிராண்ட் உதவி செய்கிறோ
மென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களும் படிக்க, ஆரம்பித்துவிட்டால்
பட்சிகளுக்கும் மிருகங்களுக்கும் படிப்பித்தால் அதற்குமாத்திரம் தாங்கள்
உதவிசெய்வோம் என்பார்போலும். அவர்கள் வேஷம்போட்டுக்கொண்டிருக்
கிறபடி கொஞ்சமேனும் செய்யப்பிரயத்தினப்படவில்லையே. காலேஜு, ஹை
ஸ்கூல்களிலிருக்கும் உபாத்தியாயர்களுக்கு சம்பளத்தில் உதவிசெய்வதாக
சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் நார்மல் பாடசாலைகளில் பழகினால்தான்
உதவியே யொழிய மற்றப்படி இல்லை. உபாத்தியாயர்கள் பழக உயர்ந்த
நார்மல் பாடசாலை இவ்விராஜதானியில் ஒன்றேதானிருக்கிறது. அதில்
காலேஜு ஹைஸ்கூல்களுக்கு உபயோகப்பழகும் உபாத்தியாயர்கள் கொஞ்
சம். ஆகையால் அவ்விஷயத்திலும் அவருக்குச் செலவதிகமில்லை. இப்போதி
ருக்கும் கவர்மெண்டார் உதவிசெய்யும்படியான ஹைஸ்கூல்களில் வித்தியா
போதன பாடசாலைகளில் பழகின உபாத்தியாயர் நூற்றுக்கு ஐந்து இருப்பது
கஷ்டம். இவர்கள் நிஜமாய் உதவிசெய்து தற்கால படிப்பின் நிலைமையை சீர்
திருத்த எண்ணில் இப்பேர்க்கொத்த பாடசாலைகள் இவ்விராஜதானியில் நாலை
ந்து ஏற்படுத்தக்கூடாதா? பணத்தை பர்மாசண்டையிலும் மற்ற உபயோகமில்
லாத விஷயங்களிலும் கரியாக்கிக் வித்தையை பூர்த்தியாய் அசட்டைபண்ணி
க்கொண்டு வருகிறார்கள். எதைக்கேட்டபோதிலும் பணமில்லை, பணமில்லை
யென்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படி சொல்லிவிட்டால் தப்பித்
துக்கொள்ளுவதுபோலே, ஏன் இல்லையென்றுக் கேட்பதார்? இவர்கள் வசூல்
செய்யும் வரியிலிருந்து முன் ராஜாக்களைப்போல் என்ன உதவி செய்கிறார்கள்.
அவர்களாலாகவேண்டிய நன்மை எவ்வளவோ விருக்க ஒன்றுஞ் செய்யார்கள்
படிப்புக்கு நாமே வரிபோட்டுக்கொள்ளவேண்டும்; ரோட்டு நாமே கட்டிக்
கொள்ளவேண்டும்; ஏரி நாமே மராமத்து பண்ணிக்கொள்ளவேண்டும்; எல்
லாம் நாமே செய்துக்கொள்ளவேண்டும் இவர்கள் செய்வதென்னமோ?

படிப்பு விஷயத்தில் இப்படி செய்யும் அசட்டை கவர்மெண்டாருக்குத்
தகுந்ததல்ல. ஜனங்களின் இஹபரசாதகத்திற்கு மூலமாயிருக்கப்பட்ட படிப்
பின் விஷயத்தில் இவ்வளவாயின மற்ற விஷயங்களில் என்ன நன்மை
பெற எண்ணக்கூடும். அப்போதப்போது, பிச்சையிட்டது போதும் நாயை
க்கட்டி வையும், என்று சொல்லும்படியாய் பிள்ளைகளுடைய சம்பள முதலா
வைகளை உயர்த்தி விடுகிறார்கள். இதர தொழில்களிலிருப்பவர்களுக்கு இவ்
விஷயங்களில் மிக அக்கரையிருப்பது கடினமாகையால் உபாத்திமைத்
தொழில் நடத்தும் எம்மோடொத்தவர்களே இவ்விஷயங்களைக் கவனித்து
இதற்கு யாதொரு இடையூறுவராமல் சாதனங்கள் செய்விக்கவேண்டுமென்
பது எமது பிரார்த்தனை.

# இலக்கணம்.

இலக்கணம் சரியானவழியில் கற்பிக்கவேண்டுமானல், தற்காலத்தில் சிறுவர்களுக்காக உத்தேசித்திருக்கும் புஸ்தகங்களில் ஒன்றேனும் பயன்படா து. இலக்கணம் கற்பிக்கவேண்டியவழி இன்னதென்று தெரிந்திருக்கின்,புஸ்த கத்தாலாவதென்னவென்றால் கற்பிக்கவேண்டியசரியான வழி தெரிந்தவர் கள் நூற்றுக் கெத்தனைபேர் இருக்கிறார்கள்? மேலும் எல்லாவிஷயங்களி லும் சமர்த்தராயிருக்கும் உபாத்தியாயர்கள் எத்தனைபேர் இருப்பார்கள்? எல்லாம் தெரிந்திருப்பதேயாயினும் ஒவ்வொரு தினமும் பிரதியிடத்திலும் வெவ்வேறாய் ஏற்படுத்திச்சொல்லுவது எவ்வளவுகூடும் அப்படிச் சொல்லு வதாயிருந்தால் இப்புஸ்தகங்களாலாவதென்?

இலக்கணம், எழுத்தியில், பதவியில், புணரியல் முதலாயிருந்தபோதி லும், நாம் படிப்பிக்கவேண்டியது அப்படியல்ல. எழுத்ததிகாரத்தின் சங் கதிகள் தெரியாமுன்னமே எழுத்ததிகாரமென்னும் பெயரைப்பற்றி வியாக்கியா னம்செய்வதாலாவதென்ன? பிள்ளைகளுக்குப்பிரயோஜனமாகாத விஷயத்தைத் தவிர்க்கவேண்டுமென்று பலதரம் சொல்லியிருக்கிறோம். ஆகையால் இலக் கணத்தைக் கற்பிக்கவேண்டிய வழியைப்பற்றியும் ஆரம்பிக்கவேண்டிய இட த்தைப்பற்றியும் பின்வரும் பாடங்களின்மூலமாய்க் கூற முயல்வோம்.

## 1-ம் பாடம்.

ஒரு காக்கை தண்ணீர்குடிக்க ஒரு பாத்திரத்தினண்டையில் வந்தது.
அது தன் கழுத்தைநீட்டியும் தண்ணீர் எட்டவில்லை.
பிறகு சில கற்களைப்பொறுக்கிக்கொண்டுவந்து அதில் போட்டது.
உடனே தண்ணீர்மேலேவர குடித்து தாகம் தீர்த்துக்கொண்டது.

மேற்சொன்ன கதையானது அனேக பிரிவுகளாயிருப்பதைக்காட்டி ஒவ் வொருபிரிவும் ஒரு முடிவின் சங்கதியைத் தெரிவிக்கிறதென்று தெரிவித்து அவைகளுக்கு பெயர் வாக்கியமென்று சொல்லவும். ஒவ்வொரு வாக்கியத் தின் பிறகு கொஞ்சம் நிறுத்தவேண்டுமென்றும், அவ்விடத்தில் முற்றுப்பு ள்ளி போடவேண்டுமென்று சொல்லவும்.

இராமன் போனான்.

நாய் ஓடினது.

கோபாலன் வந்தான்.

மேற்கூறிய வாக்கியங்களில் போனான் என்னும் பதம், இராமன் இன் னது செய்தான் என்பதைத் தெரிவிக்கிறது.

ஓடினது என்பது நாயினுடையசெயலைத் தெரிவிக்கிறது. வந்தான் என் பது கோபாலன் இன்னது செய்தானென்பதை அறிவிக்கிறது.

போனான், ஓடினது, வந்தான் என்னும் பதங்களில்லாவிட்டால், இரா மன், நாய், கோபாலன் என்னும் பதங்கள்மாத்திரம் யாதொரு அபிப்பிராயம் அல்லது பயனையும் தெரிவியா.



போனான், ஓடினது, வந்தான் ஆகிய பதங்கள் வாக்கியத்தின் பயனைத் தெரிவிப்பதால், பயநிலை, யென்று பெயர். இராமன், நாய், கோபாலன் என்னும் முதற்சொற்களுக்கு எழுவாய் என்று பெயர்.

வாக்கியம் என்பது எழுவாயும் பயனிலையும் கூடியதாம்.

எழுவாய் வாக்கியத்தின் முதற்பொருளாம்.

பயனிலையாவது வாக்கியத்தின் முதற்பொருளின் செயலைக் காண்பிப்ப தாம்.

பின் வரும் வாக்கியங்களில் எழுவாய் பயனிலைகளைக்காட்டுக.

இராமன் செய்தான். கோபாலன் படித்தான். பசு ஓடினது. நாய் குலைத் தது. எருது வண்டி இழுக்கும். பசு பால்கரந்தது.

## 2-ம் பாடம்.

### பெயர்ச்சொல்.

புஸ்தகம், பிரம்பு, நாய், இலை, மரம், செருப்பு, இம்மாதிரியாய் வீட்டிலி ருக்கும் அனேக வஸ்துக்களையும், வெளியிலிருக்கும் அனேகவஸ்துக்கள், மிரு கங்கள், மனிதர்கள் முதலானவைகளின் பெயரையும் பிள்ளைகளைக்கொண்டு வரவழைக்கவும். அப்போதப்போது அவைகளை போர்ட்டில் எழுதவும் போர் ட்டில், புஸ்தகம், நாய், இவைகள் இருக்கின்றனவாவென்று கேட்டு, அவைக ளின் குறிப்பாகிய பெயர் இருக்கிறதென்று தெரிவிக்கவும். அவ்விடத்தில் புஸ் தகம் இருந்தால் அதை எடுத்துக்கொண்டுவரவேண்டுமானல் நான் அவ்விடத் திலேயே இருந்தால், புஸ்தகத்தைத்தொட்டு எடுத்துக்கொண்டுவா என்று சொ ன்னால் எடுத்துக்கொண்டுவருவாய். தூரநின்று கையால் காட்டினாலும் எடுத் துக்கொண்டுவருவாய். நான் வெளியிலிருந்து உன்னைக் கொண்டுவரச்சொன் னால் தொட்டுக்காட்டுவதற்கு இல்லை. அல்லது சுட்டிக்காட்டுவதற்கும் இல்லை. என்னசெய்தால் கொண்டுவருவாய் புஸ்தகம் என்று சொன்னால் கொண்டுவரலாம். இவ்விடத்தில் புஸ்தகம் என்னும்சொல் அவ்வஸ்துவுக்கு குறியாய்விட்டது. இப்படிப் பிரதிவஸ்துவுக்கும் குறி இருக்கவேண்டும் என்று தெரிவித்து அது பெயர் என்று தெரிவிக்கவும்.

பெயர்ச்சொல்லாவது, வஸ்துக்கள், மனிதர்கள், இடங்கள், முதலான வைகளின் பெயரைக்காட்டும் சொல்லேயாம்.

## 3-ம் பாடம்.

### வினைச்சொல்.

நாய் ஓடினது, இராமன் அடித்தான், கோவிந்தன் நீந்தினான், புஸ்தகம் பட்டணத்திலிருந்துவந்தது.

இவ்விடத்தில், நாய், இராமன், கோவிந்தன், புஸ்தகம், பட்டணம் முத லானவைகள் பெயர்ச்சொற்களாம்.

ஓடினது நாயினது தொழிலை அல்லது செயலைக் காண்பிக்கிறது.

அடித்தான் என்பது இராமன்செயலைக் காண்பிக்கிறது. நீந்தினான் என் பது செயலைக் காட்டுகிறது. வந்தது என்பதுபுஸ்தகத்தின் செயலைக் காட்டுகி றது. ஆக, செயலைக்காட்டும், ஓடினது, அடித்தான், நீந்தினான், வந்தது என் னும் சொற்கள், செயல், தொழில், அல்லது வினையைக்காட்டும் சொற்களா லால் இவைகளுக்கு வினைச்சொல் என்கிற பெயர்வந்தது.

**வினைச்சொல்லாவது பொருளின் தொழிலைக் காட்டுவதேயாம்.**

பின்வரும் வாக்கியங்களில் பெயர்ச்சொல்வினைச்சொற்களைக் காட்டுக.

நாய்கடித்தது, பூனை ஓடினது.

வஸ்திரம் உலர்ந்தது, கோவிந்தன் படித்தான்.

இராமன் வந்தான்.

## 4-ம் பாடம்.

## உரிச்சொல்.

பெரிய அரசன், நல்லபையன், அறிவுள்ளமனிதன், சிறிய வீடு.

இவைகளில் பெரிய என்னும் சொல் அரசன் என்னும் பெயருக்கு முன் வந்து இன்ன அரசன் என்று தெரிவிக்கிறதால் அரசனுடைய குணத்தைக் காட்டுகிறது.

அதேவிதமாய் நல்லதென்பது பையனுடையவும், அறிவுள்ள என்பது மனிதனுடையவும், சிறிய என்பது வீட்டினுடைய குணத்தையும் காட்டுகிறது.

ஆக பெரிய, நல்ல, அறிவுள்ள சிறிய என்னும் சொற்கள் முறையே அரசன், பையன், மனிதன், வீடு என்னும் பெயர்ச்சொற்களின் குணத்தைக் காட்டுகின்றன.

மிகவும் அடித்தான்.

வேகமாய ஓடினான்.

மெள்ள உட்கார்ந்தான்.

இவைகளில், மிகவும் என்னும் சொல் அடித்தான் என்னும் வினையின் குணத்தையும், வேகமாய் என்பது ஓடினான் என்னும் வினையின் குணத்தையும்; மெள்ள என்பது உட்கார்ந்தான் என்னும் வினையின் குணத்தையும், தனித்தனியே காட்டுகின்றது.

ஆக பெயருக்கு முன்வந்து பெயர்களின் குணத்தைக் காட்டும், பெரிய நல்ல, அறிவுள்ள, என்னும் சொற்களும், வினையைத்தழுவி வினையின குணத்தைக்காட்டும் மிகவும், வேகமாய், மெள்ள என்னும் சொற்களும் உரிச்சொற்களாம்.

**உரிச்சொல்லாவது பெயர்ச்சொல்லுக்கும், வினைச்சொல்லுக்கும் முன் வந்து அவைகளுக்குரிய குணத்தைக்காட்டுவதும் சொல்லாம்.**

பின் வரும் வாக்கியங்களில் உரிச்சொற்களை எடுத்து எழுதுக. கெட்ட மனிதன், இராமன் நன்றாய்படித்தான். இவன் மெதுவாய்ச் சென்றான. புஸ்தகம் அழகாய் இருக்கிறது. பொன் வெகுகனமாய் இருக்கும். வெள்ளக்குதிரை வேகமாய் ஓடினது.

நாயோ நரியோ.

நானும் அவனும்.

அதுவே

இராமனை அடித்தான்.



43

இவைகளில், நாய் என்னும் சொல்லினீற்றிலிருக்கும் ஓவையும், நரியோ என்பதிலுள்ள ஓவையும், நானும் அவனும் என்பவைகளிலுள்ள உம்மையும், அதுவே என்பதிலுள்ள ஏயையும், இராமனை என்பதிலுள்ள ஐயையும், தனித்தனி எடுத்துக்கொண்டால் அர்த்தமில்லாமற்போனாலும், பதங்களோடு சேரும்போது, அவைகளின் அர்த்தத்தை மாற்றுகின்றன. இப்பதங்கள் இடையில் வருவனவாதலால் இடைச்சொல் என்று சொல்லப்படுகின்றன.

**இடைச்சொல்லாவது தனியாய் வாாமல் பதங்களை அடுத்துவருவதாம்.**

பின்வருபவைகளில் இடைச்சொற்களை எடுத்துக் கூறுக.

கத்தியால் வெட்டினான். மலைனின்றும் வீழுத்தான். நானே கொடுத்தேன். அவனே செய்தான். தகப்பனுக்குப்பிள்ளை. தரித்திரருக்கு பிச்சைகொடு.

## பெயரியல்.

மனிதர்களும், அவர்களுக்கு மேற்பட்டவர்களாகிய தேவர், நரகர் முதலியவர்களும் உயர்குலத்தைச் சேர்ந்தவர்கள்.

மனிதர்களுக்குக் கீழ்பட்டவை வேறு அல்லது மற்றக்குலம்.

குலம் என்பதற்கு திணையென்று சொல்லுவார்கள்.

ஆகையால் உயர்குலத்தைச்சேர்ந்த மனிதர், தேவர், நரகர் என்பவர்களைக்குறிய சொற்கள் உயர்திணைச்சொற்களென்றும், உயிருள்ளனவைகளும், உயிரில்லனவைகளுமாகிய மற்றவைகளைக்குறிக்கிற சொற்கள் மற்ற என்கிற அர்த்தத்தைக் கொள்ளுகிற அல்திணை (அஃறிணைச்) சொற்கள் என்று சொல்லப்படும்.

பொன்னன் மனிதனுடைய பெயர்.

மாமரம் மரத்தினுடைய பெயர்.

காக்கை பட்சியினுடைய பெயர்.

பசு மிருகத்தினுடைய பெயர்.

இந்திரன் தேவனுடைய பெயர்.

பின்வரும் சொற்கள் என்னதிணை என்று கூறுக.

செடி, புல், எலி, நாய், பய்யன், இராஜன், குடிகள், இராமன், பொன்.

**கோபாலன்** என்பது ஆண்சாதியைக்குறிக்கிறது. அன்னை என்பது பெண்சாதியைக்குறிக்கிறது.

மனைவி என்பது பெண்சாதி யென்பதைக் குறிக்கிறது.

மரம் என்பது ஒருசாதியையும், அதாவது ஆண், பெண், இரண்டில் ஒன்றையும் குறிக்கவில்லை. ஆகையால் அதற்குச் சாதியில்லை.

மனிதன் என்பது ஆணைக் குறிக்கிறது.

மனைவி பெண்ணைக்குறிக்கிறது.

சாதி என்பதற்குப் பால் என்று சொல்லுவது.

ஆகையால் ஆண்சாதிக்கு ஆண்பால் என்றும், பெண்சாதிக்கு[illegible] பால் என்றும் சொல்லப்படும்.

மனிதர்களென்பது பலரைக்குறிப்பதால் பலர்பால் என்று சொல்லப்படும்.

மரம் என்பதற்குப் பால் இல்லையாயினும் ஒன்றையே குறிப்பதால் அதற்கு ஒன்றன் பால் என்றும், மரங்கள் என்பதற்கும் பால் இல்லையாயினும், பலவற்றைக் குறிப்பதால் பலவின்பால் என்றும் சொல்லப்படும்.

பட்சிகள், மிருகங்களில் ஆண் பெண் என்கிற வித்தியாசம் இருப்பினும் முக்கியமானவை அல்லனபற்றி, அவைகளை ஒன்றன்பால் பலவின்பால்களில் சேர்த்திருக்கிறது.

பின்வருபவைகள் என்னபால் என்று கூறுக.

மனைவி, மரங்கள், கேசவன், கணவன், செல்வன், புலி, காடுகள், கோவிந்தன், புஸ்தகம்.

மரம், புஸ்தகம், மனைவி ஆகிய பெயர்கள் ஒரு பொருளைக் குறிக்கின்றன.

மரங்கள், புஸ்தகங்கள், மனைவிகள் ஆகிய பெயர்கள் பல பொருளைக் குறிக்கின்றன.

ஒரு பொருளைக் காட்டுவது ஒருமை எண் எனவும், பலபொருளைக்காட்டுவது பன்மை எண் எனவும் சொல்லப்படும்.

பின் வருபவைகள் இன்ன எண் என்று கூறவும்.

மேசைகள், பலகை, புத்தகம், காகிதங்கள், மனிதர்கள், செவி, கைகள், வஸ்திரம், வில்கள், பூட்டுகள், திறவுகோல்.

பேசுகின்றவன், முன்னின்று கேட்டுக்கொண்டிருப்பவன், அவ்விடத்தில் இல்லாதவன் என பெயர்களை மூன்று இடத்தில் இருப்பவைகளாக வகுக்கலாம்.

பேசுகிறவன், நான் என்றும், முன்னிற்பவனை நீ யென்றும், அவ்விடத்தில் இல்லாதவனை அவன் எவன் என்றும், பெண் பிள்ளையாகில் அவள் என்றும், ஒன்றன்பால் சொல்லாகில் அது என்றும், பலவின் பாலைக் காட்டும் சொல்லப்படும் பேசுகிறவனிடத்திற்குத் தன்னைக் காட்டுவதால் தன்மை யென்றும், முன்நிற்கிறவன் இடத்திற்கு முன்னிலை யென்றும், மற்ற இடத்திற்குப் படர்க்கை என்றும் சொல்லுவார்கள்.

| இடம். | ஒருமை. | பன்மை. |
|---|---|---|
| தன்மை. | நான், யான். | நாம், நாங்கள். |
| முன்னிலை. | தான்.<br>நீ. | தாம், தாங்கள்.<br>நீர், நீங்கள். |
| படர்க்கை. | அவன்.<br>அவள். | அவர்கள்.<br>அவர்கள்.<br>அவை, அவைகள். |

நாம், நீர் என்பவை பன்மையேயாயினும் மரியாதைகாட்டும்பொருட்டு ஒருமையாயும் வரும்.

பின்வருபவைகளின் இடத்தைக் கூறுக.



நானே செய்தேன்; கோபாலன் கொடுத்தான். இப்போது ஓடினவன் நீயே. நல்லவர்களைப்போல நீ நட. தீயோர்களோடு இராமன் சேருகிறான்.

மரம்சாய்ந்தது.
மனிதன் பேசுகிறான்.
வீடு விழுந்தது.
கால் ஒடிந்தது.

இவற்றுள், மரம், மனிதன், வீடு, கால் ஆகிய பெயர்கள் எழுவாய். இவைகள் யாதொரு வேறுபாடில்லாமல் இயல்பாகவே வருகின்றன. இவைகளுக்கு எழுவாய் அல்லது முதல் வேற்றுமையென்று பெயர்.

இராமன் வந்தான்.
கோபாலன் தூங்கினான்.
நான் நடந்தேன்.

ஆகிய இந்த வாக்கியங்கள் பூர்த்தியாய் முடிந்திருக்கின்றன.

இராமன் அடித்தான்
கோபாலன் வாங்கினான்.
நான் எடுத்தேன்.

இவ்வாக்கியங்களில் எழுவாய் பயனிலைகளிருந்தபோதிலும் அர்த்தம் பூர்த்தியாகவில்லை.

# கணக்கு.

(தொடர்ச்சி.)

## பிறகு இதுவரைக்கும் நாம் சொன்ன எண்களுக்குக் குறிகள் கற்றுக்கொடுக்க வேண்டும்.

| | |
|---|---|
| ஒன்று என்பதற்குக்குறி ... | 1 |
| இரண்டு ... | 2 |
| மூன்று ... | 3 |
| நான்கு ... | 4 |
| ஐந்து ... | 5 |
| ஆறு ... | 6 |
| ஏழு ... | 7 |
| எட்டு ... | 8 |
| ஒன்பது ... | 9 |

பத்து என்பதற்குக் குறியில்லை.

ஆகையால் பத்தெல்லா மொரு இடத்திலும் ஒன்றெல்லாம் வேறுயிடத்திலும் எழுதி இது பத்தைச்சேர்ந்த இடம், இது ஒன்றைச்சேர்ந்த இடம் என்று வித்தியாசம் தெரிந்துகொள்ளவேண்டும். எப்படியெனில், பத்து என்று சொல்லும்போது ஒரு பத்து ஆகிறது. ஒன்றுகள் ஒன்றுமில்லையாகையால் ஒன்றுமில்லை யென்பதைக் குறியாகக் காட்டுகிற 0 பிந்து அல்லது

பூச்சியத்தை முதலில் எழுதி, அதற்கு இடதுபக்கத்தை பத்துகள் ஸ்தானமாக்கி ஒருபத்து ஆகையால் 1 எழுதி ஆக பத்துக்குக் குறியாக 10 என்று எழுதவும். பிள்ளைகள் மனதில் பூச்சியமிருக்குமிடம் ஒன்று ஸ்தானத்தையும் ஒன்று இருக்குமிடம் பத்து ஸ்தானத்தைக்குறிப்பதென்று நன்றாய்ப் பதிய வைக்கவேண்டும்.

ஆகையால் இப்பொழுது பதினொன்று எழுதவேண்டுமானால், பதினொன்றில் ஒரு பத்தும் ஒரு ஒன்று மிருப்பதால் பத்து ஸ்தானத்தில் ஒன்றும் ஒன்று ஸ்தானத்தில் ஒன்றும் ஆக 11 என்று எழுத வேண்டும். இம்மாதிரியாய்

| | |
|---|---|
| பனிரண்டு ... ... ... ... ... | 12 |
| பதின்மூன்று ... ... ... ... ... | 13 |
| பதினான்கு ... ... ... ... ... | 14 |
| பத்தொன்பது ... ... ... ... ... | 19 |
| இருபது ... ... ... ... ... | 20 |
| இருபத்தைந்து ... ... ... ... ... | 25 |
| முப்பது ... ... ... ... ... | 30 |
| நாற்பது... ... ... ... ... | 40 |
| எண்பது ... ... ... ... ... | 80 |
| தொண்ணூறு ... ... ... ... ... | 90 |
| தொண்ணூற்றொன்பது ... ... ... ... | 99 |

நூறு இதை எழுதக் கொஞ்சம் யோசிக்கவேண்டும். ஒன்று ஸ்தானத்தில் எப்படி ஒன்பது ஒன்றுகள் எழுதி பத்து எழுத முடியாமல் வேறு ஸ்தானம் தேடலாயிற்றோ அம்மாதிரியாய்ப் பத்து ஸ்தானத்தில் ஒன்பது பத்துவரைக்கு எழுதலாம் பத்து பத்து எழுத முன்பு பத்துக்குச் செய்ததுபோல இதற்கும் பத்து ஸ்தானத்திற்கு இடது கைப்பக்கம் ஒரு ஸ்தான மேற்படுத்திக்கொண்டு நூறு இத்தனை என்று குறிக்கவேண்டும். நூறு என்னும்போது ஒன்று ஸ்தானத்திலும் பத்து ஸ்தானத்திலும் ஒன்றுமில்லை யாகையால் அவ்விரண்டிற்கும் பூச்சியம் எழுதி நூறு ஸ்தானத்தில் ஒரு நூறாகையால் ஒன்றும் எழுதி ஆக 100 என்று எழுதவேண்டும்.

## அப்பியாசம்.

(1.) பின் வரும் எண்களை வாசிக்கவும் 28, 46, 59, 80, 70, 97, 66, 55, 42, 34, 56, 100, 90, 78, 54, 32, 49, 26, 73, 61, 93, 26 75, 47, 68, 16, 5, 18, 3, 99.

(2.) பின்வருபவைகளை எண்களினால் குறிக்கவும். இருபத்தெட்டு; நாற்பத்திரண்டு; ஐம்பத்தாறு; முப்பத்தொன்பது; நூறு; தொண்ணூறு; எண்பத்தியொன்று; தொண்ணூற்றெட்டு; முப்பத்திரண்டு; பதினான்கு; அறுபத்தேழு; நாற்பத்தேழு; ஐம்பத்தைந்து.

(3.) பின் வரும் எண்களை எழுத்தால் எழுதவும் 5, 9, 15, 18, 24, 26, 36, 43, 54, 59, 66, 79, 88, 45, 67, 89, 92, 95, 96, 99.

(4.) பின் வரும் எண்களை பத்துகளாகவும் ஒன்றுகளாகவும் பிரிக்கவும் 46, 13, 26, 15, 56, 5, 14, 28, 30, 20, 34, 40, 49, 78, 66, 77, 69, 46, 55, 54, 78, 89, 95, 86, 99, 100, 10, 86, 1.



இரண்டு குதிரையும் மூன்று குதிரையும் எத்தனை குதிரை?
மூன்று பலகையும் ஏழு பலகையும் எத்தனை?
நான்கு புத்தகமும் இரண்டு புத்தகமும் எத்தனை?
மூன்று பலகையும் இரண்டு புஸ்தகமும் எத்தனை?

முதல் மூன்றிற்கும் முறையே 5 குதிரை, 10 பலகை 6 புத்தகம் என்று சொல்ல நான்காவதிற்கு 5 என்ன வென்று சொல்லுவது? 5 பலகை யென்று சொல்லுவோமென்றால் மூன்று பலகை தானிருக்கிறது? அல்லது 5 புஸ்தகம் என்று சொல்ல இரண்டு புஸ்தகம் தானிருக்கிறது. என்ன வென்று சொல்லுவது? ஒன்றும் சொல்லுவதற்கு இல்லை ஆகையால் கூட்டமுடியாது, முன் மூன்று உதாரணங்களில் ஒரே பெயரையுடைய வஸ்துக்களாதலால் கூட்ட முடிந்தது. நான்காவதில் வேறு வேறு பெயரையுடைய வஸ்துக்களை கூட்டவேண்டியதால் முடியவில்லை. மேற்சொல்லியவற்றை யெல்லாம் கேட்டு, ஒரே பெயரையுடையவைகளைத் தான் கூட்டலாம் என்று வரவழைத்து மனதில் பதியும்படி செய்யவும்.

கூட்டுக,

(1.) 2, 3, 4, 5, 6, 7, 8, 4, 7, 3, 2, 8, 7, 6, 5, 4.

(2.)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 1 | 8 | 2 | 4 | 8 |
| 4 | 5 | 2 | 9 | 3 | 5 | 9 |
| 5 | 3 | 3 | 8 | 6 | 6 | 7 |
| 7 | 6 | 4 | 7 | 7 | 7 | 6 |
| 8 | 7 | 5 | 6 | 8 | 8 | 5 |
| 9 | 8 | 6 | 5 | 9 | 9 | 4 |
| | 6 | 7 | 4 | 3 | | 3 |

(3.)

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 8 | 9 | 7 | 8 |
| 6 | 7 | 8 | 6 | 7 |
| 5 | 6 | 7 | 5 | 6 |
| 4 | 5 | 6 | 3 | 5 |
| 3 | 4 | 5 | 1 | 4 |
| 2 | 3 | 4 | 2 | 1 |
| 1 | 2 | 3 | 6 | 2 |
| | 1 | 2 | 7 | 9 |
| | | 1 | 8 | |

2. 14யும் 15யும் கூட்டுக.

ஒரே பேரையுடையவைகளைத்தான் கூட்ட முடியுமாதலால் ஒன்றுகளோடு ஒன்றையும் பத்துகளோடு பத்தையும் கூட்டவேண்டும்; அதாவது பதினாலை 10-ம் 4 மாகவும் பதினைந்தை பத்தும் ஐந்துமாகப் பிரித்து ஆக 4-ம் 5-ம் ஒன்பது பத்தும் பத்தும் இருபது என்று கூட்டி மொத்தம் இருபதும் ஒன்பதும், இருபத்தொன்பது என்றும் இவைகளைப் பிரித்து ஒன்றாய்ச் சேர்க்கவேண்டும். இவ்விடத்தில் எண்களைப் பிரித்துப் பாகங்களைக் கூட்டி மறுபடியும் மொத்தம் ஏற்பட்டதென்று தெரிவிக்கவும்.

கூட்டுக.

(1.) 15, 23 ; 24, 32 ; 12, 34 ; 56, 23 ; (2.) 43, 24; 52, 63 ; 36, 63 ; 43, 54 ; (3.) 14, 13, 22. கூட்டுக.

இவ்விடத்தில் 4, 3, 2 முதலான ஒன்றுகளையும் 1, 1, 2 முதலான பத்து களையும் கூட்டவேண்டியதால் ஒன்றுகளையெல்லாம் ஒன்றின்கீழொன்றும், பத்துகளையெல்லாம் ஒன்றின்கீழ் ஒன்றும் எழுதினால் கூட்டுவதற்குச் சுலபமாயிருக்கும். எப்படியெனில்,

| | |
|---|---|
| 14 | இதில் 4, 3, 2—9 ஒன்று. |
| 13 | 1, 1, 2—4 பத்து. |
| 22 | இவைகளை அததன் கீழ் எழுதவேண்டும். அதாவது பத்தின் கீழ்பத்தும் ஒன்றின் கீழ் ஒன்றும் எழுத |
| 49 | வேண்டும். |

கூட்டுக.

14, 11, 25 ; 41, 24, 35 ; 15, 22, 61 ; 14, 23, 32.

3. 13, 24, 35 கூட்டுக.

| | |
|---|---|
| 13 | இதில் 12 ஒன்றுகளும் 6 பத்து மிருக்கின்றன. 12 |
| 24 | ஒரு பத்தும் 2 ஒன்று மாகையால், ஒரு பத்தை 6 பத் |
| 35 | தோடு சேர்த்துக்கொள்ளவும். |
| 6,12 | |
| 72 | |

கூட்டுக.

(1.) 15, 26, 37, 28 ; 38, 39, 21 ; 48, 52 ;

(2.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | 74 | 11 | 25 | 16 | 7 |
| 33 | 15 | 24 | 13 | 27 | 5 |
| 43 | 11 | 36 | 24 | 28 | 16 |
| | | 18 | 35 | 29 | 59 |

(3.)

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | 6 | 15 | 1 | 19 |
| 5 | 18 | 6 | 2 | 8 |
| 28 | 3 | 27 | 14 | 16 |
| 2 | 49 | 8 | 3 | 5 |
| 49 | 18 | 28 | 15 | 14 |
| | | 4 | 6 | 12 |
| | | 13 | 25 | 41 |
| | | | 16 | |

(4.)

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 41 | 8 | 13 | 64 |
| 6 | 23 | 19 | 24 | 2 |
| 14 | 18 | 17 | 45 | 3 |
| 21 | 9 | 16 | 2 | 8 |
| 46 | 4 | 15 | 3 | 10 |



ஒரு புஸ்தகம் 7 பை விலை யானால் 2 புஸ்தகம் என்ன விலை.

ஒரு புஸ்தகம் விலை ... ... 7 பை.

இரு புஸ்தகம் விலை இரு 7 ... 14 பை.

14 பைக்கு 1 அணா 2 பை விலை.

(1.) ஒரு பென்ஸல் 8 பை ஆனால் இரண்டு பென்ஸல் என்ன விலை ?

(2.) ஒரு காகிதம் 1 பை ஆனால் 8 காகிதம் என்ன விலை ?

(3.) ஒவ்வொருவனுக்கு 9 மாம்பழம் கொடுத்தால் இரண்டு பேருக்கு எத்தனை வரும் ?

(4.) ஒரு பிள்ளைக்குப் பத்துப் பலபம் மற்றொரு பிள்ளைக்கு 10 பலபமும் கொடுத்தால் மொத்த மெத்தனை ?

(5.) இரண்டணாவுக்கு எத்தனை பை.

3— 1— 3
3— 2— 6
3— 3— 9
3— 4—12
3— 5—15
3— 6—18
3— 7—21
3— 8—24
3— 9—27
3—10—30
3—11—33
3—12—36

(1.) 3 காலணாவுக்கு எத்தனை பை ?

(2.) 3 அரை அணாவுக்கு எத்தனை பை ?

(3.) 3 முக்கா லணாவுக்கு எத்தனை பை ?

(4.) 3 அணாவுக்கு எத்தனை பை ?

(5.) 3 அணாவுக்கு எத்தனை அரை அணா?

(6.) 3 அணாவுக்கு எத்தனை காலணா ?

(7.) ஒரு மாம்பழம் முக்காலணாவானால் 3 மாம்பழம் என்ன விலை?

(8.) ஒரு பென்ஸல் 5 பை யானால் மூன்று பென்ஸல் என்ன விலை ?

(9.) ஒவ்வொருவனுக்கு 7 வாழைப்பழம் கொடுத்தால் மூன்று பேருக்கு என்னவரும் ?

(10.) ஒரு பலகை 11 பை ஆனால் மூன்று பலகை என்ன விலை ?

(11.) ஒரு புஸ்தகம் 10 பை விலையானால் 3 புத்தகம் விலை என்ன?
(12.) ஒவ்வொருவன் எட்டுச் சுமை தூக்குறான் மூன்றுபேர் எவ்வளவு தூக்குவார்கள்.

4— 1— 4
4— 2— 8
4— 3—12
4— 4—16
4— 5—20
4— 6—24
4— 7—28
4— 8—32
4— 9—36
4—10—40
4—11—44
4—12—48

(1.) எத்தனை மூன்று 12? எத்தனை நான்கு 12? எத்தனை ஆறு பன்னிரண்டு?
(2.) எத்தனை 6, 24? எத்தனை 8, 24? எத்தனை 12? 24?
(3.) எவ்வெம்மாதிரியாய் 36 இடைக்கு?
(4.) ஒரு அணாவுக்கு எத்தனை காலணா? நாலணாவுக்கு எத்தனை பை?
(5.) நாலு அரை அணாவுக்கு எத்தனை பை?
(6.) நாலு காலணாவுக்கு எத்தனை பை?
(7.) நாலு முக்காலணாவுக்கு எத்தனை?
(8.) நாலு பத்து எத்தனை?
(9.) ஒரு 11 பை விழுக்காடு பலகை வாங்கினால் எவ்வளவு கொடுக்க வேண்டும்?
(10.) நாலு எட்டுக்கால் பூச்சிக்கு எத்தனை கால்?
(11.) ஒவ்வொருவனுக்கு 7 மாம்பழம் பங்கிட்டால் 4 பேருக்கு என்னவரும்?
(12.) ஒரு துண்டு நாடா 5 பை விழுக்காடு நாலு நாடா வாங்கிக் கையில் 4 பை யிருந்தால் மொத்த மெவ்வளவு?

மேற் சொல்லியிருக்கப்பட்ட பெருக்கல்வாய்ப்பாட்டையும், நாணய் வாய்பாட்டையும் கடைசியில் வைத்துக்கொள்ளாமல் நடுவில் நடுவில் கொஞ்சம் சொல்லிக் கொடுத்துக்கொண்டே வரலாம்.

—:o:—

THE
# VILLAGE SCHOOLMASTER.
# உபாத்தியாயர்.

Vol. I.] SEPTEMBER, 1887. [No. 4.

## வர்த்தமானம்.

இனிமேல் மெடிரிகுலேஷன் (Matriculation) பரீட்சை கொடுப் பவர்களுக்கு கவர்மெண்டு உத்தியோகம் கொடுக்காமல் புதிதாய் ஹை ஸ்கூல் பரீட்சை ஒன்றை ஏற்படுத்தும்படியாய் கவர்மெண்டில் உத்தரவாய்விட்டது.

இன்ஸ்பெக்டர்கள் எட்டுபேரில் நான்குபேரை குறைத்துவிடப் போகிறார்களாம்.

டை ரெக்டர் அவர் கிராண்டினேட் சட்டத்தில் சிலவற்றை மாற் வேண்டுமென்று கேட்டதற்கு கவர்மெண்டார் ஏற்றுக்கொள்ளவில் லைபோலும்.

சின்னமனூரில் ஒரு உபாத்தியாய சங்கம் ஏற்பட்டிருக்கிறதாக எமக்குத்தெரியவந்ததைப்பற்றி மிகவும் ஆனந்தங்கொண்டிருக்கிறோம். இவ்வித சங்கங்கள் அநேகமாகும்படியாய் பிரயத்தினப்படுவதால் மிக வும் பிரயோஜனமடையலாமென்பதற்கு சந்தேகமில்லை. சின்னம னூர் உபாத்தியாய சங்கத்தார் மேற்படி சபையை விர்த்திபண்ணி அதினாலாகிய பயன்களை உதகரிப்பாராக. மேற்படி சங்கத்திற்கு எம் மாலாகிய உதவிசெய்ய யாதொரு தடையுமில்லை. அச்சங்கத்தில் பாடசாலை சம்பந்தமான அநேக விஷயங்களைப்பற்றி தர்க்கிப்பார் போலும்.

யாம் இருப்பிடத்தை விட்டு சிலநாள் வெளியிற்போயிருந்ததால் பத்திரிகை சரியாய்ப் பிரசுரமாகத் தவக்கப்பட்டது. யாம் எடுத்த

காரியம் நடுவில் நின்றுவிடாதபடி ஏற்பாடு செய்திருக்கிறோமென்று எமது சந்தாதாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் உறுதிசொல்லுவோம்.

---

எமது சஞ்சிகையில் பிரசுரமாகிவந்த முதற்பாட புத்தகத்தை வேறாய் அச்சிட்டுக்கொண்டிருக்கிறோம். அப்புத்தகம் வெளியானவுடன் தெரியப்படுத்தினா பிறகு பணமனுப்பி புத்தகம் வரவழைத்துக் கொள்ளலாம்.

---

## இரண்டாவது ஸ்டாண்டார்ட்டுக்குக் குறித்திருக்கிற பாடம்.

(1.) ஆயிரம் வரைக்கும் எழுதப்படிக்க கற்பது.

(2.) ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது இடையில் விட்டு நூறுவரைக்கும் எண்ணவும்.

(3.) 16—9 வரைக்கும் பெருக்கல் வாய்பாடு.

(4.) ஆயிரத்துக்கு உட்பட கூட்டலும் கழித்தலும், 5 ரூபாய்க்கு மேற்படாமல் நாணயக்கூட்டல்.

(5.) ஒரு ரூபாய்க்கு மேற்படாத நாணயக்கூட்டல், 8 அணுவுக்கு உட்பட கழித்தல் மனக்கணக்காய் கற்பது.

---

இதற்கு முன்பு நூறுவரைக்கும் எழுதப் படிக்கக் கற்றுக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனோடு ஒன்று சேர்த்தால் நூற்றி ஒன்று எனவும், இரண்டு சேர்க்க நூற்று இரண்டு எனவும், மூன்று சேர்க்க, நூற்று மூன்று எனவும் ஆகும்.

முறையே நூற்றிப்பத்து நூற்றிப்பதினொன்று, நூற்று இருபது, நூற்று முப்பது, நூற்று நாற்பது, நூற்றுத் தொண்ணூறு, நூற்றுத் தொண்ணூற்று ஒன்பதுஇதற்கு ஒன்று சேர்க்க, இருநூறு என்று சொல்லுவார்கள்.—

| | | |
|---|---|---|
| மூன்று | நூறு | முந்நூறு |
| நான்கு | நூறு | நானூறு |
| ஐந்து | நூறு | ஐந்நூறு |
| ஆறு | நூறு | அறுநூறு |
| ஏழு | நூறு | எழுநூறு |
| எட்டு | நூறு | எண்ணூறு |
| ஒன்பது | நூறு | தொளாயிரம் |
| பத்து | நூறு | ஆயிரம் |



இவைகளை எழுதுக.

| | |
|---|---|
| நூறு | 100 |
| நூற்று ஒன்று | 101 |
| நூற்று ஒன்பது | 109 |
| நூற்றுப் பத்து | 110 |
| நூற்றுப் பதினொன்று | 111 |
| நூற்று ஐம்பது | 150 |
| நூற்றுத் தொண்ணூறு | 190 |
| நூற்றுத் தொண்ணூற்று ஒன்பது | 199 |
| இருநூறு | 200 |
| முன்னூறு | 300 |
| நானூறு | 400 |
| ஐந்நூறு | 500 |
| அறுநூறு | 600 |
| எழுநூறு | 700 |
| எண்ணூறு | 800 |
| தொளாயிரம் | 900 |

ஆயிரம் இதற்குப் புதிதாய் ஓரிடம் ஏற்படுத்தவேண்டும். ஒன்றுமுதல் ஒன்பது வரைக்கும் வலது பக்கத்திலிருந்து முதலிடமும் பத்துகளுக்கு இரண்டாவது இடமும், நூறுகளுக்கு மூன்றாவது இடமுமிருப்பதுபோல நூறு ஸ்தானத்தில் ஒன்பது நூறு வரைக்குந் தான் எழுதமுடியுமாதலால் பத்து நூறாகிய ஆயிரத்தை நான்காவது ஸ்தானத்தில் எழுதவேண்டும்.

| | |
|---|---|
| ஆயிரம் | 1000 |

## அப்பியாசம்.

எண்களால்குறிக்குக.

நானூற்று ஆறு ; தொளாயிரம் ; எழுநூற்று மூன்று ; நானூறு ; ஐந்நூற்றி எழுபத்தி ஆறு ; எண்ணூற்றி நாற்பத்தி எட்டு ; தொளாயிரத்துப்பதினொன்று; எண்ணூற்றுத் தொண்ணூற்று ஒன்பது ; தொளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது.

எழுத்தால் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 407 ; | 799 ; | 561 ; | 899 ; |
| 461 ; | 576 ; | 123 ; | 456 ; |
| 789 ; | 967 ; | 654 ; | 321 ; |
| 700 ; | 900 ; | 901 ; | 1000. |

(2.) ஒன்றும் ஆறும், ஏழு.
ஏழும் ஆறும், பதின்மூன்று.
பதின் மூன்றும் ஆறும், பத்தொன்பது.

இம்மாதிரியாய் நூறுவரைக்கும் எண்ணப் பழக்கவும். இவைகளெல்லாம் மனக்கணக்காகவே பழக்கிவைக்கவேண்டும்.

## அப்பியாசம்.

| | | |
|---|---|---|
| 1–ம் | 6–ம் | 7 |
| 2–ம் | 6–ம் | 8 |
| 3–ம் | 6–ம் | 9 |
| 4–ம் | 6–ம் | 10 |
| 5–ம் | 6–ம் | 11 |
| 6–ம் | 6–ம் | 12 |
| 7–ம் | 6–ம் | 13 |
| 8–ம் | 6–ம் | 14 |
| 9–ம் | 6–ம் | 15 |
| 10–ம் | 6–ம் | 16 |

இப்படியே பதினொன்றும் ஆறும் எத்தனை யென்றால் பத்தும் ஒன்றும் ஆறும், பதினேழு என்று சுலபமாய்ச் சொல்லலாம். இவ்விதமாய் நூறு வரைக்கும் கேட்கவும்.

   26
   34
  ———
   60

இதில் ஒன்றன் ஸ்தானத்தைக் கூட்ட 10 ஆகிறது. ஒரு பத்து ஆகையால் ஒன்றன் ஸ்தானத்தில் ஒன்றுமில்லை. பத்து ஆகையால் பத்தின் ஸ்தான எண்களோடு சேர்த்துக்கூட்டவேண்டும். அப்படிச் செய்ய ஆறு பத்து வருகிறது.

| (1.) | (2.) | (3.) |
|---|---|---|
| 15 | 45 | 12 |
| 26 | 24 | 34 |
| 35 | 43 | 45 |
| 43 | 43 | 54 |
| 21 | 15 | 26 |

| (4.) | (5.) | (6.) |
|---|---|---|
| 25 | 65 | 56 |
| 36 | 56 | 46 |
| 26 | 45 | 66 |
| 46 | 54 | 36 |
| 56 | 36 | 26 |



(7.) ஜனவரி மாதத்தில் 31 நாளும்
பிப்ரவரி மாதத்தில் 28 நாளும்
மார்ச் மாதத்தில் 31 நாளும்
ஏப்ரல் மாதத்தில் 30 நாளும்
மே மாதத்தில் 31 நாளும்
ஜூன் மாதத்தில் 30 நாளும்

இருந்தால் மொத்தம் எத்தனை நாள்.

(8.) ஒருவன் இரண்டு மேஜை 21 ரூபாய்க்கும் 1 பீரோ 51 ரூபாய்க்கும், புஸ்தகங்கள் 59 ரூபாய்க்கும், நார்காலி 9 ரூபாய்க்கும் வாங்கினால் மொத்த மெவ்வளவு செலவு?

(9.) ஒரு தோட்டத்தில், தென்னமரம் 26, பலாமரம் 36, மாமரம் 56, பனைமரம் 15 மிருந்தால் மொத்த மெத்தனை?

(10.) ஒருவனுக்கு முதல் மாதம் 10 ரூபாயும், இரண்டாவது மாதம் 56 ரூபாயும், மூன்றாவது மாதம் 16 ரூபாயும் வரும்படி வந்தால் மொத்த மெத்தனை?

ஒன்றும் ஏழும் எட்டு
எட்டும் ஏழும் பதினைந்து

என்றிம்மாதிரியாய்க் கூட்டிக்கொண்டே போகச்சொல்லவும்.

## அப்பியாசம்.

| | | |
|---|---|---|
| 1–ம் | 7–ம் | 8 |
| 2–ம் | 7–ம் | 9 |
| 3–ம் | 7–ம் | 10 |
| 4–ம் | 7–ம் | 11 |
| 5–ம் | 7–ம் | 12 |
| 6–ம் | 7–ம் | 13 |
| 7–ம் | 7–ம் | 14 |
| 8–ம் | 7–ம் | 15 |
| 9–ம் | 7–ம் | 16 |
| 10–ம் | 7–ம் | 17 |
| 11–ம் | 7–ம் | 18 |
| 12–ம் | 7–ம் | 19 |

என்றிம்மாதிரியாய் நூறு வரைக்கும் அப்பியசிக்கவும்.

| (1.) | (2.) | (3.) |
|---|---|---|
| 47 | 25 | 12 |
| 57 | 46 | 27 |
| 17 | 37 | 34 |
| 27 | 26 | 56 |
| 37 | 47 | 76 |
| 77 | 45 | 65 |

| (4.) | (5.) | (6.) |
|---|---|---|
| 57 | 76 | 17 |
| 64 | 54 | 26 |
| 32 | 32 | 35 |
| 43 | 12 | 44 |
| 16 | 34 | 53 |
| 17 | 56 | 62 |

ஒருவன் ஒரு பீரோவை அறுப்து ரூபாய்க்கு வாங்கினான். அதை விற்கும்போது 13 ரூபாய் லாபம் கிடைத்தது. அதை எவ்வளவுக்கு விற்றான்? (லாபம்) இன்னதென்று விவரமாய்த் தெரியப்படுத்தவும்.

| | | |
|---|---|---|
| வாங்கின விலை | ரூபா | 60 |
| லாபம் | ரூபா | 15 |
| விற்ற விலை | | 75 |

(7.) ஒருவன் ஒரு குதிரையை 166 ரூபாய்க்கு வாங்கினான். அதை விற்க 34 ரூபாய் லாபம் கிடைத்தது. எவ்வளவுக்கு விற்றான்?

(8.) ஒரு மேஜையை 25 ரூபாய்க்கு வாங்கி 7 ரூபாய் லாபத்துக்கு விற்றால் எத்தனை ரூபாய்க்கு விற்கப்பட்டது?

(9.) ஒரு பெட்டியை 27 ரூபாய்க்கு வாங்கி 3 ரூபாப் லாபம் அடைய வேண்டுமானால் எவ்வளவுக்கு விற்கவேண்டும்?

(10.) ஒரு புஸ்தகத்தை 12 ரூபாய்க்கு வாங்கி 7 ரூபாய் லாபமடைய எத்தனை ரூபாய்க்கு விற்கவேண்டும்?

| | | |
|---|---|---|
| ஒன்றும் | எட்டும் | ஒன்பது |
| ஒன்பதும் | எட்டும் | பதினேழு |

என்றிம்மாதிரியாய் நூறு வரைக்கும் அப்பியசிக்கவும்.

| | | |
|---|---|---|
| 1-ம் | 8-ம் | 9 |
| 2-ம் | 8-ம் | 10 |
| 3-ம் | 8-ம் | 11 |
| 4-ம் | 8-ம் | 12 |
| 5-ம் | 8-ம் | 13 |
| 6-ம் | 8-ம் | 14 |
| 7-ம் | 8-ம் | 15 |
| 8-ம் | 8-ம் | 16 |
| 9-ம் | 8-ம் | 17 |
| 10-ம் | 8-ம் | 18 |
| 11-ம் | 8-ம் | 19 |

என்றிம்மாதிரியாய் நூறு வரைக்கும் அப்பியசிக்கவும்.



| | |
|---|---|
| 28 | 125 |
| 28 | 28 |
| 88 | 68 |
| 78 | 386 |
| 48 | 45 |
| 78 | 287 |
| 76 | 48 |
| 424 | 987 |

| (1.) | (2.) | (3.) |
|---|---|---|
| 28 | 18 | 25 |
| 76 | 27 | 48 |
| 38 | 36 | 86 |
| 48 | 48 | 78 |
| 57 | 57 | 85 |
| 66 | 68 | 58 |
| 48 | 58 | 47 |

| (4.) | (5.) | (6.) |
|---|---|---|
| 28 | 75 | 454 |
| 37 | 126 | 38 |
| 48 | 37 | 58 |
| 85 | 348 | 47 |
| 87 | 58 | 78 |
| 86 | 167 | 87 |
| 47 | 28 | 88 |

இராமனிடத்தில் 5 மாம்பழம் இருக்கிறது; கோபாலனிடத்தில் அதைக் காட்டிலும் 3 அதிகமிருக்கிறது; ஆக மொத்தம் எத்தனை?

| | |
|---|---|
| இராமனிடத்திலிருப்பது | 5 |
| கோபாலனிடத்தில் 5 க்காட்டிலும் மூன்று அதிகம் | 8 |
| ஆக மொத்தம்... | 13 |

(7.) ஒரு பாடசாலையில் மூன்று வகுப்புகள் இருக்கின்றன. முதல் வகுப்பில் 48 பிள்ளைகள். இரண்டாவது வகுப்பில் முதல்வகுப்பைக் காட்டிலும் 15 பிள்ளைகளதிகம். மூன்றாவது வகுப்பில் முதல் இரண்டு வகுப்புகளைக்காட்டிலும் 19 அதிகம். மூன்றாவது வகுப்பில் எத்தனைபிள்ளைகளிருக்கிறார்கள்?

(8.) மூன்று பெட்டிகளிருக்கின்றன. முதல் பெட்டியில் 57 குண்டு. இரண்டாவதில் முதலாவதைக்காட்டிலும் 42 அதிகம். மூன்றாவதில் முதல் இரண்டைக்காட்டிலும் 18 அதிகம். மூன்று பெட்டியிலும் எத்தனைகுண்டுகளிருக்கின்றன?

(9.) ஒருவன் மூன்று பசுமாட்டுமந்தை வாங்கினான். முதல் மந்தையில் 47 பசுக்களிருந்தன. இரண்டாவதில் முதல் மந்தையைக்காட்டிலும் 96 அதிகமிருந்தன. மூன்றாவதில் முதல் இரண்டின் மொத்தத்தைப் பார்க்கிலும் 56 அதிகமிருந்தன. மூன்றுமந்தையிலும் எத்தனைப்பசுயிருந்தன?

(10.) ஒருவன் இராமனுக்கு 13 பழமும், கோபாலனுக்கு இராமனைக் காட்டிலும் 5 அதிகமும், சுப்பனுக்கு 27–ம், கோவிந்தனுக்கு இம்மூவருக்கும் எவ்வளவோ அவ்வளவும் கொடுத்தால் மொத்த மெத்தனை?

| | | |
|---|---|---|
| ஒன்றும் | ஒன்பதும் | பத்து |
| பத்தும் | ஒன்பதும் | பத்தொன்பது |
| பத்தொன்பதும் | ஒன்பதும் | இருபத்தெட்டு |

இம்மாதிரியாய் நூறு வரைக்கும் அப்பியசிக்கவும்.

| | | |
|---|---|---|
| 1-ம் | 9-ம் | 10 |
| 2-ம் | 9-ம் | 11 |
| 3-ம் | 9-ம் | 12 |
| 4-ம் | 9-ம் | 13 |
| 5-ம் | 9-ம் | 14 |
| 6-ம் | 9-ம் | 15 |
| 7-ம் | 9-ம் | 16 |
| 8-ம் | 9-ம் | 17 |
| 9-ம் | 9-ம் | 18 |
| 10-ம் | 9-ம் | 19 |
| 11-ம் | 9-ம் | 20 |

இவவிதமாய் நூறு வரைக்கும் கேட்கவும்

(1.) 567, 89, 97, 69, 59, 96, 123, 299

(2.) 123, 39, 96, 79, 87, 99, 13, 25

(3.) 789, 49, 19, 29, 9, 38, 9, 19

(4.) 123, 235, 69, 96, 89, 98, 209

(5.) 17, 19, 36, 84, 206, 59, 93

(6.) 59, 93, 19, 291, 98, 14, 199



(7.) நான் 17 ரூபாய்க்கு 137 கிச்சிலிப்பழமும், 6 ரூபாய்க்கு 64 மாம்பழமும், 3 ரூபாய்க்கு 98 கொய்யாபழமும் வங்கினேன். மொத்தம் எத்தனை பழத்துக்கு எவ்வளவு ரூபாய் பிடித்தது?

(8.) நான் இராமனுக்கு 19 பழமும், கோவிந்தனுக்கு 29 பழமும், கோபாலனுக்கு 39 பழமும், சுப்பனுக்கு 49 பழமும் கொடுத்தபிறகு கையில் மீதி 29 பழமிருந்தது. முதலில் எத்தனை பழ மிருந்தது?

(9.) ஒருவன் பத்துப் பசு ஒருவனுக்கும், 12 பசு இன்னொருவனுக்கும், 18 பசு மூன்றாவது மனிதனுக்கும், 14 பசு நான்காவது மனிதனுக்கும் கொடுத்தபிறகு மீதி தன்னிடம் 26 பசுஇருந்தன. முதலில் எத்தனைஇருந்தன?

(10.) மதிராஸிலிருந்து நெல்லூருக்கு 108 மைல். நெல்லூரிலிருந்து குண்டூருக்கு 143 மைல் குண்டூருக்கும் இராஜமஹேந்திரத்திற்கும் 114 மைல். மதிராஸுக்கும் இராஜமஹேந்திரத்திற்கும் எவவளவுதூரம்?

## மனக்கணக்கு.

கூட்டுக.

38, 12; 46, 17; 28, 36; 57, 28; 34, 68; 12, 13; 3, 4, 5, 6; 5, 4, 3, 2; 87, 11; 36, 44; 88, 11; 33, 22, 11; 44, 37; 4, 5, 6; 7, 9, 6, 7;

கூட்டலுக்குக் குறியாக + என்னும் குறியை உபயோகப்படுத்துவதுண்டு; 4+3 என்றால், நான்கையும் மூன்றையும் கூட்டவேண்டுமென்பது.

(1.) 4+3+7+8; 17+5+6+7; 8+14+16+32;

(2.) 7+9+4+6; 4+3+7+9+12; 6+4+3+7+9;

கிருஷ்ணன் 10 மாம்பழமும், ராமன் 15 மாம்பழமும், கோபாலன் 28 மாம்பழமும் உனக்குக் கொடுத்தால் உன்னிடத்தில் மொத்த மெத்தனையிருக்கும்?

| | | |
|---|---|---|
| கிருஷ்ணன் கொடுத்த மாம்பழம் | ... | 10 |
| ராமன் கொடுத்த மாம்பழம் | ... | 15 |
| கோபாலன் கொடுத்த மாம்பழம் | ... | 28 |
| ஆக மொத்தம் மாம்பழம் | ... | 53 |

இதேமாதிரியாய்ப் பிள்ளைகள் செய்யும்படி பார்க்கவேண்டும்.

(1.) இராமசாமி 12 பழமும், கோவிந்தன் மூன்று பழமும், நடேசன் 14 பழமும், இராகவன் 25 பழமும் வாங்கினார்கள். இவர்களெல்லாரும் சேர்ந்து எத்தனை பழம் வாங்கினார்கள்?

(2.) நான் ஒரு ஊருக்குப்போனேன். முதல் நாள் 9 மைலும், இரண்டாநாள் 7 மைலும், மூன்றாநாள் 10 மைலும், நான்காநாள் 13 மைலும் நடந்துபோய்ச் சேர்ந்தேன். அவ்வூருக்கும் இதற்கும் எவ்வளவு தூரம்?

(3.) ஒருதோட்டத்தில் 15 மாமரமும், 8 பலாமரமும், 21 புளியமரமும், 50 வாழைமரமும் இருக்கின்றன; மொத்த மெத்தனை மரம்?

(4.) ஒருவன் சொக்காய் 15 அணாவுக்கும், குல்லாய் 5 அணாவுக்கும், கால் சட்டை 12 அணாவுக்கும் வாங்கினான்; மொத்தம் எத்தனை அணா செலவழித்தான்?

(5.) இராமனிடத்தில் 15 மாம்பழமிருந்தது; நான் 26 கூடக் கொடுத்தால் மொத்த மெத்தனை?

(6.) ஒருவன் ரெயில் வண்டியில் பிரயாணஞ் செய்கிறான்; முதல் நாள் 27 காதமும், இரண்டாநாள் 15 காதமும், மூன்றாநாள் 26 காதமும், நான்கா நாள் 29 காதமும் போகிறான்; மொத்தம் எத்தனை காதம் போகிறான்?

ஒருவன் 3 மைலுள்ள ஒரு ஊருக்கு நடந்து போய் நடந்து வருகிறான். அவன் மொத்த மெவ்வளவு தூரம் நடக்கிறான்?

| | |
|---|---|
| ஊருக்குப் போய்ச் சேர | 3 மைல் நடக்கிறான். |
| மறுபடியும் திரும்பிவர | 3 மைல் நடக்கிறான். |
| ஆகமொத்தம்... | 6 மைல் நடக்கிறான். |

## மனக்கணக்கு.

(1.) இராமன் 2 மைல் தூரமுள்ள திருச்சானூருக்குப்போய்த் திரும்பி வருகிறான். எவ்வளவு தூரம் நடக்கிறான்?

(2.) நான் ஊருக்குப்போகக் கூலி 3 அணாவும், வர அதேகூலியும் கொடுத்தால் மொத்த மெத்தனை அணா?

(3.) ஒருவனுக்கு ஒரு ஊருக்குப்போக இரண்டு நாள் செல்லுகிறது. முதல் நாள் 7 மைல் நடக்கிறான். இரண்டாநாள் 8 மைல் நடக்கிறான். மறு படியும் அதே வழியாய்த் திரும்பிவருகிறான். மொத்தம் எத்தனை மைல் நடக் கிறான்?

(4.) கோபாலனுக்குக் கலியாணம் நான்குதினம் நடந்தது; முதல் நாள் 25 ரூபாயும், இரண்டாநாள் 15 ரூபாயும், மூன்றாநாள் 13 ரூபாயும், நான்கா நாள் 10 ரூபாய் செலவழிந்தது. இராமன் கலியாணத்துக்கும் அதே செலவு தான் பிடித்தது. மொத்த மெவ்வளவு பிடித்திருக்கும்?

(5.) ஒருவனுக்கு இரண்டு பெண்; பெண் ஒன்றுக்கு 15 கச்சைக்காய் கொடுத்தால் இருவருக்கும் எவ்வளவு கொடுக்கப்பட்டது?

(6.) நான் ஒரு ஊருக்கு பாதிதூரம் வண்டியிலும், பாதிதூரம் நடந்தும் போனேன். வண்டியில் போனதூரம் 7 மைல். நடந்து போனதூரம் எவ்வளவு? அங்கேயிருந்து திரும்பி வந்தால் மொத்த மெவ்வளவு தூரம் நடந்து வந்தேன்? எவ்வளவுதூரம் வண்டியில் வந்தேன? ஆகமொத்தம் போக வர எவ்வளவு தூரம்?



என் பையிலிருந்து கோபாலனுக்கு 3 அணா கொடுத்தேன். மீதி என் பையில் 5 அணாயிருந்தது. முதலில் என் பையில் எத்தனை அணா இருந்தது.

| | |
|---|---|
| பையிலிருந்தது அணா ... ... ... ... ... | 5 |
| கோபாலனுக்குக் கொடுத்தது ... ... ... ... | 3 |
| ஆக பையிலிருந்தது ... ... ... | 8 அணா. |

(1.) நான் 5 அணாவுக்கு மாம்பழம் வாங்கின பிற்பாடு கையிலிருந்தது 3 அணா. மொத்த மெவ்வளவிருந்தது?

(2.) இராமனுக்கு 6 அணா கொடுத்து என்கையில் 5 அணாயிருக்கிறது. மொத்தமெவ்வளவு?

(3.) ஒருபெட்டியிலிருந்து 10 பலபம் எடுத்தேன். மீதி இன்னும் 5 இருக்கிறது. மொத்தமெவ்வளவு?

(4.) கந்தன் கணக்கு புஸ்தகத்திற்காக 4 அணாவும், குல்லாய்க்காக 3 அணாவும் செலவழித்தான். மீதி அவன் கையில் 4 அணா இருந்தது. முதலில் எவ்வளவு இருந்திருக்கவேண்டும்?

(5.) இராமனுக்கு 4 அணாவும், கோபாலனுக்கு அவ்வளவும் கொடுத்த பிற்பாடு என்கையில் 3 அணா மீந்தது; என்கையில் எவ்வளவு இருந்தது?

(6.) குப்புசாமிக்கு 4 அணாவும், கோவிந்தனுக்கு 5 அணாவும் கொடுத்தபிற்பாடு என்கையில் ஒன்றுமில்லை. என்னிடத்தில் எவ்வளவிருந்தது?

என்னிடத்தில் 5 மாம்பழமிருக்கிறது. கோபாலனிடத்தில் என்னைக் காட்டிலும் இரண்டதிகமாயிருக்கிறது. கோபாலனிடத்தில் எத்தனை பழமிருக்கிறது?

| | |
|---|---|
| என்னிடத்திலிருக்கும் மாம்பழம் ... ... | 5 |
| என்னைக்காட்டிலும் கோபாலனிடத்தில் அதிகமாயிருப்பது ... ... ... ... | 2 |
| ஆககோபாலனிடத்திலிருப்பது ... ... | 7 மாம்பழம். |

(1.) இராமனிடத்தில் 5 அணா விருக்கிறது. என்னிடத்தில் அவனைக்காட்டிலும் 4 அணா அதிகமாயிருக்கிறது. என்னிடத்திலெவ்வளவு இருக்கிறது?

(2.) ஒருதெருவில் 12 வீடு இருக்கிறது. மற்றொரு தெருவில் அதைக் காட்டிலும் 5 வீடு அதிகமாயிருக்கிறது. பின்சொன்ன தெருவில் எத்தனை வீடு இருக்கின்றது?

(3.) முதல் வகுப்பில் 15 பிள்ளைகளிருக்கிறார்கள். இரண்டாவது வகுப்பில் முதல் வகுப்பைக்காட்டிலும் 5 பிள்ளைகளதிகமிருக்கிறார்கள். இரண்டாவது வகுப்பில் எத்தனை பிள்ளைகள்?

பன்னிரண்டு பை, 4 காலணா 2 அரை அணா. இவைகளை வகுப்பில் கொண்டுவந்து காட்டி பின்வரும் சங்கதிகளை வரவழைக்கவும்.

3-பை கொண்டது காலணா.

6-பை அல்லது இரண்டு காலணா கொண்டது அரை அணா இரண்டு அரை அணா அல்லது நான்கு காலணா அல்லது 12 பை கொண்டது ஒரு அணா.

காலணாவில் எத்தனை பையிருக்கிறது?
அரை அணாவில் எத்தனை பை?
ஒரு அணாவுக்கு எத்தனை பை?
14 பைக்கு எத்தனை அணா எத்தனை பை?
14 பை=12+2=1 அணா இரண்டு பை.
9 பைக்கு எத்தனை அணா?
4 பைக்கு எத்தனை அணா?

நீ ஒரு படத்தை 4 பைக்கு வாங்கி விற்றால் காலணா லாபம் கிடைத்தது; எவ்வளவுக்கு விற்றாய்?

| | | |
|---|---|---|
| பலகையை வாங்கின விலை | ... | ... 4 பை. |
| பலகைக்கு லாபம் காலணா அல்லது | | ... 3 பை. |
| ஆக விற்ற விலை... | | 7 பை. |

(1.) நான் ஒரு புஸ்தகம் 9 பைக்கு வாங்கினேன். காலணா லாபம் கிடைக்கவேண்டுமானால் அதை எவ்வளவுக்குக் விற்கவேண்டும்?

(2.) ஒருவன் ஒரு பலகையை 4 அணாவுக்கு வாங்கினான் 2 அணா லாபத்துக்கு விற்றால் எவ்வள்வுக்கு விற்கலாம்?

(3.) ஒரு மாம்பழம் 5 பைக்கு வாங்கி 4 பை லாபம் வரவிற்றால் எவ்வளவுக்கு விற்கவேண்டும்?

## கழித்தல்.

என்னிடத்தில் 5 மாம்பழம் இருக்கிறது. அதில் உனக்கு 2 கொடுத்துவிட்டால் என்னிடத்தில் 3 மீதி நிற்கும். 5 ந்தில் 2 போனால் மீதி 3. இதற்கு பெயர் கழித்தல். 5—2=3 என்றும் எழுதுவதுண்டு. முன்பே கழித்தல் வாய்பாடமாய்க் கற்பித்திருக்கிறது. அதை மறுபடியும் ஞாபக மூட்டிக் கொள்ளுவோம்.

10-ல் 1 போனால் மீதி எத்தனை? 10-ல் 2 போனால் எத்தனை? என்றிம் மாதிரி ஒன்றுவரைக்கும் கேட்கவும். இன்னும் பலவிதமாய் 9, 8 முதலான எண்களிலிருந்து கழித்தல் கேட்டு பிள்ளைகளைப் பழக்கவேண்டும்.

## அப்பியாசம்.

| | | | | |
|---|---|---|---|---|
| (1.) | 8—4; | 7—3; | 10—5; | 8—5; |
| (2.) | 9—5; | 9—3; | 5—3; | 4—3; |
| (3.) | 10—3; | 8—2; | 6—4; | 7—2; |
| (4.) | 6—5; | 10—7; | 3—1; | 7—7; |
| (5.) | 7—5; | 9—3; | 6—1; | 10—5; |



63

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (6.) | 4 | 7 | 5 | 8 | 9 |
| | 3 | 4 | 1 | 3 | 4 |

47
32
——
15

ஒரேமாதிரியான எண்களைத் தான் எப்படி கூட்ட முடியுமோ அப்படியே ஒரேமாதிரியான எண்களைத் தான் கழிக்க முடியும். 5 குதிரையில் 3 குதிரை போனால் 2 குதிரை 5 குதிரையிலிருந்து 3 பலகையைக்கழிப்பதெப்படி. ஆகையால் கழித்தலில் ஒன்றின் கீழ் ஒன்றும் பத்தின் கீழ் பத்தும் எழுதிக் கழிக்கவேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (7.) | 45 | 76 | 98 | 64 |
| | 32 | 45 | 75 | 32 |
| (8.) | 36 | 68 | 25 | 79 |
| | 25 | 43 | 14 | 65 |
| (9.) | 98 | 79 | 85 | 96 |
| | 75 | 63 | 44 | 54 |
| (10.) | 49 | 65 | 89 | 16 |
| | 26 | 21 | 75 | 8 |

(11.) 12-க்காட்டிலும் 15 எவ்வளவதிகம்?
(12.) 27-க்காட்டிலும் 48 எவ்வளவதிகம்?
(13.) 30-க்காட்டிலும் 40 எவ்வளவதிகம்?
(14.) 15-க்காட்டிலும் 39 எவ்வளவதிகம்?
(15.) 5-க்காட்டிலும் 27 எவ்வளவதிகம்?
(16.) என்னிடத்தில் 11 மாம்பழமிருக்கிறது. உன்னிடத்தில் 17 இருக்கிறது. எவ்வளவதிகமாயிருக்கிறது?
(17.) என்னிடத்தில் 25 பழமிருந்து உன்னிடத்தில் 13 பழமிருந்தால் என்னிடத்திலெவ்வளவதிகம்?
(18.) 29-க்கும் 16-க்கும் விததியாச மென்ன?
(19.) 79-க்கும் 46-க்கும் வித்தியாச மென்ன?
(20.) 89-க்கும் 76-க்கும் வித்தியாச மென்ன?

| | |
|---|---|
| 425 | 486 |
| 314 | 134 |
| 111 | 352 |

| | | | |
|---|---|---|---|
| (21.) | 578<br>415 | 478<br>123 | 789<br>345 |
| (22.) | 789<br>567 | 987<br>765 | 432<br>121 |
| (23 ) | 868<br>654 | 842<br>211 | 563<br>263 |
| (24.) | 854<br>453 | 712<br>112 | 357<br>246 |
| (25.) | 468<br>145 | 314<br>112 | 954<br>532 |

20, 19, 18, 17, 16, 15, 14, 13, 12, 11, 10. இவைகளில் தனித்தனியே 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 போனால் என்ன மீதி என்று பழக்கவேண்டும்.

## அப்பியாசம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1.) | 12—4; | 13—8; | 14—5; | 11—3; | 17—6. |
| (2.) | 18—9; | 16—7; | 17—9; | 16—8; | 14—6. |
| (3.) | 15—7; | 16—9; | 14—8; | 15—6; | 13—7. |
| (4.) | 15—9; | 13—6; | 12—5; | 13—7; | 14—9. |
| (5.) | 17—8; | 13—9; | 23—8; | 14—7; | 14—9. |

25
16
———

மேல் 5 ஒன்றும் கீழே 6 ஒன்றும், ஒன்று ஸ்தானத்திலிருப்பதால் கழிப்பது கூடாமையாம். ஆகையால் 25 பிரித்துக்கொள்ளவேண்டும். அதில் இரண்டு பத்தும் ஒரு 5-ம் இருக்கிறது அதை 10-ம் 15 மாய்ப் பிரித்துக்கொள்ளவேண்டும்.

1(15)
1 6
———
9

I5-ல் 6 போனால் 9
1-க்கும் 1-க்கும் சரியாய்ப் போய்விட்டது.



## அப்பியாசம்.

பின் வரும் எண்களை மேற் சொல்லிய பிரகாரம் பிரியுங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1.) | 45, | 34, | 63, | 75, | 46, | 37. |
| (2.) | 76, | 41, | 38, | 21, | 65, | 79. |
| (3.) | 48, | 39, | 76, | 98, | 35, | 25. |
| (4.) | 49, | 64, | 88, | 77, | 66, | 33. |
| (5.) | 80, | 60, | 30, | 47, | 90, | 50. |

48
29
———

3(18)
2 9
———
1 9

## அப்பியாசம்.

பின் வருபவைகளை பிரித்து மேற் காட்டியபடி கழிக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| (1.) | 23<br>8 | 34<br>71 | 24<br>9 | 22<br>7 |
| (2.) | 30<br>13 | 2<br>12 | 32<br>15 | 30<br>14 |
| (3.) | 23<br>15 | 50<br>15 | 30<br>19 | 26<br>16 |
| (4.) | 30<br>11 | 40<br>12 | 50<br>24 | 50<br>27 |
| (5.) | 76<br>18 | 75<br>18 | 87<br>79 | 46<br>35 |

75
27
———
48

75 யை பிரிக்க 60×15 ஆகிறது; அதைப்பிரித்து எழுதாமல் மனதில் வைத்துக்கொண்டு போடலாம். 15-ல் 7 போனால் 8. 6-ல் 2 போனால் 4.

## அப்பியாசம்.

| | | | | |
|---|---|---|---|---|
| (1.) | 56<br>47 | 75<br>66 | 45<br>19 | 76<br>29 |
| (2.) | 75<br>26 | 56<br>49 | 80<br>49 | 95<br>79 |
| (3.) | 15<br>9 | 67<br>58 | 47<br>8 | 71<br>12 |
| (4.) | 35<br>16 | 30<br>15 | 78<br>39 | 36<br>17 |
| (5.) | 87<br>79 | 79<br>69 | 36<br>19 | 83<br>49 |

## அப்பியாசம்.

ஒரு மாம்பழத்தின் விலை 12-பை; ஒரு கொய்யாப்பழத்தின் விலை அதைக்காட்டிலும் 5 பை குறைவு; கொய்யாப்பழம் விலை என்ன?

மாம்பழத்தின் விலை 12-பை; கொய்யாப்பழத்தின் விலை (12—7) 5-பை.

(1.) கோபாலனிடத்தில் 23 பலபம் இருக்கிறது. என்னிடத்தில் அதைக் காட்டிலும் 7 குறைச்சலாயிருந்தால் எத்தனை?

(2.) கோவிந்தனிடத்தில் 79 குண்டுகளிருக்கின்றன. என்னிடத்தில் 17 கூடயிருந்தால் அவனுக்கு சமமாயிருக்கும். என்னிடத்திலிருப்பது எத்தனை?

(3.) ஒருவன் 17 பழமும், மற்றொருவன் 9 பழமும் தின்றார்கள்; ஒருவன் மற்றொருவனைக்காட்டிலும் எவ்வளவு அதிகம் தின்றான்?

(4.) என்னிடத்தில் 87 ரூபாயிருக்கிறது; அதை 96 ரூபாயாக்கவேண்டுமானால் எத்தனை ரூபாய் சேர்க்கவேண்டும்?

2—1— 2
2—2— 4
2—3— 6
2—4— 8
2—5—10
2—6—12

இதுவரைக்கும் முன்னமே கற்றிருக்கிறார்கள். இப்போது இரண்டு 7 எவ்வளவு? இரண்டு எட்டு எவ்வளவு? இரண்டு ஒன்பது எவ்வளவு? இரண்டு பத்து எவ்வளவு? இரண்டு பதினொன்று எவ்வளவு? இரண்டு பன்னிரண்டு எவ்வளவு என்று கேட்டு இரண்டாம் வாய்ப்பாட்டில் மற்ற பாகத்தை பன்னிரண்டுவரைக்கும் சொல்லிக்கொடுக்கவும்.

(இன்னும் வரும்.)



## சமாசாரக் குறிப்பு.

மெட்ரிகிலேஷன் முதலான யூனிவர்ஸிடி பரீட்சைகளை இனிமேல் நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் நடத்தாமல் மார்ச்சு, எப்ரல், மே மாதங்களில் நடத்தப்போகிறார்களாம். இது மிகவும் நல்ல ஏற்பாடு.

—:0:—

ஸ்பெஷல் அப்பர்பரைமரி பரிட்சைமுதல் பீ. யே. பரீட்சைவரையிலும் மராட்டி பாஷையிலும் பரீட்சை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

—:0:—

டிக்ரீ பரீட்சையில் தேறுபவர்களுக்கு வெள்ளை உடுப்பு கொடுக்கிறதா, கறுப்பு உடுப்புக் கொடுக்கிறதா என்கிற விஷயத்தைக்குறித்து தர்க்கம் நடந்துகொண்டுவருகிறது.

—:0:—

அடுத்த வருஷம் முதற் கொண்டு டிப்டி இன்ஸ்பெக்டர்கள் அநேகரை எடுத்துவிடுவதினால், பள்ளிக்கூடங்கள் இல்லாத குக்கிராமங்களில் வித்தியாபிவிர்த்திக்கு இப்பொழுது அவர்கள் படுங் கஷ்டம் நீங்கிப்போகும். பள்ளிக்கூடங்களை பரீட்சிப்பதும், லோகல்பண்டு பாடசாலைகளினுடைய மேல் பார்வையும், இன்ஸ்பெக்டிங் ஸ்கூல்மாஸ்டர்கள் சரிவர வேலைபார்த்து வருவதைக் கவனிப்பதுமே அவர்களுக்கு இனி வேலையாம். ஆகையால் இனி நியமிக்கபடுகிற இன்ஸ்பெக்டிங் ஸ்கூல்மாஸ்டர்கள் இப்பொழுதிருப்பவர்களினும் உயர்ந்த நடத்தையும், வித்தையும் உள்ளவர்களாயிருப்பார்கள். அவர்களின் வேலையையும் இன்னும் நன்றாய்ச் சீர்படுத்தப்போகிறார்களாம். இதற்காக டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு இப்பொழுது ஒரு பரீட்சை ஏற்படுத்தியிருப்பதுபோல் இவர்களும் ஒரு பரீட்சையில் தேறவேண்டுமென்று ஏற்பாடு செய்வார்போலிருக்கிறது. டயிரக்டர் அவர்கள் இன்ஸ்பெக்டிங் ஸ்கூல் மாஸ்டர்கள் இல்லாமலொழியாது என்கிற எண்ணங்கொண்டிருக்கிறார்.

***

## ரெயில் ஸ்டேஷன்.

ஸ்டேஷன்போலும் ரயில்போலும் படங்கள், ரயில்வண்டி பொம்மை, சில டிக்கட்டுகள், சேகரித்துக்கொள்ளவேண்டும்.

## ஆரம்பம்.

எப்பொழுது உங்களுக்கு ஒருமாதகாலம் விடுமுறை விடுகிறார்கள்? லீவு நாளில் நீங்கள் என்னசெய்கிறீர்கள்? எங்கள் பிறந்த ஊருக்குப்போகிறோம். உங்கள் ஊருக்கு நீங்கள் என்னமாய்ப்போய்ச் சேருகிறீர்கள்? வண்டியில், அல்லது ரயிலில். ரயில் ஏறுவதற்கு எவ்விடம்போகிறீர்கள்? எனக்கு ரயிலேற வேண்டுமானால் நான் எவ்விடம் போகவேண்டும்? ரயில் ஸ்டேஷனுக்கு. இன்றையதினம் பாடம் ரயில் ஸ்டேஷனை குறித்ததாகையால் நீங்கள் அவ்விடத்தில் பார்த்ததையெல்லாம் எனக்குச் சொல்லவேண்டும். கிருஷ்ணா, நீ என்னபார்த்தாய்? நான் ரயில்வண்டியையும் அநேக ஜனங்களையும் பார்த்தேன். ரயில்வண்டி என்னசெய்தது? ஓடிற்று. நீ வண்டியில் ஏறும்பொழுது அது ஓடிக்கொண்டிருந்ததா? நீ வண்டியில் எத்தனை மணிநேரம் இருந்தாய்? 6 மணிநேரம். இந்த 6 மணிநேரமும் ஓடிக்கொண்டிருந்ததா? சில சில இடங்களில் மட்டும் சற்றுநேரம் நின்றது. எவ்விடங்களில் நின்றது? வேறு ஸ்டேஷன்களில். ஸ்டேஷன் என்று ஏன் சொல்லுகிறோம் தெரியுமா? ஸ்டேஷன் என்னும் இங்கிலீஷ் வார்த்தைக்கு தங்குமிடம் என்று பொருள். ஸ்டேஷனில் எது தங்குகிறது? ரயில்வண்டி ஏன் ஸ்டேஷன்களில் நிற்கிறது? ஜனங்கள் ஏறி இறங்குவதற்கு. எல்லா ஸ்டேஷன்களும் ஒருமாதிரியாயிருக்கிறதா? சிலவை பெரியவையும் வேறு சில சிறியவையுமிருக்கின்றன. ஒவ்வொரு ஸ்டேஷனிலும் எத்தனை நிமிஷம் நிற்கிறது? சிலதில் 5 மற்றதில் 10, 15 நிமிஷம். இந்த வித்தியாசம் ஏன் தெரியுமா? பெரிய ஸ்டேஷன்களில் ஜனங்கள் அதிகமாயும் சிறிய ஸ்டேஷன்களில் குறைவாயும் ஏறி இறங்குவதால்.

### ஸ்டேஷனுடைய பாகங்கள்.

ரயில் ஏறுமிடத்தில் எல்லாரையும் விடுகிறார்களா? டிக்கட்டு இல்லாவிட்டால் விடுகிறதில்லை. ஆகையால் ரயில் ஏறவேண்டியதற்கு என்ன வாங்கிக்கொள்ளவேண்டும்? டிக்கட். டிக்கட் எவ்விடத்தில் கொடுக்கிறார்கள்? டிக்கட் ஆபீசில். டிக்கட் ஆபீஸ் என்றால் என்ன? உள்ளே டிக்கட்டுகள் வைத்திருக்கும் ஒரு அறை. நீ அந்த அறைக்குள் போகிறாயா? ஒரு ஜன்னலண்டையில் போகவேண்டும். அந்த அறைக்குள் இருக்கிறவர் யார்? டிக்கட் கொடுக்கும் உத்தியோகஸ்தன். அவனுக்கு நீ ஏதாவது கொடுக்கிறாயா? ரூபாய். அவனிடம் நீ ஏன் ரூபாய் கொடுக்கிறாய்? டிக்கட் வாங்க. அவன் உனக்கு ஏன் டிக்கட் கொடுக்கிறான்? நாம் போகவேண்டிய இடத்திற்கு உள்ள சத்தம் கொடுத்துவிட்டோம் என்பதற்காக. ஆம், டிக்கட்டில் நீ போகவேண்டிய இடத்தின் பெயர் எழுதியிருக்கும். இதோ ஒரு டிக்கட்டிருக்கிறது. அதில் எழுதியிருப்பதைப் பார்த்தால் நீ வாங்கின நாளின் தேதி, நீ போகவேண்டிய ஸ்டேஷன் பெயர், நீ ஏறவேண்டிய வண்டி எல்லாம் தெரிகிறது. நீ உன்



தகப்பனாருடன் போகும்பொழுது உன் டிக்கட்டும் அவருடையதும் ஒரே மாதிரியாயிருக்கிறதா? உன் டிக்கட்டை ஏன் இரண்டாய் வெட்டிவிடுகிறான்? ஏனென்றால் நீ சிறு பையனாகையால் உன் தகப்பனார் கொடுக்கிற சத்தத்தில் பாதிதான் கொடுக்கிறாய்.

டிக்கட் வாங்கிக்கொண்டு எங்கே போகிறோம்? ரயிலேறுமிடத்திற்கு. நீ நிற்கிற இடத்தில் ரயில் வண்டி வருகிறதா? அதின் அருகில். ரயில் வரும் இடத்தைவிட நீ நிற்குமிடம் ஏன் உயரமாயிருக்கிறது? நீ நிற்குமிடத்தில் என்ன போட்டிருக்கிறது? சில பெஞ்சுகள். இவைகள் ஏன் போடப்பட்டிருக்கின்றன? இன்னும் இவை போன்ற கேள்விகளால் வெள்ளைக்காரர்களுக்கு சாப்பாட்டு அறைகள் இருக்கிறதும் நமக்கு இல்லாமலிருக்கிறதற்குக் காரணமும், தாகமெடுத்தவர்கள் தாகசாந்தி பண்ணிக்கொள்ள பானைகளில் குளிர்ந்த ஜலம் வைத்திருப்பதையும், அதில் எடுத்து சாப்பிட இஷ்டமில்லாதவர்களுக்கு ஒரு பிராமணன் தீர்த்தம் கொடுக்கும்படியாய் வைத்திருக்கும் ஏற்பாட்டையும் அல்பசங்கைக்கு போகிறவர்களுக்கு வேறான இடமும், அதில் மூன்று திறுசும், சுவரில் கெடியாரம் வைத்திருப்பதின் பிரயோசனமும், பழம் பால் புஷ்பம் கொண்டுவந்து விற்பதினால் இருவருக்கும் உண்டாகும் லாபமும் மற்றுமிவைபோன்ற விஷயங்களையும் சொல்லிக்கொடுக்கவும்.

(இன்னும் வரும்.)

## வினா.

(1.) கால அட்டவணை எழுதுவதற்கு விதிகள் என்ன?

(2.) பாடசாலையிலிருக்கவேண்டிய முக்கியமான பட்டிகளையும் அதின் பிரயோஜனங்களையும எழுதுக.

(3.) பாடசாலைக்கு வேண்டிய முக்கியமான உதாரணங்கள் எவை?

(4.) வாசிப்புப் பாடம் நடத்தும் வழியைச் சொல்லு.

(5.) வெகுமானம் கொடுப்பது நன்மையா? அதின் லாப நஷ்டங்களை எடுத்தெழுதுக.

(6.) பிள்ளைகள் காலந்தவறாமல் வர என்ன சாதனங்கள் பண்ணுவாய்?

(7.) எந்தக்குற்றங்களுக்கு நீபிள்ளைகளைப் பிரம்பினாலடிப்பாய்?

## உபாத்தியாயர் கவனிக்கவேண்டிய சில விஷயங்கள்.

பிள்ளைகளிடத்தில் நம்பிக்கைவைக்கவேண்டும். எப்பொழுது உசிதமாய்
த்தோன்றுகிறதோ அப்பொழுதெல்லாம் அவர்கள் வார்த்தையை நிஜமென்று
ஏற்றுக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதினால் விளையும்நன்மையை வெ
ளிப்படையாகத் தன்மனதில்பதியும்படி செய்தபின்வரும் சங்கதியைமிக்க
அநுபோகமுடைய ஒரு உபாத்தியாயர் நமக்குச்சொன்னார். சில வருடங்
களுக்குமுன்பு வீட்டில் எழுதிவரச்சொன்ன ஒரு அப்பியாசத்தில் ஒரேவித
மானபிழையை இரண்டுபிள்ளைகள்செய்து என்னிடங்கொண்டுவந்தார்கள்.
அவர்கள் தனித்தனியாய் எழுதிக்கொண்டு வந்திருக்கமாட்டார்கள் என்கிற
எண்ணம் என்மனதில் பதிந்ததேயாயினும், அவர்களை நான் வினவுங் காலே
யில் தாங்கள் ஒருவரை ஒருவர்பார்த்து எழுதவில்லையென்று உறுதியாய்க்
கூறினதினாலும், அவ்விருவரில் ஒருவன் மிகுந்த சத்தியவான் என்கிற
எண்ணமெனக் கிருந்தபடியாலும், அவர்களைப்பார்த்து, பிள்ளைகளே! நீங்கள்
எழுதிவந் திருப்பதிரண்டையும் நான் எந்த உபாத்தியாயரிடத்தில் காட்டின
ாலும், அல்லது நியாயந்தீர்க்கும்படி ஏற்படுத்தும் ஜூரிகளுக்குக் காண்பித்தா
லும் நீங்கள் சொல்வது அபத்தமென்றே தீர்மானிப்பார். ஆனால், நீங்களோ
மிக்க உறுதியாய்ச்சொல்லுகிறீர்கள். நீங்கள் என்னிடத்தில் பொய்சொல்ல
மாட்டீர்கள் என்கிற எண்ணமெனக்கிறபடியால், ஏதோ இப்படி ஒருவரை ஒரு
வர் பார்க்காமல் ஒரேவிதமாய் எழுதியிருப்பது மிக்க விந்தையாயிருக்கிறது
என்று எண்ணவேண்டியதாகிறது. என்னகாரணத்தினால் இப்படி நேர்ந்த
தென்று எனக்கு ஏற்படவில்லை. இதைக் காட்டிலும் அதிகமாய் நான்
சொல்லவேண்டியது ஒன்றுமில்லை என்றுகூறினேன்.

அனேகவருடஞ்சென்ற பின்பு ஒருநாள் அவ்விருவரிலொருவன் என்
னை வழியில் கண்டபொழுது அவன் கிட்டவந்து, ஐயா! நான் சில
வருஷத்திற்குமுன்பு உங்களிடத்தில் சொன்னது பொய்; ஆனால் பொய்பேசி
னேனே என்கிறஎண்ணம் அநுமதி விதுகையிலும் என் மனதில் உறுத்திக்
கொண்டே இருந்தது என்றுசொன்னான்.

பிள்ளைகளின் வார்த்தையில் உறுதிவையுங்கள். அவர்களை யோசனை
செய்யாமல் திடீரென்று பதில்சொல்லும்படி செய்யக்கூடாது. மேலும் அவர்
கள்கொடுக்கும் விடைக்கு யுக்தியான அர்த்தஞ்செய்து எப்படியாவது அவர்
கள் குற்றஞ்செய்யாவிட்டாலும், குற்றஞ்செய்ததாக ஒப்புக்கொள்ளும்படி
செய்யமுயலலாகாது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்கிற
பிரியத்தினால் பிள்ளைகள் பொய்சொல்லுவதுவழக்கம். எப்பொழுதும் நிஜமே
பேசிவரும் ஒரு மாணாக்கனை மேற்கூறிய பயத்தோடுகூடிய பிரியத்தின் கார
ணத்தால் உபாத்தியாயர் நிஜமாகச்செய்த எல்லாவிஷயங்களையும் பொய்
யென்று ஒப்புக்கொள்ளச்செய்யலாம். ஆனால் இப்படிச்செய்வது பிள்ளை



களுக்கு உண்மைவேறு பொய்வேறாய்ப் பகுத்தறியும் அறிவைக்கெடுத்து
நல்லொழுக்கத்தில் நடப்பதற்கு இடையூறாய்நிற்கும். ஒரு மாணாக்கன் அஜாக்
கிரதையாயிருக்கும்பொழுது சடுதியில்கேள்விகேட்பதினால் அவன் ஒருபொய்
சொல்லிவிட்டால், ஒருபொழுதும் பொய்சொல்லாமல் இன்றைக்குப்பொய்
சொன்னேனே என்கிற அவமானத்தால் முதல்சொன்னபொய்யை மறைப்ப
தற்காக இன்னுமொருபொய்சொல்வான். இவ்விதமாகப் பொய்சொல்லக்
கற்றுக்கொள்வான்.

பிள்ளைகளிடத்தில் நம்பிக்கைவைத்து, அவர்கள் உபாத்தியாயரிடத்தில்
நம்பிக்கைவைக்கச் செய்யவேண்டும். அவர்களிடத்தில் பட்சமாயும் இரக்க
முள்ளவராயும் அவர்களைப் பயப்படச்செய்யாமலும் இருக்கவேண்டும். ஒவ்
வொரு மாணாக்கனுக்கும் அன்பான சில வார்த்தைகளைச் சொல்லவேண்டும்.
அவர்கள் யோசித்து பதில்சொல்லவேண்டியதற்காக நேரங்கொடுக்கவேண்
டும். இப்படியெல்லாஞ்செய்தால் உபாத்தியாயரிடத்தில் பிள்ளைகள் பொய்
சொல்லமாட்டார்கள்.

## பள்ளிக்கூட புத்தக அதிசயம்.

இப்பத்திரிகையின் கடையில் டயிரக்டர் துரை அவர்கள் பள்ளிக்கூட பு
த்தகங்களில்பலவற்றின்விலையை உயர்த்திவிட்டனரென்று அப்புத்தகங்களின்
பெயரோடு சொல்லப்பட்டிருக்கிறது. முன்னொருசஞ்சிகையில் கவர்ண்மென்
டார் பிரைமரி பாடசாலைகளை விர்த்திசெய்யும்பொருட்டு அனேக ஹைஸ்கூல்
களையும், காலேஜுகளையும் எடுத்துவிட்டனரென்றும், அப்படிச்செய்தும் பிரை
மரி பாடசாலைகளை விர்த்திசெய்ய யாதொருமுயற்சியும் எடுத்துக்கொள்ளாதது
மன்றி, சாலரி, கிரான்ட்டுகளையும் குறைத்துக்கொண்டு வருகின்றனரெ
ன்றும் கூறியிருக்கிறோம். நிஜமாகவே ப்ரைமரிபாடசாலைகளை விர்த்திசெய்ய
வேண்டுமென்கிற எண்ணமிருக்குமாயின் டயிரக்டர் இப்படி ப்ரைமரிபாடசா
லைகளில் உபயோகமாகிவருகிற புத்தகங்களின் விலையை உயர்த்திவிட்டதற்கு
கவர்ண்மெண்டார் அப்படிச்செய்தல் கூடாதென்று உத்தரவுசெய்வதற்கு என்
ன இடையூறுஇருந்ததோதெரியவில்லை. நூலாதாரமென்னும்புத்தகம் இரண்டு
பிரிவுள்ளது. அதன்முதல் பிரிவின்விலை ஆதியில் ஒரு அணாவாயிருந்ததாம். அப்
புறம் அதை ஒன்றே காலணாவாகச்செய்தனர். இப்பொழுது இரண்டணாவாக்
கியிருக்கிறார்கள். இவ்விதமாகவே இரண்டாம்பிரிவை, 1½, 1¾, 2½, அணாவாக்
கியிருக்கிறார்கள். இது என்னநீதி? சிறுபிள்ளைகள்படிக்கிற புத்தகத்தின் விலை
யை உயர்த்துவதினால் இருக்குங்கெடுதி கொஞ்சமல்ல. சாதாரணமாய்
ஒருகுழந்தை அந்தப்புத்தகம் படித்தாவதற்கு முன்பு இரண்டுபுத்தகம் கிழித்து

விடுகிறது. மேலும் ஒருபுத்தகமாவது போக்கடிக்கும். இப்படி ஒருபுத்தகம்படித்தாவதற்குமுன்னே நாலுபுத்தகம் வாங்கிக்கொடுக்கவேண்டிவருகிறது. ஒரு அணு விலையாயிருக்கும்பொழுது வாங்கிக்கொடுப்பதற்கு அனேகம் ஏழைத்தகப்பன்மாருக்கு கஷ்டமாயிருக்கிறதென்றால் இரண்டணு விலைவைக்கும்பொழுது எவ்வளவு கடினமாயிருக்குமென்பது இப்பத்திரிகைப்படிக்கும் ஏழைஉபாத்தியாயர்களுக்கு யாம் சொல்லவேண்டியதில்லை. ஆனால் இவ்வேழைகளின்கஷ்டம் மாதமொன்றுக்கு இரண்டாயிரத்திச் சில்லரைரூபாய் சம்பளம் வாங்கும் டயிரக்டருக்குத் தெரியவானேன்? இப்படி அவர் செய்ததற்கு காரணம் என்னவென்று விசாரிக்குமளவில் புத்தகம்அச்சிடுவது முதலான வேலைகளை மேம்பார்வை பார்த்துவரும்பொருட்டு டயிரக்டர் ஆபீசுக்கு கிளையாக இருக்கப்பட்ட ஆபீச் உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளமுதலான செலவுக்கு புஸ்தகம்விற்பதினால் வரப்பட்டலாபம் போதாததாலேயாம். இது மிகவும் நல்லகாரியம். ஏழைகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு உத்தியோகஸ்தர் வயிற்றைரொப்புவது மிகவும் சிலாக்கியம். கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது எவ்வளவு நல்லகுணம்? இப்பேர்ப்பட்ட விஷயங்களையெல்லாம் அநேக இடங்களில் இப்பொழுதிருக்கப்பட்ட உபாத்தியாய சங்கங்களில் நன்றாய் ஆலோசித்துச் சங்கத்தார் தர்க்கித்தபிற்பாடு வருமுடிவை எமக்குத்தெரிவித்தால் நமது பத்திரிகையின் மூலியமாய் வெளியிடச் சித்தமாயிருக்கிறோம்.

---

## ப்ரோபெல்.

---

பிரிடரிக்ப்ரோபெல் என்பவர் இவ்வுலகிலுள்ள பாலபோதக ஆசிரியர் எல்லோரிலும் சிறந்தவர். அவர் "இளமையிற்கல்" என்ற ஒளவைவாக்கியத்தின்படி சிறுவர்களுக்குக் குழந்தைப்பருவமுதற்கொண்டே தக்கவிதமாய்க் கல்விகற்பிக்குமுறையை நன்றாய் ஆராய்ந்து போதித்துவந்தார். அவர் பால்மணமருத சிறுகுழந்தைகளும் தாமாகவே அதிக உற்சாகத்தோடு படிக்கும்படியான படிப்பைப்பற்றிய முறைகளைப் புதிதுபுதிதாகக் கண்டுபிடிப்பதிலேயே தாமுள்ள நாளுள்ளமட்டும் நாட்டமுடையவராயிருந்து கீர்த்திபெற்ற மகோபாத்தியாராதலால், பாலர்க்குப் போதிக்கும் ஒவ்வொரு உபாத்தியாயரும் அந்த மகாபாவருடைய சரித்திரத்தை ஒருவாறு அறிந்துகொள்வதினால் மிகுந்த பயனுண்டாம்.

அவர் 1782௵ ஏப்ரல்௴ 21௳ ஜர்மனிதேசத்தில் தூரிஞ்சியர்காட்டுக்கருகேயுள்ள ஒபர்விஸ்ட்பாட்ஜ் என்னும் ஓர்சிறு கிராமத்திலே பிறந்தார். அவர்பிறந்து ஆண்டுநிறைவாவதற்குமுன்பே அவருடையதாய் இறந்துபோ



னாள். மாற்றறியாப்பாலனாயிருக்கையிலேதானே தாயில்லாப்பிள்ளையாகித் தம்மைப்பரிந்துகாப்பாரில்லாமல் படாதபாடுகளைப் பட்டனுபவித்தார். அவர் இத்தனைவருத்தப்பட்டாரென்றும், அவ்வளவுக்கவ்வளவு சிறிதும் வீண்போகாமல் இக்காலத்தாருக்கு அது இப்பொழுது நன்றாய்ப் பயன்பட்டுவருகிறது.

அவர்தந்தை அந்தக்கிராமத்தில் கோயில்குருவாயிருந்து, எப்பொழுதும் வீடுவீடாய்ச்சென்று, எல்லோருக்கும் ஞானோபதேசஞ்செய்து அவர்களை நல்வழியில்நடத்துவதில் நாட்டமாயிருந்தார். அன்றியும் அவர் அங்குள்ளவர்கள் வீடுகளில் ஒருவர்க்கொருவர் யாதேனும் மனஸ்தாபமுண்டாகும்போதெல்லாம் தாம்போய் வழக்கைத்தீர்த்துச் சமாதானஞ்செய்துகொண்டுமிருந்தாராகையால், அவருக்கு எந்நேரம்பார்த்தாலும் ஓய்வின்றி மிகுந்தவேலையிருக்கும். அவர் இவ்வாறு ஊரார் வியவகாரங்களைத் தீர்ப்பதிலேயே நாட்டமுடையவராய்த் தமது குடும்பயோகக்ஷேமத்தைப் பாராமலேயிருந்துவிட்டார். ஆதலினால், தாயில்லாக்குழந்தையாகிய ப்ரோபெலை ஆதரவாய்ப்போற்றிப் பாதுகாப்பதற்கிடமில்லாமற்போயிற்று. அவர்தந்தை இளமைப்பருவத்திலேயே தாரத்தை யிழந்துவிட்டதனால் இரண்டாம்முறை ஒருத்தியைமணந்துகொண்டார். அந்த மாற்றாந்தாய் எந்நேரமும் அவர்மேல் சிடுசிடென்றுவிழுந்து பகைத்துவந்ததனால் ப்ரோபெல் படாதபாடெல்லாம் படவேண்டியதாயிற்று. சிறியதாயின் உபத்திரவம் நாளுக்குநாள் அதிகமானதால், அதற்குமுன்னெல்லாம் தாம்வெளியேபோகும்போது ஒவ்வோர்சமயங்களில் தம்மோடுகூடவே அழைத்துக்கொண்டுபோய் மிக்கஅன்பாயிருந்த தந்தையும் அவர்மேற் கசந்து வேப்பங்காயானார். முளைக்கிறமுளையில் தாயைச்சாகக்கொடுத்து, மாற்றாந்தாயின் கொடுமைக்குட்பட்டு, அது காரணமாகத் தந்தையினாலும் வெறுக்கப்பட்டதனால் அவர்பட்டகஷ்டத்துக்கு அளவில்லை. அவர் தகப்பனுக்குக் குடும்பவேலையைப்பார்த்துவரக் கூடாமையால் ப்ரோபெலைத் தமது மூத்தமகவிடமொப்புவித்துப் பத்திரமாய்ப்பார்த்துவரும்படிசெய்தார். ப்ரோபெலுக்குத் தமது தந்தைமிகநல்லவரென்றும், அவர் செய்துவந்தகாரியம் லோகோபகாரமானதென்றும், தாம் தமது தந்தையின் இஷ்டப்படி நடந்துகொள்ளாதது குற்றமென்றும் நன்றாய்த்தெரியும். அவர் சிறுகுழந்தையாயிருந்ததுமுதற்கொண்டே ஆழ்ந்தபுத்தியுள்ளவர். அவர் அதிபாலியமாயிருக்கையில்தானே தம்மைப்பார்க்கவந்த தமது தமயனைப்பார்த்து, அண்ணா! இவ்வுலகத்தில் புருஷர்களும் பெண்டுகளும் கலகஞ்செய்யாமல் எப்பொழுதும் சமாதானமாய் வாழ்ந்திருக்கும்படி ஒரேவிதமாய் ஆண்டவன் அவர்களை ஏன் படைக்கவில்லையென்றுகேட்டார். அதற்கு அவர் சகோதரன், வெவ்வேறு ஜாதியான மூலவர்க்கங்களின் பல உறுப்புகளையும் அவருக்கு விளக்கிக்காட்டி, தம்பி! வெவ்வேறான இரண்டுவகைச்செடிகளை ஒன்றோடொன்று ஒட்டுவதனால் அவற்றினின்றும் புதிதுபுதிதான செடிகளும் மலர்களுமுண்டாகுமென்று சொல்ல, அவர் அப்பொழுதே மூலவர்க்கத்தின் உள்ளுறையான பொருளை

ல்லாமறியத் தலைப்பட்டதனால், இந்த வித்தையைக்கொண்டு பிற்காலத்தில் இவ்வுலகத்தவருக்கு அனுகூலமாயிருக்கும்படியாக எவ்வளவோ நன்மைகளையைச்செய்தார். "விளையும்பயிர் முளையிலேதானே தெரியும்" என்றபடி அவர் நான்குவயதுள்ள சிறுகுழந்தையாய்த் தமது மாற்றாந்தாயின் நிர்ப்பந்தத்தில் அந்தக்கிராமத்தின் தேவாலயத்தருகேயுள்ள ஓர் இருட்டு வீட்டிலிருக்கும்பொழுதே அதற்கருகே ஒருவீடு புதிதாகக் கட்டப்பட்டதனால் அதைக் கட்டும்போதே அந்தவீட்டின் சாளரத்தின்வழியாக அங்கேநடந்த வேலையைப்பார்த்துக்கொண்டு, தாமிருந்த அறைக்குள்ளிருந்தபடியே, அங்கிருந்த நாற்காலி முதலிய பல பண்டங்களால் தாமும் வீடுகட்டுவதுபோலப்பாவித்து, அவற்றை ஒன்றின்மேலொன்றாய்வைத்துக் கட்டத்தலைப்பட்டுப் பிற்காலத்தில் சிறந்தசிற்பியானார். சிறியதாயின் நிர்ப்பந்தமில்லாமல், அவரைப்பார்த்துவந்த வேலைக்காரி அவரிஷ்டப்படி அவரைத்தனக்கு வேலையொழிந்தநேரங்களில் தாராளமாய் வெளி அழைத்துக்கொண்டுபோயிருப்பாளேயாயின் அவர் இன்னும் எத்தனையோ விஷயங்களைச் சிறுவயதிலேதானே கற்றுக்கொண்டிருப்பார்.

ப்ரோபெலுக்குப் பத்துவயதானபின்பு அவருடைய தாயோடுகூடப்பிறந்த மாமன் தன் மருமகன்படும் வருத்தத்தைக்கண்டு இரங்கி, தம்மூராகிய ஸ்டாட்லத்துக்கு அவரைஅழைத்துக்கொண்டுபோனான். அவனுக்கிருந்த ஒருபிள்ளையும் போய்விட்டப்படியால், அவனும் அவன்மனைவியும் அவரைத் தங்கள் பிள்ளைபைவிடப் பத்துமடங்கு வாஞ்சையாய் வைத்தாதரித்ததனால் ப்ரோபெலைப்பிடித்திருந்த சனி அந்தமட்டோடு தொலைந்துபோயிற்று. பத்துப்பிராயத்தில் அவர் பள்ளிக்குவைக்கப்பட்டத்தில், அங்கிருந்த உபாத்தியாயர் முதலானோர் அவருடைய நுட்பபுத்தியை அறியமாட்டாமல், அவருக்கு முழுமூடனென்று பட்டங்கொடுத்துப் பரிகாசம்பண்ணத் தலைப்பட்டார்கள்! சிறுவரின் மனநிலையைச் சிறிதுமறியாமல் அவர்களைக் கண்டபடிப்படுத்திவைத்துக் குருட்டுப்பாடஞ்செய்யச்சொல்வது அவருக்குச்சிறிதாயினும் இனித்திராமையால், தம்மைச் சுற்றிலுமுள்ளகாட்சி முதலியவற்றின்மேற் கருத்தாயிருந்து ஆனந்தமாய் அவற்றின் தன்மையை நன்றாய் அறிந்துகொண்டிருப்பார்.

## பூகோள பாடம் நடத்துமுறை.

தற்கால கிராண்டினேட் கோட்பிரகாரம் பூகோளத்தை இரண்டாவது ஸ்டாண்டர்டிற்குப் பின் ஆரம்பிக்கவேண்டும். அந்த ஸ்டாண்டர்டுக்குக் குறித்திருக்கும் பாடம்.

(1.) பிள்ளைகளைக்கொண்டு அளவுக்குத்தக்கபடி அவர்களிருக்கும் பள்ளிக்கூடத்தின் அறையைப்போல் போர்ட்டில் எழுதிவைக்கவேண்டும்.

(2.) பிள்ளைகளைக்கொண்டு அவ்வறையிலிருக்கும் பெஞ்சுகள், நாற்காலிகள், மேசைகள் முதலானவைகளைப் போர்ட்டிலிருக்கும் அவ்வறையின்



படத்தில் அதின் இருப்பிடத்தில் வரையவிக்கவேண்டும். இதல்லாமல் போர்ட்டில் என்னவஸ்துவை எங்கே எழுதுகிறோமோ அதற்குத்தகுந்தாப்போல் அந்தஸ்துவை எடுத்து அறையில் சரியான விடத்தில் வைக்கவேண்டும்.

(3.) படத்தின் நான்கு திக்குகளையுந் தெரிவிக்கவேண்டும்.

(4.) பிள்ளைகளிருக்கும் பட்டணம் அல்லது ஊரின்படத்திலிருந்து அதன் பூகோளத்தைக் கற்பிக்கவேண்டும்.

முதல் விஷயத்தைக் கற்பிப்பதில் முக்கியமாய்த் தெரிவிக்கவேண்டியதென்னவெனில், பெரியதேசங்கள், பட்டணங்கள், ஊர்கள் முதலானவைகளைச் சிறிய படங்களாக எழுதலாம்; அப்பெரிய ஊரை இடத்திற்குத் தகுந்தாப்போல் கூட்டலாம் என்பதும், அப்படிச்செய்வதில் அளவுக்குத் தகுந்தாப்போலிருக்கவேண்டு மென்பதுமே.

பாடசாலையிலிருக்கும் வஸ்துக்களாவன. நாற்காலி, பெஞ்சு, மேஜை, கடியாரம், புஸ்தகம், பீரோமுதலான வஸ்துக்களின் படங்கள் சுலபாய்க் கிடைக்கலாம்.

பூனை, நாய், பசு, ஆடு, மற்றைய ஜந்துக்களின் படங்களும் கிடைக்கலாம். இவைகளில் ஒன்று அல்லது அநேக படங்களைக் கொண்டுவந்து காட்டி, இப்படங்களென்னவென்று கேட்கவேண்டும்

பிள்ளைகளுடனே இன்னவஸ்து அல்லது ஜந்துவின்படமென்று சொல்லுவார்கள். அவ்வஸ்துக்கள் எதிரிலிருந்தால் காட்டியாவது, அல்லது அவர்களுக்கு தெரிந்திருக்கும் பட்சத்தில் படத்தைக்காட்டியாவது, இதுநாற்காலியென்றீர்களே. நமக்குநாற்காலி என்னத்திற்கு உபயோகம்? பிள்ளைகள். உட்காருவதற்கு; ஆனால் இதின்பேர் நாற்காலி என்கிறீர்களே இதின் மேல் உட்காரலாமா? இதரபடங்களையும் இம்மாதிரியாய் பலவிதமாய்க்கேட்கவேண்டும்.

பூனையின் படத்தைகாட்டி இதற்குக் கண்ணெங்கே? பூனைதன்கண்ணால் என்னசெய்கிறது? என்னவர்ணமாயிருக்கிறது? பூனைகாதால் என்னசெய்கிறது? இப்படத்தின் பூனை காதால் கேட்குமா? பூனைநடக்கிறது; இப்பூனை நடக்குமா? பூனையின்மயிரெங்கே? அதைவேண்டுமானால் எடுக்கலாம். இப்படத்தின் மயிரை எடுக்கமுடியுமா? இப்படிநானாவிதமான கேள்விகளினால், படமானது இன்னதென்று தெரிவிக்கவேண்டும்.

இதானவுடன் அளவெடுக்கக் கற்பிக்கவேண்டும்.

மேஜையின் படத்தைக்காட்டி நிஜமான மேஜையின் காலையும் இதின் காலையும் அளக்கச்சொல்லவேண்டும். ஒன்றைக்காட்டிலும் மற்றொன்று எவ்வளவதிகமாயிருக்கிற தென்பதைக்கேட்க வேண்டும். இப்படி மற்றக்கால்களை

யும் அதேமாதிரியாய் அளந்துபார்க்க ஒன்று எவ்வளவதிகமோ அவ்வளவே பங்கு அதிகமாயிருக்கும். நீளமும், அகலமுங்கூட அவ்வளவே அதிகமாயிருக்கும். மற்றப்படங்களைப்பற்றியும் இப்படியேகேட்டுக் கடைசியாக எந்தவஸ்து, ஜந்து அல்லது அதின் இடமானாலும் படமெழுதுவதற்குத் தகுந்தாற்போல் சிறிதாக எழுதவேண்டிய அளவைக்குறைத்துக் கொள்ளவேண்டும். ஒருபக்கத்திற்கு எவ்வளவு குறைத்துக் கொள்ளுகிறோமோ அவ்வளவே முழுதிலும் குறைத்துக்கொள்ளவேண்டும்.

பிறகு பிள்ளைகளிருக்கும் அறையைப் பார்க்கச்செய்து இவ்வறையைப் போல் நாம் போர்ட்டில் வரையவேண்டுமென்று நிர்மாணிக்கவேண்டும். ஆனால் அறையவ்வளவு படமெழுத—போர்ட்டு அறையைக் காட்டிலும் சிறிது. ஆகையால், அளவைக்குறைத்துக் கொள்ளவேண்டும். எவ்வளவுகுறைத்துக் கொள்ளவேண்டுமென்பதைப்பற்றி அறையின் அளவும் போர்ட்டின் அளவும் இவ்வளவென்று தெரியவேண்டும். பிள்ளைகளிருக்கும் அறைசுமார் 16-அடி நீளமும் 12-அடி அகலமும் போர்ட்டு 4½-அடி நீளமும் 3½-அகலமும் என்று வைத்துக்கொள்ளலாம்.

போர்ட்டில் 4-அடி நீளத்திற்கு போக 4-அடி நீளம் வைத்துக்கொண்டு படம் வரையலாம் 16-அடி நீளமாகிறது அதாவது 4-ல் ஒருபங்கு அப்பொழுது அகலத்தையும் நாலிலொருபங்காக்கிக் கொள்ளவேண்டும். அகலம் 12-அடிக்கு 3-அடி படத்திலெடுத்துக் கொள்ளவேண்டும்.

இம்மாதிரியாய் விளையாடுமிடம் முதலான இதர இடங்களின் படத்தையும் வரைந்து வழக்கப்படுத்தவேண்டும்.

பிறகு அறையிலிருக்கும் வஸ்துக்களை போர்ட்டின் படத்தில் குறிக்கவேண்டும். அப்படிச்செய்ய அவைகள் இன்னதி—கிலிருக்கிறதென்று தெரியவேண்டும். ஆகையால் அறைக்குக் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, முதலான திக்குகளைக்கற்பித்து, படத்திற்கும் திக்குகளைக்கற் பிக்க எப்படி சூரியன் உதிக்கும் திக்காய்த் திரும்பிக்கொண்டால் அத்திக்கு, கிழக்கும், நமக்குப் பின்புறம் மேற்கும், வலது கைப்பக்கம் வடக்கும், இடதுகைப்பக்கம் தெற்குமாயிருக்கிறதோ, அதேமாதிரியாய்ப்படத்தின் தலைப்புறம் வடக்கென்றும் அடிப்புறம் தெற்கென்றும் படத்திற்கு இடதுபக்கம் மேற்காகவும் வலது பக்கம் கிழக்காகவும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இதில் பலவிதமாய்ப்பழக்க பிள்ளைகளின் மனதில் படத்தில் நாலுதிக்குகளையும் நன்றாய் நாட்டி விடவேண்டும். பின்பு அறையிலிருக்கும் பெஞ்சு, நாற்காலி, மேஜை முதலியவைகள் யாவையும் தகுந்த விடங்களில் படத்தில் அவைகளின் அளவை நாலிலொருபங்காக்கி குறிக்கவேண்டும்.



நாற்காலி முதலானவைகளை படத்திலெழுதி அவ்விடத்திற்குச் சரியாய் அறையில் அந்த நாற்காலி முதலானவைகளை எடுத்து வைக்கச்சொல்லி பலதரம் பழக்கவேண்டும்.

பிறகு அவ்வூரின் பூகோளத்தைப் பற்றிக்கற்பிக்கவேண்டும்.

பாடசாலையிருக்கிற வீட்டுக்கு நான்குதிக்குகளிலுமிருக்கிற—வைகளைக் கேட்கவேண்டும். பிள்ளைகள் சொல்லிக் கொண்டேவர அவைகளைப்போர்ட்டிலெழுதவேண்டும். கடைசியில் இப்படிச் சுற்றுப்பக்கத்தில் அடுத்ததாகவிருப்பவைகளுக்கு எல்லைகளென்று பெயர். பிறகுநாமிருக்கும் பள்ளிக்கூடத்திற்கு எல்லைகளென்னவென்று கேட்கவேண்டும். இப்படி ஊரிலிருக்கும் பிள்ளைகளின் வீடுகள் முதலானவைகளுக்கு எல்லைகளைக்கேட்டு, எல்லையென்றால் இன்னதென்று நன்றாய்த்தெரிவிக்கவேண்டும்.

இதன் பிறகு அவ்வூரின் எல்லைகளைக்கேட்கலாம். சுற்றுப்பக்கத்திலிருக்கும் ஊர்களுக்குப் பிள்ளைகள் அடிக்கடி போயிருப்பார்களாகையால் சுலபமாய்ச் சொல்லுவார்கள். போர்ட்டில் எல்லைகள் என்றெழுதி பிள்ளைகள் சொல்லுவதை எழுதவேண்டும்.

(1.) எல்லைகள்
வடக்கு
கிழக்கு
தெற்கு
மேற்கு

பிறகு ஊரின் நீள அகலத்தைக் கேட்கவேண்டும். பிள்ளைகளுக்கு மைல் என்றால் இத்தனை தூரமென்கிற ஞான மிருந்தால் இதைக் கற்பிக்கலாம், இல்லாவிட்டால் இதைவிட்டுவிடலாம். அவ்வூரைப்போல் ஓர் படம் போர்ட்டிலெழுதி அதில் மேற்சொல்லிய எல்லைகளைக் குறிக்கும்படி செய்யவேண்டும்.

பின்பு அவ்வூரிலிருக்கும் தெருக்கள் பேட்டைகள் தோட்டங்கள், கோவில்கள் முதலானவைகளின் இருப்பிடம் பெயர் முதலானவைகளைக்கேட்டு அவைகளை போர்ட்டிலெழுதி—யதில் குறிக்கவேண்டும். இம்மாதிரி ஏரிகள் குளங்களின் பெயரைக்கேட்டு இருப்பிடத்தைப் படத்தில் குறிக்கவேண்டும். குளத்தின் உபயோகத்தையும் அதற்குத் தண்ணீர் வருகிறவழிகளையும் கேட்கவேண்டும்.

மழை பெய்யும்போது மேட்டுப்பிரதேசங்களில் விழுகிற தண்ணீரெல்லாம் ஒன்றுசேர்ந்து கால்வாய்கள் வழியாய் பள்ளமாயிருக்கப்பட்ட ஏரி குளங்களில் வந்துசேரும் கால்வாய்கள் சிறியவையாயும் பெரியவையாயுமிருக்

ரும். பெரிதாய் வெகு தூரத்திலிருந்து வரும் கால்வாய்களுக்கு ஆறுகளென்று பெயர். அவ்வூரிலிருக்கும் நதிகள், கால்வாய்கள், முதலானவைகளைக் கேட்டு அவைகளைப் படத்தில் ஒழுக்கமான கீற்றுகளாலெழுதவும் நதிகள், முதலில் சிறிதாகவும் வரவர பெரிதாகவுமிருப்பதால் படத்தில் ஆரம்பத்தில் சன்னக் கோடுகளாலும் வரவர கனமானவைகளாலும் எழுதவேண்டும்.

மலைகளேதாவதிருந்தால் அவைகளை ஒரேகனமான கோடுகளால் குறிக்கவேண்டும்.

அவ்வூரிலிருக்கும் வயல்களின் பேரையும் அவைகளில் நன்செய் புன்செய் விவரத்தையும் கேட்கவேண்டும்.

எம்மரங்கள் விசேஷமாயிருக்கின்றன வென்றும் என்ன இல்லை யென்றும் கேட்கலாம்.

பிறகு என்னென்ன ஜாதியார் குடியிருக்கிறார்களென்றும் அவர்களின் ஜீவன மின்னதென்றும் கேட்கவேண்டும்.

நாம் சாப்பிடவேண்டிய வஸ்துக்களில் எது அவ்விடத்தில் கிடைக்குமென்றும், எது கிடையாதென்றும், எவ்விடத்திலிருந்து வரவழைத்துக் கொள்ளுகிறோமென்றும் எது அதிகமாய்க் கிடைக்கிறதென்றும், அது எவ்விடத்திற்கு அனுப்பப்படுகிறதென்றும் கேட்கவேண்டும். இப்படித்தான் வர்த்தகத்திற்கு இடமுண்டாகிறதென்றும் தெரிவிக்கவேண்டும்

கிராம அதிகாரிகள் இன்னாரென்றும், அவர்களின் வேலையைப்பற்றியும் திருடர் முதலானவர்கள் வராதபடிக்கு தலையாரி தோட்டி முதலானவர்களை வைத்திருக்கிறதென்றும் தெரிவிக்கவேண்டும். இதல்லாமல் தினம் போலீஸ் உத்தியோகஸ்தர் வந்துபோகிறார்களென்றும், அவர்கள் திருடர் முதலானவர்களை பிடித்துக்கொண்டு போவார்களென்றும் தெரிவிக்கவேண்டும். யோக்கியர்களிடத்தில் அவர்கள் கிட்ட நாடாரென்றும் தெரிவிக்கவேண்டும். இவைகளையெல்லாம் இப்படி ஏற்படுத்துகிறவர்களுக்கு சர்க்காரார் என்று பெயர் என்றும் சொல்லவேண்டும்.

பிரதி ஊருக்கும் பூகோளம் ஏற்படுத்துவது கடினமாகையால், பின்வரும் பொதுவான விஷயங்களைமாத்திரம் குறிப்போம். மற்றவிஷயங்கள் ஊருக்குத் தகுந்தாற் போலபக்கத்தில் காட்டிருக்கும் இடத்தில் எழுதிக் கொள்ளவும்

1. ஊரின் பெயர்
   திசைம்



2. எல்லைகள்
   வடக்கு
   கிழக்கு
   தெற்கு
   மேற்கு
3. மலைகள்
4. ஏரிகள்
5. குளங்கள்
6. ஆறுகள்
7. வயல்கள்
8. விளைபொருள்கள்
9. வர்த்தகம்
10. ஜனங்கள்
11. ஜீவனம்
12. கைத்தொழில்
13. துரைத்தனம்
14. இதரமானவைகள்.

## விலக்கவேண்டிய புத்தகங்கள்.

படிப்புக்கு ராஜபாட்டை ஏற்படுத்தியிருக்கிறதாக பிரசுரமாகும் புத்தகங்களைபடித்தலாகாது. கல்வியை சுலபமாய்க் கற்றுக்கொள்ளச் செய்வதெப்படியோ? சுலபமாக்கவேண்டுமானால் கஷ்டமான சங்கதிகளை விட்டுவிட்டால் தான் முடியும். ஆகையால் அப்படிப்பட்ட புத்தகங்களை படிப்பதினால் எதையும் பூர்ணமாய் அறிவது கூடாது. மேலும் சந்தேகங்கள் அதிகமாக உண்டாகும். சரியான விதமாயும், பிரதிதினம் கொஞ்சமேனும் தவறாமலும் படித்தாலொழிய எவ்விஷயத்தையும் சுலபமாக அறிந்துகொள்ளுவதற்கு

வேறுவழி எனக்கு புலப்படவில்லை. வருத்தமான சங்கதிகளை பூர்ணமாய் அறிந்துகொள்ள முயலாவிட்டால் வித்துவானாவதெவ்விதம்? நம்தேசத்துக்கு வரும் ஆங்கிலேயர்கள் தமிழ்ப்பாஷையை வாரத்தில் இரண்டுநேரம் இரண்டு நாழிகை சாவகாசத்துக்கு மூன்றுமாதம் படித்துவிட்டு பரிட்சைதேறுவதினால் அவர்களுக்கு எவ்வளவு தமிழில் வித்துவத்துவம் உளதோ, சற்றேறக்குறைய அவ்வளவுதான் சகலத்தையும் கூடிய சீக்கிரத்தில் அறிந்துவிடவேண்டுமென்று இரவும் பகலுமாய்ச் சிலகாலம் படிப்பவர்களுக்கு உண்டாகும். குழந்தை நடக்கச் செய்வதற்கு தாயானவள் கற்றுக்கொடுக்கும் விதம்போல் கல்வியை மாணாக்கர் அறியவேண்டியது. குழந்தைக்கு நகரத்தெரியாமலிருக்கும் பொழுது அது எட்டி ஒருதாவலில் தன் விரல்களின் நுனியால் தொடும்படியான தூரத்தில் ஒரு மரப்பாச்சியைவைத்து அதை குழந்தைதொட்டுவிட்டதும், இன்னுங்கொஞ்சந் தூரத்தில் ஒதுக்கி ஒதுக்கிவைத்து நகரக்கற்றுக் கொடுப்பதுபோலவே, மனதாகிய விரல்களின் நுனியால் ஒரு விஷயத்தை மெள்ளத்தொட்டு, விடாமுயற்சியாய் சிறிது சிறிதாய் நன்றாய் நெருங்கி அதை சொந்தமாக்கிக் கொள்ளவேண்டியது. அல்லது, பூர்ணமாய் அறிந்துகொள்ளவேண்டியதாகிய கோபுரம் கட்டுவதற்கு செத்தை குப்பை இல்லாமல், பெரிதாயும், மிகக்கனமுள்ளதாயும், நன்றாய் செதுக்கியதாயுமுள்ள பாராங்கல்களை தூக்கப்படாமல் தூக்கி அதை வைக்கவேண்டிய விடத்தில் வைப்பதற்கு கனம்தாங்கப்படாததாயிருந்தாலும், சலியாமல் தேகபலத்திற்கு மனோபலத்தால் உதவிபுரிந்து, வைக்கவேண்டும்.

## சிறு குழந்தைகளைக் குறித்த சில விஷயங்கள்.

:0:

ஒரு சிறுகுழந்தைக்கு எதைக்கண்டாலும் ஆச்சரியந்தான். அதனால், அ[illegible] வஸ்துக்களை யெடுத்துப் பரிசோதித்து அவற்றைப்பற்றிய விஷயங்கள் யாவற்றையும் அறியவேண்டுமென்கிற ஆவல் அ[illegible] ஆவலானது அக்குழந்தையை ஞானமடையும்படியாயும் அந்த ஞானம் க்ஷணத்துக்கு க்ஷணம் விருத்தியாகும்படியாயுமான நல்ல மார்க்கத்திற் கொண்டுவந்துவிடும். அவ்வாறான ஆவலை நாம் அவர்களுக்கு விருத்திபண்ணவேண்டும். அதை ஒருபொழுதும் தடுக்கலாகாது. எவ்வளவுக் கெவ்வளவு நாம் அந்தக்குழந்தைகளை அவர்கள் மனப்போனபடி விடுகின்றோமோ, அவ்வளவுக் கவ்வளவு அதற்குத் தக்கவிதமாய் அறிவு அதிகமாயுண்டாகும். தண்ணீர் நிறைந்த ஒரு பாத்திரத்தில் அவர்கள் தன் கையையிட்டாலும், அல்லது அந்தப்பாத்திரத்தைக் கவிழ்த்து, அதிலுள்ள நீரையெல்லாம் தரையிலே கொட்டுண்டுபோய் விடும்படிக்குச் செய்தாலும், ஒரு பாத்திரத்தை யெடுத்து வேறொரு பாத்திரத்தின்மேல் அதினின்றுண்டாகும் ஒலியைக்கேட்பதற்காக மோதினாலும்,



அல்லது இவ்விதமாக வேறு இன்னுமெப்படிச் செய்தாலும், அதைத் தடுப்பது கூடாது. ஆனால், பிறருக்காவது தனக்கேயாவது தீங்கிழைக்கும்படியான விஷயத்தில் மட்டும் அவர்களுடைய போக்குப்படி விட்டுவிடக் கூடாது. அவர்கள் தமக்கே சிறுதுன்பத்தை விளைவித்துக்கொள்ளும்படியான காரியங்களைச் செய்துகொண்டாலும், அதை நாம் கவனிக்கவேண்டியதில்லை; ஏனெனில், மறுபடியும் அவ்விதமான செய்கைகளைச்செய்தால் தீங்குண்டாகுமென அவர்களுக்கு நன்றாகத்தெரியவரும். இவ்வாறான நீதிகளை நாம் அறிந்துகொண்டு அவைகளை அனுஷ்டிப்போமாயின், நம்முடைய குழந்தைகளை நல்ல அறிவுடையார்களாகப் பண்ணலாம். ஒரு குழந்தை தனக்காக ஆசைப்பட்டு ஒருவிஷயத்தைக் கற்றுக்கொள்வதானது நாம் அதிகமாகவருத்தப்பட்டு அவர்களுக்கு உணவை ஊட்டுவதைக்காட்டிலும் அதிக மேலாம்.

விஷயங்களை அறியவேண்டுமென்கிற ஆவல் அக்குழந்தைகளிடத்தில் எந்நேரமும் குடிகொண்டிருப்பதால், எல்லாவிஷயங்களைப்பற்றியும் அவைகள் நம்மைக்கேள்விகள் கேட்கும். அப்படிக்கு அவைகள் செய்யின் அதை நாம் தடுக்கலாகாது. அந்தக் கேள்விகட்கெல்லாம், அவைகள் நன்றாய் அறிந்துகொள்ளும்படியாகத் தெளிவான மறுமொழிகளை எடுத்துரைக்கவேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு அவைகள் நம்மைக்கேள்விகள் கேட்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு நாம் இன்புறவேண்டும்; ஏனெனில் அது அவ்வாறுகேள்விகேட்பதானது அறிவடையவேண்டுமென்ற ஆவல் அதனுட்குடிகொண்டிருக்கிற தெனக்காட்டுகிறது.

ஒரு குழந்தை ஒருவருக்கும் தீங்கில்லாத சிலகாரியங்களைச்செய்ய ஆசைகொள்ளுகிறது. அவ்விஷயத்தில் அதின் மனம்போலவே செய்ய விட்டுவிடுவது நன்று. திருஷ்டாந்தம் கற்பலகையிலாவது கடுதாசிலாவது கீறுவதற்கு விரும்பும். ஒரு ஜோடி கத்திரியை எடுத்துக் கடுதாசியைப் பல துண்டாகவெட்டும். கெட்டியானகடிதங்களிலிருந்து துண்டுக்கடிதங்களைவெட்ட ஆசைகொள்ளும். மிருதுவான களிமண்ணிலாவது, மெழுகிலாவது உருவங்களைப் பண்ண விரும்பும். ஒரு பெண்குழந்தை சிறுபாண்டங்களில் சிறிய அளவாகச் சோறு சமைக்கவும், ஊசியெடுத்துத் தைக்கவும், தங்கள் வஸ்திரங்களை அழுக்குப்போகக் கசக்கித்தோய்த்துடுத்தவும், தானியத்தை அளைப்பதற்கும், பிச்சைக்காரர்கட்குத் தானங்கொடுப்பதற்கும், சமையலறையில்தானே தீமூட்டுவதற்கும், விருப்பங்கொள்ளும். இவ்வாறான காரியங்கள் அதற்கு மிகுந்த களிப்பையும், அறிவையும் அளிக்கும். இவ்வாறான காரியங்களை அவைகளுக்குச்செய்ய விருப்பமிருந்தால், நாம் ஒருபொழுதும் தடுக்கக்கூடாது. சுவபாவமாகவே குழந்தைகளுக்கு மதுரமான தின்பண்டங்களிலும் பழங்களிலும் அதிக ஆசை. இந்தப்பண்டங்கள் அதன் சரீரத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்குமேயன்றி, தீங்கொன்றுஞ் செய்யமாட்டாது,

ஆதலினால், அவைகள் மிதத்துக்கு மிஞ்சிப் புசியாமலிருக்கும்படிக்கு மாத்திரம் நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

அது தெரிய விரும்புகிற விஷயங்களை யெல்லாம் அதுதானாகவே அறிந்துகொள்ளும்படி நாம் நம்மால் இயன்றமட்டும் பிரயத்தினப்படவேண்டும். இயற்கையறிவானது செயற்கையறிவிலும் மிகவும் உயர்ந்தது.

உதாரணம்:— இந்தக் கனியின் ருசி எவ்வாறுள்ளது என்று கேட்டால், அந்தப் பழத்தை அதற்கு வாங்கிக்கொடுத்து அதுவாகவே ருசிபார்க்கும்படிசெய்யவேண்டும். பனிக்கட்டி எத்தன்மையானதென்று அது நம்மைக் கேட்குமாயின், ஒரு துண்டு பனிக்கட்டியைக் கொண்டுவந்து அது தானாகவே அறிந்துகொள்ளும்படியாக, அதன்கையிற் கொடுக்கவேண்டும். இந்தப் பொம்மைக்குள் என்ன இருக்கிறதென்று அது கேட்டால், தானே அதை உடைத்துப் பார்க்கும்படி சொல்லிவிடுவது நன்று. இந்தக் கிண்ணத்தை நான் கீழே போட்டாலென்ன என்று அது கேட்டால், அப்படி அதைப்போட்டு விடும்படி சொல்லிவிடலாம்.

---

## புத்தக விஷயம்.

—:o:—

பின்வரும் புத்தகங்களின் விலையை உயர்த்தி விற்கும்படியாக டயிரக்டர் உத்திரவுபண்ணியிருக்கிறார்.

| | பழையவிலை. | புதுவிலை. |
|---|---|---|
| நூலாதாரம் முதல்பிரிவு | 0—1—3 | 0—2—0 |
| ,, 2-ம் ,, | 0—1—9 | 0—2—6 |
| இரண்டாம்பாடம் | 0—2—0 | 0—3—0 |
| மூன்றும் பாடம் | 0—4—0 | 0—5—0 |
| நீதிமஞ்சிரி முதல்பிரிவு | 0—1—0 | 0—1—6 |
| ,, 2-ம் ,, | 0—1—6 | 0—2—0 |
| போபய்யர் இலக்கணம் | 0—1—0 | 0—1—6 |
| சரீரசுகபோதினி | 0—1—0 | 0—2—0 |
| அங்க கணிதம் | 0—0—6 | 0—1—0 |
| கிருஷி சாஸ்திரம் | 0—2—0 | 0—2—6 |



THE

VILLAGE SCHOOLMASTER.

# உபாத்தியாயர்.

Vol. I.] NOVEMBER, 1887. [No. 6.

## ரயில் ஸ்டேஷன்.

(தொடர்ச்சி)

உ. நாம் ஸ்டேஷன் மேடையிலிருந்து ரயிலுக்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது ரயில் வந்து போகிற மார்க்கத்தைநாம் பார்க்கிறோம். இந்த ரஸ்தாவுக்கு (வழி) என்ன பெயர்சொல்லுகிறோம்.

மா. இருப்புப்பாதை.

உ. இருப்புப்பாதை எதால் போடப்பட்டிருக்கிறது?

மா. இரும்புத் தண்டவாளங்களால்

உ. இந்த தண்டவாளங்களை எவ்விதமாய் அசையாமல் போட்டிருக்கின்றன?

மா. பெரிய மரக்கட்டைகளை கீழேபோட்டு, அக்கட்டைகளுடன் இதைச் சேர்த்திருக்கிறது.

உ. எத்தனை தண்டவாளங்கள் போட்டிருக்கிறது?

மா. இரண்டு.

உ. இரண்டுதண்டவாளத்துக்கு ஒரு வரிசையென்று சொல்லுகிறது. ஸ்டேஷனருகில் எத்தனை வரிசை போட்டிருக்கிறது?

மா. நாலு, ஐந்து.

உ. ஒரோ வரிசை மட்டுமேனிருக்கக்கூடாது?

மா. போகிற வருகிற ரயில்கள் இரண்டும் மோதிக்கொள்ளாமலிருக்க.

உ. ஒரே வரிசையிருப்பதால் என்னகெடுதி?

மா. இரண்டு வண்டிகளும் மோதிக்கொள்ளும்.

உ. சில சமயங்களில் அகஸ்மாதாய் இரண்டுவண்டிகள் மோதிக்கொள்வதினால் புகைவண்டிகள் பொடியாகி மற்றையவண்டிகளும் சின்னபின்னமாகின்றன. வண்டியிலிருக்கும் ஜனங்கள் என்னவாகிறார்கள்?

மா. அனேகருக்கு கால் கை ஒடியும்படியான காயம்படுகிறது, மற்று சிலர் இறக்கிறார்கள்.

உ. நாம் ஸ்டேஷன் மேடையில் நிற்கும்பொழுது மிக்கவேகமாய் அனேக ஜனங்கள் வருகிறார்கள். சிலர் பெரிய மூட்டைகள் கொண்டுவருகிறார்கள். சிலர் பெட்டிகள்கொண்டுவருகிறார்கள். ஒருவருடன் ஒருவர் சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மூட்டைகளை சிறிய இரும்புவண்டிகளில் வைத்து தள்ளிக்கொண்டுபோகும் கூலிகாரர்களிடம் சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இக்கூலிகாரர்களை என்ன பெயர்சொல்லி அழைக்கிறோம் ?

மா. போர்டர்கள்.

உ. இவர்கள் மற்றென்னவேலைகள் செய்கிறார்கள் ?

மா. வண்டிகளில் ஜனங்கள் ஏறி இறங்குவதற்கு வண்டிகளின் கதவைத் திறந்து மூடுகிறார்கள்.

உ. இன்னுமென்ன செய்கிறார்கள் ?

மா. விளக்குகளைத் துடைத்து, ஏற்றி, வண்டியில் போடுகிறார்கள்.

உ. ஆம், இன்னும் மணி அடிக்கிறது, ஸ்டேஷன் மேடையை பெருக்குவது இது முதலான வேலைகள் செய்கிறார்கள். ரயில்வண்டி வந்தவிட்டதும் ஜனங்கள் ஏறி இறங்குகிறார்கள். போர்டர்கள் மூட்டைகளை சரியான வண்டியில் ஏற்றுகிறார்கள். இந்த வண்டிக்கு என்ன பெயர் ?

மா. பிரயாணிகளின் மூட்டைகள்வைக்கும் வண்டி.

உ. முதல்வண்டியின் பெயரென்ன ?

மா. புகை வண்டி.

உ. இதன் பிரயோஜனமென்ன ?

மா. வண்டிகளை இழுக்கிறது.

உ. இவ்வண்டியின் முக்கியபாகங்கள் சிலவற்றைசொல்லு ?

மா. புகைபோக்கி, தண்ணீர்கொதிக்கும் பாயிலர், கரி அடுக்கியிருக்குமிடம், அடுப்பு.

உ. புகைபோக்கியின் பிரயோசனமென்ன ?

மா. புகைஉள்ளேயே அடைத்துக்கொண்டிராமல் அப்போதைக்கப்போது வெளியேபோகும்படி செய்தல்.

உ. தண்ணீர் கொதிக்கும் பாயிலரின் பிரயோசனமென்ன?

மா. ஆவி உண்டாக்குதல்.

உ. ஆவியின் பிரயோசனம்?

மா. இந்த ஆவியினால்தான் மற்றவண்டிகளை புகைவண்டி இழுக்கச் செய்கிறது.

உ. இவ்வளவு கரிகுமித்துவைத்திருப்பதின் பிரயோசனமென்ன?

மா. இக்கரியினால் பெருங் நெருப்புண்டாக்கி தண்ணீரைக் கொதிக்கச் செய்வதனால்தான் ஆவிஉண்டாகிறது.

உ. இந்த வண்டியில் எத்தனைபெயர் இருக்கிறார்கள் ?

மா. இரண்டு அல்லது மூன்று.

உ. அவர்கள் தேககிர மென்னமாயிருக்கிறது ?

மா. மிகக்கருப்பாயும், அழுக்கடைந்ததாயும்.



உ. ஆமாம், அவர்கள்வேலை மட்டிவேலை யாகையால் சுத்தமாய் தேக
த்தை வைத்துக்கொள்ள சாத்தியப்படுகிறதில்லை. ஒருவன் வண்டிஓட்டுகி
றது, ஒருவன் அடுப்பை எறியவிடுகிறது, இருவரும் அல்லது எல்லாரும் வண்டி
க்கு எண்ணெய் தடவி வண்டியை சுத்தமாய் வைத்துக்கொண்டிருப்பார்
கள். இப்படிச்செய்யாவிட்டால் வண்டி அவ்வளவு வேகமாய் போகாது.

உ. புகைவண்டிக்கு பின்னால் என்னவருகிறது?

மா. ஜனங்கள் ஏறுகிறவண்டிகள்.

உ. வண்டிகள் என்னமாய் ஒன்றுக்கொன்று பிணைத்திருக்கிறது ?

மா. கனமுள்ள பெரிய இரும்பு ஊக்குகளாலும் இரும்புச் சங்கிலிக
ளாலும்.

உ. எல்லாவண்டிகளும் ஒரேமாதிரியாயிருக்கிறதா?

மா. சிலவன மிக அழகுள்ளதாயும் பெரியதாயுமிருக்கின்றன.

உ. சற்றுஉள்ளே நுழைந்துபாப்போம். சில வண்டிகள் மிருதுவான
மெத்தையும் தலைகாணிகளுள்ளதாயும், வேறுசில நார்மெத்தையுடையதாயும்,
மற்றவைகள் மரப்பலைகள் மட்டுமுள்ளதாயும் இருக்கின்றன. ஏனிந்தவித்
தியாசம்?

மா. மனுஷர்களின் அந்தஸ்துக்கு தகுந்தாப்போல்.

உ. ஆமாம், மிக்கபணமுள்ளவர்களுக்கு நல்லவண்டியில் ஏற இஷ்ட
மிருக்கும். இல்லாதவர்கள் சாதாரணவண்டியில் போவார்கள். மிகவும் சேர்த்
தியாயிருக்கிற இந்தவண்டிக்கு என்ன பெயர் ?

மா. முதல் வகுப்பு வண்டி.

ஆமாம், அது இரண்டாவது வகுப்புவண்டி, மற்றவை மூன்றாவது
உ. ஆமாம், இரண்டாவதற்கும் மூன்றாவதற்கும் நடுத்திரமாய்
வகுப்பு. (இதுவேவிதமாக இரண்டாவதற்கும் தெரியப்படுத்துக.) ஆகையால்
ஒரு வண்டி ஏற்படுத்தியிருப்பதின்காரணம் போகவிருப்பமுள்ளவ
நீ டிகட்வாங்கும் பொழுது இன்னவகுப்பு வண்டியில் தெறியப்படுத்த
னயிருக்கிறாய் என்கிற சங்கதி டிக்ட் உத்தியோகஸ்தனுக்கு
வேண்டும். அதோ அந்தக்கோடியில் இருக்கிறவண்டி எதற்காக?
மா. இவ்வண்டிகளின் காவலாளனாகிய கார்ட் உத்தியோகஸ்தனுக்கு.
உ. ஆமாம், இந்தவண்டி மற்றவைகளைப்போலிராது. சில சமயங்க
ளில் இரண்டு கார்டுகளிருப்பார்கள். ஒருவன் புகைவண்டிக்கு அடுத்தவண்
டியிலும் மற்றொருவன் கடைவண்டியிலும். இந்த வண்டிக்கு இங்கிலீஷில்
ப்ரேக் (Brake) என்று சொல்லுகிறது. இந்த வண்டியில் ஒரு சக்கரம் இருக்
கிறது. ஸ்டேஷனில் வண்டி நிற்பதற்குமுன்பு இந்தச் சக்கரத்தை இவன்
சுழற்றுவான். இந்தச் சக்கரத்துக்கும் சில பெரிய மரக்கட்டைகளுக்கும்
சம்பந்தம். இதைச் சுழற்றும்பொழுது இந்த மரக்கட்டைகள் வண்டியின்
சக்கிரத்தின் முன்னின்று வண்டியைபோகவிட்டாமல் செய்யும். இவ்விதமாக
வே வண்டிபோக ஆரம்பிக்கும்பொழுதும் அந்த சக்கரத்தை திருப்புவதினால்
மரக்கட்டைகள் மேலேவந்துவிடும். இன்னும்மென்ன அதிசயம் அந்த வண்
டியிலிருக்கிறது ?

மா. இருபக்கத்திலும் பெரிய கண்ணாடி ஜன்னல்களிருக்கின்றன.

உ. அதோ மணிஅடிக்கிறது, எல்லா ஜனங்களும் வேகமாய் ஓடுகிறார்கள், போய்வருகிறேன் என்று அனேகர் செலவுபெற்றுக்கொள்ளுகிறார்கள்,

யாரோ ஈசலடிக்கிறான், கார்ட்வண்டியிலேதாவுகிறான், ரயில் மெள்ளப்போகுறது, கொஞ்சம் கொஞ்சமாய் வேகம் அதிகரித்து கண்ணுக்கு மறைந்துவிடுகிறது.

## சிறுவர் கல்விப்பயிற்சி.

### No. I.

பாலர்களின் வித்தியாபிவிர்த்தியின் பொருட்டு திரவியசகாயம் செய்வதற்காக 1885௵-த்தில் பிரசுரம் செய்திருக்கிற நூதன திரவிய சகாயச் சட்டத்தில் அபிநயபதங்கள் என்னும் பொருள்பாடம் சிறுவர்க்கேற்ற தொழில் என்றபாடங்களுக்கும் திரவியசகாயம் செய்யப்படும் என்பதாகக் கண்டிருக்கிறது. இந்தப்பாடங்களைப் புதிதாகச்சேர்த்துக் கொண்டிருப்பதினாலே அவைகளைச் சிறுவர்களுக்குப் போதிப்பதினால் உண்டாகக்கூடிய நன்மைகளை ஒருவாறு விளக்கிக்காட்டுவது அவசியமாகத்தோற்றுகிறது. ஐரோப்பாவில் பாலசிட்சை செய்வதில் பிரடரிக்ப்ரோபெல் என்னும் ஜர்மானியர் எழுதிவைத்திருக்கிற விஷயங்களையும் அவர் கைக்கொண்டபடிப்பின் முறைகளே உத்தமமானதென்று நினைத்து அனேகமாக அநுசரித்து வருகிறார்கள். அந்த ஏற்பாட்டுப்படி நமது பாடசாலைகளிலும் கல்விகற்பிக்கப்பட வேண்டுமெனக்கருதி அவரதுகோட்பாட்டின் சாராம்சமாகிய மேற்கூறிய மூன்றுபாடங்களையும் நமது சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டிய பாடங்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பாலசிட்சை செய்விக்கும் விஷயத்தில் ப்ரோபெல்கொண்ட கொள்கைகளைப்பற்றி இனிக்கொஞ்சம் தெரிந்துகொள்ள முயல்வோம். அவர் சிறுபிள்ளைகளுக்குச் சிட்சைசெய்விக்கதாம் ஏற்படுத்திய பள்ளிக்கூடத்தை, சிறுவர் சிங்காரத்தோட்டமெனக்கூறுகின்றார். சிறுவர் சிங்காரத்தோட்டமென்பது சிறுவராகிய செடிகள் செழித்து விர்த்தியடையுந் தோட்டமெனப்பொருள் படுகின்றது. அவர் சிறுபிள்ளைகளைச் செடிகளோடு ஒப்பிட்டுக்காட்டியிருக்கிறார். எப்படி இலை, புஷ்பம், பழம், விதை, முதலியவை யெல்லாம் ஒருசிறு வித்துக்குள் அடங்கியிருக்கின்றனவோ அதுபோலவே பிள்ளைகளினுடைய அறிவுகளும் சக்திகளும் இளங்குழந்தைகளினிடத்திலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது ஒரு மாமரத்தின் வளர்ச்சியை யோசித்துப் பார்ப்போம். ஒரு சிறிய கெட்டியான மாங்கொட்டையை எடுத்து நல்ல சாரமானபூமியில் நட்டுச்செம்மையாகத் தண்ணீர்வார்த்துவந்தால் அந்தக் கொட்டை முன்போலக் கெட்டியாயிராமல் மெதுவாகிப் பருத்துத்தோல் உடைந்துமுளை கிளம்புகின்றது. ஒருமுளைகீழ்முகமாகச்சென்று வேர் ஓடுகின்றது. மற்றொருமுளைமேல் முகமாகப்புறப்பட்டுச் சூரியனுடைய உஷ்ணமும் மழையினுடைய குளிர்ச்சியும்பட்டு பூமிக்குமேல் கிளம்பிதன் அல்லது தண்டாக நின்று இலைவிடுகின்றது. அடிவேரில் தண்ணீர் ஊறிமேலே சூரியகிரணம் படப்பட இலைகள் அதிகமாக விடத்தலைப்பட்டு செடிவளருகின்றது. அப்புறம், முகிழ்விட்டு புஷ்பங்களாக மலர்ந்து, அவை வாடி, வதங்கி, உதிர்ந்த பிறகுபச்சென்று சிறியகாய்கள் தோன்றிப்பருத்துப் பழங்க



ளாகின்றன. ஒவ்வொருபழத்திலும் முதலில் நாம் நட்டகொட்டையைப் போன்றகொட்டை உண்டாகின்றது. இவ்வண்ணம் ஒரு அற்பவிதையினின்று வேர், தண்டு, இலைகளை, புஷ்பங்கள், பழங்கள், எண்ணிறந்தவிதைகள் இவ்வளவெல்லாம் உண்டாகின்றன வல்லவா? ஒரு அற்பவிதையாயிருந்து பெரியமரம் ஆகிறவரையில் அதனுடைய நிலைமைகள் இப்படிப்பட்டவை யென்பதை எடுத்துக்காட்டினோமே, அத்தன்மையான அபிவிர்த்தி குழந்தைகளிடத்திலுமிருக்கிறதா வென்பதை யோசித்துப்பார்ப்போம். முதலில் குழந்தைபிறந்து இரண்டாவதுமாதத்தில் மனிதர்களையும் பொருள்களையும் குறிப்பாகப் பார்த்துக்கொள்ளுகிற சக்தியுண்டாகிறது. பிறகுதான் உணருகிற சந்தோஷத்தை வெளிப்படுத்தும் சிரிப்பும், விசனத்துக்கு அடையாளமாயிருக்கிற அழுகையும் உண்டாகின்றது. மூன்றாவதுமாதத்தில் ஞாபகசக்தியுண்டாகி தாயை நன்றாகத்தெரிந்து கொள்ளுகிறது. ஐந்தாறுமாதம் ஆனபிறகு பல்முளைத்துக்கடிக்கக் கற்றுக்கொள்ளுகிறது. ஒன்பதாவதுமாதத்தில் பேசும் சக்தியுண்டாகிறது. பேச்சுவரத்தொடங்கினபின் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அசையும் சக்தியுண்டாகி முதல் தவழ்ந்து, பிறகு நின்று, கடைசியாக ஒருவயதானபிறகு நடக்கிறது. முதலில் குழந்தைகள் பிறந்தபோதுள்ள ஸ்திதிக்கும் ஒருவயது ஆனபிறகு சிரிப்பும் மழலைப்பேச்சுமாயி நடந்து விளையாடிக் கொண்டிருக்கும்போதுள்ள ஸ்திதிக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது! அந்தக்குழந்தையே நாளாவட்டத்தில் பெரியவனாகிச் சகலகலைகளையும் கற்றுத்தேர்ந்து தக்கமனையாட்டியை மணஞ்செய்து இல்லறவின்பங்களை யநுபவித்துந் தம்போன்ற அனேக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளுகின்றது.

இவ்விதமான அபிவிர்த்தி செடி, குழந்தைகளிடத்தில் மாத்திரமல்ல.
உலகமுழுவதிலும் எப்போதும் ஓய்வும் ஒழிவுமில்லாமல் நடந்துகொண்டே
யிருக்கிறது. குழந்தை பெரியவனாவதும், ஒருவிதை மரமாவதும், ஒருமுட்
டை பட்சியாவதும், மற்றொருமுட்டை கம்பளிப்பூச்சியாவதும், மாறுவதும்,
நமக்கு நிதர்சனமாகத் தெரிந்திருக்கிற விஷயங்களாயிருக்கின்றன. இந்த
உதாரணங்கள் ஒவ்வொன்றிலும் சிறியவஸ்து பெரியவஸ்துவாக மாறுகிறதா
யிருந்தும் அம்மாறுதல் எப்படி உண்டாகிறதென்பது நமக்குத்தெரிகிறதில்லை.
நாளுக்குநாள் வேற்றுமை எவர்க்கும் தெரியாமல் அதிகமெதுவாக மாறுதல
டைந்துவருகின்றது. இதுகடவுளுடைய செய்கையே யொழிய வேறில்லை.
நாளாவட்டத்தில் அபிவிர்த்தியாகும் தன்மையைமேற்கூறிய ஒவ்வொருபொ
ருளினிடத்திலும் கடவுள் அமைத்து வைத்திருந்தும் அப்படி அவைகள்விர்
த்தியாவதற்குக் கைய்யாடி வரவேண்டிய சாதகங்களும் சிலவுள. அற்பமான
மாங்கொட்டை யொன்றினின்று வேர், தண்டு, இலை, புஷ்பம், பழம் முத
லிய எண்ணிறந்த விதைகள் உண்டாகக்கூடிய இயற்கையை அதனிடத்தில்
கடவுள் அமைத்து, வைத்திருந்தபோதிலும், அக்கோட்டையின் சுபாவத்தை
நாம் அநுபவ பூர்வமாக அறிந்து, அதுவிர்த்தியாவதற்கேற்ற பரிகாரங்களை
அப்போதைக்கப்போது செய்துவந்தாலொழிய அப்படிப்பட்ட விர்த்தியம்
சங்கள் உண்டாக மாட்டா. மாங்கொட்டையை சாரமானபூமியில்நடாமல்
முதலிலேயே உடைத்துப்பார்த்தால் என்ன உண்டாகும்? ஒருசிறுமாங்கொ
ட்டையினிடத்தில் பெரியமரமாகிச் செழிக்கும் சுபாவமானது இயற்கையாக
யிருந்தும், சாரமானபூமியில் நடுவது, நல்லதண்ணீர்வார்ப்பது, சூரியகிர
ணம் படும்படிசெய்வது முதலிய உபகரணங்களைச் செய்தால் மாத்திரமே
அப்படிப்பட்ட விர்த்தியம்சங்கள் உண்டாகின்றன வென்பது அநுபவசித்

தம். சிறுவர்கள் சங்கதியும் இப்படியே; தகுந்தகாலத்தில் தகுந்தவழியில் பாலகர்களுடைய அறிவுகளையும் சக்திகளையும் செல்லவிட்டு அபிவிர்த்திபண்ணினால், பெரியவராகுங்காலத்தில் தேகசௌக்கியமும், விவேகமும், பூததயை பச்சாத்தாபமுதலிய நற்குணங்களுமுள்ள பெரிய மனிதராவார்.

ஆதலினால் குழந்தைகளுடைய இயற்கையான சுபாவங்கள் இன்னதென்பதையும், அவைகளைச் நன்றாய் விர்த்தியாக்கவேண்டிய மார்க்கங்கள் இப்படிப்பட்டனவென்பதையும் ஒருவாறு விசாரிக்கப்புகுவோம். எல்லாச்செடிகளும் ஒரே தன்மையான வல்லவே; அதுபோல எல்லாக்குழந்தைகளும் ஒரே மாதிரியானவர்களல்லர். நல்லதோட்டக்காரன் வெவ்வேறு செடிகளினுடைய குணத்தையும் தனித்தனியே அறிந்து அதற்குத்தக்கப்படி எருப்போட்டுத்தண்ணீர்வார்த்து வளர்க்கிறதுபோல உபாத்தியாயரும் ஒவ்வொரு பிள்ளையினுடைய இயல்பையும் அறிந்து அதற்கு வேண்டியபடி ஒத்தாசைசெய்யவேண்டும்.

குழந்தைகளினுடைய சுபாவத்தை எப்படித்தெரிந்துகொள்ளுகிறதென்றாலோ நன்றாய்க் கவனித்தாலோ வெகுசுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். சுபாவம் இன்னமாதிரியிருக்கும் என்பதைக்காட்டத் தக்ககுறிப்புகளைக் குழந்தைகளிடத்தில் மிகச்சிறு பருவத்திலும் காணக்கூடும். இப்படிக்குழந்தைகளிடத்தில் காணப்படுகிற அடையாளங்களை அறிந்து அததற்கு தக்கபடி நடத்தவேண்டும். இதுதான் ப்ரோபெல் என்னும் பாலபோதகர் கையாடிவந்த படிப்பிக்கும் முறை.

# சிறுவர் கல்விப்பயிற்சி.

## II.

ஒவ்வொரு குழந்தையினுடைய இயற்கையான குணங்களையும் தெரிந்துகொண்டு அவைகளை நல்லவழியில் செல்லவிட்டு விர்த்திசெய்யவேண்டுமென்றும் சிறுவர்களின் இயற்கையான குணங்கள், கவனம்வைத்துப் பார்த்தால் வெகு சுலபமாயத் தெரிந்துகொள்ளலாமென்றும் மேலே எழுதியிருக்கிறோம். இப்பொழுது குழந்தைகளிடத்தில் பொதுவாயுள்ள சில குணங்களைக் கவனித்து, அவைகள் நன்மையானது அல்லது தீமையுள்ளது என்பதையும் அப்படிப்பட்ட குணங்களை, நல்ல வழியில் விர்த்தி செய்யவேண்டிய மார்க்கங்கள் இன்னதென்பதையும் விசாரிக்கப் புகுவோம். எல்லாக் குழந்தைகளிடத்திலும் காணக்கூடிய பொதுப்படையான குணங்கள் சில வுண்டு. அவைகளுள் முதலாவது சுறுசுறுப்பு. குழந்தைகள் ஒரே இடத்தில் இருக்காமல், ஓடவும், குதிக்கவும், ஏறவும், விழவும் ஆசைப்படுவதை தினந்தோறும் நாம் கண்ணெதிரே, காண்கிறோமல்லவா? இப்படி யெல்லாம் செய்வது நன்மையோ தீமையோ வென்றாலோ மிகவும் நன்மையே. சரீர உருப்புகளின் ஒவ்வொரு அசைவினாலும் நரம்புக்குப் பலமுண்டாகி, கைகால் முதலிய அவயவங்களின் உபயோகங்களும் குழந்தைகளுக்கு தெரிகின்றது. குழந்தைகளை அங்குமிங்கும் நகரவொட்டாமல் சும்மாவிருக்கும்ப



டி செய்வோமானால் அவர்கள் பலமுள்ளவர்களாகவும் அரோகிகளாவும் வளரக்கூடாது. அவர்களுடைய கை கால்கள் பரபரப்புள்ளவையாயும் சுவாதீனமாயுமிருக்கக்கூடாது, அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் பலவீனப்பட்டு மெலிந்துபோயிருக்கவேண்டுமென்று சொல்வதுபோலாகும். ஆகையால் குழந்தைகளை சும்மாவிருக்கும்படி விட்டிருப்பது கூடாது. ஆனால் அவர்களை எதேச்சையாக இஷ்டப்படி செய்யும்படி விட்டிருந்தாலும பிசகுதான். அப்படி விட்டுவைப்பதினாலும் குழந்தைகள் தானாக விளையாடிக்கொண்டிருந்து திண்ணை முதலிய உயர்ந்த விடங்களிலிருந்து கீழேதாவுதற்கு எத்தனப்பட்டு கீழேவிழுந்து கைகால்கள் ஒடிந்து நொண்டியாய்விடுவார்கள். சரீரத்திலும் காயப்பட்டு இரத்தம்வந்து புண்ணாகிவிடும். அப்படிக்கின்றி, சிறுவர்களை அவர்களுடைய சக்திக்குத் தக்கபடி இலேசான சில தேகாப்பியாசங்களை பழக்கிவரும்படி தூண்டிவிடுவோமாகில் இப்படிப்பட்ட தீங்குகள் உண்டாகமாட்டா. குழந்தைகள் முதலில் சரீரத்தின் அவயவங்கள் அசைவுகொடுக்கும்படியான பயிர்ச்சிகளை மட்டும் கையாடிவரவேணும். ப்ரோபெல் இதற்கு என்னசெய்தாரென்றால் நாடகமாடுவதுபோல அநேகங் குற்ற மற்ற விளையாட்டுகளைக் கற்பித்து அவைகளில் அப்படியும் இப்படியும் சரீரத்தின் உருப்புகள் அசைவுபெறும்படியான சந்தர்ப்பங்களையும் நுழைத்து இனிப்பான பாட்டுகளையும் துணையாகக் கற்பித்தார். இப்படிப்பட்ட பாட்டுகளுக்கு 'அபினயப்பதங்கள்' என்று பெயர். இந்தப்பாடல்களுடன் சிறுவர்கள் சரீரப்பயிற்சி செய்வதினால் மூன்று விதமான நன்மைகள் உண்டு. முதலாவது, அவையவங்களின் அசைவினால் நரம்புகள் பலப்பட்டு இரத்தவிர்த்தியுண்டாகி வியாதி வைக்கைக்கு இடமின்றி தேகம் கெட்டிப்படுகின்றது. இரண்டாவது, காதுக்கு இனிப்பான சங்கீதத்தின் இலட்சணங்கள் தெரிவதுடன் அதில் சிறிது கியானம் உண்டாக்கி அதை விர்த்திசெய்து கொள்ளவேண்டுமென்ற ஆசையையும் உண்டாக்குகின்றது. இனி மூன்றாவது நன்மையைத் தெரிந்துகொள்ள முயல்வோம். இது மற்ற இரண்டையும்விட அதிக உபயோகமுள்ளது. இதில் பலவிதமான ஜந்துக்களினுடையவும் தொழிலாளிகளினுடையவும் செய்கைகள் முதலியவைகளின் மாதிரிகளைத் தெரிவிக்கின்றது. இதனால் சிறுவர்களுடைய மனோதத்துவம் விசாலப்படும். இவ்விதமாகப் பலவிதத்திலும் சிறுவர்களுக்கு பிரயோசனமுள்ளதாயிருக்கிற அபினயப் பதங்களில் சிலதை இதனடியில் எழுதுகிறோம்.

## I.

ஸஹானா இராகம், ஆதிதாளம்.

நாம்எல்லோரும் எழுந்திருப்போம்,
எழுந்திருப்போம், நாம் எழுந்திருப்போம்,
நாம்எல்லோரும் எழுந்திருப்போம்
நேர்த்தியாய் ஒருவரிசையிலே.

நாம்எல்லோரும் கைகொடுப்போம்,
கைகொடுப்போம், நாம் கைகொடுப்போம்,
நாம்எல்லோரும் கைகொடுப்போம்
நேர்த்தியாய் ஒரு வரிசையிலே.

நாம் எல்லோரும் அடிபெயர்வோம்,
அடிபெயர்வோம், நாம் அடிபெயர்வோம்,
நாம்எல்லோரும் அடிபெயர்வோம்
நேர்த்தியாய் ஒருவரிசையிலே.

நாம் எல்லோரும் சுழல்வருவோம்,
சுழல்வருவோம், நாம் சுழல்வருவோம்,
நாமெல்லோரும் சுழல்வருவோம்
நேர்த்தியாய் ஒரு வரிசையிலே.

நாம்எல்லோரும் உட்கார்வோம்,
உட்கார்வோம், நாம் உட்கார்வோம்,
நாம் எல்லோரும் உட்கார்வோம்
நேர்த்தியாய் ஒரு வரிசையிலே.

நாமெல்லோரும் அன்புருவோம்,
அன்புருவோம், நாம் அன்புருவோம்,
நாமெல்லோரும் அன்புருவோம்
இருக்கவேண்டிய வழியதுபோல்.

## II.

இங்கிலீஷ் மெட்டு, ஏகதாளம்.

போவோம்போவோம் தோழமாரே,
புகழ்ந்துபாடி விளையாட
பாடமெல்லாம் படித்துவிட்டோம்.
இடதுகால் முந்தி மெதுவாக,
வசந்தகாலத்தில் மிக அழகாய்
நாமெல்லோரும் விளையாட
கொடியமுகத்தைக் காட்டாமல்
கொண்டாட்டமுடன் போவோம் நாம்.

போய்விடுவோம் போய்விடுவோம்,
புன்சிருப்புள்ள முகமுடனே
ஆடிவரும் கழல்சுற்றி
அழகாய்வளைந்த மோதிரம்போல்.

பிரிந்துபிறகு நேர்நின்று
பிரியமுடனே நேராக
இப்படியாக விளையாடி
இருப்போம் நாமும் இன்புடனே.



## III.

இந்துஸ்தான்காபி, ஆதிதாளம்.

### பல்லவி.

செண்பகப்பந்துகளாடுவோமே இன்று
சேர்ந்து ஒய்யாரமாகப்பாடுவோமே—நாமும். செண்பக

### அனுபல்லவி.

மல்லிகைமுல்லையுடன் இருவாக்ஷியும்சேர்ந்த
மெல்லியபூப்பந்தை மேன்மையாய்வீசி
உன்னிதமாகவே உயரவெறிந்து அதை
அற்புதப்பாட்டுடன் ஆடுகிறோம் இப்போ. செண்பக

தேவர்கிருபையாலே நாம் இங்கேகூடி
நாளாகப்படித்ததை நன்றாகப்பாடி
நற்குணமானதொரு நகையதைத்தேடி
நன்மையாய்ப்பூட்டிய நன்றியைநாடி. செண்பக

## IV.

ஏகடா.

1. பிரியமுள்ளநேசரே நம்பெருமைவிளங்கவே
நல்லவர்ணப்பந்தெடுத்து நகரச்செய்திடுவோம்.

2. நகரும்பந்துவிலகிடாமல் ஒழுங்குடன்போகவே
நயத்துடனேபந்தைக் கையால்மெதுவாய் உருட்டுவோம்.

3. உருட்டியபந்தோடிப்போகாமல் உள்ளங்கையிலேந்தி
புரட்டித்திருப்பிநகர்த்திடுவோம் பெருமையாகவே.

4. கிருபைபொருந்திய கடவுளினது கருணைவிளங்கவே
சிறுவரெல்லோருமாகக் கூடிப்பாடி உருட்டவே.

## V.

கல்லியாணி, அடதாளம்.

### பல்லவி.

பந்தெடுத்துவிளையாடுவோம் வாரீர்சகிமார்களே நாம்
பந்தெடுத்து விளையாடுவோம் வாரீர்.

## அனுபல்லவி.

பந்தெடுத்துவிளையாடுவோம் நல்ல சிந்துக்கவிகள்
பாடுவோம், கந்தமாமலர் சூடுவோம், சந்ததமும்
முத்திதேடுவோம். பந்தெடுத்து

கைதனிற்பந்தையெடுத்து மற்றோர்
கன்னியிடம் அதைக் கொடுத்து
மெய்யக்குனிந்து நடித்து
பறவைபோல் சுற்றி வளைத்து பந்தெடுத்து

கங்கலீரென்னமிக கனத்தபணிகள் மின்ன
திங்கள்முகத்தில் வேர்வை துன்ன
திரண்டொருமொருமித்துச் சின்ன பந்தெடுத்து

## VI.

புன்னாகவராளி, ஆதிதாளம்.

### பல்லவி.

1. நாமெல்லோருமாகக்கூடிப் பாடுவோம்வாடி
சந்தோஷமாகச் சந்தோஷமாக
கோதையேவாடி-கோதையேவாடி
நீதோழிமாருடன்
நாமெல்லோ

2. கிருபைபொருந்திய சக்ரவர்த்தியின் கருணைவிளங்கவே
பெண்கள்தோறும்வரிசையாகப் பந்தடிப்போமே. ௧

3. எடுத்துப்பந்தைசுழற்றியொருபெண் போட்டுப்பிடிக்கவே
செங்கனிவாய்
செங்கனிவாய் பாடவே
அவள்ஜடை பாடவே
ஜடை குலுங்கவே
அவள்முடி துலங்கவே குலுங்கவே
நாம் எல்லோ

4. சுந்தரக்கரங்கள்தன்னில் இரண்டுவர்ணப்பந்தெடுத்து
ஒருபெண்வளைந்து
வளைந்து ஆடவே
அவளவளைகுலுங்கவே ஆடவே
அவளவிழி சுழலவே வளைகுலுங்கவே
நாம் எல்லோ



5. வேறுமிரண்டு பெண்கள் கூடி
கோரில் நின்று கொண்டு
பந்தைப்போட்டுப் பிடிக்க
போட்டுப்பிடி க்க
அவர்கள்மனம் களிக்க
மனம்களிக்க அவர்கள் உடல் பூரிக்க நாம் எல்லோ

6. வேறுநான்குபெண்கள் நின்றெதிர் மூலையாகவே
பந்தையெறிந்து ஆடவே
எறிந்து ஆடவே
அவர்கள் உறத்துப் பாடவே
உறத்துப்பாடவே அவர்கள்
தொனி விளங்கவே நாம் எல்லோ.

மேலேகண்ட பாட்டல்களை செய்கைகள் சகிதமாகப் பயிற்சிசெய்து வருவதினால் தேகவலிமையையும் சங்கீதக் கியானத்தையும் விர்த்தியாக்குவதல்லாமல், எழுந்திருந்து நிற்றல், ஒருவருக் கொருவர் சந்தோஷமாக கைகுலுக்கிக்கொள்ளுதல், போர்த்தடிவைக்கல், மோதிர வளையம்போல் சுற்றிவருதல், உட்காருதல், பந்தை உருட்டுதல், பந்தை உள்ளங்கையில் ஏந்துதல், அம்மானை விளையாடுவதுபோலப் பந்தை உயர எறிந்து அது திரும்பிக் கீழேவரும்போது தரையில் விழாமல் பிடித்துக்கொள்ளுதல், பந்தை கையில் எடுத்து பக்கத்தில் நிற்கும் சிறுவரிடத்தில் கொடுதல், குனிந்து நிமிர்தல், எதிரிலிருக்கும் சிறுவர் வீசி எறியும் பந்தைக் கீழேதவற விடாமல் பிடித்துக்கொள்ளுதல் முதலிய அநேக உபயோகமுள்ள செய்கைகளையும் தெரிந்துகொள்ள ஏதுவாகின்றது. இதுபோலவே கடியாரத்தின் பெண்டுலம் ஆடுகிறவிதம், அப்போது உண்டாகும் சத்தம், காலம் செல்லும்மாதிரி, கத்தியால்வெட்டுதல், கத்தியைக் கூராக்குதல், மரத்தை ரம்பத்தால் துண்டிடுதல், முதலிய தொழில்களை அமைந்து ஒரு பாடலாகவும்; பயிர் செய்பவன் நிலத்தை உழுது பக்குவப்படுத்தி விதை விதைத்து, நாற்றைப் பிடுங்கி, நட்டு, கதிர்களானபின்பு அவைகளை அறுத்து, அடித்து, தானியத்தை வேறுபடுத்தி, அதை யந்திரத்தில்போட்டு அரைத்து, மாவாக்கி, அதைக்கரைத்து, உணவுக்குரிய பதார்த்தங்களாகச் செய்து கொள்ளுகிற தொழில்களை அமைத்து மற்றொரு பாடலாகவும்; சிறுவர் இரண்டு கால்களாலும் நடக்கிறார்களென்பதையும், மீன்கள் ஜலத்தில் நீந்து மென்பதையும், பட்சிகள் ஆகாயத்தில் பறக்கு மென்பதையும், அமைத்து வேறொரு பாடலாகவும்; சிறுவர்களுக்கு தொழிலாளிகள் வேலைசெய்யும் விதம், குடித்தனக்காரன் நிலத்தைச் சாகுபடிசெய்யும் மாதிரி, பிராணிகளின் தொழில்கள் முதலியவைகள் தெரியும்படி செய்யலாம்.

இவ்விதமான பாடல்களினால் சிறுவர்கள் களைப்படையாமல் தேகபயிற்சி யடைவதுடன் அவர்களுக்கு உற்சாகம் கொடுக்கும்படியான சங்கீதத்தில் ஞானமுண்டாகி, தெரிந்துகொள்ள அருமையாயுள்ள அநேக விஷயங்களையும் விளையாட்டாகவே தெரிந்து கொள்ளுகிறார்கள்.

அபிநய பதங்களினால் உண்டாகும் நன்மைகள், இவ்வளவாக விருப்பதினாலேதான் அப்படிப்பட்ட பாடல்களுக்கும் திரவிய சகாயம் செய்யப்படுமென்பதாக நூதன திரவிய சகாயச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த உத்தமமான உபாயத்தை நமது சகோதிர உபாத்தியாயர்களும் உபாத்தியாயினிமார்களுங் கையாடி வருவது உசிதமென்று நினைத்து தங்களிடத்தில் ஒப்புவிக்கப் பட்டிருக்கிற சிறுவர் சிறுமிகளை அபிநய பதங்களைக்கொண்டு தேகாப்பியாசம் செய்துவரும்படி செய்து வருவார்களென்று நம்புகிறோம். பாடசாலை கூடும்பொழுதும், கலையும்பொழுதும், பாடங்களை ஆரம்பிப்பதற்கு முன்னும், அதை முடித்தான பின்னும், இப்படிப்பட்ட பாடல்களைப் பாடும்படிசெய்வது உத்தமம். இப்படிப் பழக்குவதற்குத் தேவையான பாடல் சுதேச பாஷையில் குழந்தைகள் சாதாரணமாகப் பாடும் படியானதும், காதுக்கு இனிப்பைக் கொடுக்கத்தக்கதுமாக நாமே எழுதி அச்சிட உத்தேசித் திருக்கிறது மன்றி, இப்பொழுது பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற மிஸ் ராஜகோபாலம்மாள் புத்தகத்திலும், திண்டுகல் எம் ஆசிர்வாதம்பிள்ளை புத்தகத்திலும் உபயோகமுள்ள அனேக பாடல்களை பொருக்கிக்கொள்ளலாம். அடுத்த சஞ்சிகையில் குழந்தைகளிடத்தில் இயற்கையாயுள்ள மற்றொரு குணத்தைப்பற்றி விவகரிப்போம்.

## தகப்பன்மார் தங்கள் மக்களைப் பயிற்று முறை.

1. உமது மக்களை மாற்றறியாப் பாலராயிருப்பது முதற்கொண்டே, பெரியோர்சொல்லை ஒருபொழுதும் தட்டலாகாதென்பதை நன்றாக உணரச்செய்க.

2. உறுதியோடுகூட் பக்ஷத்தையையும் கலந்துகொள்க. நீர் சொல்லுவதெல்லாம் நீர் உறுதியாகக்கொண்ட எண்ணமென்று உமது குழந்தைகள் எப்பொழுதும் உணரட்டும்.

3. எந்த வஸ்துவையாயினும், அவர்களுக்கு நீர் கொடுக்கக்கூடும் என்பது உமக்கு நிச்சயமாயிருந்தாலொழிய, கொடுக்கிறேன் என்று ஒருபொழுதும் வாக்குத்தத்தஞ்செய்யவேண்டாம்.

4. ஒரு சிறு குழந்தையை நீர் எதையாயினும் செய்யச்சொல்வீராயின், அக்காரியத்தைச்செய்யும் விதத்தை அதற்குக் கற்பித்து, அது தானே அதைச் செய்துமுடிக்கும்படியாகச் செய்க.

5. எப்பொழுதாவது உமது மக்கள் முரட்டுக்குணமாக உமது கட்டளையை மீறினால், அவர்கள் நடத்தையைத் திருத்துக; ஆயின் ஒருபொழுதும் அவர்களைச் சினந்து தண்டிக்கலாகாது.

6. அவர்கள் உம்மை உழற்றலாமென்பதையும், தங்கள்மேலிருக்கும் அதிகாரத்தை உம்மை இழக்கச்செய்யலாமென்பதையும், அவர்கள் கண்டுகொள்ளும்படி ஒருபொழுதும் செய்யவேண்டாம்.



7. அவர்கள் கோபங்கொண்டு வெடுவெடுப்பாயிருந்தால், கொண்ட சீற்றம் மாறுமட்டும் அமைதியாகவிருந்து, பின்னர் அவ்வாறு சினங்கொண்டது பெரும்பிழை என்பதை நன்றாக உணரச்செய்யும்படியாக அவர்களுடன் பதுமையாக வாதஞ்செய்க.

8. தக்க தறுவாயில் சிறு சிக்ஷைசெய்வது, மறுபடியும் அதேகுற்றம் செய்யப்பட்டால் கடும் சிக்ஷை செய்யப்படும் மெனப் பயமுறுத்தலைவிட, மிக்க மேலாகப் பயன்படுமென்று அறிக.

9. உமது குழந்தைகள் எப்படிப்பட்ட பண்டங்களும் தங்களுக்குத் தேவையென அழுதாலும், அவையாவற்றையும் அவர்கட்குக்கொடுக்கலாகாது.

10. ஒரு சமயத்திற் செய்யலாகாதென்று, நீர் சொல்லியிருக்கும் காரியத்தை, அதேமாதிரியான சமயத்தில் அவர்களை அதை மறுபடியும் செய்யவிடவேண்டாம்.

11. தன்னை நல்லவனாக யாவரும் உணரச்செய்வதற்கு, நல்லோனாகவே இருத்தலைத்தவிர, வேறு சுலபமான வழியில்லையென அவர்களுக்கு நன்றாகப் பயிற்றுவிக்க.

12. அவர்கள் சொல்லும் விஷயமெல்லாம் உண்மையாகவே இருக்கும்படி பழக்குக.

13. அவர்களை ஒருபொழுதும் கோட்சொல்லும்படி விடவேண்டாம்.

14. சுகமடைவதற்கு அடக்கமுடைமையே பெரியோரால் உறுதியுள்ளதென ஏற்படுத்தப்பட்ட வழியேயன்றி, அடக்கமின்மை யல்லவென்பதை அவர்களுக்கு நன்றாகப் புலப்படுத்துக.

15. கோபகுணமும், பகை சாதிக்குந் தன்மையும் அவர்கள் மனதை அணுகாதபடி நீர் ஜாக்கிரதையாய்க் காத்தல்வேண்டும்

## கரிப்பலகையின் பிரயோசனம்.

ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் மிகவும் உபயோகமானதாயும் அவசியகரமானதாயுமுள்ளது கரிப்பலகை. அனேககால அனுபோகமுடைய உபாத்தியாயரெவரும் இதன் பிரயோஜனத்தைக்குறித்து சுதிசெய்யாதவரில்லை. ஏனென்றால் இது எந்தவுபாத்தியாயருக்கும் உதவிபுரியத்தக்கது. ஒரு வித்தியாசாலை தலைமைப்புலவர்க்கு உதவி உபாத்திமார் எவ்விதமான உதவி புரிவனரோ அவ்விதமாகவே ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் பேருதவிபுரியுங் கருவி இது. ஆகையால் இதை அசட்டைசெய்யலாகாது. ஆயிரந்தடவை காதால் கேட்பதிலும் கண்ணால் ஒரு தடவை பார்ப்பதினால் மனதில் நன்றாய்ப் பதியும் என்கிற விஷயம் யாவருக்குந் தெரிந்ததே. உபாத்தியாயரின் வேலையை மிகவுஞ் சுலுவாக்கும் இக்கருவியை உபயோகப்படுத்தாமலிருத்தல் குருடனுக்கு கண்தெரியும்படி செய்துகொள்ளு மருந்து கைவசமிருந்தும் அதைப் பிரயோகிக்காததை ஒக்கும். யானையைக்குறித்து பாடம் நடத்துங்காலையில்

அதின் உருவத்தைக்குறித்து இரண்டுநாள் பாடஞ் சொல்வதைவிட, அதின் படத்தைப் பிள்ளைகளுக்கு காண்பித்து அதின் உருவத்தைக்குறித்த சகலமும் பிள்ளைகளின் வாயிலிருந்தே இரண்டுமணி நேரத்தில் வரச்செய்யலாம். காலத்தை சுலபமாக்கிக்கொள்வதோடுங்கூட மாணாக்கர்களின் மனதில் அழுந்த பதியவைக்கும் சாதகத்தைச்செய்யும். இக்கருவியினால் எவ்வளவு அனுகூலம் உண்டாகமாட்டாது. இச்சஞ்சிகையில் இன்ன இன்ன பாடத்தில் இன்ன இன்ன விதமாய் இதை உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்பதைக்குறித்துச் சுருக்கமாய்ச் சொல்ல முயல்வோம்.

சொல்வதெழுதல் பாடத்தில் எந்த வார்த்தைகளில் பிள்ளைகள் பிழை செய்வரோ அந்த வார்த்தைகளை கரிப்பலகையில் எழுதவேண்டும். அப்படிச் செய்வதினால் சரியானபதமிதுவென்று கண்ணுக்கு அப்பியாசமுண்டாகும். இப்படி எழுதுவது பிசகென்று பிழையை பலகையில் எழுதுவதுகூடாது; தப்பென்று மனதில் தோன்றினாலும் கண் பார்த்ததை கை செய்யுமென்கிற பழமொழிக் கிசைந்தாப்போல் எழுதும்பொழுது பிழைதான்வரும்.

சரித்திர பாடம் நடத்துங்காலையில் முக்கியமாய் பிள்ளைகள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டிய விஷயங்களை எழுதவேண்டும். அதாவது ஒரு சண்டையைக்குறித்துப் பேசுங்காலையில் இன்னாருக்குச்சண்டை, இன்ன இடத்தில் இன்ன வருஷத்தில் நடந்தது, அதில் இன்னார் வெற்றியடைந்தனர், அதனால் உண்டான சுகதுக்கங்கள் இவைகளெல்லாம் நன்றாய் ஞாபகம் வைத்துக்கொள்ளும்பொருட்டு எழுதவேண்டும்; ஒரு அரசன் ஆளுகையை குறித்துப் பேசுங்காலத்தில் இன்னவருஷத்தில் சிங்காதனமேறினான், அப்பொழுது தேசமிருந்த ஸ்திதி, இத்தனை வருஷம் அரசாண்டான் (சிங்காதனமேறின வருஷம், அரசாளுகை முடிந்த வருஷம் இரண்டையும் பலகையிலெழுதி இத்தனைவருஷ காலம் அரசாண்டான் என்பதை பிள்ளைகள் வாயிலிருந்து வரவழைக்கவேண்டும்) அவன் செய்த நன்மை, தீமை என்னும் விஷயங்கள் பலகையில் எழுதவேண்டும். இது போலவே மற்ற முக்கிய சங்கதிகளையும் கற்பிக்கவேண்டும். (இன்னும்வரும்.)

## ஸ்விட்ஜர்லாண்டில் பரீக்ஷைநடத்தும் விதம்.

ஸ்விட்ஜர் லாண்ட் தேசத்தில் பரீட்சைகள் நடத்தினவிதத்தைப்பற்றி அங்கிலேயபத்திரிகை ஒன்று பின்வருமாறு கூறுகின்றன:—"பரீட்சை கர்த்தர்களில் மூன்றுபேர் பரீட்சை செய்யும்போது கூடவேயிருப்பார்கள். அவர்கள் முன்னிலையில் உபாத்தியாயரே பிள்ளைகளை கேள்விகேட்டு பரீட்சிப்பார்? கூடவிருக்கும் முற்கூறிய பரீட்சைகர்த்தர்களும் மாணாக்கர்களை தாங்களே அடிக்கடி கேள்விகேட்பது வழக்கம். அந்த பாத்தியத்தை யவர்களுக் கெப்போதுமுண்டு. உபாத்தியாயர்களாய் வெகுநாளிருந்து அநுபவப்பட்டவர்களைத்தான் பரீட்சைகர்த்தர்களாக நியமிக்கப்படும்; ஆகையால் அவர்கள் உபாத்தியாயருடைய சிரமமும், பிள்ளைகளின் கஷ்டமும் நன்றாயறிந்தவர்களாயிருப்பார்கள். அவர்களுக்கு பிள்ளைகளையும் உபாத்தியாயரையும் உற்சாகப்படுத்தி அடுத்தவருஷம் இன்னம் நன்றாய்ப் பாடுபடும்படியாக ஊக்கமூட்டுவதே முதற்கடமை. வருஷத்திற்குரிய பாடங்களை பிள்ளைகள் ஐயந்திரிபறக்



கற்றார்களா என்றறிவதற்கும், எந்தப் பிள்ளைகளை மேல்வகுப்புக்கு மாற்றலாமென்று நிர்ணயிப்பதற்குமே அவர்கள் (பரீட்சை கர்த்தர்கள்) பரீட்சிப்பது, அப்படி காரணமிக்கிற விஷயத்தில் சில சமயங்களில் அந்த வகுப்பு உபாத்தியார்களுடனேயும் கலந்துகொண்டு அவர்கள் யோசனையும் கேட்பார்கள். பரீட்சையில் தேறாமல்போகிறபிள்ளைகளை அவர்கள் தக்கமுயற்சியோடு மறுபடி செம்மையாக படிக்கச்செய்வார்களேயன்றி தூஷித்து அதைரியப்படுத்துகிறதேயில்லை, அப்படிக்கு தேறினபிள்ளைகளைக்கூட அதேவகுப்பில் இன்னம் ஒரு வருஷமிருந்து, அங்குப் படிக்கவேண்டியவைகளை இன்னம் நன்றாய்ப் படித்து மேல்வகுப்புக்கு வேண்டிய யோக்கியதையைப் பூராயடைந்து கொள்ளும்படி பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் செய்வது சகஜம்.

## சரீராரோக்கியமே முக்கியதனமாகும்.

இவ்வுலகத்திலுள்ள பொருள்கள் யாவற்றையும் ஒருமிக்கச் சேர்த்தாலும் அவைகள் மனோபலத்தையும் தேகசௌக்கியத்தையும் போல ஆசைகொள்ளத் தகுந்தவையல்ல. கலப்பில்லாத பசும்பொன்னுக்கு இழிவான களிம்பானது எவ்வாறு நிகராகாதோ, அவ்வாறே இவ்விரண்டையும் அவை ஒருபொழுதும் ஒப்பமாட்டா. ஆகையால், நாம், தேசத்துக்கு ஆரோக்கியத்தை உண்டாக்கிக் கொள்ளும்படியாக, மிக்க புத்தியுடையவர்களும், முன்னறிவுள்ளோருமான பெரியோர் சொல்லியிருக்கும் விதிகளை அநுஷ்டிக்கவேண்டியது.

இமர்ஸன் (Emerson) என்னும் பேர்பெற்ற அமேரிக்கா தேசத்துத் தத்துவ சாஸ்திரியானவர் சொல்லியிருக்கும் "சரீராரோக்கியமே முதற்பொருள்" என்னும் வசனம் முற்றும் உண்மையே.

## பிள்ளைகளின் வாசகசத்தி அறியும்விதம்.

எந்நாளளவும் ஒரு உபாத்தியாயர் பதங்களையே முக்கியமாக எண்ணுவாரோ, அந்நாளளவும் அவருக்குக் கற்பிக்கும் வகையைப்பற்றி அனுவளவேனும் தெரியவராது. குழந்தைகளுக்கு ஆலோசனை உண்டு; அவைகள் எவ்விதமாக ஆலோசனை செய்கின்றன வென்பதையும், எதைப்பற்றி யோசிக்கின்றனவென்பதையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதே பரீக்ஷகளின் முக்கிய நோக்கம். வாசகம் வாசித்தலானது அச்சிற் பதிப்பிக்கப்பட்ட விஷயங்களைப்பற்றி ஆலோசனை பண்ணுவதேயாம். ஒருவனுடைய வாசகப் போக்கைப் பரீக்ஷைசெய்வது அவனுடைய புத்திநுட்பத்தைப் பரீக்ஷிப்பதேயொழியவேறல்ல. ஒரு உபாத்தியாயர் தம்முடைய மாணாக்கர்களுக்கு அவர்கள் கடைசியாகப்படித்த புத்தகங்களினும் சற்று சுலபமான புஸ்தகங்களைக்கொடுத்து, அவைகளிலிருந்து நல்ல கதைகளைப்பொறுக்கி, ஒவ்வொருகுழந்தையையும் (அவரவர்களுடைய வாசிக்குந்திறனை அறிவதற்காக) உரத்து நாலு

ஐந்து பக்கங்களை வாசிக்கச்சொல்லுக. அவர்கள் வாசிப்பதை நீர் சுலபமாக அறிந்துகொள்ள முடியுமா முடியாதா என்பதிலின்று அவர்கள் திறனை நீர் தீர்மானிக்கவேண்டுமே யல்லாது, சிறுபிழைகளினாலும் பிழையான உச்சரிப்புகளாலும் ஒருபொழுதும் தீர்மானமாக்கலாகாது.

## பூகோளபாடம் நடத்து முறை.

இரண்டாவது ஸ்டாண்டர்டில் கற்பிக்கவேண்டிய பூகோளமாகிய குழந்தையிருக்கும் பட்டணத்தைப்பற்றி தெருவித்தபிறகும் அப்பட்டண மிருக்கும்படியான தாலூக்கா ஜில்லாவைப்பற்றி மூன்றாவது ஸ்டாண்டர்டில் கற்பிக்கவேண்டும். நான்காவது ஸ்டாண்டர்டில், சென்னை இராஜதானியும், இந்தியாவையும் கற்பிக்கவேண்டும். பிறகு மற்றக் கண்டங்களையும் இதர ஸ்டாண்டர்டுகளில் கற்பிக்கவேண்டும்.

இப்படி உலகத்தைப்பற்றிப் படிக்கவேண்டுமென்பதும் அதிலுள்ள சகலத்தையும் தெரிந்துகொண்டு ஞானத்தை அதிகப்படுத்த வேண்டுமென்பதும், எவ்வித போதனையிலும் மனோக்கருட்களி லொன்றையாவது பழக்கவேண்டுமாகையால், கவிகட்டுதல், கதை புத்தகங்கள் எழுதல் முதலாகிய காரியங்களுக்கு காரணமான மனோக் கருவிகளிலொன்றாகிய கவனசக்தியை விர்த்தி பண்ணவேண்டு மென்பதும் அது எப்படியெனில்:—பிள்ளைகள் பார்க்காத அனேகதேசங்கள் முதலானவைகளை மனதில் பாவித்துகொள்ளுவதால், இந்தச் சக்தி குழந்தைகளிடத்தில் வெகு பலஹீனமாயிருப்பதால் பூகோளத்தைக் கற்பிக்கும்போதெல்லாம் கண்ணுக்குகோசரமாகிய படத்தை வைத்துக் கொண்டு கற்பிக்கவேண்டும். அப்படமானது (1) வகுப்புக்கெல்லாம் தெரியும்படியான போதுமான பெரிதாயும், (2) கலவரப் படுத்தும்படியாய் அவசியமில்லாத பேர்களில்லாமலும்' (3) மலைகள், ஆறுகள் முதலானவைகள் நன்றாய்த்தோன்றும்படியான தாயும், (4) புதிய தற்கால ஏற்பாடுடையதாயு மிருக்கவேண்டும்.

வெறும் ஊர்களையும், பட்டணங்களையும் பிள்ளைகளை வரப்படுத்திக்கொண்டு வரச்சொல்லி ஒப்பிக்கச்சொல்லுவதில் என்னபிரயோஜனம்? அப்படிச்செய்வதைவிட பூகோள கற்பிக்காமலேயிருக்கலாம். முதல் நாள்பாடத்தைக்கற்பித்து அதை மறு நாள் கேட்கவேண்டும்.

புஸ்தகங்களி கலப்படாத அனேக சமாசாரங்களை அங்கங்கே சேர்த்துக்கொண்டே வரவேண்டும்: அவையாவது'—

எல்லை, இயற்கை அமைப்பு, சீதோஷ்ணஸ்திதி, ஆகிய இவைகளின் அர்த்தத்தையெல்லாம் நன்றாய்த் தெரிவிக்கவேண்டும்.

பூகோளத்தில் வரும் விஷயங்களுக்கெல்லாம் கூடுமானபடங்கள், பிரதிமைகள், வஸ்துக்கள் முதலானவைகளைக்கொண்டு கற்பிக்கலாம்.

மலைகள், ஏரிகள், நதிகள், முதலானவைகளின் பேர்களுக்கு சிலவேளை அர்த்தமிருக்கும். அவைகளைப் பிள்ளைகளுக்குத் தெரிவிக்கவேண்டியது. ஹிமாலயம் பனிமலை, அதின் உயரத்தைத் தெரிவிக்கின்றது. லீனு மெது, டைக்ரிஸ் வில், முதலியன.



பூகோளத்தில் தேசங்களினுடைய உருவமும், எல்லைகளும், மலைகளும், நதிகளும், முதலானவைகளை அறிவதுந்தவிர சாஸ்திரமென்னும் பெயருக்கு உரித்தாய் கீழ்வருவனபோல்வன அனேக சங்கதிகள் அறியலாம்.

(1.) அனேகபட்டணங்கள் ஒன்றாய்க் கூடியிருந்தால் அவ்விடத்தில் ஜனங்கள் ஏதாவதொரு விசேஷத்தொழில் செய்கிறார்களென்றும், நடத்துவது ஒரே வியாபாரமென்றும் தெரிந்துகொள்ளலாம்.

(2.) பட்டணங்களில்லாமற்போனால் கிலம் செழுமையற்றதென்றும், ஜனங்களில்லாத இடமென்றும், ஜனங்களுக்கு செ[illegible]னதல்லவென்றும் [illegible]யில்லாததென்றுமறியலாம்.

(3.) ஊர்கள் சுமாராயிருந்து தூரதூரத்திலிருந்[illegible]ால், அவ்விடத்தின் ஜனங்களின் ஜீவனம் பயிர்த்தொழிலென்று அறியலா[illegible]ம்.

(4.) சமுத்திர நதியோரங்களில் அனேக பட்டணங்களிருக்குமாயின் அவைகள் வர்த்தக இடங்களென்று அறியலாம்.

(5.) மலை தேசத்தில் சரக்குகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரிடத்திற்குக் கொண்டுபோவது கஷ்டமாகையால் அதி[illegible] வர்த்தகம் நடப்பது கூடாமை. அவ்விடத்து நதிகள் மிக ஓட்டமுடை[illegible]பதாயும் கப்பல் படவுகள் போக முடியாததாயுமிருக்கும். மற்ற இடங்களை விட ஜனசங்கை குறைந்திருக்கும். பிரதிதேசத்திற்குத்தக்கபடி ஆசாரமு[illegible]மைந்திருக்கும். ஒரு தேசத்தின் கரையோரத்தைப்பார்த்து அது வர்த்தகத்திற்கு ஏற்றதுமில்லாதும் சொல்லலாம். இதைக்கொண்டே அப்பூமியின் சுவரூபத்தையும் யூகிக்கலாம். கரையானது நேராயிருந்தால் அத்தேசம் மணல் பூமியென்றும், கரடுமுரடாயிருந்தால் கல்பூமி யென்றும் ஒருவாறு தீர்மானிக்கலாம்.

பூமியைப்பற்றிய கணித பூகோளமும் (அதாவது விஸ்தீரணம், இரேகை முதலானவை) பௌதிக பூகோளமும், (அதாவது பூமியின் உருவம், கால நிர்ணயம் முதலானவை) கூட கொஞ்சங் கொஞ்சமாய் பாடங்களில் கலந்துகொண்டேவரவேண்டும்.

ஊர்களை மனதில் பதியும்படிசெய்ய அவ்விடமிருக்கும் விசேஷங்களையும் சரித்திர சம்பந்தமான வேறு சங்கதிகளையும் தெரிவிக்கவேண்டும்.

பிறகு பாடத்தை ஆரம்பித்து நடந்தும் கிரமத்தையும் வழியையும் தெரிவிப்போம்.

(1.) [illegible] ஞானபாடத்திலிருந்து புதுப்பாடமாகிய தேசத்தின் இருப்பிடம்.

(2.) எல்லைகள்.
(3.) இயற்கை அமைப்புகள் (மலை, ஆறு, ஏரி.)
(4.) சீதோஷ்ண ஸ்திதி

(5.) விளைபொருள்கள் (தாது ஜீவம்)

(6.) வர்த்தகம் (ஏற்றுமதி இறக்குமதி)

சேர்ய (7.) துறைமுகப்பட்டணங்கள் அல்லது வேறு வர்த்தக சாலைகள்.

புக . பிரிவுகள், முக்கிய பட்டணங்கள்.

(8.) ஜனங்கள், பாஷை, சமயம் முதலியன.

(9.) ீவனம் அல்லது தொழில்.

(10.) ஜ சாட்சியும் அதற்குட்பட்ட அன்னிய தேசங்களும் கற்பிக்க

(11.) ரவ ட்ட

வேள்

ஏதாவது ஒருகா ஜில்லா அல்லது ஒருதேசத்தின் பூகோளங் கற்பிக்கத் தெரிந்துகொண்டோர்களானால், ஏறக்குறைய அதேமாதிரியாய் மற்றவைகளையும் கற்பிக்கலாம். ஆகையால் ஒருதேசத்திற்கு விஷய சூசிகையையும் அதைக் கற்பிக்கவேண்டிய விரிக்கத்தையும், பரீட்சிக்கவேண்டிய விதத்தையும் வகுப்பில் நடத்துவதுபோல் அடுத்த சஞ்சிகையில் காட்ட முயல்வோம்.

## கணக்கு.

(5.) என்னிடத்தில் 48 ரூபா யிருந்தால் அதை 79 ரூபாயாக்க எத்தனை ரூபாய் சேர்க்கவேண்டும்?

(6.) நான் உனக்கு 28 ரூபாய் 2 தடவையில் கொடுக்கவேண்டும், ஒரு தடவை 15 ரூபாய் கொடுத்தால், கடன் தீர மறுதடவை என்ன கொடுக்க வேண்டும்?

(7.) நான் இராமனுக்கு 25 ரூபாய் பாக்கி. 17 ரூபாய் கொடுத்துவிட்டேன். மீதி எவ்வளவு பாக்கி?

(8.) என்னிடத்தில் 76 ரூபாயும் உன்னிடத்தில் 67 மிருந்தால், நீ என்னவ்வளவு உடைத்தாயிருக்க எவ்வளவு கூடவேண்டும்?

```
7 2 3
4 5 6
-----
```

இதில் ஒன்று ஸ்தானத்தில் 3-ல் 6 கழிப்பது கூடாமை. ஆகையால் பத்து ஸ்தானத்திலிருக்கும் 20-ல் 10 ஒன்று ஸ்தானத்தி லெடுத்துக்கொண்டால் 13 ஒன்றுகள் ஆகும். 13-ல் 6 போனால் 7 மீதி. பத்துஸ்தானத்தில் 10 இருக்கிறது ஃ 50 இருக்கிறது ஆகையால் நூறுஸ்தானத்தில் 7-ல் ஒரு நூறு எடுத்துக்கொள்ள அது (பத்து) 10 ஆகிறது. பத்து பத்தோடு ஒருபத்து சேர்க்க பதினொரு பத்தாகிறது. பதினொருபத்தில் 5 பத்து போனால் 6 பத்து மீதி. ஆக பத ... ஆறு எழுதவேண்டும். நூறு ஸ்தானத்தில் 6 இருக்கிறது. 6-இல் 4 போனால் இரண்டு என எழுதவேண்டும்.

ஒன்று ஸ்தானம் கழிக்கும்போது

```
7 1 (13)
4 5  6
--------
```



பத்துஸ்தானம் கழிக்கும்போது இப்படி செய்வது ஏனென்றால், காலணு கையிலிருந்து அதை மூன்றுபேருக்குக் கொடுக்கவேண்டுமானால் அப்படியே கொடுக்க முடியாமல் எப்படி மாற்றவேண்டுமோ அதைப்போல் என்று தெரிவிக்கவேண்டும்.

```
6 (11) (13)
4   5    6
-----------
```

## அப்பியாசம்.

| | | | |
|---|---|---|---|
| (1.) | 946<br>706 | 786<br>435 | 155<br>96 |
| (2.) | 784<br>195 | 345<br>103 | 978<br>945 |
| (3.) | 959<br>768 | 564<br>312 | 769<br>498 |
| (4.) | 345<br>321 | 453<br>385 | 464<br>378 |
| (5.) | 778<br>169 | 236<br>159 | 666<br>657 |

தகப்பனுடைய வயது 49, அவன் பிள்ளையினுடைய வயது 30; பிள்ளை பிறக்கும்போது தகப்பனுக்கு என்ன வயது?

| | |
|---|---|
| தகப்பன் வயது ... ... ... ... | 59 |
| பிள்ளையின் வயது ... ... ... ... | 30 |
| பிள்ளை பிறக்கும்போது தகப்பனுடைய வயது ... | 29 |

(1.) பிள்ளையின் வயதைக் காட்டிலும் தகப்பன் வயது 30 அதிகம். தகப்பன் வயது 60. பிள்ளையின் வயது என்ன?

(2.) ஒருவன் 754-வது வருஷத்தில் பிறந்து 773 வருஷத்தில் இறந்தான்; சாகும்போது அவனுடைய வயது என்ன?

(3.) ஒருவன் 988 வருஷத்தில் பிறந்தான், அவன் சாகும்போது வயது 69, எந்த வருஷத்தில் பிறந்தான்?

```
600
285
---
```

இப்போது ஒன்று ஸ்தானத்திலும் பத்து ஸ்தானத்திலும் ஒன்றுமில்லை யாகையால் நூறில் ஒரு நூறு வாங்கிக்கொண்டு அதை 9 பத்தாகவும் பத்து ஒன்றுகளாகவும் வைத்துக்கொண்டு கழிக்கவும்.

```
5 9 (10)
2 8   5
--------
3 1   5
```

## அப்பியாசம்.

| | | | |
|---|---|---|---|
| (1.) | 700<br>456 | 400<br>389 | 100<br>79 |
| (2.) | 906<br>789 | 200<br>185 | 300<br>259 |
| (3.) | 500<br>189 | 600<br>565 | 406<br>327 |
| (4.) | 507<br>125 | 710<br>354 | 460<br>124 |
| (5.) | 405<br>146 | 795<br>400 | 305<br>200 |

இரண்டு எண்ணைக் கூட்டின் மொத்தம் 15, ஒரு எண் 8; மற்றொரு என் என்ன ?

| | |
|---|---|
| இரண்டு எண்ணின் மொத்தம் ... ... | 15 |
| ஒரு எண் ... ... ... ... ... | 8 |
| மற்றொரு என் ... ... ... ... | 7 |

(1.) இரண்டு எண்ணைக்கூட்டின மொத்தம் 10, ஒரு எண் 6; மற்றொரு எண் என்ன ?

(2.) இரண்டு எண்ணைக் கூட்டின மொத்தம் 215, ஒரு எண் 96; மற்றொரு எண் என்ன ?

(3.) இரண்டு எண்ணைக்கூட்டின மொத்தம் 595, ஒரு எண் 415; மற்றொரு எண் என்ன ?

(4.) இரண்டு எண்ணைக்கூட்டின மொத்தம் 675, ஒரு எண் 468; மற்றொரு எண் என்ன ?

(5.) இரண்டு எண்ணைக்கூட்டின மொத்தம் 465, ஒரு என் 399; மற்றொரு எண் என்ன ?

சிறியகணக்குகள் வாய்பாடத்தினுல் கேட்டு வழியை வரவழைக்கவும். இரண்டு எண்ணைக்கழித்த ஈவு 3, பெரிய எண் 7, சிறிய என் என்ன ?

இப்போது பனிரண்டிலிருந்து 7-க்கழித்தால் 5 ஈவு ஆகின்றது. இதில் பெரிய என் 12-ஈவு 5 இவ்விரண்டிலிருந்து சிறிய எண்ணுகிய 7 எப்படிவரும் என்றுகேட்டு அதேமாதிரியாய் மேல் கணக்கில்

| | |
|---|---|
| | 12 |
| | 7 |
| | 5 |

| | |
|---|---|
| பெரிய என் ... ... ... ... | 10 |
| ஈவு ... ... ... ... ... | 3 |
| சிறிய எண் ... ... ... ... | 7 |



105

(6.) இரண்டு எண்ணைக்கழித்தலில் பெரிய எண் 25. ஈவு 14. சிறிய எண் என்ன ?

(7.) இரண்டு எண்ணைக்கழித்தலில் ஈவு 456. பெரிய எண் 958. சிறிய எண் என்ன ?

(8.) இரண்டு எண்ணைக்கழித்தலில் பெரிய எண் 100. ஈவு 38. சிறிய எண் என்ன ?

(9.) பெரிய எண் 601. ஈவு 48. சிறிய எண் என்ன ?

(10.) பெரிய எண் 800. ஈவு 409 சிறிய எண் என்ன ?

இப்பொழுது இக்கழித்தலில் பெரிய எண் 15 சிறிய எண் 6. ஈவு 9; சிறிய எண் 6, ஈவு 9, இலிருந்து பெரிய எண் எப்படி கிடைக்கும். 9-ம் 6-ம் கூட்டுவதால்.

| | |
|---|---|
| | 15 |
| | 6 |
| | 9 |

(1.) சிறிய எண் 15, ஈவு 9, பெரிய எண் என்ன ?

(2.) ஈவு 25, சிறிய எண் 39, பெரிய எண் என்ன ?

(3.) சிறிய எண் 64, ஈவு 15, பெரிய எண் என்ன ?

(4.) சிறிய எண் 368, ஈவு 318, பெரிய என் என்ன ?

(5.) ஈவு 139, சிறிய எண் 123, பெரிய எண் என்ன ?

4+3=7. என்பது 4-ம் 3-ம் 7. என்பதற்குச் சமானம்.

8—4+3—2+9. வரும்படியெல்லாம் ஒன்றுய்ச்சேர்த்து அதிலிருந்து செலவைக்கழிப்போமோ.

அதுபோல கூட்டலை யெல்லாம் ஒன்றுகவுங் கழித்தலையெல்லாம் ஒன்றுகவும் கூட்டி ஒன்றிலிருந்து மற்றொன்றைக் கழிக்கவும்.

இக்கணக்கில், 8, 3, 9 ங்கூட்ட 20 ஆகும் 7, 2-க்கூட்ட 9 ஆகும் 22-ல் 9 போனல் 11.

(1.) 12—9+6—5—3

(2.) 6—4+13+7—5

(3.) 9—9—1+7—5

(4.) 11+9—10+5—6

(5.) 14—6—3+6—11

(6.) 19+11—17+3—5

(7.) 13+9—5—9+6—6

(8.) 2+19—7—6+12—10

(9.) 18—11+3—9+7—5

(10.) 8+9—11+4—10—2

162063

TM211, M27UP
M17.1

215-ம் 476-ம் கூட்டின மொத்தத்திலிருந்து 986-ம் 467-ம் கழித்த ஈவைக்கழிக்கவும்.

| | | |
|---|---|---|
| 215 | 986 | 691 |
| 476 | 467 | 519 |
| 691 | 519 | 172 |

நூறு

(1.) 417-ம் 215 கழித்த ஈவை 315-ம் 18-ம் கழித்த ஈவோடுகூட்டுக.

(2.) 43-ம் 26 கழித்த ஈவை 36-ம் 48-ம் கூட்டின மொத்தத்திலிருந்து கழிக்குக.

(3.) (300-126) (415—26) க்காட்டிலும் எவவளவு குறைச்சல்?

(4.) 421 ஆனது 325-ம் 126-ம் கூட்டின மொத்தத்திற்கு எவ்வளவு குறைச்சல்.

(5.) 124—7779+15.

ஏதாவது இரண்டு எண் எடுத்துக்கொள்ளலாம் 16-ம் 7-ம், 16-ம் 7 சில கூட்டினுல் 23 மொத்தமாகும், 16 லிருந்து 7-க்கழித்தால் மீதி 9 ஆகும்.

| | |
|---|---|
| 16 | 16 |
| 7 | 7 |
| 23 | 9 |

இதில் பெரிய எண் 16 சிறிய எண் 7, சிறிய எண்ணுகிய 7-க்கு என்னசேர்த்தால் 16 ஆகும்? 16-லிருந்தும் 7 லிருந்து 9 எப்படி கிடைக்கும்? 16 லிருந்து 7-க்கழித்தால் 9 ஆகிறது. ஆகையால் 16-யும் 7-ம் கூட்டின மொத்தத்தோடு அதைக்கழித்த ஈவாகிய 9-ஐ கூட்டினுல் பெரியயெண்ணைக் காட்டிலும் இரட்டித்தான்வரும்.

இரண்டு எண்ணைக்கூட்டின மொத்தம் 14 கழித்த ஈவு 4 அவ்வெண்களென்ன?

கூட்டின மொத்தம் 16-யும் ஈவு 4-யும் கூட்டினுல் 18 ஆகிறது. இது பெரிய எண்ணைக்காட்டிலும் இரண்டத்தனை ஆகையால் பெரிய எண் 9.

| | |
|---|---|
| இரண்டு எண்ணைக் கூட்டினமொத்தம் | 14 |
| பெரிய எண் | 9 |
| மற்றொரு எண் | 5 |

(1.) இரண்டு எண்ணைக் கூட்டினமொத்தம் 13. ஈவு 5 எண்களென்ன?

(2) இரண்டு எண்ணைக் கூட்டினமொத்தம் 8, கழித்தஈவு 2. எண்களென்ன?



(3.) இரண்டு எண்ணைக் கூட்டின மொத்தம் 9 ஈவு 3, எண்களென்ன?

(4.) இரண்டு எண்ணைக் கூட்டின மொத்தம் 5 ஈவு 3 எண்களென்ன?

(5.) இரண்டு எண்ணைக் கூட்டின மொத்தம் 7 ஈவு 3 எண்களென்ன?

(6.) ஒருவன் ஒருபுத்தகம் 15 ரூபாய்க்கு வாங்கி 20 ரூபாய்க்கு விற்ருல் என்னலாபம்?

(7.) ஒருபலகை 3 அணுவுக்கு வாங்கி 4 அணுவுக்கு விற்ருல் எவ்வளவு லாபம்?

(8.) ஒருமேஜை 12 ரூபாய்க்கு வாங்கி 17-ரூபாய்க்கு வித்தால் எவ்வளவுலாபம்?

(9.) ஒருவனுக்கு மாதம் 25-ரூபாய் சம்பளம் 18 ரூபாய் செலவழித்துவிடுகிருன். எவ்வளவு சேர்க்கிருன்?

(10.) ஒருவனுக்கு 85 சம்பளம் 17-ரூபாய்சேர்த்து வைக்கிருன்; எவ்வளவு செலவு?

பின்வரும் சங்கதிகளைக் கற்பிக்கும்போது நாணயங்களைப் பிரத்தியட்சமாய்க் காட்டிக் கற்பிக்கவேண்டும்.

முன்கற்பித்த வாய்பாடுகளை ஞாபகத்திற்காக மறுபடியும் இவ்விடத்தில் சொல்லுவோம்.

| | | |
|---|---|---|
| 1—2—2 | 1—3—3 | 1—4—4 |
| 2—2—4 | 2—3—6 | 2—4—8 |
| 3—2—6 | 3—3—9 | 3—4-12 |
| 4—2—8 | 4—3-12 | 4—4-16 |
| 5—2-10 | 5—3-15 | 5—4-20 |
| 6—2-12 | 6—3-18 | 6—4-24 |
| 7—2-14 | 7—3-21 | 7—4-28 |
| 8—2-16 | 8—3-24 | 8—4-32 |
| 9—2-18 | 9—3-27 | 9—4-36 |
| 10—2-20 | 10—3-30 | 10—4-40 |
| 11—2-22 | 11—3-33 | 11—4-44 |
| 12—2-24 | 12—3-36 | 12—4-48 |
| 13—2-26 | 13—3-39 | 13—4-52 |
| 14—2-28 | 14—3-42 | 14—4-46 |
| 15—2-30 | 15—3-45 | 15—4-90 |
| 16—2-32 | 16—3-48 | 16—4-64 |

ஒரு அணுவுக்கு 2 அரையணு

ஒரு அரை அணுவுக்கு 2 காலணு

ஒரு காலணுவுக்கு 3 பைசா அல்லது தம்பிடி

ஒரு அணுவுக்கு 4 காலணு

(1.) ஒரு காலணுவுக்கு எத்தனை பை?

(2.) ஒரு அணாவுக்கு எத்தனை பை?

(3.) முக்காலணாவுக்கு எத்தனை காலணா?

(4.) அரை அணாவுக்கு எத்தனை பை?

(5.) ஒரு அணாவுக்கு எத்தனை அரை அணா?

இக்கேள்விகளை யெல்லாம் பிள்ளைகள் வாயிலிருந்தே சுலபமாய் வர வழைக்கலாம்.

3 பைசா ஒரு காலணா.
6 பைசா ஒரு அரை அணா.
12 பைசா ஒரு அணா.

## அப்பியாசம்.

ஒரு மாம்பழம் 3 பைசாவானால் 4 மாம்பழம் என்ன விலை?

ஒரு மாம்பழம் 3 பைசா 4 மாம்பழம் 4-3 12 பை அல்லது ஒரு அணா.

(1.) ஒரு பலபம் 2 பை ஆனால் 4 பலபம் என்ன விலை?

(2.) ஒரு காகிதம் 4 பை ஆனால் 3 காகிதம் என்ன விலை?

(இன்னும்வரும்.)

## ப்ரோபெல்.

(முன்தொடர்ச்சி, பக்கம் 72)

அவர் நல்ல புத்திசாலியென்று அவர்கள் அறிந்துகொள்ளாமையால், தாங்கள் ஆதியில் நினைத்திருந்தபடி உயர்ந்தகல்வியைப் பயிலும்படி அவரைச் சர்வகலாசாலைக்கு அனுப்பாமல் 1797-ஆம் வருஷம் துரிஞ்சியன் காட்டிலிருந்தவன பரிபாலன அதிகாரியின் கீழிருந்து இரண்டு வருஷகாலமளவும் காட்டுவேலை யைக் கற்றுக்கொள்ளும்படி ஏவப்பட்டார். அவர் அங்கிருந்தபடியே தமது கு சாக்கிரபுத்தியினால் மூலவர்க்கத்தின் உள்ளுறையான பொருள்களையெல்லாம்

"பூவாதேகாய்க்கு மரமுமுள மக்களுளு
மேவாதேநின்றுணர்வார்தாமுளரே—தூவா
விதைத்தாலுநன்றாகாவித்தெனவே
பேதைக்குரைத்தாலுந் தோன்றாதுணர்வு."

என்றவண்ணமாகக் கற்றுணர்ந்தார்.

அவர் அந்தக் காட்டிலிருக்கையில், அங்குள்ள செடி, கொடி, மரம், புல், பூண்டு முதலானவற்றின் வளர்ச்சிமுதலியவற்றைக் கண்கூடாக் கண்டு ஐயந்திரிபறத்தாமாகவே கற்றுணர்ந்தார். இவ்வாறு அவர் காட்டில்



தனியேயிருந்து மகா ஞானியைப்போலப் படைப்பின் கூறு இன்னவாறென்று
கண்டு மகாமேதாவியானார். அந்த மகானுடைய பெருமையானது அக்காலத்
தில் அவரைச் சூழவிருந்தவர்களுக்குத் தெரியாமையால் அவரைப்பித்தனென்
றெண்ணிப் பழித்தார்கள். அவரோவெனின், புலன்களையெல்லாம் இவ்வுல
கத்தின் கண்ணுள்ளபடைப்புகளிற் செலுத்தி யோகநிலையிலிருந்து மெய்ம்
மறந்திருப்பார். ப்ரோபெல் சிலம்பிக்கூட்டினாலும், மரக்கொம்பினாலும் பல
வற்றைச் செய்துகொண்டிருந்ததை அக்காலத்திலிருந்த ஜான் என்னும் ஜர்
மன்தேசத்துச் சன்னியாசியானவர் கண்டு அவரைச் சித்தப்பிரமையுள்ளவ
ரென்று சொல்லியிருக்கிறார்.

ப்ரோபெல் 1799-ஆம் வருஷத்தில் தமது மூத்த சகோதரர் கல்விபயின்று
கொண்டிருந்த ஜீனாவென்னு ஸர்வகலாசாலையில்சேர்ந்து கற்கத்தலைப்பட்டார்
அவர் அங்கே வாசித்தகாலத்தில் அவிவேகமாய்ப் பதினைந்து ரூபாய் வீணே
கடன்பட்டமையால் அவர் அங்கேபோன ஒன்பது மாதத்திற்குள்ளே அதன்
அதிகாரி அவரை அடித்துத் துரத்திவிட்டார். இதற்குச் சிறிதுகாலஞ்செ
ன்றதன் மேல் அவர் வேளாண்மைத்தொழில் செய்யப்பயின்றார். 1802-ஆம்
அவர் தந்தை இறந்துவிட்டதனால் அவர் அதுமுதல் தாமாகவேதான் கற்கவேண்
டுமென்றுநினைத்துத் தமது வீட்டுக்குச்சென்றார்.

அதன்பின்பு அவர் நான்கு வருஷகாலமளவும் சிலகாலம் கர்ணிகராகவும்,
சிலகாலம் நிலமளப்பவராகவும், வேறு சிலகாலங்களில் சிலரிடம் அந்தரங்க
காரியதரிசியாவுகம் ஜர்மனி நாட்டில் பிரயாணஞ்செய்துகொண்டிருந்தார். மெ
யின் ஆற்றங்கரையிலுள்ள பிரான்குபோர்ட்நகரத்தில் சிற்பவேலை பயின்று
கொண்டிருக்கையில், பெஸ்டலோஸி என்னும் பாலபோதகாசிரியரின் கொள்
கையைச் சிறப்புடைய தெனக்கொண்டவரும், பெயர்பெற்ற ஓர் பாடசாலை
யின் தலைமை உபாத்தியாயருமான ஒருவருடன் அவர் பழகினார். பெஸ்ட
லோஸி என்பவர் தாமுள்ளநாளுள்ளவும் என்னபாடுபட்டும், அக்காலத்தில்
அதன் பெருமையையறியாமல் அவரைப் படுத்தாதபாடுகளெல்லாம் படுத்
திவைத்தார்களென்று மதித்து ப்ரோபெல் அவரைத் தமக்கு ஆசாரியனாகக்
கொண்டு அவர் கொண்டகொள்கையை அநுசரித்துவந்தார். பிரான்குபோர்டிலி
ருந்த உபாத்தியாயர் ப்ரோபெலின் பெருமையைக்கண்டு, அவர் செய்துவந்த
சிற்பவேலையை விட்டுவிட்டுத்தம்மோடு தமக்குக் கீழே உபாத்தியாயராயிருக்
கும்படி நிர்ப்பந்தித்தார். அவர் அந்த வேலையில் மூன்று வருஷகாலமளவும்
பெஸ்டலோஸியின் கொள்கைப்படி வெகுநன்றாய் வேலைபார்த்து வந்தபின்பு
ஒரு குடும்பத்தில் மூன்று சிறுவர்க்குப் பாடஞ்சொல்லிக்கொடுத்தற்பொருட்டு
அவர்களை அழைத்துக்கொண்டு நியுசாடிலுள்ள எர்டன் என்னும் ஊருக்குச்
சென்றார். அந்த விடத்தில் அவர் பெஸ்டலோஸி போதித்துவந்த விதிமுறை
களுடன் சிலவற்றை அவர்களுக்கு நன்றாய் உபதேசித்தார். அவர்தாம் ஆசா

ளுக்கொண்டவராகிய பெஸ்டலோஸி அவருக்கு நேர்ந்த சிறுதடைகளிஞ
லும், காலமின்மையாலும் அவரால் செய்துமுடிக்கக்கூடாமல் அரைகுறையாய்
விடப்பட்டிருந்த விஷயங்களையும் வெகுநன்றாய்த்தாமே செய்துமுடித்தார்.
பேர்பெற்ற வித்துவாஞெருவர் "பெஸ்டலோஸியின் மாணுக்கரும், அவரைப்
போலவே மகாபுத்திசாலியுமான ப்ரோபெலன்பவர் அவர் கொண்டிருந்த
வெண்ணப்படி எல்லாவற்றையும் முற்றுபெறச்செய்தார்; அன்றியும் பெஸ்ட
லோஸியின் ஸித்தாந்தங்களில் மறைபொருளாயிருந்தவற்றையெல்லாம் அவர்
எப்படியோ அநுமானித்துத் தமது பேராற்றலால் மனிதனுடைய தன்மை
இன்னதென்றும், இவ்வாருன படிப்புத்தான் மனிதனுக்கு வேண்டுமென்பதை
யும் கண்டறிந்தார்" என்றெழுதியிருக்கிருர். மனிதனையும், மற்றுமுள்ள எல்
லாவற்றையும் படைத்தவர் ஒருவரே யாதலால், மற்றப் பொருள்களுக்குள்ள
விதிகளே மனிதனுக்கு மமைந்திருக்க வேண்டும் மென்பதே அவர் கொண்ட
கொள்கையாம். ஆதலினுல் அவர் இவ்வுலகத்திலுள்ள மற்ற எல்லாப் பொருள்
களுக்கும் பொதுவானவிதிகளே மனிதனுக்கும் அமையவேண்டுமென்று பல
வாருகவராய்ந்தார். இது காரணமாக அவர் சிருஷ்டியின்ரகசியம் இன்ன
தென்று காணும்படி எப்பொழுதும் அதுவேவிசாரமாய் முயன்றுகொண்
டிருந்தார். அவர் என்னதான் பிரயத்தனப்பட்டும் ஒன்றுங் கைகூடிவாராமை
யால், சாஸ்திரப்பயிற்சிசெய்ய நினைத்து, அதற்குப் பதிஞெருவருஷத்துக்கு
முன்னே திடீரென்று விட்டுவிடவேண்டியதாயிருந்த ஸர்வகலாசாலையில் மீண்
டும்போய்ச்சேர்ந்துகொள்ளும்படி நிச்சயித்தார். 1811-ஞு அவர் கோடிஞ்ச
நகரத்து ஸர்வகலாசாலையில் சேர்ந்தாரெனினும், அவ்வாறு சேர்ந்த சிறிது
நாளைக்குள்ளே அவ்விடத்தைவிட்டு பெர்லின் பாடசாலையிற்சேர்ந்துகொண்
டார். இம்முறையும் அவருக்கு அங்கேயும் படிப்புக்கு விக்கினமுண்டாயிற்று;
இம்முறையுண்டான இடையூறு முன்னுண்டானதற்கு முற்றும் வேருனது; பர்
ஷியாவில் சேனைவேண்டும்போதெல்லாம் அத்தேசத்தரசன் அந்நாட்டிலுள்ள
வர்களைத் தனது இராணுவத்தில்வந்து சேர்ந்துகொண்டு தனக்குத்துணைசெய்
யும்படிக்கேட்பது வழக்கமாகையால், அவரையுஞ் சேர்ந்துகொள்ளும்படி உத்
திரவுவந்தது. ப்ரோபெல் பர்ஷிய தேசத்திற்பிறந்தவரல்லவெனினும், தமது
நாட்டாருக்கு வருந்துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல் தேசாபிமானத்திஞல்
1815-ஞு-ல் லட்ஸவான் என்னும் பட்டாளத்திற் சேர்ந்துகொண்டார்.
"ஆரியக்கூத்தாடினுலும் காரியத்தின் மேற்கண்" என்றவண்ணமாய் இரா
ணுவத்திலேயிருக்கையிலும் அவர் கருத்தெல்லாம் தாம் புதிதாக்கண்டுபிடி
த்த வித்தையிலேயே நாட்ட முடையதாயிற்று. அவர் போர்த்தொழிலிலிரு
ந்து கொண்டே அதன் சாரமாகிய ஒழுங்கு, ஒற்றுமை முதலியவற்றை
அதிலிருந்து கற்றுக்கொண்டார்.

அவர் போர்வீரராயிருந்தகாலத்தில் அங்கிருந்தவர்களுள் இருவரோடு
அதிகமாக நட்புக்கொண்டார். அவ்வாறு அவருக்கு நண்பரானவர் லாங்கி



தால், மில்லன்ட்ராப் என்பவர். அவ்விருவரும் ப்ரோபெலுக்கு அந்தரங்க
மாணசிஷ்யர். அவர் எள்ளென்ருல் அவர்கள் எண்ணெயாயிருப்பார்கள். தங்
கள் ஆசானிட்ட கட்டளையைத் தலைமேற்கொண்டு கேட்கவேண்டுமென்பதே
அவர்களுடைய கொள்கை; அதற்கென்றே அவர்கள் தாங்கள் முன்னுக்கு
வருவதாயிருந்த இராணுவ வேலையையும் விட்விட்டுத் தங்கள் ஆயுள்கால
மெல்லாம் அவரிடமிருந்துழைத்தார்கள்.

1814-ஞு-ல் அந்நாட்டில் நடந்த சமாதானத்தின்பின்பு சண்டை நின்று
விடவே ப்ரோபெல் பர்லின் நகரத்துக்குச்சென்று அங்கே தாதுவர்க்கங்
களை வைத்திருக்கும் பலபொருட் காக்ஷிசாலையில் வியிஸ் என்னும் பண்டித
ரிடம் வேலையிலமர்ந்தார். அங்குள்ள பலபொருள்களையும் அவர்பார்த்துவந்த
தனுல் அதுவே அவருக்குக் கல்விக்கழகம்போலாயிற்று; அங்கே அவர் பா
டஞ்சொல்லாதிருந்தேயன்றி அவர் படிப்புக்கொன்றுங் குறைவில்லை. அவர்
அந்தப் பல பொருட்சாலையிலிருந்ததனுல், ஒருவன் தனக்குள்ள சக்திகளையெ
ல்லாம் ஒன்ருகச்சேர்த்துக்கொண்டு ஒரு தொழிலைச்செய்ய முயன்ருல் வெகு
நன்ருய்ப் பயன்படுமென்பதைக் கண்டறிந்தார். அவர் இயற்கைப் பொருள்
களைப்பற்றி அப்பியசிக்கவேண்டுமென்றெண்ணிஞர்; அவருடைய அறிவிற்கு
எதுவும் எளிதிற் புலப்பட்டது. அவர் மாணுக்கராகிய லாங்கிதால், மில்லென்ட்
ராப் என்னுமிருவரும் தங்களுக்குப் பிரியமானதாகிய உபாத்தியாயவேலையில
மர்ந்து பாடஞ்சொல்லிவந்தார்கள். மனிதர் வித்தியாப்பியாசஞ் செய்யவேண்
டியதில் தாம் புதிதாகக்கண்டறிந்த விஷயங்களையெல்லாம் யாவர்க்கும் பயன்
படும்படி கற்பிப்பதில் தமது மாணுக்கர்களாகிய லாங்கிதால், மில்லென்ட்
ராப் என்னு மிருவருமே தக்கவர்களென்றெண்ணி அவ்விருவருக்கும் நூதனமு
றையான எல்லாவற்றையும் நுட்பமாய்ப் போதித்துவந்தார்.

அவர் எடுத்துக்கொண்ட விஷயத்தைக் கைசோராமல் முடிப்பதற்கேற்
றபடி தனம் அவரிடத்திலில்லையாயினும், அவர் தமக்குள்ளவழக்கப்படி ஒரே
பிடிவாதமாய் 1816-ஞு-ம் ஆரம்பித்துக்கொண்டார். அதற்கு மூன்று வரு
ஷங்களுக்குமுன்னே குருவாயிருந்த அவருடைய சகோதரர்களுளொருவர்,
சிறையில் வைக்கப்பட்டிருந்த பிரான்சுதேசத்துப்போர்வீரஞெருவருக்கு வை
த்தியஞ்செய்துகொண்டிருந்தனுல், அந்நோய் அவருக்குக் கண்டு இறந்துபோஞ
ர். அவர் மனைவியானவள் அக்கோரூரில் அன்னவஸ்திரத்துக்கு முட்டின்றிச்
சற்றேகண்ணியமாய் வாழ்ந்துகொண்டிருந்தாள். அந்த ஊரிலே தாம் கொண்
ட கொள்கையின்படி கல்வியை ஏகாந்தமாய் நன்ருய்ப்போதிக்கலாமென்று
நினைத்து அவர் அவ்விடம் நோக்கிச்சென்ருர். சாதாரணமாய் ஒரு குடும்பத்து
க்கு அன்னவஸ்திரத்துக்குப் போதுமானதும், செல்வாக்குள்ளதுமான தமது
சொந்தவேலையை வேண்டாமென்று விட்டுவிட்டுக் கையில் சிறிதாயினும்பண
மேயில்லாமல் அவர் அங்கேபோனது துணிகரமானதேயாம். அவர் அவ்விட

த்தில் தகப்பனில்லாக் குழந்தைகளாகிய தன்சகோதரன் மகனுக்கும், மகளுக்குமேயன்றி, மற்றொருசகோதரருடைய பிள்ளைகளிருவர் அங்கே அழைத்துக் கொண்டுவரப்பட, அவர்களெல்லோர்க்குமென்று அவர் ஓர் பாடசாலையையேற்படுத்தித் தம்முடைய சீடர் இருவரையும் தமக்குத்துணையாய்வரும்படி சொல்லியனுப்பினார். அந்தச்செய்தியைக்கேட்டதும் மில்லென்டராப் அவரிடம் உடனேவந்து சேர்ந்தான். அதன்பின்பு இரண்டொரு வருஷங்களுக்குள்ளெல்லாம், அவரோடுகூடவராது தரிஞ்சியன் காட்டிற்குள்ளேயிருந்த கீல்ஹாஎன்னும்வேறோர் கிராமத்தில் வைக்கப்பட, மற்றொரு மணாக்கனாகிய லாங்கிதாலும் அவரிடம்வந்து சேர்ந்துகொண்டான். அந்தவிடத்தில் அம்மூவருமேயன்றி, மில்லென்ட்ராபின் சுற்றத்தானாகிய பராப் என்பவன் ஆகிய இந்நால்வருஞ்சேர்ந்து ஓர் வித்தியாசங்கத்தையுண்டாக்கினார்கள். இந்தச் சங்கத்துக்குப் பணமில்லாக் குறையொன்றுமட்டுமேயன்றி மற்றப்படி எந்தவிஷயத்திலும் மேன்மைபெற்றிருந்தது. ப்ரோபெலினிடம் அப்பொழுது சிறிதும் திரவியமில்லாதிருந்து பசியார உண்ணக்கூடச் சோற்றுக்கில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தும் அவரோடிருந்து எதற்கும் அஞ்சாமல் தைரியமாய்ப் பாடுபட்ட அவருடைய மாணாக்கர்களுடைய துணையினால் அவர் மனஞ்சோரவில்லை. இதுமாத்திரமன்று; அவர் இவ்வளவோடிருக்கவில்லை; இந்த வேளையில் மணமுஞ்செய்துகொண்டார்.

(இன்னும்வரும்.)

# இலக்கணம்.

—:0:—

(முன்தொடர்ச்சி, பக்கம் 43.)

தூங்கினான் என்னும் பதத்தினால் அபிப்பிராயமுழுதும் வெளியாகிறது, அடித்தான் என்பதில் அபிப்பிராயம் பூர்த்தியாகாததலால், எதை அடித்தான் என்று கேட்கும்படியாகிறது. அதேமாதிரியாய் எதை வாங்கினான், எதை எடுத்தேன் என்று கேட்கும்படியாகிறது. ஆகையால் இவ்வாக்கியங்கள் அர்த்தத்தில் பூர்த்தியாக

இராமன் பூனையை அடித்தான்.
கோபாலன் புத்தகத்தை வாங்கினான்.
நான் பலகையை எடுத்தேன்.

என்றிருக்கவேண்டும்.

இவ்விடத்தில் இராமன் செய்யும்படியான அடிக்கும் தொழிலை பூனை பெற்றுக்கொள்ளுகிறது. கோபாலன் வாங்குந்தொழிலை புத்தகம் பெற்றுக்கொள்ளுகிறது. நான் எடுக்குந் தொழிலை பலகைப் பெற்றுக்கொள்ளுகிறது. ஆக பூனையை, புத்தகத்தை, பலகையை இப்பெயர்கள் செய்கையைப்பெற்றுக்கொள்ளும் பெயர்கள் அல்லது செயப்படுபொருள் என்று பெயர்.

(பின்வரும் வாக்கியங்களில் செய்யப்படு பொருள், பயனிலை முதலானவைக்காட்டுக.)



செயயபபடுபொருளைக்காட்டும் பூனையை என்பது பூனை என்னும் பெயருக்கு ஐ சேர்க்கப்பட்டு பூனையை என்றும், புத்தகம் எனும் பெயருக்கு ஐ சேர்க்கப்பட்டு புத்தகத்தை என்றும், பலகை என்னும் பெயருக்கு ஐ சேர்க்கப்பட்டு பலகையை என்றுமிருக்கிறது. பூனை முதலான பெயர்கள் செயப்படுபொருளைக் காட்ட பூனையை என்று வேறுபட்டது; இப்படிப் பதங்கள் வெவ்வேறு அர்த்தத்தைக்கொடுக்க வேறுபடுவதுதான் வேற்றுமையென்று சொல்லுவார்கள்.

எழுவாய்ப் பொருளைத்தரும் பெயர்களுக்கு அனேகமாய் வேறுபாடில்லாமலிருக்கினும் முதல் வேற்றுமையென்று சொல்லப்பட்டது.

இரண்டாவது சொன்ன செயப்பொருளைக்காட்டும் வேற்றுமைப் பெயர்கள் இரண்டாம் வேற்றுமையென்று கணக்கிடலாம்.

மேல்வரும் ஒவ்வொரு பதங்களிலும் செயப்படுபொருளைக் காட்ட ஐ என்னும் இடைச்சொல் சேருவதால் ஐ என்பது அதற்கு உருபு என்று சொல்லலாம்.

(பின்வரும் வாக்கியங்களில் இரண்டாம் வேற்றுமைப்பெயர்களைக் காட்டி அதன் உருவையும் எடுத்துக்காட்டுக.)

இராமன் புஸ்தகம் வாங்கினான்.
நாய் எலும்பு கடித்தது.

இவைகளில் செயப்படுபொருள்களாகிய புஸ்தகம், எலும்பு இவைகளுக்கு ஐ வாராமலிருப்பது காண்க.

இராமன் மரத்தை வெட்டினான் என்று சொல்லும்போது எதனால் வெட்டினான் என்று கேட்க, கோடரியால் என்று சொல்லவேண்டும். கோடரியால் என்பது வெட்டும் தொழிலுக்குச் சகாயமாய்விட்டது.

உபாத்தியாயர் பிள்ளையைப் பிரம்பால் அடித்தார்.
புஸ்தகம் காகிதத்தால் செய்யப்பட்டது.
கோபாலன் சுப்பனோடு போனான்.
நான் அவருடன் செல்லுவேன்.

இவற்றுள் சகாயப்பொருளைக்காட்டும் பங்களாகிய பிரம்பால், காகிதத்தால் என்னும் பதங்களின்கடையில் ஆல் என்னும் உருபு வந்தது, சுப்பனோடு என்பதில் ஓடு வந்தன. மற்றொன்றாகிய அவருடன், என்பதில் உடன் என்னும் உருபு வந்து சகாயப்பொருளைக் காட்டிற்று.

சகாயப்பொருளைத்தரும் வேறுபாடு மூன்றாவது சொல்லப்பட்டதால் மூன்றாம் வேற்றுமையென்று சொல்லப்படும். அதன் உருபுகள், ஆல், ஆன், ஓடு, உடன் என்பவையாம். (பின்வரும் வாக்கியங்களில் மூன்றாம் வேற்றுமைப் பெயர்களைக்குறிக்க.)

அரசன் பொன்னைக்கொடுத்தான்
இதில் யாருக்குக் கொடுத்தான் என
யாசருக்கு என்று சொல்லலாம்
இது காரியம் அடைந்த இடத்தைக் காட்டுகிறது.
இராமன் வீட்டுக்குப்போனான்
நான் அவனுக்குப் பழம் கொடுத்தேன்.

இவைகளில் போனான் என்னும் தொழில் வீட்டை அடைந்தது, கொடுத்தான் என்னும் சொல் அவனை அடைந்தது. இதற்கு நான்காம் வேற்றுமை யென்று பெயர்

இப்பொருளைத்தரும் பெயர்களாகிய யாசருக்கு, வீட்டுக்கு, அவனுக்கு என்னும் பதங்களின் கடையில் இருப்பதால், இது நான்காம் வேற்றுமையின் உருபாம்.

இராமன் பட்டணத்திலிருந்து வந்தான்.
நான் உள்ளேயிருந்து வந்தேன்.
அவன் மரத்தினின்று கீழே விழுந்தான்.
சுவரினின்று பாம்பு வந்தது.
அவ்விருவரில் இராமன் நல்லவன்.
நம்மில் எவன் பெரியோன்?

இவற்றுள் பட்டணத்திலிருந்து என்னும் பெயர் பட்டணத்தை விட்டு பிரிந்ததைத் தெரிவிக்கிறது. அதேமாதிரியாய் உள்ளேயிருந்து, மரத்தினின்று, சுவரினின்று, அவ்விருவரில், நம்மில் என்னும் பெயர்கள் பிரிதல் பொருளையே குறிக்கின்றன.

பிரிதல்பொருளைத்தரும் வேற்றுமைக்கு ஐந்தாம்வேற்றுமை என்று பெயர். இதின் உருபுகள் மேல்வந்தபடி இல், இன், இருந்து, என்பவையாம். (பின்வரும் வாக்கியங்களில் ஐந்தாம் வேற்றுமைப் பெயர்களைக்குறிக்க.)

இவற்றுள் முற்பதங்கள்யாவும், பாத்தியம், சொந்தம் அல்லது உடைமையைத் தெரிவிக்கின்றன. இதற்கு ஆறும் வேற்றுமையென்று பெயர். இவ் வேற்றுமையைக்காட்டும் உருபுகள், அது, ஆது, அ, உடைய என்பவையாம்.

பின்வரும் வாக்கியங்களில் ஆறும்வேற்றுமைப் பெயர்களைக் காட்டுக.

கோவிந்தன் சிதம்பரத்தில் இருக்கிறான்.
என்னிடத்தில் பணம் இல்லை.
மரத்தின்கண் பழமிருக்கிறது.

சிதம்பரத்தில், என்னிடத்தில் மரத்தின்கண் முதலானவை இடப்பொருளைத்தருகின்றன. இதற்கு எழாம் வேற்றுமையென்று பெயர். இதன் உருபுகள் இல், இடத்தில் கண் முதலானவையாம்.

பின்வரும் வாக்கியங்களில் எழாம்வேற்றுமைப் பெயர்களைக் காட்டுக.

நாம் ஒருவனைக்கூப்பிடும்பொழுது அண்ணா, அண்ணே, கோபாலா, இராமா, என்று சொல்லுகிறோம். இதற்கு விளி (கூப்பிடுவது) வேற்றுமை என்றும் எட்டாம் வேற்றுமையென்றும் பெயர்.

உருபு ஏ ஆ என்பவையேயாம்.



## விஷயம்.

அரேபியா ஒரு தீபகல்பம். (Arabia is a peninsula)

I. எல்லைகள்.—

| | |
|---|---|
| (1.) வடக்கு. | துர்க்கி. |
| (2.) கிழக்கு. | பெர்ஷியாக்குடாக்கடல். |
| (3.) தெற்கு | அரேபியாக்கடல். |
| (4.) மேற்கு. | செங்கடல். (Red sea) |

II. இயற்கை அமைப்புகள்.—

| | |
|---|---|
| (1.) மலைகள். | பெரியமலைகளில்லை. |
| (2.) நதிகள். | பெரியநதிகளுமில்லை. |
| (3.) வெளிகள். | அரேபியாவுக்கு நடுவில் ஒருபெரிய மணல் வெளியிருக்கிறது. |

III. சீதோஷ்ணஸ்திதி.—

வெகுஉஷ்ணம். தெற்குபாகங்கள் வடக்கைக்காட்டிலும் அதியுஷ்ணம்.

IV. விளைபொருள்கள்.—

இந்தியாவில்விளையும் தானியமும், பழமும். பேரிச்சம்பழம்,காப்பிக்கொட்டை. குதிரை ஒட்டை இதற்குமணற் கப்பலென்றும்பெயர்.

V. வர்த்தகம்.—

இரக்குமதி எகிபதிலிருந்து தானியம். எற்றுமதி ஐரோப்பாவுக்கு எகிப்து மூலமாய் காபி. இந்தியாவுக்கும் சிறிது சரக்குகள் அனுப்புகின்றன.

VI. ஜனங்கள்.— அரப்பியர் பாஷை அராபிக்.

VII. பட்டணங்கள்.—

| | |
|---|---|
| (1.) மக்கா. | மஹமத்து பிறந்தஇடம். |
| (2.) ஜிட்டா. | |
| (3.) மெடினா. | மஹமத்து இறந்தஇடம். |
| (4.) மஸ்கட். | இதற்கும் இந்தியாவுக்கும் வெகுவர்த்தகம் நடக்கிறது. |
| (5.) மொக்கா. | காப்பிக்கொட்டைக்கு பேர்போனஇடம். |
| (6,) எடென். | இது ஆங்கிலேயரது. |

## உபவிஷயம்.

(I.) இத்தேசத்தார்கள்தான் முன்பு இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் வர்த்தகம் நடத்தினார்கள்.

(1.) பெர்ஷியாவைச் சேர்ந்திருக்கிறதென்று காட்டவும்.

(2.) அரேபியாவைச்சேர்ந்ததால் அரேபியாக்கடல்.

(II.) பெரிய நதிகளில்லாதிருக்குங் காரணம் பெரிய மலைகளில்லாமையே.

III. இவ்விடத்தில் ஒருகாற்று அடிக்கிறது. அது மணற்காடுகளில் மணலையெல்லாம் கிளப்புவதால், பிரயாணிகள் அச்சமயங்களில் குப்புரப்படுத்துக் கொண்டு, காற்றுநின்றபிறகு எழுந்திருப்பார்கள். சிலவேளைகளில் தங்கள்

மேல் அதிக மணல்குவிதலால் இறந்துபோவார்கள். அக்காற்றுக்கு ஸைமூன் (Simoon) என்றுபெயர்.

IV. ஒழே ரேகையிலிருக்கும் தேசங்களின் விளைபொருள்கள் அனேகமாய் ஒன்றாயிருக்கும்.

இந்தியாவுக்குக்கூட பேரீச்சிசம்பழமவ்விடத்திலிருந்து வருகிறது. நாம் கடையில்வாங்கும் பேரீச்சம்பழங்கள் அவ்விடத்திலிருந்து வருவதுபோலும். ஆதியில் காப்பிச்செடி இந்தியாவில் கிடையாது. முதல் முதல் அரேபியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு வைக்கப்பட்டது.

நாமிவ்விடத்தில் பார்க்கும் பெரியகுதிரைகளெல்லாம் அரேபியாவிலிருந்து வந்தவைகள். அதை அரேபியர் குழந்தையைப்போல் வளக்கிறார்கள்.

VI. நமதுதேசத்து குறவரைப்போல் பேடூவன்ஸ் என்னும் சாதியார் காட்டிலேயே வாசஞ்செய்து திரிந்துகொண்டு இருப்பார்கள்.

VII. ஏடனில் இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் போகும்ஸ்டீமர்களெல்லாம் நிற்கின்றன.

## வழி.

முன்பு படித்திருக்கும் பெர்ஷியாவிலிருந்து அரேபியாவிலிருப்பிடத்தை வரவழைத்துதீபகல்ப மின்னதென்று தெரிவிக்கவும்.

(I.) எல்லை யென்பதின்ன வென்று முன்பாடங்களிலேயே தெரிவித்திருக்கவேண்டும்.

I. அரேபியாவுக்கு நான்குபக்கங்கயுள்ளம் படத்தில் பிள்ளைகளைக் காட்டச்சொல்லி எல்லைகளின் பெயரை வரவழைக்கவேண்டும்.

II. அரேபியாவில் பெரிய நதிகளும் மலைகளுமில்லாதது படத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளச்செய்யலாம். நடுவில்பார்க்க ஊர்களில்லாமலிருக்கும். அதுமணல்வெளியாகி வாஸயோக்கியமில்லாததால் என்று தெரிவிக்க வேண்டும்.

III. இந்தியா, இந்துசீனா தீபகல்பம், சீனா இவைகள் ஜேதோஷ்ணத்தைகேட்டு கிரட்சைரேகை இருபக்கங்களிமுள்ள தேசங்கள் அதியுஷ்ணமென்று காண்பித்து அரேபியா கிரட்சைரேகை அருகாமையிலிருப்பதாலும், உஷ்ணத்தைசாந்தி செய்ய மலைகள் முதலானவைகளில்லாமையாலும், உஷ்ணமதிகமென்று தெரிவிக்கவும்.

IV. இந்தியாவில் விளையும் தானியம் பழங்களைக்கேட்டு அரேபியாவிலுடையதைத் தெரிவிக்கவும், மணற்காடுகளில் போகும்படியான பிரயாணிஒட்டையாகையால் அவைகளிவ்விடத்தில் மிகவிஸ்தாரமென்று தெரிவிக்கவும் மேலும் சமுத்திரத்தில் கப்பல்கள் உபயோகப்படுகிறதுபோல் இவைகள் மணற்காடுகளில் உபயோகப்படுவதால் மணற்கப்பலெனனும் பெயர் வந்ததென்று தெரிவிக்கவும்.

VI. பேடுயீனர்களின் நடவடிக்கை உடுப்பு உண்டி முதலானவைகளைக்கேட்கவும்.

VII. பட்டணங்களையெல்லாம் படத்தில் காட்டி அவைகளைப்பற்றிய விசேஷங்களைச்சொல்லவும் மஹமதிய மதத்தைப்பற்றி அரேபியபேர்போனதை பிள்ளைகளுக்கு நன்றாயுணர்க்கவும்.

THE

VILLAGE SCHOOLMASTER.

உபாத்தியாயர்.

Vol. I.] JANUARY, 1888. [No. 8.

## ப்ரோபெல்.

(முன்தொடர்ச்சி, பக்கம் 104.)

ப்ரோபெல் இவ்வாறு பதினாலுவருஷமாகத் தாம் பாலபோதகாசிரியரா யிருந்து, சிறுவர் மனதையறிந்து, அவர்களுக்கு விளையாட்டுப்போல எல்லா வற்றையும் எளிதில் கற்றுக்கொடுக்க வல்லவரானார். அவர் இவ்வாறு செய்ததானது நன்றாய்க் கைகூடிவந்ததைக்கண்டு, "குணமதுகைவிடேல்" என்ற வண்ணம் கீல்ஹாவிலுள்ள பாடசாலையைத் தலைமையாகவைத்துக்கொண்டு, அந்நாட்டில் அதற்குக் கிளைகளாகப் பல பாடசாலைகளை யேற்படுத்தினார். இவ்வாறு அவர் எங்கும் பிரசித்தி யடைவதைக்கண்டு, ஸ்விஜர்லாந்து நாட்டைச் சேர்ந்த வார்டன்ஸியிலுள்ள கோட்டையை ஒரு நண்பன் அவருக்குக்கொடுத்தான். ப்ரோபெல் கீல்ஹாவிலிருந்த பாடசாலையை பராப் என்பவனிடம் ஒப்புவித்துவிட்டு, லாங்கிதால் என்பவனோடு ஸ்விட்ஜர்லாண்டில் லூஸர்ன்மகாணத்தைச்சேர்ந்த வார்டன்ஸி என்னுமிடத்தில் 1833-வருஷம் பாடசாலையொன்றை ஸ்தாபித்தார். அதேகாலத்தில் அவர் அந்த மகாணத்தைச்சேர்ந்ததாகிய வில்லிஸாவென்னுமிடத்திலேயும் மற்றோர் பாடசாலையைவைத்தார். ஆயினும் அங்குள்ள பாப்புமார்க்கக் கிறிஸ்தவர்கள் புரோடஸ்டாண்டு கிறிஸ்தவர் தங்கள் நாட்டுக்குள்ளேவந்தூன்றிக்கொள்ளுவதைக் கண்டு பொறாமைகொண்டுபலமாக விரோதித்தமையால், அவ்விரண்டிடங்களிலும் நன்றாய்ப் பலிக்காமற்போயிற்று. அந்தக்காலத்தில் ஸ்விட்ஜர்லாண்டில் கல்வியறிவு மட்டாயிருந்தினாலும், ப்ரோபெல் பாலபோதகாசிரியரெல்லோரிலுஞ் சிறந்தவரானதாலும், அந்நாட்டுத்துரைத்தனத்தார் குருக்களின் வார்த்தைக் கிணங்காமல் அவருக்கு வேண்டியமட்டுந் துணை நின்றார்கள். அந்தத் துரைத்தனத்தார் பாலியர்களான உபாத்தியாயர்களையெல்லாம் கல்விகற்பிக்குமுறைமை நன்றாய்க் கற்றுக்கொண்டுவரும்படி அவரிடம் அனுப்பினார்கள். அதற்கு முப்பதுவருஷத்திற்க்கு முன்னமே ப்ரோபெலாசிரியரைப்போலவே சிறுவர்க்குக் கல்விபயிற்றுவிப்பதில் பிரசித்திபெற்றவரான பெஸ்டிலோஸி என்னும் பாலபோதகாசிரியர் போதனாசக்தி பாடசாலையொன்றை வைக்கவேண்டுமென்று முயன்ற இடமாகிய பர்க்டார்ப் என்னுமிடத்துக்குச் சென்றார். அவர் அங்கேபோனதுமுதல் ஸ்விட்ஜர்லாண்டில் ஒவ்வொருமாகாணத்திலுமிரு

ந்து பதினோரு உபாத்தியாயர்கள் இரண்டுவருஷத்துக் கொருமுறை பர்க்ட
ராபுக்குச் சென்று அங்குள்ள போதனாசக்தி பாடசாலையில்மூன்று மாதந் தங்
கியிருந்து கல்விபோதிக்கு முறையை அவர் கொள்கைப்படி கற்றுக்கொண்டு
வரவேண்டுமென்று அந்தேசத்துத் துரைத்தனத்தாரால் தீர்மானிக்கப்பட்
டது. ஆதலினால் அந்த உபாத்தியாயர்கள் அந்த மூன்று மாதம்போக மற்ற
இருபத்தோரு மாதமும் பாடஞ்சொல்லிக்கொண்டவண்ணமாயிருப்பார்கள்.
இக்காலத்தில் இங்கலாண்டிலும் சற்றேறக்குறைய இவ்வாறான முறைப்படி
தான் கல்விகற்றுக்கொடுக்கப்படுகிறது.

இவ்வாறான உபாத்தியாயர்களோடு அடிக்கடி பழகினதினாலேதான், ஒன்
றுந்தெரியாத உபாத்தியாயர்களைவைத்துப் பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்லிக்
கொடுப்பதினால் சிறுபிள்ளைகளுக்கு நன்றாய்ப்படிப்பேறாமல் வீணில் கெட்டு
ப்போகும்படி யாகிறதென்று கண்டறிந்துகொண்டார். சிறுவர்க்கேற்றபடி
அவர்களுக்கு விளையாட்டாகத்தானே கற்றுக்கொடுப்பாரின்றி அவர்கள் அனி
யாயமாய் வீணேபடிப் பன்றித்திரியும்படி நேருகிறதென்பதை அவர் நன்றாய்
க்கண்டறிந்தார். சிறுவர்களின் மனத்தை யறிந்து அவர்களுக்குக் கற்கக்க
ற்க அதிக இன்பமாயிருக்கும்படி விஷயங்களை எளிதில் கற்றுக்கொடுக்காமல்
மனதைவருத்தி நெட்டுருப் போடச்சொல்வதைக்கண்டால் அவருக்கு அது
வெறுப்பாய் விஷம்போலிருக்கும். குழந்தைப் பருவமுதற்கொண்டே சிறு
வர்க்கு நன்றாய் மனதிற்படும் பல விஷயங்களை விளையாட்டுப்போல ஒவ்
வொன்றாகக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்பது அவர் கொண்ட கொள்கை.
1829-ளூபல் அவர் பாலசிக்ஷையைப்பற்றி எழுதிய கிரந்தத்தின்படி சிறு குழ
ந்தைப் பருவமுதற்கொண்டு ஏழுவயதுமட்டும் படிப்பதற்கேற்றகாலமென்று
ஏற்படுகிறது. குழந்தைகளுக்கு விளையாட்டும், உடம்புக்குச் சவுக்கியமும்,
அறிவுவிருத்திக்கேற்றவையுமான உபாயங்களைக்கண்டறிவதிலேயே அவர் எந்
நேரமும் நாட்டமாயிருந்தார். குழந்தைப் பருவந்தொட்டே அவர்களுக்குத்
தக்கபடி எல்லாவிஷயங்களையும் சுகமாகப்போதிக்கவேண்டுமென்று அவர் வெ
குகாலமாகத் தமது அநுபவ முறையாய் நன்றாய்ப் பலிக்குமென்று கண்
டிருந்தாராதலால், எவ்வாறான இடையூறுகளுக்கும் அஞ்சாமல் 1837–ளூபல்
பிளாகன்பர்க் என்னுஞ் சிற்றூரில் "சிறுவர்களின் தோட்டம்" என்று ஓர்
தோட்டத்தை வைத்தார். குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதற்கெ
ன்று அவர் இவ்வாறு ஓர் தோட்ட முண்டாக்கியது மன்றி, தமது
உள்ளக் கருத்தையெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்றாய் வெளி
யிடும்பொருட்டு வாரந்தோறும் பத்திரிகை யொன்றைப் பிரசுரஞ்செய்துவந்
தார். அன்றியும், தம்முடைய அபிப்பிராயங்களை யெல்லாம் உலகத்தவர்
யாரும் இன்னும் நன்றாய் அறிந்துகொள்ளுதற் பொருட்டு அவர் அந்நாட்டிலி
ருள்ள பெரிய நகரங்களுக்குச்சென்று பிரசங்கிப்பது முண்டென்றாலும்,
பிளாகன்பர்க்கு வரும் உபாத்தியாயர்களுக்குச் சிறுவர்களுக்குப்போதிக்கும்
விதம் இன்னவாறனதென்று உபதேசிப்பதிலேயே பெரும்பான்மையாய் அ
வர் காலமெல்லாஞ்சென்றது. குழந்தைகளுக்குக் கல்விகற்றுக் கொடுப்பதற்
கேற்றதாகிய சிறுவர்தோட்டமானது உண்டாக்கப்பட்ட நாள்முதல் நா
ளுக்குநாள் நன்றாய் விருத்தியடைந்துகொண்டே வந்ததென்றாலும், ப்ரோ
பெலாசிரியரிடம் பணங்கிடையாதாகையால், முதலில்மட்டும் அதிக வருத்த
மாயிருந்தது. பணமில்லாக் குறைவினால் அவர் தாம் படாதபாடெல்லாம்
பட்டுவைத்திருந்த போதனாசக்தி பாடசாலையை எடுத்துவிட வேண்டியதா



117

யிற்று. இதுவுமன்றி அவர் எவ்வளவோகஷ்டப்பட்டு எழுதி வாரந்தோறும்
பிரசுரஞ்செய்துவந்த பத்திரிகையானது வாங்குவாரின்மையால் நாளடை
வில் அதுவும் தேய்ந்து மாய்ந்துபோயிற்று. இம்மாத்திரத்தோடு போகாமல்,
"பட்டகாலிலேயேபடும்; கெட்டகுடியே கெடும்" என்றவண்ணமாய் 1834–
ளூபல் அவர் தமது அருமைமனையாளை யிழந்துவிடவே அவருக்கு இன்னும்
அதிக துக்கமுண்டாயிற்று. அடுத்த வருஷமுதல் 1848–ளூப மளவும் அ
வர் கில்ஸாவிலேயிருந்து அங்கே தம்மிடம் வந்த உபாத்தியாயர்களுக்குப் போ
தனா சக்திமுறையைக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார். அது முதல் தாம்
இறந்துபோவதற்குமுன் நான்கு வருஷகால மளவும் அவர் துரிஞ்சியன் காட்
டுக்கடுத்த லிபன்ஸ்டியனிலும், மீனிஞ்சியனிலும் வசித்தார். ப்ரோபெலா
சிரியர்காலத்துள் அவர் இறந்துபோவதற்கு முற்பட்டு மூன்று வருஷமளவுஞ்
செய்த காரியம் மிகவும் பிரசித்தியுள்ளது. 1848-ம் ளூபல் அவர் தூங்கா
முயற்சியோடு சிறுவர்க்குக் கல்வி போதிப்பதைக்கண்ட மேரண்ணல்ட்ஸ்
என்னும் பெருமாட்டிவியந்து, அவர் பிற்காலத்தாருக்குச் செய்தமஹோபகார
த்தைப்பற்றிக் கறந்தபால் கறந்தபடி ஒன்றையும்விடாது எழுதிவைத்திருக்கிறா
ராதலால், அதனுள் அவர் வரலாறனைத்தும் எதில் தெளிவாய் விளங்கும்.
ப்ரோபெலாசிரியரைப்பற்றி எழுதிய பலருள்ளும் இந்தப் பெருமாட்டி எழுதி
யதனுள்ளே அவரது குணாதிசயங்களெல்லாம் வரன் முறையாய் ஒன்றையும்
விடாமல் எழுதபட்டிருக்கிறது.

ப்ரோபெலுக்குத் தமது வாழ்நாளின் இறுதியில் மூன்று வருஷங்களிலி
ருந்த ஆனந்தம் அதற்குமுன் என்று மிருந்ததில்லை; அஃதெப்படியெனில், அ
வர் பாலர்க்குப்போதிக்கும் விஷயத்தில் நெடுநாளாகக் கொண்டிருந்த எண்
ணமெல்லாம் அப்பொழுதுதான் அவரிஷ்டப்படி நன்றாய்க் கைகூடியது.
அக்காலத்தில் இராஜாங்கத்தாருக்கு விரோதமாய்க் குடிகள் எழுந்து தங்கள் சு
யாதீனத்தை விரும்பியதில்,இராஜாங்கமெல்லாம் ஒவ்வொன்றாய்க் குடியரசா
கத்தலைப்படவே, ஜனங்களெல்லோரும் கல்வியில் அதிக நாட்டமுடையவர்
களாகி எங்கும் வித்தியாப் பியாசஞ்செய்தலானது பலத்துக்கொண்டது. குடி
களுக்கு எவ்வளவுக் கெவ்வளவு கல்வியறிவுமட்டோ அவ்வளவுக் கவ்வளவு
இராஜாங்கத்தாருக்குத் தங்கள் இஷ்டப்படி யெல்லாஞ்செய்துகொள்வது
எளிதாயிருக்குமாகையால், அக்காலத்தில் இராஜாங்கத்தாரால் கல்விக்கு
எப்பொழுதும் இடையூறு செய்யப்படுவதியல்பு. ப்ரோபெல் உத்தமமான பால
போதகாசிரியரென்று கண்டு அநேகம் பிரபுக்களும், வித்தியாபிமான முள்ள
வர்களும் அவருக்கு வேண்டியமட்டும் துணைநின்றமையால், அவருக்குத் தா
மெடுத்துக்கொண்ட கருமத்தில் இன்னும் அதிக உற்சாகமுண்டாயிற்று. 1848-
ளூபல் உண்டான மாறுபாட்டினால் ப்ரோபெல் தமது கொள்கைப்படி எல்
லாவற்றையும் திருப்தியாகச் செய்துமுடிக்கலாமென்றிருந்தார்; அவர் மாணாக்
களாகிய மில்லென்ட்ராப் என்பவன் "சிறுவர்தோட்டம" என்கிற பாடசா
லை விஷயமாக ஜர்மனிதேசத்து மகாசபையாருக்குமுன்னே ஓர் உபன்னியா
ஸஞ்செய்தான். இப்படிக்கெல்லாம் எல்லாம் அநுகூலமாயிருந்ததென்றாலும்,
ஒரு நொடிப்பொழுதில், தன்கைவிரல் தன் கண்ணைக்குத்திய தென்றவண்ண
மாய்த் தமது தமயன்குமாரன் செய்தகோரணியால் அவர் கருத்துப்படி ஒன்
றும் நிறைவேறாமற்போயிற்று. அவருடைய அண்ணன் குமாரனான கேரல்
ப்ரோபெல் என்பவன், எல்லோரும் ஒற்றுமை யாயிருந்தால் எந்தக்காரியத்
தையுஞ்செய்து முடித்துவிடலாமென்பதைப்பற்றிப்பல சிறுபுத்தகங்களை ஒன்

றென்றுய்ப் பிரசுரஞ்செய்து கொண்டேவந்தான். பிரடரிக் ப்ரோபெல் கொண்டகொள்கையானது அவருடைய அண்ணன் மகன்கொள்கைக்கு எத்தனையோ விதங்களிலே பேதப்பட்டு அதற்கு நேரேமுற்றும் விரோதமானதென்றாலும், அதவிஷயத்தைப்பற்றி ஒன்றையு மறிந்துகொள்ள மாட்டாமல் அவிவேகிகளான உத்தியோகஸ்தர்களும், பாமரஜனங்களும் அவ்விருவர் கொள்கையும் ஒன்றுதானென்றும், இருவரும் உள்ளுக்குள்ளே ஒருவரோடொருவர் கலந்து பேசிகொண்டே அப்படிச்செய்தார்களென்றும் நினைத்தார்கள். "பனையடியிற்பாலைக்குடித்தாலும் கட்குடித்தான் என்பார்கள்" என்றவண்ணமாய் அவருடைய அண்ணன் மகன்கொண்ட கொள்கையும் அவருடைய கொள்கையும் ஒன்றுதானென்று ஸாதாரண ஜனங்கள் தப்பாய் நினைக்கும்படியாயிற்று. தெய்வபக்தியோடு கலவாதபடிப்பு படிப்போடுசேர்ந்ததல்லவென்பதும், "அவனன்றியோர் அணுவும் அசையாது" என்பதும் அவர் திண்ணமாகக் கொண்ட கொள்கையாதலால், நாஸ்திகவாதியோடு அவரையுஞ்சேர்த்தது அவர்களுடைய அறியாமையேயாம்.

இவ்வாறு பர்ஷியாதேசத்துத்துரைத்தனத்தார் வெகுகாலமளவும் எத்தனையோ அரும்பாடுபட்டு மனிதரினுபாயம் இவ்வாறுனதென்று உயர்த்துணர்ந்து இதுவரையிலும் பாலசிக்ஷை இப்படிப்பட்டதென்று ஒருவராலுங்கண்டறியப்படாத சிறந்தகொள்கை அதற்குமுற்றும் வேறனதான கேரல் ப்ரோபெலின்தப்பானகொள்கையோடு சேர்ந்ததுதானென்றெண்ணி இவ்விருவருடையகொள்கையின்படி ஒரு பாடசாலையாவது பர்ஷியாதேசத்தில் எந்தவிடத்திலும் வைக்கப்படுவது கூடாதென்று அந்தத்தேசத் துரைத்தனத்தார் கண்டிப்பானகட்டளையிட்டார்கள்.

ப்ரோபெலாசிரியர் தாமுள்ளநாளுள்ளமட்டும் தாம்கற்ற வித்தையை நாடெங்கும் பரவச்செய்து லோகோபகாரமாகி எல்லோருங்கொண்டாடும்படி இராஜாங்கத்தில் விருதுபெற்றுப் பெரும்புகழையடைந்து வாழ்ந்திருக்கலாமென்று நினைத்திருந்ததுபோக, அவர் தலையிலெழுத்து அந்த நாட்டைவிட்டோடிப்போகவேண்டுமென்று அவருக்கு இராஜதண்டனை பலமாக விதிக்கப்பட்டது. 1852-ளு மேமீ அவருக்கு எழுபதாவது ஆண்டு நிறைந்ததாதலால், அந்நாட்டிலே கல்விகேள்வியிற் சிறந்தவர்களும், மற்றுமுள்ள பெரியோர்களும் அந்தமகாபுருஷனுக்கேற்றவிதமாக அவரை உபசரிக்கும்படி அவர் ஜனனதினத்தன்று மிருந்த கோலாகலத்துடன் பெருமையாகப் பண்டிகை கொண்டாடினார்கள். அவர் அதன்பின்பு ஒருமாதத்திற்குள்ளே தேகவியோகமானார்.

(இன்னும்வரும்.)

## கணக்கு.

(தொடர்ச்சி)

(1) ஒரு பேனா 3 பை ஆனால் 8 பேனா என்ன விலை?
(2) ஒரு காகிதம் 1பை ஆனால் 3 காகிதம் என்ன விலை?
(3) ஒரு இன்கிபுட்டி அரையணாவானால் இரண்டுபுட்டி என்ன விலை?



(4) ஒரு புஸ்தகம் 3 பை ஆனால் 4 புத்தகம் என்ன விலை?
(5) ஒரு புஸ்தகம் 4 பை ஆனால் 3 புத்தகம் என்ன விலை?
(6) ஒரு புஸ்தகம் 7 பை ஆனால் 2 புத்தகம் என்ன விலை?
(7) ஒரு குல்லாய் 8 பை ஆனால் 3 குல்லாய் என்னவிலை?
(8) ஒரு கரும்பு 1பை ஆனால் 12 கரும்பு என்ன விலை?

12 பை— 1 அணா.
13 பை— 1 அணா 1 பை.
14 பை— 1 அணா 2 பை.
15 பை— 1 அணா 3 பை.
16 பை— 1 அணா 4 பை.
17 பை— 1 அணா 5 பை.
18 பை— 1 அணா 6 பை.
19 பை— 1 அணா 7 பை.
20 பை— 1 அணா 8 பை.
21 பை— 1 அணா 9 பை.
22 பை— 1 அணா 10 பை.
23 பை— 1 அணா 11 பை.
24 பை— 2 அணா.
36 பை— 3 அணா.
48 பை— 4 அணா.

(1) 20 பைக்கு எத்தனை அணா?
(2) 25 பைக்கு எத்தனை அணா?
(3) 35 பைக்கு எத்தனை அணா?
(4) 18 பைக்கு எத்தனை அணா?
(5) 19 பைக்கு எத்தனை அணா?
(6) 40 பைக்கு எத்தனை அணா?
(7) 45 பைக்கு எத்தனை அணா?
(8) 39 பைக்கு எத்தனை அணா?
(9) 38 பைக்கு எத்தனை அணா?
(10) 46 பைக்கு எத்தனை அணா?

### அப்பியாசம்.

(1) ஒருபுஸ்தகம் 1 அணா 3 பை ஆனால், இரண்டுபுஸ்தகம் என்னவிலை?
(2) ஒரு பென்ஸில் 3 பை ஆனால், 16 பென்ஸில் என்னவிலை?
(3) ஒரு பழம் 6 பை விலையானால், 6 பழம் விலை என்ன?
(4) ஒரு பலாக்காய் 8 பை விலை ஆனால் 3 பலாக்காய் என்னவிலை?
(5) ஒரு செவ்வாழைப்பழம் 3 பை ஆனால், 12 பழம் என்னவிலை?

25 பைக்கு 2 அணா 1 பை
26 ,, 2 அணா 2 பை
27 ,, 2 அணா 3 பை
28 ,, 2 அணா 4 பை
29 ,, 2 அணா 5 பை

30 ,, 2 அணா 6 பை
31 ,, 2 அணா 7 பை
32 ,, 2 அணா 8 பை
33 ,, 2 அணா 9 பை
34 ,, 2 அணா 10 பை
35 ,, 2 அணா 11 பை
36 ,, 3 அணா
37 ,, 3 அணா 1 பை
38 ,, 3 அணா 2 பை
39 ,, 3 அணா 3 பை
40 ,, 3 அணா 4 பை
41 ,, 3 அணா 5 பை
42 ,, 3 அணா 6 பை
43 ,, 3 அணா 7 பை
44 ,, 3 அணா 8 பை
45 ,, 3 அணா 9 பை
46 ,, 3 அணா 10 பை
47 ,, 3 அணா 11 பை
48 ,, 4 அணா

| | |
|---|---|
| 1—5— 5 | 1—6— 6 |
| 2—5—10 | 2—6—12 |
| 3—5—15 | 3—6—18 |
| 4—5—20 | 4—6—24 |
| 5—5—25 | 5—6—30 |
| 6—5—30 | 6—6—36 |
| 7—5—35 | 6—6—42 |
| 8—5—40 | 8—6—48 |
| 9—5—45 | 9—5—54 |
| 10—5—50 | 10—6—60 |
| 11—5—55 | 11—6—66 |
| 12—5—60 | 12—6—72 |
| 13—5—65 | 13—6—79 |
| 14—5—70 | 14—6—84 |
| 15—5—75 | 15—6—90 |
| 16—5—80 | 16—6—96 |

பின் வரும் பைசாக்களுக்கு அணா எழுதுக.
48, 49, 50, 51, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68, 69, 70, 71, 72.

(1) 65 பைக்கு அணா எத்தனை?
(2) 47 பைக்கு அணா எத்தனை?
(3) 72 பைக்கு அணா எத்தனை?
(4) 69 பைக்கு அணா எத்தனை?



(5) 55 பைக்கு அணா எத்தனை?
(6) ஒரு மாம்பழம் 7-பை விலையானால் 8 மாம்பழம் என்னவிலை?
(7) ஒரு புத்தகம் 2 அணா 3-பை ஆனால் 2 புத்தகம் என்னவிலை?
(8) ஒரு பலகை 20 பை ஆனால் 3 பலகை என்னவிலை?
(9) ஒரு கட்டுகோகிதம் 15 பை ஆனால் 4 கட்டு என்னவிலை?
(10) ஒரு கயிறு 9 பை ஆனால் 8 கயிறு என்னவிலை?

| | | |
|---|---|---|
| 1—7— 7 | 1—8— 8 | 1—9— 9 |
| 2—7—14 | 2—8—16 | 2—9—18 |
| 3—7—21 | 3—8—24 | 3—9—27 |
| 4—7—28 | 4—8—32 | 4—9—36 |
| 5—7—35 | 5—8—40 | 5—9—41 |
| 6—7—42 | 6—8—48 | 6—9—49 |
| 7—7—49 | 7—8—56 | 7—9—63 |
| 8—7—56 | 8—8—64 | 8—6—72 |
| 9—7—63 | 9—8—72 | 9—9—81 |
| 10—7—70 | 10—8—80 | 10—9—90 |
| 11—7—77 | 11—8—88 | 11—9—99 |
| 12—7—84 | 12—8—96 | 12—9—100 |
| 13—7—91 | 13—8—104 | 13—9—117 |
| 14—7—98 | 14—8—112 | 14—9—126 |
| 15—7—105 | 15—8—120 | 15—9—135 |
| 16—7—112 | 16—8—128 | 16—9—144 |

பின் வரும் பைசாவுக்கு அணா எழுதுக
72, 73, 74, 75, 76, 77, 78, 79, 80, 81, 82, 83, 84, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96.

## அப்பியாசம்.

(1) ஒரு பழம் 8 பை ஆனால் 12 பழம் என்னவிலை?
(2) ஒரு புத்தகம் 6 பை ஆனால் 16 புத்தகம் என்னவிலை?
(3) ஒருபலகை 16 பை ஆனால் 5 பலகை என்னவிலை?
(4) ஒரு குல்லாய் 7 பை ஆனால் 10 குல்லாய் என்னவிலை?
(5) 79 பைசாவுக்கு அணா எத்தனை?

4 அணா கால் ரூபாய்.
8 அணா அரை ரூபாய்.
16 அணா ஒரு ரூபா.
32 அணா இரண்டு ரூபாய்.
48 அணா மூன்று ரூபாய்.
64 அணா நான்கு ரூபாய்.
80 அணா ஐந்து ரூபாய்.

## அப்பியாசம்.

(1.) 56 அணுவுக்கு ரூபாய் எத்தனை?
(2.) 72 அணுவுக்கு ரூபாய் எத்தனை?
(3.) 46 அணுவுக்கு ரூபாய் எத்தனை?
(4.) 59 அணுவுக்கு ரூபாய் எத்தனை?

## பெருக்கல்வாய்பாடு.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 2 | 4 | 6 | 8 | 10 | 12 | 14 | 16 | 18 |
| 3 | 6 | 9 | 12 | 15 | 18 | 21 | 24 | 27 |
| 4 | 8 | 12 | 16 | 20 | 24 | 28 | 32 | 36 |
| 5 | 10 | 15 | 20 | 25 | 30 | 35 | 40 | 45 |
| 6 | 12 | 18 | 24 | 30 | 36 | 42 | 48 | 54 |
| 7 | 14 | 21 | 28 | 35 | 42 | 49 | 56 | 63 |
| 8 | 16 | 24 | 32 | 40 | 48 | 56 | 64 | 72 |
| 9 | 18 | 27 | 36 | 45 | 54 | 63 | 72 | 81 |
| 10 | 20 | 30 | 40 | 50 | 60 | 70 | 80 | 90 |
| 11 | 22 | 33 | 44 | 55 | 66 | 77 | 88 | 99 |
| 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 | 96 | 108 |
| 13 | 26 | 39 | 52 | 65 | 78 | 91 | 104 | 117 |
| 14 | 28 | 42 | 56 | 70 | 84 | 98 | 112 | 135 |
| 15 | 30 | 45 | 60 | 75 | 90 | 105 | 120 | 126 |
| 16 | 32 | 48 | 64 | 80 | 96 | 112 | 128 | 144 |

(இன்னும்வரும்.)

## வித்தியாசாலையையும் உபாத்தியாயரையும் குறித்தது.

நாம் முதலில் வித்தியாசாலையைக் குறித்தும் உபாத்தியாயர் செய்யும் முழுத்தொழிலைக் குறித்தும் விரிவானவிதமாக இயம்புவோம். அதனால் போதிக்கும் காலையில் சம்பந்தங்கள் இன்னவென்பது நமக்கு நன்றாகத்தோன்றும்.

ஒரு சிறுபட்டணத்தின் மத்தியபாகத்தில் இரண்டு தெருக்களுக்கு நடுவில் கிராதியால் சூழப்பட்ட திட்டின்பேரில் இரண்டு மெத்தையோடு கூடினதும் மனோகரமானதுமானக்கட்டடம் ஒன்றிருக்கிறது. அதற்கு நடை அறையோடு கூடினதும், உபாத்தியாயர் தொழிலுக்குரிய கருவிகள் வைப்பதற்கான சிற்றறைகளோடு கூடிய 4 - அறைகள் உண்டு. பல கணிகளுக்கும் கதவுக்கும் இடையிலுள்ள 4 சுவர்களிலும் எழுத்துப் பலகைகள் உள. ஒரு மேடைக்கெதிரில் 50 துலக்கமான சாய்ந்த எழுத்துப் பெட்டிகள் நீர்க்கசதுரமாக வரிசைப்படுத்தப்பட்ட நாற்காலிகளால் சூழப்பட்டுயிருக்கின்றன. இந்தக் கட்டடம் தான் பள்ளிக்கூடம் என்று சொல்வது. ஒவ்வொரு அறையிலுமுள்ள சாய்ந்த எழுத்து பெட்டிகளிடத்திற்கு வாரத்துக்கு 5 நாள் விதமாக வருஷத்துக்கு 9 மாதம் 9 வயது முதல் 16 வயது வரையிலுள்ள, ஒருகூட்டம்



சிறுவர்கள் வருவதுண்டு. இவர்கள் அனேக குடும்பங்களை சேர்ந்தவர்களாக
வும் பொதுவாக அவைகளின் குணத்தையும் நிலமையையும் காண்பிவிப்பது
டன் தங்கள் தங்கள் குலவாசியையும் வெளிப்படுத்துகிறார்கள்.

மேட்டின்பேரில் ஒரு வாலிபன் நின்றுகொண்டிருக்கிறான். பள்ளிக்கூட
த்தில் செலவழிக்கிற காலத்தில் ஒவ்வொருமணியிலும், அச்சிறுவர்களுக்கு
உபாத்தியாயராக தன் நினைவை அவர்களிடத்தில் செலுத்தி கவனமாய்
அவர்களை பார்த்துவருகிறான்.

இந்த பாடசாலையானது குழந்தைகளுக்கு ஒரு புதிய ஜீவனை உண்டாக்
குகிறது. தன்னுடைய சொந்த ஜீவனை உருவமைக்கிறகாலத்தில் ஒரு குழந்தை
இருக்கிறான். ஒரு விஷயத்தை பதியத்தக்கவனாகவும் தன்னுடைய தோழர்க
ளோடு சேர்வதனால் ஒவ்வொரு விதத்திலும் தன்னை மாற்ற தக்கவனாகவுமிரு
க்கிறான்; ஒவ்வொரு பிள்ளையையும் சரியான்வழியில் நடக்கக்காத்து நடத்த
வும், சரியானவிதமாய் தன்னை அடங்கிப்பழக்கவும், மற்றவர்களுடைய சுதந்தி
ரங்களையும் எண்ணங்களையும் செவ்வையாய் கவனித்து தன் சுய நன்மை
யைநாட அவர்செய்யவும், கல்விநடத்தவும், உபாத்தியாயருக்கு அதிக சாதுரி
யமும், ஞானமும், யோசனையும் அவசிகரமானது. உபாத்தியாயர் தன்மா
ணாக்கன் இப்படிப்பட்டவனென்று அறிய சக்தி உள்ளவனாகவும், பாடசா
லையைப்பற்றி ஜனங்களுக்கு உண்டாகும் அபிப்பிராயத்துக்குத் தக்கபடி நட
த்தசக்தி உள்ளவராகவுமிருக்கவேண்டும்.

ஒரேவித படிப்பை அவர்களுக்கு சொல்லிக்கொடுக்கும் வண்ணம் சக்தியு
ம் கல்வித்திறமுமுள்ள பிள்ளைகளை ஒரு வகுப்பில் சேர்த்துபாடசாலையை ஒழு
ங்கு படுத்தவேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் எழுந்திருந்து, ஒரு வகுப்பில் த
னிமையாய் தன் வேலையை செய்யவேண்டும். ஒவ்வொரு பிள்ளைக்கும் இடை
விடாமலும் தன்னாலியன்றமட்டும் தகுந்தவேலை பெறவும், எல்லாரும் ஒற்று
மைபட்டு வேலைசெய்யவும், பள்ளிக்கூடத்துவேலையை ஒழுங்கமைத்தும்
நடத்திவரவேண்டும்.

இவ்விடத்திலும் உபாத்தியாயர் ஞானத்தையும் சாதுர்யத்தையும் அதி
கமாக பிரயோகிக்க வேண்டியதாகவிருக்கிறது. இந்தவேலைக்கு பொதுவாய்
குழந்தைகளின் சுபாவத்தையும் குணத்தையும் அறியவும், ஒருவருக்கொ
ருவர் இருக்கும் எண்ணத்தையும் விஷயங்களையும் ஊகித்து பார்க்கவும், ஞாபக
சக்தியின் தோற்றமும் உபாத்தியாயருக்கு அவசியம் வேண்டும். அன்றியும்,
இராஜாங்க விதிகளை அறிந்தவனாகவும், சுதந்திரங்களை பராமரிக்கவும், பள்
ளிக்கூடத்திலிருக்கும் ஒவ்வொருவரும் தன்தன் தொழிலை செம்மையாய் செய்
யவும், இராஜாங்க விதிகளை வேண்டிய காலையில் பிரயோகிக்கவும்,
சக்தி உள்ளவனாக இருக்கவேண்டும். எல்லா விஷயஞானங்களை அறிய குழந்
தைகள் பள்ளிக்கூடத்துக்கு வருகிறார்கள். குழந்தைகள் படிப்பிக்கப்பட

வேண்டியவர்களே. அவர் வேலைசெய்யும் திறமையினுல் தான் சரியான சுரு சுருப்பையும் அவர்கள் மனதில் அறிவையும் புகட்டலாம். மனதை ஒழுங்குபடுத்தும் விதம் அவர்களுக்கு படிப்பிக்கவேண்டும். தன்னை முழுமையும் அடக்கும்படிக்கும், தன் சக்தியை சரிவர பிரயோகிக்கவும், தெளிவாய் பார்க்கவும், புத்திசாலித்தனமாக எழுதவும், செவவையாய் கேட்கவும், எளிதில் ஞாபகத்தில் வைக்கவும், விஸ்தாரமாக நினைக்கவும், பிழையற பேசவும், கிரந்த கர்த்தாவை இப்படிப்பட்டவனென்றறிந்து வாசிக்கவும், தெளிவாய் எழுதவும், கீழ்ப்படிந்து நடக்கும் வழக்கத்தையும், உழைப்பையும், ஒழுங்கையும், காலக்கிரமம் தப்பாமலிருப்பதையும், சுத்தமாக விருப்பத்தையும், எப்பொழுதும் நல்லநடக்கையோடிருக்கவும், எப்பொழுதும் தன் சுபாவத்துக்கேற்ப நன்மையைதெரிந்து நடக்கும்படிக்கும் ஆகிய இவைகளை சொல்லிக் கொடுக்கவேண்டும். பள்ளிக்கூடமானது பிள்ளைகளை ஒருசங்கத்தில் சேர்த்து நடந்து கொள்வதற்காக பழக்கப்படும் ஒரு இடமாக இருக்கிறதென்பதை நாம் காணலாம். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் அடையவிரும்புவதெல்லாங் கூடிப்படிப்பே. அந்தபடிப்பே ஜீவனத்துக்கு வேண்டுமவைகளை சேகரிக்க கற்பித்தல். பள்ளிக்கூடத்துப் பாடங்கள் ஜீவனத்துக்கு உதவிசெய்ய ஹேதுவாக விருந்தால் மாத்திரம் பிரயோசனப்படத் தக்கதாகவிருக்கும்.

மேல்சொன்னவிதம் ஒழுங்குபடுத்த உபாத்தியாயர் சிறந்ததலைவனுகவிருக்கிறான். அவன் ஒழுங்குபடுத்த சத்தி உள்ளவனுகவும், அவன் தன்பள்ளிக்கூடத்தை அடக்கி ஆளதிறமை உள்ளவனுகவும், தன் மாணுக்கருக்கு அறிவை போதிக்கும் சக்தி உள்ளவனுகவும் இருக்கவேண்டும். அவன் தன் மாணுக்கருக்கு துணையாயும், பிள்ளைகளுக்கு போதகனுகவுமிருக்கிறான்.

(இன்னும்வரும்.)



# விஷயபாட சூசிகை.

| விஷயம். | உபவிஷயம். | வழி. |
| --- | --- | --- |
| இந்துசீன தீப கல்பம். | I. இது இந்தியாவிற்கும் சீனுவிற்கும் மத்தியிலிருப்பதால் இப்பெயர்வந்தது. | ஆசியாவில் இதனிருப்பிடத்தைக் காட்டி பெடனா வரவழி. |
| I. எல்லைகள்<br>(1) வடக்கில்—சீனு, திபெத்,<br>(2) கிழக்கில் சீனக்கடல்,<br>(3) தெற்கில்—சீனக்கடல்,<br>(4) மேற்கில்—பங்காளா விரிகுடாவும், இந்தியாவும். | II. இந்தியாவில் கங்கையெப்படியோ ஐராவதி பர்மாவுக்கப்படி. | I. படத்தைச் சுற்றிலும் பார்த்து அதன் எல்லைகளைக் கண்டுபிடிக்கச்செய், அதை போர்ட்டில் நன்ருயெழுதவேண்டும். |
| II. மலைகள்—யோமாமலை, ஸியமலை, கம்போஜமலை, அன்னுமலை.<br>நதிகள்—மீகாங், மீனும், ஸல்வீன், ஐராவதி. | III. இந்தியாவைப்போல் மேல் நாடுகள் கமிர்ப்பாயும் கீழ்நாடுகள் வறட்சியாயுமிருக்கும்.<br>IV. (1) விளைவுபொருள்கள் இந்தியாவைப்போல் தான்.<br>(2) இந்தியாவுக்கு விசேஷமாய்த் தேக்குமரங்கள் அவ்விடத்திலிருந்து வருகின்றன. | II. படத்தில் மலைகளைக் காட்டச்சொல்லி அவைகளின் பேரை கண்டுபிடிக்கச் சொல்லவேண்டும் அல்லது சொல்லவேண்டும்.<br>படத்தில் நதிகளைக் காட்டச்செய்து அவைகளின் பேரைச்சொல்லவேண்டும். |
| III. சீதோஷ்ணஸ்திதி.<br>உஷ்ணமானதேசம். | கொச்சின் சைனுவில் விஸ்தாரம் கம்போடியாவிற்கிடைக்கும், | III. இந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதியைக்கேட்டு இதின் சீதோஷ்ணத்தைக் கற்பி. |
| IV. விளைவு பொருள்கள்.<br>(1) நெல், தானியங்கள், பழங்கள்,<br>(2) தேக்கு, பிரம்பு, மூங்கில், பிசின், சாயத்திரவியங்கள்—லவங்கச்செடி, மஞ்சள், பிசின் (காம்போஜ்) பருத்தி, அவுரி, கரும்பு, புகையிலை, இவைகளும் அகப்படும். | V. பர்மாவில் ஓர்பாகம் ஆங்கிலேயரைச்சேர்ந்தது. அதற்கு பிரிடிஷ் பர்மாவென்று பெயர். இப்போது பர்மா முழுமையும் ஆங்கிலேயர் பிடித்துக்கொண்டார்கள். | IV. சீதோஷ்ணத்தை அனுசரித்து விளைபொருள்களிருப்பதால், இந்தியாவின் சீதோஷ்ணமும் இதுவும் ஒன்ருகையால் விளைபொருளும் ஒன்றே என்று தெரிவிக்கவேண்டும். மஞ்சள், பிசினை, வகுப்புக்குக் கொண்டுவந்து காட்டலாம். கொச்சின் சைனு, கம்போடியா இவைகளை படத்தில் காட்டு. |
| V. பிரிவுகள்—பர்மா, ஸியம், கம்போடி, அன்னும், மலாசா. | கொச்சின் சீனு ஆனுமின் ஓர்பாகம் அதிலோர்பாகம் பிரஞ்சுக்காரரைச் சேர்ந்ததுமாக இது பலபேர் ஆதீனமுள்ளது. | V. மேற்படி பிரிவுகளை படத்தில்காட்டி பேரைச் சொல்லவும். |

| | | |
|---|---|---|
| **VI.** பட்டணங்கள்<br>(1) மாண்டலே-ஐராவதிநதியின்மேல் (2) அமராபுரி. (3) பைகோ. (4) பான்காக்—மீனும் நதியின்மேல். (5) ஹியூ. (6) ஸைகான். (7) பினங். (8) மலாகா. (9) ஸிங்கபூர்.—தீவு. (10) ரங்கூன்.-ஐராவதி நதியின்மேல். | **VI.** (1) ஆங்கிலேயருக்கு பர்மா ஆதீனமாவதற்கு முன் இது இராஜதானியும் இராஜனிருக்குமிடமுமாம்.<br>(2) இது புராதன இராஜதானி.<br>(3) ஸீயம் இராஜியத்திற்கு முக்கிய பட்டணம். சீனு தேசத்திற்கும் இதற்கும் விசேஷமான வர்த்தகம் நடக்கிறது.<br>(4) ஹியூ ஆனுமில் முக்கிய பட்டணம், பீனங் மலாகா ஸிங்கபூர் ஆகிய இம்மூன்றும் ஆங்கிலேயரைச்சேர்ந்தவை.<br>(5) இதில் பலதேசங்களோடு வர்த்தகம் செய்கிருர்கள். | **VI.** பட்டணங்களைப் படத்தில் காட்டி அவைகளைப்பற்றிய விசேஷங்களைச் சொல்லவும்.<br>பர்மாவைப்பற்றிய தற்கால சண்டையும், அதன் அரசனுகிய தீபா பிடிபட்டதையும், அவன் மதிராசில் வந்ததையும், இப்போது இந்தியாவில் சிரையில்வைக்கப்பட்டிருப்பதையும் அவ்விடத்தில் பொன்ஸிம்ஹாஸனம் வெள்ளையானை முதலானவைகளிருப்பதைப்பற்றியும் பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டும். |
| **VII.** ஜனங்கள்.<br>சென்னை இராஜதானியின் ஜனத்தொகை அவ்வளவு இதில்கூட இல்லை.<br>பாஷை.—பிரம்மீஸ், ஸீயமீஸ்.<br>ஆனுமீஸ்.—மலே என்று ஜனங்களுக்குப் பெயர்.<br>பர்ம்மாவில்.—பிரம்மிய பாஷை.<br>ஸீயாமில்.—ஸீமபாஷை.<br>ஆனுமில்—அன்னும் பாஷை.<br>மலேயில்.—மலாயா பாஷை.<br>சமயம்.<br>இவர்கள் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய மதம் புத்தன். | **VII.** இவ்வடத்திய ஜனங்கள் இந்துக்களைவிட பலசாலிகள்.<br>பௌத்த சமயமானது புத்தன் என்பவனுல் இந்தியாவில் உண்டாக்கப்பட்டு மற்ற தேசங்கள் முழுமையும் பரவியது. இதற்கும் ஹிந்து சமயத்திற்கும் வித்தியாசம் கொஞ்சமே. | **VII.** சென்னை இராஜதானியின் ஜனத்தொகையைக்கேட்டு இதின் தொகையைத் தெரிவிக்கவும்.<br>சமயம் என்ருல் இன்னதென்று விவரமாய்ச் சொல்லும் பிள்ளைகளை எச்சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்று கேட்டு பௌத்தமதத்திற்கும் ஹிந்துமதத்திற்குமுள்ள பேதா பேதத்தைத் தெரிவிப்பதுமல்லாமல் பௌத்த மதத்தின் வரலாற்றைச் சொல்லவேண்டும்.<br>பௌத்த மடங்கள் விக்கிரகங்கள் முதலியவைகளின படங்களிருந்தால் காட்டலாம். |
| **VIII.** தொழில்.—மரம் பூசுவதிலும், பெரிய மணிகள் வார்ப்பதிலும் வெகு சமர்த்தர்கள். கொச்சின் சீனுவிலுள்ளவர்கள் கப்பல் செய்வதில் வல்லவர்கள்.<br>அரசாட்சி அரசன் இஷ்டப்போல் செய்துக்கொள்ளுவது. இப்போது ஆங்கிலேயரைச்சேர்ந்துவிட்டது போலும். | **VIII.** இத்தேசத்தில் அடிக்கடி வெள்ளம் வரும். மேலும் நதிகள் மூலமாய் எல்லா வர்த்தகங்களும் நடக்கவேண்டும். இத்தேசத்தில் விளையும் பெரிய தேக்கு மரங்களும் அப்படிதான் போகவேண்டும். | **VIII.** இந்தியாவிலுள்ள அரசாட்சிக்கும் இதற்கும் வித்தியாசத்தை எடுத்துக் காட்டுக. |



விஷயபாட ஸூசிகையிலிருக்கப்பட்ட சங்கதிகளை வகுப்பில் கற்பிக்கிறப்போல்காட்டுவதற்குமுன் வகுப்பைவைத்திருக்கவேண்டிய விதத்தைப்பற்றியும் கற்பிக்கும்போது கவனிக்கவேண்டிய சிலவிஷயங்களைப்பற்றியும் சுருக்கமாய்ச்சொல்வோம்.

(1.) வகுப்பில் மேஜையிருக்கக்கூடாது.

(2.) வகுப்பை-ப-மாதிரியாய் ஏற்பாடுசெய்யவேண்டும்.

(3.) போர்ட்டை வகுப்புக்கு இடதுபக்கத்தில் வலதுபக்கமாய்த் திரும்பினுப்போல் வைக்கவேண்டும்.

(4.) நடுபென்சுகளைய போக மற்றபிள்ளைகள்முதல் கடைசி பென்சுகளில் சமமாய் உட்காரவைக்கவேண்டும்.

(5.) "பலகைகளையும், புஸ்தகங்களையும் கீழேவைக்குக" என்று சொல்ல அவரவர்களின் புஸ்தகத்தை பென்சியின் கீழேவைக்கச்செய்யவேண்டும்.

(6.) பிறகு பழயபாடத்தில் சிலபதங்களுக்கு எழுத்துக்கூட்டலும் உச்சரிப்பும் கேட்கவேண்டும்.

(7.) பழையபாடவிஷயத்தில் கேள்விகேட்கவேண்டும்.

(8.) பிறகுபுதியபாடத்தை கற்பிக்க ஆரம்பிக்கவேண்டும்.

(9.) படத்தை கீழேவிரிக்கவேண்டும். போர்டின்மேல் போடக்கூடாது. ஏனென்ருல் போர்ட்டை இதற்கு உபயோகப்படுத்திவிட்டால் விஷயங்களை எதின்மேல் எழுதுவது?

| | |
|---|---|
| உபாத்தியாயர் | இந்தியாவைக்காண்பி. |
| மாணுக்கன் | காட்டுகிருன். |

உ. அதற்குக் கிழக்கேயிருக்கும் தேசத்தைக்காண்பி? மாணுக்கன் காட்டுகிருன். உ. இதைப்பற்றித்தான் நாமிப்போது படிக்கப்போகிறதென்று சொல்லி முழுமையும் நன்ருய்காண்பிக்கவேண்டும். இதற்கு வடக்கேயிருக்கும் தேசத்தைக்காண்பி? மா. காட்டுகிருன். உ. அதன்பெயரைப்படத்தைப்பார்த்துச்சொல்லு? மா. சீனு. உ. நாம்படிக்கப்போகும் தேசத்திற்கு கிழக்கேயிருப்பதைகாட்டு? மா. காட்டுகிருன். உ. அது என்ன? மா. சமுத்திரம். மேற்கேஎன்னயிருக்கிறது? மா. வங்காளகுடாக்கடல் உ. ஆக எத்தனைபக்கத்தில்நீரிருக்கிறது? மா. மூன்றுபக்கத்தில். உ. மூன்றுபக்கத்தில் நீர்சூழ்ந்த நிலத்துக்குப்பெயரென்ன? மா. தீபகல்பம்.

உ. (தீபகல்பமின்னதென்று இந்தியாவிலேயே கற்பித்திருக்கவேண்டும்.) வடமேற்கில் என்னயிருக்கிறது? மா. இந்தியா. உ. இத்தீபகல்பத்திற்கு வடக்கே என்னயிருக்கின்றது? மா. சீனு. உ. இத்தீபகல்பம் இந்தியாவுக்கும் சீனுவுக்கும் மத்தியிலிருப்பதால் இந்து சீனதீபகல்பமென்றுபெயர். இதைக்கற்பித்தானவுடன் பரிட்சிக்கவேண்டும். இந்துசீனதீபகல்பமென்று ஏன் பெயர்வந்தது?

பின்பு எல்லைகளைக் கற்பிக்கவேண்டும். உ. இந்துசீன தீபகல்பத்திற்கு வடக்கேயென்ன யிருக்கிறது? மா. சீனு. உ. சீனுகிழக்கெல்லையைக்காண்பி? மா. சமுத்திரம் என்று காண்பிக்கிருன். உ. வங்காளத்திற்கு அடுத்தகடல் வங்காளக்குடாக்கடலென்றும் அரேபியாவுக்கு அடுத்தகடல் அரேபியாகுடாக்கடலென்று எப்படிசொல்லப்படுகிறதோ அதேமாதிரியாய் இக்கடல் சீனு

வை அடுத்திருப்பதால் சீனுகடலென்று பெயர். உ. சீனுகடலைக்காண்பி. மா. காட்டுகிறுன். உ. சீனத்திற்குதெற்கே என்னயிருக்கிறது? மா. சமுத்திரம் என்றுகாட்கிறுன் உ. இந்தியாவிற்குத் தெற்கிலிருக்கும் சமுத்திரம்தான் இவ்விடத்திலும் வியாபித்திருக்கிறது. ஆகையால் இச்சமுத்திரத்திற்கு பெயரென்ன? மா. இந்துமகாசமுத்திரம். உ. மேற்கே யிருக்கும் எல்லைகளையெல்லாம் சொல்லு? மா. வங்காளக்குடாக்கடல் இந்தியா. உ. அவைகளைக் காண்பி? மா. இந்தியா, வங்காளாக்குடாக்கடல் என்றுபெயர்சொல்லிகொண்டேகாட்டுகிறுன். பிறகு பரீட்சிக்கவேண்டும் உ. இதற்கு தெற்கெல்லையென்ன? கிழக்கு? மேற்கு? வடக்கு? வடக்கிலிருந்து எல்லைகளையெல்லாம் வலது கைப்பக்கமாய்ச்சொல்லு, கிழக்கிலிருந்து, தெற்கிலிருந்து, மேற்கிலிருந்து, மறுபடியும் இடதுகைப்பக்கமாய்க் கேட்கவும்; இந்து சீனு தீபகல்பத்தைச் சுற்றிப்போகவேண்டும், சீனுக்கடலில்புகுந்து வங்காளாக்குடாகடலிற்குப் போகவேண்டுமானுல் எந்தக்கடலைத்தாண்டவேண்டும்? இம்மாதிரியான கேள்விகள் அனேகம் கேட்கலாம். பிறகு புத்தகத்தைமூடிவிட்டு மேற்படிகேள்விகளை. திரும்பக்கேட்கலாம்.

2. உ. இ. சீ. விருக்கும் மலைகளைக்காண்பி? மா. காட்டுகிறுன். உ. யாவற்றிருக்கும் மேற்கேயிருக்கப்பட்டதைக் காண்பி? மா. காட்டுகிறுன். உ. இதற்குப்பெயர் யோமாமலை, யோமாமலையைக்காண்பி? அது எவ்விடததிலிருக்கிறது. இதற்குச்சேர்நதால்போல் இதற்குநேர்த் தெற்காயிருக்கும் மலையைக் காண்பி? மா. காட்டுகிறுன். உ. இம்மலையிருக்கும் தேசத்தின்பேரைப்பார்த்துச்சொல்லு? மா. ஸீயம் உ. இம்மலை ஸீயத்திலிருப்பதால் ஸீயமலையென்றுபெயர் உ. ஸீயத்திற்கு கிழக்கேயிருக்கும் தேசத்தின் பெயரைப் பார்த்துச்சொல்லு? மா. ஆனுல் இதிலிருக்கும் மலையைக்காண்பி அன்றுமலையைக்காண்பி? அதற்குத்தெற்கிலிருக்கும் கம்போஜாவிலிருப்பதால் அதற்கும் கம்போஜாமலை யென்றுபெயர்.

## கேள்வி கேட்டல்.

அடியில் வருமாறு விருவுதல் வேண்டும்.

1-வது. மாணுக்கர்களுக்குத் தெரிந்ததைக்கேட்டு அவர்கள் கற்றதைத் தெளிவாக்கவேண்டும்.

2-வது. அவர்கள் கொண்டிருக்கும் சந்தேகத்தைப் போக்கி, வருத்தமானதை விளங்கவைக்கவேண்டும்.

3-வது. மனதை உற்சாகப்படுத்திப் படிப்பைப் பெருகச்செய்யவேண்டும்.

4-வது. கற்றுக்கொடுத்ததை மறவாதிருக்கச் செய்யவேண்டும்.

5-வது. கேள்வி தெளிவாயிருக்கவேண்டும்; கேட்கும்போது சிறு குழந்தைகளுக்கும் எளிதில் விளங்கவேண்டும்.

6-வது. விடை சுருக்கமாயிருக்கும்படி கேட்கவேண்டும்.

7-வது. ஆம், அல்லது உண்டென்றுமட்டும் விடைசொல்லி முடிக்கும்படி கேட்பது கூடாது.



8-வது. இரண்டொரு வார்த்தைகளினுல் விடைகூறும்படி கேட்பதுங் கூடாது.

9-வது. கேள்வி படித்த விஷயத்தை நன்றுய்த் தழுவியதாயிருக்க வேண்டும்.

10-வது. புத்தகத்திலுள்ள வார்த்தைகளைக்கொண்டே கேட்பதுகூடாது.

11-வது. கேட்கும்போது தட்டுத்தடங்கலில்லாமலும், தெற்றித் தெற்றி உளரிவழியாமலுமிருக்கவேண்டும்.

12-வது. கேள்வி மாணுக்கருக்கு நன்றுய் விளங்காதிருந்தால் அதை வேறு பல சிறு வார்த்தைகளால் பொருள் விளங்கும்படி சிறு சிறு கேள்விகளாகக் கேட்கவேண்டும்.

13-வது. மாணுக்கர்களுக்குத் தெரியாததைப்பற்றிக் கேட்பதினுல் அவர்களுக்குப் புத்தி குன்றி மனச்சோர்வுண்டாகும்.

14-வது. சிறுவனைக் கேட்கும் வண்ணம் மிகவும் எளியதாகப் பெரியவர்களைக் கேட்பதுகூடாது.

15-வது. ஒருதரம் கேட்ட கேள்வி மீண்டும் அடுத்து வாராமல் எல்லோர்க்கும் பொதுவாயிருக்கும்படி கேட்கவேண்டும்.

## கீழ்ப்படிதல்.

பாடசாலையானது எல்லாவிதத்தையையுங் கற்றுக்கொள்ளுமிடமாதலால்,
அங்கே கீழ்ப்படிதல் அவசியம் வேண்டும். பிள்ளைகள் உபாத்தியாயர்க்குக்
கீழ்ப்படிந்து நடவாவிட்டால் அவர்களுடைய அவிவேகம் நீங்கி அறிவு விரு
த்தியுண்டாகமாட்டாது. இராணுவத்தலைவன் சொன்ன வண்ணஞ்செய்
யாத வீரர்கள் எவ்வாறு போர்செய்வதற்குப் பயன்படமாட்டார்களோ
அவ்வண்ணமே உபாத்தியாயர்க்குக் கீழ்ப்படிந்து நடவாத மாணுக்கர் கல்வி
யில் தேர்வது கூடாது. இவ்வுலக முழுமையும் அடங்கியிருத்தலாலேயே
நன்றுய் நிலைநிற்கின்றது. கிரகங்கள் சரியான கதியில் செல்லுவதினுலே
தான் காலவரை யறைகெடாதிருக்கிறது. குடிகள் அரசனுக்கு அடங்கி நட
வாதிருந்தால் அந்த இராச்சியம் கெட்டுவிடும். துரைத்தனம் பாழாய்விடும்.
சிலர் தங்கள் உபாத்தியாயருக்கு அடங்காமல் தங்கள் மனப்போக்கின்படியே
நடப்பது தங்களுக்குப் பெருமையென்று தப்பாய் நினைப்பதுமுண்டு. தாய்
தந்தையர்களும், உபாத்தியாயர்களும் சிறுவர்களுக்கு இவ்வாறுன கெட்ட
எண்ணம் உண்டாகும்போதே அதைக் களைந்துவிடவேண்டும். தாய் தந்
தையர், உபாத்தியாயர் இவர்களுக்கு அடங்கி நடக்கும் பிள்ளை தாங்கள்
வாழுமூருக்கு அணியாவார்கள். அப்படிக்கின்றி அடங்காதவர்களோவெ
னின், "தாய்க்கடங்காப்பிள்ளை ஊர்க்கடங்காது; ஊர்க்கடங்காப்பிள்ளை ஒரு
வர்க்குமாகாது", என்றவண்ணமாய்ச் சோற்றுக்குக்கேடும், நிலத்துக்குப் பாரமுமாவார்கள். அடங்காமையும், அராச்சியமும் உடன்பிறந்தவையாம். ஆத
லினுல் மாணுக்கர்கள் தங்கள் உபாத்தியாயர் சொன்ன வண்ணம் நடந்து,
படிக்கவேண்டிய பாடங்களைப் படித்து, எழுதவேண்டிய சட்டங்களை யெழு
தி, தம்மைப் பயின்றவர்களுக்கும், தமக்குக் கல்விபயிற்றுவித்தவர்களுக்கும்
பெருமையை யுண்டாக்கும்படி பார்ப்பது நன்று.

## பாடசாலையில் பாட நடத்துமுறை.

பாடம் நடத்தும் காலவரையறையைக்குறிப்பது வெகுமுக்கியமானது. சிலர் இதுவிஷயத்தில் முன்யோஜித்துப்பாராமல் குறித்து விடுவதுமுண்டு. பாடங்கள் எற்றகாலத்தில் குறித்தால்மட்டுமே பாடசாலையில் நன்றாய்க் கல்வியறிவு பெருகும். ஆதலினால் ஒரு பாடசாலையில் பாடங்களை நடத்தும் கால வரையறையைச் செய்யவேண்டும். அடியில் வரும்விதிகளை ஒத்து நடத்தினால் நன்றாய்ப் பயன்படும்.

1-வது. ஒருபாடத்தைச்சொல்லும்போது அதை நடத்துங் காலமானது நீடித்திருந்தால் அதனால் உபாத்தியாயர் மாணாக்கர் ஆகிய இருதிறத்தாருக்கும் வருத்தமாயிருக்கும்.

2-வது. மாணாக்கர்கள் மிகவும் சிறுவர்களாயிருந்தால் பாடங்களை உடனுக்குடன் மாற்றவேண்டும்.

3-வது. பாடசாலையில் காலையில் முதலில் ஆரம்பிக்கப்படும் பாடமானது வெகு முக்கியமானதாயிருக்கவேண்டும்.

4-வது. எந்த வகுப்பாயிருந்தாலும் அடுத்தபாடம் எளிதாயிருக்கவேண்டும்.

5-வது. சிலவகுப்புகளில் இரைந்து பாடம் நடக்கும்போது வேறுவகுப்புகள் அமைதியாயிருக்கவேண்டும்; இரண்டுவகுப்புகளில் பாடம் இரைச்சலாய் நடந்தால் அவ்விரண்டுக்குமிடையே அமைதியான வகுப்பிருக்கவேண்டும்.

6-வது. வகுப்புகளை அடிக்கடி இடம்பேர்ப்பது நன்று; அதிலும் கீழ்வகுப்புகளாயிருந்தால் பாடந்தோறும் இடமாற்றுவது நன்று.

7-வது. தலைமை உபாத்தியாயர் ஒவ்வொரு வகுப்பிலும் குறைந்தபக்ஷம் வாரமொன்றுக்கு இருமுறை தாமேபோய்ப் பாடஞ்சொல்லவேண்டும். பாடங்களை நடத்தும் கால அட்டவணையைப் பார்த்தமாத்திரத்தில் வகுப்புகள் இன்னின்ன நேரத்தில் இன்னின்னாரிட மிருக்கவேண்டுமென்பது திட்டமாய்த்தெரியவேண்டும். இந்த மயக்கமில்லாதிருத்தற்பொருட்டு இதற்கென்று தனியே ஓர் அட்டவணையை எழுதிவைத்திருப்பது நன்று.

எந்தப் பாடமாயிருப்பினும் அதை ஒருமணி நேரத்துக்குமேலே நடத்துவது கூடாது. கணிதவிஷயமான முக்கியமானபாடம் பெரியவகுப்பில் நடக்கிறதாயிருந்தால்மட்டுமே இன்னுஞ்சற்றே நீடித்துக்கொள்ளலாம்; மனிதரின் மன நிலைமைகுன்றும்படி அதிகநேரம் பாடஞ்சொல்வதுகூடாது. எந்தப் பாடத்துக்கும் சாதாரணமாய் முக்கால்மணிநேரம்போதும். இலக்கணம், பூகோளம், கையெழுத்து, சொல்லி எழுதுவித்தல் ஆகிய இந்தப்பாடங்களுக்கு அரைமணிநேரம் போதுமானது. பாடசாலையில் முதலில் ஆரம்பிக்கும்போது பாஷையிலாவது அல்லது கணிதத்திலாவது பாடஞ்சொல்வது நன்று.

THE
VILLAGE SCHOOLMASTER.
உபாத்தியாயர்.

Vol. I.] FEBRUARY, 1888. [No. 9.

## திரவிய சகாயச் சட்டம்.

பிரதி வருஷத்திலும் திரவியசகாயம் பெறுகிற பாடசாலைகளுக்குIII-வது அத்தியாயப்படி கொடுக்கவேண்டி நேரிடும் தொகையை முன்னாடியே நிதானித்து ஜில்லா கெஜட்டில் பகிரங்கப் படுத்தவேண்டுமென்றும் அவ்விதமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிற தொகைக்கு அத்தொகையுடன் 100-க்கு 10-க்கு அதிகமாக எந்தப் பாடசாலைக்கும் கொடுக்கக்கூடாதென்றும் ஷை அத்தியாயம் 57-வது பிரிவில் வியக்தமாகக் கண்டிருக்கிறது.

இந்த நிர்ப்பந்தம் வைத்திருப்பதற்குக் காரணம் யாதெனில், நாளுக்கு நாள் கல்விச்சாலைகள் அபிவிர்த்தியடைந்து வருகிறபடியால் திரவியசகாயச் சட்டத்தில் கண்டிருக்கிற தாரணைப்படி திரவியசகாயம் செய்கிறதாயிருந்தால் தொகை ஏராளமாக வேண்டியிருக்குமென்றும், கிடைக்கக்கூடிய திரவியம் கொஞ்சமாயிருப்பதால் பாடசாலைகளுக்கு முழுத்திட்டப்படி கொடுத்துவர ஆரம்பித்து சில பாடசாலைகள் ஆனமாத்திரத்தில் பணமாயிவிடு மாகையால் மற்றயபாடசாலைகள் முழு நஷ்டமடையவேண்டி நேரிடுமென்றும், அப்படிக் கில்லாதபடிக்கு திரவியசகாயம் பெறுவதற்கு அருகமுள்ள எல்லாப் பாடசாலைகளுக்கும் அதன் யோக்கியதைக்குத் தக்கபடி தாமாஷாபோட்டு இருக்கிறதொகையைப் பங்கிட்டு முன்னாடியே வரையேற்படுத்தி விடவேண்டுவது அவசியமென்றும் நல்ல எண்ணங்கொண்டு செய்திருக்கிற ஏற்பாடே தவிர வேறில்லை.

முதலில் ஏற்படுத்துகிற உத்தேசத்தொகை பெரும்பான்மை பாடசாலைகளுக்குப் போதுமானதாக விருந்தபோதிலும் சிறுபான்மை பாடசாலைகளை அடியோடு கெடுத்துவிடுகின்றது. 200-ரூ உத்தேசம்போட்ட பாடசாலைக்கு 400 ரூபாயும், 400-ரூ உத்தேசம் போட்டபாடசாலைக்கு 100-ரூபாயுமாக தொகையேற்பட்ட பாடசாலைகள் அநேகம். இப்படியேற்படுவது சாத்தியந்தானோ வென்றால், உத்தேசத்தொகை ஏற்படுத்திய காலத்தில் 100 பிள்ளைகள் இருந்த பாடசாலை பின்னிட்டு முன்னூறு பிள்ளைகளையுடையதாவதும், இருநூறுபிள்ளையிருந்த பாடசாலையில் பின்னிட்டு 50 பிள்ளைகளுக்குக்

கூட வழியில்லாமல் போவதும் ஆச்சரியமான காரியமல்ல. திரவியசகாயம் செய்யப்படுகிற பாடசாலைகள் மத்தியில் கலைந்துபோய் விடுகிறதுமுண்டு. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் உத்தேசத்திற் குறைவாகக் கொடுக்கப்பட்ட தொகை போக மற்றத்தொகை செலவாகாமல் சர்க்கார் ஆதாயத்துக்கு வரவும் ஜாஸ்தியாகக் கொடுக்கும்படி ஏற்பட்ட 100-க்கு 10 வீதம் ஜாஸ்தி போக மற்றத்தொகை பாடசாலைக்கு நஷ்டமாகவும் மார்க்கம் ஏற்படுகின்றது. இவ்விதமாக நஷ்டமடையும் பாடசாலைக்கு இதர பாடசாலைகளின் ஆதாயத்தைக்கொண்டு யாதொரு நஷ்டமும் இல்லாமலே சர்க்காரால் இட்டுரொப்ப மார்க்கமிருந்தும் 100-க்கு 10-க்கு அதிகமாகக் கொடுக்கக்கூடாது என்று வரையறுத்திருக்கிற மேலே சொன்னவிதியின் நிர்ப்பந்தத்தினால் அவ்விதமாக ஏற்பாடுசெய்ய வழியில்லாமல் போய்விடுகின்றது. உத்தேசத் தொகையை திட்டமாக ஏற்படுத்தமுடியா தாகையாலும், உத்தேசந் தப்பினால், நஷ்டமடைகிற பாடசாலைக்கு இதர பாடசாலைகளின் ஆதாயத்தைக்கொண்டு சரிப்படுத்த மேற்சொல்லிய விதியால் இடைஞ்சலாயிருப்பதாலும், அந்த விதியை, இடைஞ்சல் உண்டு பண்ணாமலிருக்கும் விதமாய்த் திருத்துப்பாடு செய்யவேண்டுவது அவசியமாகத் தோற்றுகிறது. வருஷக் கடைசியில் ஆதாயப்படும் தொகையை நஷ்டமடைந்த பாடசாலைகளுக்கு தாமாஷாப்படி பங்கிட்டுக் கொடுக்கவேண்டும் என்ற உட்பிரிவை மேலேசொல்லிய 57-வது பிரிவுடன் சேர்த்துவிட்டால் இந்த இடைஞ்சல் நிவர்த்தியாய்விடும். இதுவிஷயத்தில் உபாத்தியாயர்கள் அங்கங்கே சபைகூடிப் பேசிக் கல்விச்சங்கத்தலைவர்களைக் கேட்டுக் கொள்வார்களென்று நம்புகிறோம்.

## பாடசாலைக் கூச்சல்.

நமது இராஜதானியில் பரவியிருக்கும் சிறு பாடசாலைகள் அநேகத்திலுள்ள உபாத்தியாயர் பாடசாலைகளில் கூச்சலுண்டாவது அவைகளுக்குக் கெடுதியுண்டாக எதுவிராதென்று நினைத்துத் தாங்கள் பெருந்தொனியோடு கூடப் பாடஞ்சொல்லுவிப்பது மன்றியில் பிள்ளைகளையும் ஒருவிதராக மிட்டுப் பாடஞ்சொல்லவும், சில தருணங்களில் எல்லோரும் ஏகோபித்து உத்தரவுசொல்லவும் இடங்கொடுப்பது வழக்கமாயிருக்கிறது.

பாடசாலைகளில் கூச்சலில்லா திருப்பதற்குரிய உபாயங்களிலே சிலவற்றைப் பலருக்கும் உபயோகப்படுதற்பொருட்டு இங்ஙனம் எடுத்துரைக்கப் பட்டிருக்கின்றது.

(1) உபாத்தியாயர்தாமே, போதிக்கையில் கூச்சலிடாமலும், தூரத்திலுள்ள பிள்ளைகளோடு உரத்த சத்தமாய்ப் பேசாமலும், பெருந்தொனியோடு கூடிச் சம்பாஷணைசெய்யாமலு மிருக்கவேண்டும்.

(2) பிள்ளைகள் உரத்ததொனியோடு கண்ட கண்டபடி உபாத்தியாயரிடத்தில் பிராதுசொல்லும்படி இடங்கொடுக்கக்கூடாது; அந்தவழக்கம் மிகுதியாயிருக்கும் பாடசாலை அதிக ஒழுங்கீனமுள்ளதாக எண்ணப்படும்.



(3) உபாத்தியாயர்தாமே கூச்சலிடாது போதனை நடத்திக்கொண்டு வருகையில் மாணாக்கர் கூச்சலின்றி உத்திரவுசொல்லப் பழகும்படி செய்தல் தகும்.

(4) படிப்பிக்குந் தொழிலும் உத்தரவு கொடுக்குந் தொழிலும் சம்பாஷணைக்குரிய' சாதாரண இயல்பு தொனியமைந்திருக்கவேண்டும்.

(5) பாடசாலையில் பெருங் கூச்சலுண்டாவது வழக்கமாயிருந்தால் சில காலம் அமைதியுண்டாக்குவதிலேயே உபாத்தியாயர் கருத்துள்ளவராயிருப் பாராயின் அமைதி அவசியமுண்டாவதுமன்றி, அதன் பின் அமைதியுண் டாக்குவதில் அவ்வளவு பிரயாசமிராது.

(6) எழுதல், கணிதம் முதலிய பாடங்கள் நடக்கையில் பூரண அமைதி யுண்டாயிருத்தல் இலகுவாதலால் எக்காலத்தில் சில வகுப்புகளில் இப்பா டங்கள் நடக்கத்தக்கதாகக் காலவரையறை டாப்பு (Time Table) அமைக் கவேண்டும்; மேலும் பிள்ளைகள் இடைவிடாமல் வேலைசெய்துகொண்டே யிருக்கவேண்டுமென்பது பொதுவிதியாம்; ஏனெனில் வேலையில்லாதவர் கள் கூச்சலிடவும் துஷ்டச்செயல் புரியவுந் தூண்டப்படுவார்கள்.

(7) பாடசாலை முழுதிலும் பூரண அமைதியுண்டாகும்படி ஒரு சத்த முண்டாகத்தக்க உபாயமமைத்து, பிறகு உபாத்தியாயர் சொல்லவேண்டி யவைகளைச் சொல்லி, (Go on) 'பாடம் நடத்துங்கள்' என்ற உத்தரவு கொடுக்கும் வழக்கமிருந்தால் பள்ளிக்கூடத்தில் இன்றியமையாத ஒழுங் குண்டாவதற்கு ஏதுவுண்டு.

(8) உபாத்தியாயர் எக்காலத்திலும் ஒருமுறை மாத்திரம் உத்தரவு கொ டுக்கும் வழக்கமுடையவராயிருந்தால் பாடசாலையில் வாசிக்கும் மாணாக்கருக் குள் அமைதியுண்டாகும்.

இவ்வித உபாயங்களால் பாடசாலையில் அமைதிவிளைவிப்பது அவசியமா யினும் அளவுக்குமிஞ்சி அமைதியுண்டாதல் தகுதியன்று. வகுப்புகளெல்லாம் ஏககாலத்தில் பாட நடத்திக்கொண்டிருந்தால் கொஞ்சமாவது தொனியெ ழும்பவேண்டுவது அவசிய மாதலால் தக்கதொனியளவு இவ்வளவென்று உபா த்தியாயர் உய்த்துணர்ந்துகொள்ளவேண்டும். பாடம் நடந்துகொண்டேயிருக் கையில் (Drill) பிள்ளைகளை வலதுபுறம், இடதுபுறம், முன்புற நோக்கித் திரும்பல், நகர்தல், இருத்தல், முதலிய பழக்கமடையும்படிசெய்தல் ஒருவாறு கூச்சலடங்குவதற் கேதுவாவதுமன்றி, ஒழுங்குண்டாகவும் தீவிரமாய் வேலை முடியவும் மேதுவாகும், ஆகவே உபாத்தியாயர் இவ்வித பழக்கம் மாணாக்க ருக்கு அமைத்துவைக்கும்படி கருத்துள்ளவரா யிருத்தல்வேண்டும்.

## சிறுவர் கல்விப்பயிற்சி III.

குழந்தைகளிடத்தில் காணப்படுகிற ஒன்றுபொதுவானகுணம் யாதெனில், கவனமாக் கண்ணுக்குத் தென்படும் ஒவ்வொருவஸ்துவும் குழந்தை களின் விருப்பத்தைக் காணப் படுகிறதாதலால், அதை விவரமாக அறிய வேண்டுமென்கிற ஆசை உண்டாகின்றது. ஆசையினாலே தான் குழந்தை

கள் தங்கள் கண்ணுக்குத் தென்படும் வஸ்துக்களைத் தொட்டுத் தடவித் தூக்கிப் பார்த்து அதென்ன இதென்னவென்று கேட்கின்றனர். அந்தக் கேள்விகளுக்கு பதில்சொல்வது தொந்தரவு என்று குழந்தைகளைச் சும்மாயிருவென்று சொல்வோமே யானால் இந்த உலகத்தைப் பற்றி நீங்கள் ஒன்றும் தெரிந்து கொள்ள வேண்டாம், ஒன்றையும் பார்க்கவும், கேட்கவும் வேண்டாம், மூடர்களாகவே யிருங்கள் என்று சொல்வது போலாகும். அப்படிக்கின்றிக் குழந்தைகள் கேட்ட மாத்திரத்தில் நல்ல அறிவைப் புகட்டுவதற்கு இதுவே நல்ல தருணம் என்று தீர்மானித்து, பார்த்தல், கேட்குதல், மோர்தல், ருசித்தல், தொடுதல் ஆகிய ஐம்புலன்களையும் குழந்தைகள் தாங்களே சரியாகப் பிரயோகித்தும், நன்றாய் யோசனை செய்தும், அநுபவமாகப் பரீக்ஷைகளைச் செய்து பார்த்தும், கண்ணில்படும் ஒவ்வொருபொருளினுடையவும் பெயர், தன்மை, உபயோகங்களைத் தெரிந்து கொள்ளும்படி, ஏவிவருவோமாகில் அதனால் உண்டாகும் நன்மைகள் விசேஷமானது. ஐம்புலன்களை பிரயோகித்தும், யோசனைசெய்தும், அநுபவமாகப் பரீட்சைகளைச்செய்து பார்த்தும், பொருட்களின் பெயர், தன்மை, உபயோகம், இவைகளைத் தெரிந்து கொள்ளுவது சாத்தியந்தானென்றும், அப்படிப் பொருட்களின் பெயர், தன்மை, உபயோகங்களைத் தெரிந்து கொள்வதினால் குழந்தைகளுக் குண்டாகும் பிரயோஜனங்கள் இப்படிப்பட்டதென்றும் ஒருவாறுவிளக்கிக் காட்ட முயல்வோம்.

கண்ணினால் பார்ப்பதினால் தன் கண்ணுக்கெதிரில் பொருள் இருக்கிறது அல்லது இல்லை யென்பதையும், கண்ணில் தென்படும் பொருட்களின் உருவம், சாயல், நிறம், இவைகளையும் ஒரு குழந்தை தெரிந்து கொள்ளலாம். பந்து மேஜையின் பேரிலிருக்கிறது என்பதும், அது எலுமிச்சம் பழத்தளவு உள்ளதென்றும், அம்மானையைப்போல உருண்டையாயிருக்கிறதென்றும், மஞ்சள் நிறமாயிருக்கிறதென்றும், அதைப்பார்த்தால்மட்டில் தெரியுமே யொழிய மற்றபடி தெரியமாட்டாது. பார்த்த பொருளின் பெயர் பந்தென்பது பிறர் சொல்லக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமே யொழிய சுயமாய்த் தெரிந்து கொள்ளக் கூடியதல்ல. சந்தனம் நல்ல வாசனையுடைய தென்பதையும், கசுமாலஜலம் துர்நாற்ற முள்ள தென்பதையும் மோர்தலால் அறியலாமே யொழிய அப்படித்தெரிந்து கொள்ள வேறு வழியில்லை. இதுபோலவே ஒரு பொருள் தித்திப்பாகவும், மற்றொரு பொருள் புளிப்பாகவும், வேறொன்று உவர்ப்பாகவும் இருக்கிறதென்பதும் ருசிபார்த்தே தெரிந்து கொள்ளவேண்டும். பின்னும் ஒன்று கடினமானதும் மற்றொன்று மிருதுவானதும், ஒன்று காங்கையானதும் மற்றொன்று குளிர்ச்சியானதும், ஒன்று கனமானதும் மற்றொன்று இலேசானதும், ஒன்று கட்டியானதும் மற்றொன்று தளாளதுமாகப் பொருள்கள் பலபேதப்பட்டிருக்கின்றனவென்பது பொருள்களைத் தொட்டுப் பார்த்தே தெரிந்து கொள்ள வேண்டும். இவ்விதமாகப் பொருள்களின் தன்மை ஐம்புலன்களையும் பிரயோகித்தே தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறதென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோலிருக்கின்றது. பொருட்களின் தன்மையைத் தெரிந்து கொள்ளுகிறதினால் அவர்களுக்குண்டாகிற பிரயோசனமென்ன வென்பதை யோசித்துப் பார்ப்போம். பொருட்களுக்குரிய சரியான தன்மையை அறிகிறதினால் தான் அப [illegible] னேகவிதமாய் பிரயோசனப் படுத்த ஏது உண்டாகிறது. போஜனம், வஸ்திரம், [illegible] வீடுமுதலி [illegible] ருட்கள் சிறுவர்களுக்கு மிகவும் பிரயோஜன முள்ளவை [illegible] சேஷபம் இல்லை. அவைகளில் போஜன பதார்த்தங்களின தன்மை [illegible] யாமல் சிறுவர்கள் உட்கொள்வார்களாகில் அதனால் அவர்கள் சுகத்திற்கும்



ஜீவனுக்கும் மோசங்கள் சம்பவித்துவிடும். போஜனபதார்த்தங்களின் தன்மை தெரிந்திருந்தால்தான் சிறுவர்கள் இது பிரயோஜனமுள்ளது, இது தீங்குள்ள தென்று பகுத்தறிந்து நல்ல உணவை உட்கொள்ள ஹேது உண்டாகும். உதாரணமாக மனுஷன் புல்லைச்சாப்பிடுவானா வென்பதையும், அல்லது மாட்டுக்கு மாமிசத்தைப் போடலாமா வென்பதையும் சிறுவர்கள் தெரிந்து கொள்வதற்காக அவைகளின் தன்மை யின்னதென்று அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டுவது அவசியம்.

மேலும் வஸ்திரங்கள் சிறுவர்களுக்கு மிகவும் அவசியமானவைகளாயிருக்கின்றன வென்று சொன்னோமல்லவா. பொருட்களின் சரியான தன்மையை அவர்கள் அறிந்திருந்தால் மட்டும் தகுதியான வஸ்திரங்களை அவர்கள் சம்பாதித்துக் கொள்ள இடமுண்டாகும். பருத்திநூல் புடவை அல்லது வேஷ்டிக்குப் பதிலாகக் கடுதாசு அல்லது இலைகளை நாம் தரிப்போமானால் அதினால் நமக்கு எவ்வளவு தொந்திரவுசேரிடும்? மிகவும் குளிர்ந்தகாலத்தில் பருத்தி நூல் அல்லது பட்டு நூல் உடைகளையும், அதிக உஷ்ணகாலத்தில் பிளானல் அல்லது கம்பளித் துணி உடைகளையும் நாம் உபயோகப் படுத்தினால் எவ்விதமாயிருக்கும்?

பின்னும் நெருப்பும் அவசியமானபொருளே. வைக்கோலைக்கொளுத்தி நெருப்பு உண்டாக்கி விறகுக்குப்பதிலாக கல்லுகளை உபயோகித்தால் நெருப்பு எரியுமா? விறகு எரியக்கூடிய வஸ்து வென்பது நமக்குத்தெரிந்திருக்கிறதினாலல்லவா இஷ்டமானபோது அதைப் பிரயோகித்து நெருப்புண்டாக்கி எவ்வளவு நேரத்திற்கு அவசியமோ அவ்வளவு நேரமும் எரிந்துகொண்டிருக்கும்படிசெய்ய ஏதுவாயிருக்கிறது.

கடைசியாக வீடுகளும் நமக்கு அவசியமானதுதான். பொருட்களின் சரியான தன்மையை அறியாவிட்டால் சவுக்கியமான வீடுகளை கட்டுவதற்கு இடமிராது. பச்சை மண்ணினால் சுவர்களைக்கட்டினால் அவைகள் மழைகாலத்தில் மிகவும் ஈரமுள்ளவைகளாகவும் உஷ்ணகாலத்தில் வெடிப்புள்ளவைகளாகவும்போம். மேலும்வீடுகளுக்கு ஓடுமுதலியவைகளைக்கொண்டு மேற்கூரைபோடாமல் கடுதாசுகள் அல்லது துணிகளைக்கொண்டு வீடுகளைமூடினால் ஒரே ஒரு பலத்தமழை பெய்யுமானால் அவ்வீடுகளுக்குள் வாசம்பண்ணுகிறவர்களுக்கு எப்படியிருக்கும்?

இந்த திருஷ்டாந்தங்களினால் பொருட்களின் தன்மைகளைச் சிறுவர்கள் அறிந்திருக்கவேண்டியது அத்தியாவசியமென்றும், அப்படி அறிந்திருந்தால் மட்டில் பொருட்களை அநேகவிதமாய் உபயோகப்படுத்தக் கூடுமென்றும் நாம் தெரிந்துகொள்ளுகிறோம். ஆகையால் சிறுவர்களிடத்தில் இயற்கையாயுள்ள பொருட்களைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற விருப்பம் பின்னிட்டு அவர்களுக்கு அளவிறந்த நன்மைகளைக் கொடுக்கத் தக்கதாயிருக்கிறதென்றும், பால்யந் தொடங்கி அந்த விருப்பத்தை நல்ல வழியில் செலுத்தி [illegible] சொல்ல விட்டு புதிது புதிதான அநேக உண்மைகளைத் தெரிந்துகொண்டு அறிவு விர்த்தி யடையும்படியான வழியில் அவர்கள் நடத்தப்பட வேண்டுமென்றும் நமது சென்னைத் துரைத்தனத்தார் தீர்மானித்து, அவ்விதமாக அறிவு விர்த்தி செய்வதற்கும் திரவியசகாயம் செய்வதாக

திரவியசகாயச் சட்டத்தில் விஷய மூலப்பயிற்சி அல்லது பொருட்பாடம்
என்ற பாடத்திற்கும் திரவியசகாயம் செய்யப்படுமென்பதாகக் கண்டிருக்கி
றது. இந்த உபயோகமுள்ளபாடத்தில் பிரதிவகுப்பிலும் பயிற்றுவிக்கப்பட
வேண்டிய அம்சங்கள் இன்னதென்பதையும் அவைகளைப் போதிக்கவேண்
டிய மாதிரியைப்பற்றியும் அடுத்த சஞ்சிகையில் விவரிக்கப்படும்.

## உபாத்திமை தொழிலின் சிறப்பு.

எத்தொழிலினும் உயர்ந்தது உபாத்திமைத் தொழிலென்று முன்னொரு
சஞ்சிகையில் சொல்லியிருக்கிறோம் அனேககாலம் உபாத்திமைத் தொழில்
மிகச் சிறப்புடன் நடாத்திவந்த ராமசுவாமி அய்யர் இறந்தகாலத்தில் அந்
நாட்டுக் குடித்தனக்காரர்கள் அவர்செய்துவந்த நன்மையை யோசித்தும், அ
வர்நடந்துகொண்ட நன்மாதிரியை எண்ணியும், அவர்ஞாபகம்தங்களுக்கு இரு
க்கக்கருதி, அவர்போல் சிலைவார்த்து அச்சிலை வைக்கும் பீடத்தில் "உபாத்தி
யாயர் ராமசாமிஅய்யர்" என்று எழுதியிருப்பதை வழிப்போக்கராகிய எம்
போன்ற உபாத்தியாயர் ஒருவர் பார்க்குங் காலத்தில், இத்தொழிலைக்குறி
த்து அவர் மனதில் எவ்வித எண்ணம உண்டாகுமென்பதை யாம் எழுத முய
ாது இப்பத்திரிகையைப் படிக்கும் நேயர்கள் மனதில் எண்ணிக்கொள்ளும்
படி விட்டுவிடுகிறோம். ராமசுவாமி அய்யர் தம் ஆயுள்காலம் செலவழித்த வித
ம் யாம் யோசிக்குமளவில் சிலைப் பீடத்தில் உபாத்தியாயர் என்றமைந்து இரு
க்கும் வார்த்தையின் அர்த்தம் பூர்ணமாய்ப் புலப்படுகிறது. அப்பெருமை பட்
டத்துக்கு அவர் சுதந்தரவாளன்று என்று சொல்பவர்யாவர்? ஆனால் நமக்குத்
தெரிந்த உபாத்தியாயரில் எத்தனைபெயருக்கு இவ்வரும் பட்டம்தகும்? அ
னேக இடங்களில் உபாத்திமைத்தொழிலின் சிறப்புக் குன்றிபோயிற்று. இது
தப்பென்று மறுத்துச்சொல்வதெம் கருத்தன்று. உபாத்தியாயாயிருப்பது கௌ
ரவ ஈனமென்று பலர் நினைக்கிறார்கள். என்னபோயும்போயும் 'வாத்தி'த் தொ
ழிலாசெய்கிறீர் என ஈனமாய்க்கேட்பவர் பலர். இதற்குக் காரணம் என்ன
வென்றுசற்றுக் கவனிப்போம். உபாத்தியாயர் தொழிலின் அருமை பெருமை
யும்,அத்தொழிலை செய்ய முயல்வோரிடத்தில் இருக்கவேண்டிய குணவிசேஷங்
களையும் சற்றேனுமறியாமல் உபாத்தியாயர் எனனும் பட்டத்தை வகித்து
வருபவரின் எண்ணிக்கை சிறிதோ? நல்லவேலை யகப்படுமளவும் உபாத்தி
யாயராயிருக்கலாம் என்னும் எண்ணத்துடன் கூடின சிறுவர்களால் இத்தொ
ழிலுக்குச் சிறப்புண்டாகுமோ? சாப்பாட்டுக்கில்லாத ஈனசாதிப் பெண்பிள்
ளைகள் மிகச் சொற்பகல்விகற்று, தம்மைப்போல் சிறிது கல்விகற்றவர்க
ளும் மேலதிகாரிகளுமாகிய ஆங்கிலேய பெண்பிள்ளைகளிடம், புலமைப்ப
ட்ட (certificato) பெற்று உபாத்தியாயிகளாகு மவர்களால் இத்தொழிலு
க்குச் சிறப்புண்டாகுமோ? இவர்களால் இத்தொழிலின் மதிப்புக்குன்றுமேய
ன்றிப் பெருமையுண்டாகாது. நல்ல உபாத்தியாயருக்கு பொருந்திய குணம்
யாதொன்றுமில்லாமல் பணவாசை உடையவர்களாய் இவ்வுத்தியோகம் செய்
பவர் அனேகர் உளர். கற்பிப்பதின் முறை சிறிதேனு மறியாதவர்கள் கூட
இத்தொழிலில் பெரும் உத்தியோகம் வகிக்கிறார்கள். அறிவைக்குறித்த
சாஸ்திரத்துக்கும், அவ்வறிவை விர்த்தி செய்யவேண்டிய பழக்கத்துக்கு
முள்ள சம்பந்தம் தெரியாதவர்களாயுமிருக்கிறார்கள். கற்பிக்கவேண்டிய



பாடங்களை மட்டும் அறிதல் உபாத்தியாயருக்கு போதாது. கற்பிக்கு முறை
ளையும், மனிதர்களின் இயற்கையைக் குறித்த அறிவும், மனிதர்களிடத்தும்;
அவர்கள் குடும்பத்தினிடத்தும், விசுவாசம் உடையவர்களா யிருக்க வே
ண்டும். மேலும், பூர்ணமாயும் கிரமமாயும் மனதை விர்த்திசெய்ய அறிந்திருத்
தல் வேண்டும். திடமனதும், எச்சங்கதியையும் நன்றாய் கிரகிக்கும் புத்தி கூர்
மையும், தெளிவான அறிவும், தன் தொழிலின் பெருமையை உயர்த்துவ
தில் அதிக நாட்ட முடையவராயு மிருக்கவேண்டும். ஒருவருக்கு இக்குண
ங்கள் அமைந்திருந்தாலொழிய உபாத்தியாயர் வேலைக்கு அருகரல்லர் எனப்
பெற்றோர்களும், இன்ஸ்பெக்டர்களும் உணர ஆரம்பிக்குமளவும் நம் தொழி
லுக்குச் சிறப்புண்டாவதரிது.

சிறந்த உபாத்தியாயர்கள் வேண்டு மென்கிற சித்தாந்தம் அங்கீகரிக்கப்
பட்டால் அவர்கள் சம்பள விஷயத்துக்கு கூடவே க்ஷேமோட்சம் கிடைக்கும்
உபாத்தியாயர்களுக்குச் சம்பளமிகவும் கொஞ்சம் கொடுக்கப்படுகிறது. ஒரு
உத்தியோகஸ்தன் வீட்டில் சமையல்செய்பவனுக்குச் சாப்பாடுடன் 7, 8 ரூ.
வரையில் சம்பளம் கொடுக்கிறார்கள். சாப்பாடு மட்டில் குறைந்தது
ரூ. 5 ஆகும். ஆகத்தணிந்த சம்பளம் ரூ. 12. இப்பத்திரிகைவாங்கும் உபாத்தி
யாயர்களில் இந்தச் சம்பளத்துக்குக் குறையாமல் வாங்குபவர்கள் எத்தனை
பேர்? அய்யோ? உபாத்தியாயர் வேலை சமையல் செய்யும் வேலைக்கும்
தாழ்ந்ததோ?

சரியாய் வித்தை போதிப்பதின் நிலைமையை உயர்த்துவதற்கும், உபாத்
தியாயர்கள் கண்ணியங்காரவியமாயிருக்கச் செய்வதற்கும் வழி இதுவோ?
ஒவ்வொருதொழிலும் உலகத்தாரால் மதிக்கப்படுவது தாம் பெறும் ரூபாயின்
தொகையாலல்லவோ? பொருள் குவையன்றோ அண்டை அயலாருக்கு
மதிப்பு உண்டாக்குவது? நாகரீகம், வித்தை, நற்செய்கைகள் உண்டாவது
பொன்னாலல்லவா? தற்காலத்தில் உபாத்தியாயருக்குக் கொடுக்கப்படும் சம்
பளம் நாடோடியாய் ஜீவனம் செய்தவற்கே போதும் போதாமையாகும்.
உபாத்திமைத் தொழிலில் தேர்ந்தவனுக்கு இந்தச் சம்பளம் போதாது. மேலும்
அவர்கள் அதிகமாகப் பெற உரியவர்களாயிருக்கிறார்கள். இவ்வுபாத்தியாய
ருக்குச் சாப்பாட்டுக்கு மட்டுங்கொடுத்தால் பின்வருவனவற்றுக்கு எங்குபோ
வார்? பள்ளிகூடப் பாடபுத்தகங்கள், இன்னும் வேண்டிய புத்தகங்கள்,
தன் தொழிலைக்குறித்தும், லோகவிடயங்களைக் குறித்தும் பிரசுரமாகும்
பத்திரிகைகள், நல்ல உணவு, சுத்தமான உடுப்பு, குடியிருக்க நல்ல ஜாகை
இவைகளெல்லாம் அத்தொழிலுக்கு பிரதானமானவைகளாம். இவைகளெல்
லாந் தானங் கொடுப்பாராரோ? இவைகளில்லாமல் தன் புத்தியையும்,
தொழிலையும் விர்த்திசெய்வ தெப்படி? ஆகையால் தன் தொழிலின்
பயிற்சியில் தேறவும், லோகத்துக்கு உபயோகமாயிருக்கவும் ஆகிய இந்த
அவசியகரமானவைகளுக்கெல்லாம் பணமே ஆதிகாரணமாகையால் 'இப்
பாழும்பணம்' பிரதானமாய் வேண்டுமளவு இல்லாவிட்டால் என்செய்வது?
தன் தொழிலில் பிரியமுள்ளவரும், தன் வித்தையின் விர்த்தியைக் கருது
வருமான உபாத்தியாயர் தம் தொழிலுக்கு சம்பந்தமான புஸ்தகங்களை
யும், பத்திரிகைகளையும் படித்து தான் பாடஞ்சொல்லவேண்டிய வழி
களை அறிவதிலும், முறமுறப்பான உடுப்புகள் உடுத்திக்கொள்ளுவதிலும், மிக்க
தன்னைச் சூழ்ந்திருப்பவைகளை சுத்தமாய் வைத்துக்கொள்ளுவதிலும்,

நாட்டமுடையவராயிருப்பர். புத்தகத்தைப் படிக்கக்கற்றுக் கொடுப்பது மட்டுமேயன்றி, தான் நடந்துகொள்ளும் நடத்தைபோலும், தான் உடுக்கும் உடுப்புப்போலும், தான் வசிக்கும் மாதிரிபோலும், பிள்ளைகளும் பார்த்து நடக்க ஏதுவாக விருக்கவேண்டும். பிள்ளைகளின் நடத்தையைச் சீர்ப்படுத்த முயல்வதே நல்ல உபாத்தியாயரின் பெருங் குணமாம். இது வீட்டிலானாலும் சரி, பள்ளிக்கூடத்திலானாலும் சரி; உபாத்தியாயருக்கு நல்லசம்பளம் கொடுப்பது அவர் விர்த்திக்கேயன்றி பிள்ளைகளின் விர்த்திக்குக் கூட நன்மையாம். நல்ல உபாத்தியாயர்கள் பணவாசையால் வேலைசெய்யாவிட்டாலும், நல்ல கூலிகொடுப்பதால் வேலையை மிகவும் நன்றாய்செய்ய வேலைக்காரனுக்கு இஷ்டமிருக்குமென்பது எல்லோரும் அங்கீகரிக்கக் கூடியவிஷயமே. பாடம் நன்றாய்ச் சொல்லிக் கொடுப்பதென்றால் பள்ளிக்கூடம்நல்லபள்ளிக்கூடமென்றும், பிள்ளைகள் நன்றாய்ப் போதிக்கப்படுகிறார்கள் என்பதுமேயாம்.

(இன்னும்வரும்.)

## உபாத்தியாயர் மாணாக்கரோடு நன்றாய்ப் பழகியிருக்கவேண்டும்.

உழவன்தான் உழுது பயிர்செய்யும் பூமியின் கூறுபாட்டை அறிந்தாலல்லாமல் அதில் பயிரிடுவதும், தோட்டம்வைப்பதும் நன்றாய்ப்பயன்படாது. அவ்வாறே உபாத்தியாயர் தமது மாணாக்கர்களின் தன்மையை அறியாது பாடஞ்சொல்லுவதினால் சிறிதும் பயன்படமாட்டாது. மாணாக்கர்களின் நிறைவை அறிந்துகொள்ளாமல் தமது மனப்போக்கின்படியெல்லாம் பாடஞ்சொல்லுவதினால் என்ன பயனுண்டாகும்? உபாத்தியாயர் வகுப்பிலுள்ளோர் யாவரையும் பாடத்தை நெட்டுருப்போட்டு ஒப்பிவிக்கவேண்டுமென்றால் அது சாத்தியப்படுமா? ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் சக்தியிருக்கும். உபாத்தியாயர் அந்தச்சக்தியை அறிந்து அதற்குத்தக்கபடி பாடஞ்சொன்னால் மட்டுமே தப்பாது பலிக்கும். பெரும்பான்மையாய் உபாத்தியாயர்கள் மாணாக்கர்களின் குணகுணங்களை யறிந்துகொள்ளாமல் பாடஞ்சொல்லப் புகுவதினாலே தான் பட்ட பிரயாசமெல்லாம் வீணாய்விடுகிறது. சிறு பிள்ளைகள் அறியாமையால் ஏதேனுங் குற்றஞ்செய்தால் அதைக் குற்றமென்றுகொண்டு அதற்காக அவர்களைத் தெண்டிப்பது அறியாமையேயாம். சில உபாத்தியாயர் மாணாக்கரின் தன்மையை அறிந்துகொள்ளாமல் அவர்களைப் பகைக்கின்றதனால் அவர்கள் ஆயுள் காலமெல்லாம் அவர்களை வெறுக்கிறதுமுண்டு. ஒரு இடையன் தன் மந்தையிலுள்ள ஒவ்வொருமாட்டின் தன்மையை அறிந்து அந்த மந்தையை நன்றாய் அடக்கி மேய்த்துவருகிறதை நாம் பார்க்கவில்லையா? ஒவ்வொரு உபாத்தியாயரும் தமது பாடசாலையிலுள்ள சிறுவர்களின் தன்மையை அறிந்துகொண்டபின்பு பாடஞ் சொல்லப்புகுந்தால் அது சிறிதும் வீண்போகாது. நாம் சிறுவர்களைக் கண்டிக்கும்போது, நாம் சிறுவர்களாயிருந்தகாலத்தில் நம்மை நமது உபாத்தியாயர் கண்டித்தது நமக்கெப்படியிருந்ததென்பதை நினைத்துப்பார்க்கவேண்டும். நமது குழந்தைகள் நமக்கு எவ்வாறு நடக்கின்றனவென்பதையும் பார்த்துக்கொள்ளவேண்டும். இவற்றையெல்லாம் அறிந்து



கொண்டால் தான் உபாத்தியாயர் தமது மாணாக்கர்களெல்லோரையும் புத்திரவாஞ்சையோடு நடத்திப் பிரசித்திபெறுவது எளிதாயிருக்கும். பாடஞ்சொல்லும்போது கண்ணுங்கருத்தும் எங்குமிருக்கவேண்டும். நாம் சொல்லும்பாடமானது அவர்களுக்கு இனிமையாயிருக்கிறதென்பதும், இல்லையென்பதும் அவர்கள் முகக்குறிப்பினால் நன்றாய்விளங்கும். மாணாக்கரை அன்பாய் நடத்துவதே சிறந்தது. நல்ல உபாத்தியாயர் தமது மாணாக்கர்களைப் பாடசாலையிலோ அல்லது வெளியிலேயோ எங்கேகண்டாலும் அவர்களைக்கண்டு முகமலர்ச்சி கொண்டு பேசவேண்டும். மாணாக்கர்கள் தங்கள் உபாத்தியாயரைக் காணுந்தோறும் அவர்களுக்கு ஆசையுண்டாகும்படி தக்கவண்ணமாய்ப் போதிப்பவரே சிறந்த உபாத்தியாயராவார்.

“உவப்பத்தலைக் கூடியுள்ளப்பிரித
லனைத்தே புலவர் தொழில்.”

## நல்ல உபாத்தியாயர்.

“நல்ல தாய்தந்தையர்களையும், சிறந்த உபாத்தியாயரையும் நான் பெற்றிருந்தது கடவுளுடைய அருளினாலேயாம். ஏனெனில், நான் எனது தாய் தந்தையர்களுக்கு எதிரில், பேசினாலும், மௌனமாயிருந்தாலும், நின்றாலும், சென்றாலும், உண்டாலும், உறங்கினாலும், இன்புற்றிருந்தாலும், துன்புற்றிருந்தாலும், தெய்த்தாலும், விளையாடினாலும், குதித்தாலும் அல்லது இன்னும் வேறென்னசெய்தாலும் பயபக்தியோடு செய்யவேண்டுமேயல்லாது மற்றப்படியல்ல; நான் எந்தவிஷயத்திலானாலும் சிறிதேனும் பிழைசெய்வதைக்கண்டால் அவர்கள் எவ்விதத்திலாயினும் என்னைக் கண்டித்துத் தண்டியாமலிரார்கள். நான் எனது உபாத்தியாரிடம் பாடங்கேளாத காலமெல்லாம் எனக்கு நரகவேதனையாயிருந்தது; அவர் எனக்குப் பாடஞ்சொல்லும்போது அது அமிர்தம்போலாய், பொழுதுபோகிறதுந் தெரியாமலிருந்தது.” என்றுரோகர் ஆஸ்சம் என்னும் பண்டிதர் தாம் அனுபவித்தறிந்தபடி எழுதிவைத்திருக்கிறார்.

## மேகத்தைப்பற்றிய பாடம்.

1-வது. மேகத்தின் தோற்றம்—மேகம் நமது தலைக்குநேரே ஆகாயத்திலிருப்பது. அது சிலவேளைகளில் சிறிதாயும், சிலவேளைகளில் மிகப்பெரிதாயுமிருக்கும். சில சமயங்களில் மேகத்துக்குமேலே மேகமும், அவ்விரண்டிற்குமிடையில் ஆகாயமிருப்பதுமுண்டு. மேக[illegible] வேறு வேறு வடிவுங்கொண்டிருக்கும். [illegible] மாறினவண்ணமாயி[illegible]. அப்படியே அவ்வுருவங்கள் [illegible], பெரியது சிறிய[illegible]றுவதுமுண்டு. ஒவ் [illegible] சிறியது பெரிய[illegible] ஆகாரமளவும் பரந்திருப்பதுமுண்டு. சில சமயங்களில் அடர்ந்திருக்கும். சிலவேளைகளில் மிகமெல்லியதாயிருக்கும். சிலவேளைகளில் உபாயமாய்ப் பூசினாற்போலப் பட்டை பட்டையாய்ப்பல

நிறமுடையதாயிருக்கும். கோடைகாலத்தில் மேகங்கள் வெவ்வேறு உருக் கொண்டு ஆகாயத்தில் சலிப்பதைக்காண்கையில் எவ்வளவு அழகாயிருக்கும்!

2-வது. மேகத்தின் உபயோகம்.—மேகங்கள் எப்பொழுதும் சலித்துக் கொண்டேயிருக்கின்றனவே; அதேனப்படி? அவைகள் காற்றினால் அவ் வாறு கொண்டுபோகப்படுகின்றன. மேகத்தைப் பார்ப்பதினால் காற்றினது வேகம் இவ்வளவென்றுதெரியும்; சில சமயங்களில் மேகத்தின் அசைவு கண் ணுக்குப் புலப்படாமல் வெகு மந்தமாய் அசையும்; அப்படிக்கின்றி வேறு சில சமயங்களில் வெகுவேகமாய்ச்செல்லும். அவைகள் எதைக்கொண்டு போகின்றன? மழைபெய்வது, பனிக்கட்டிவிழுவது, ஆலங்கட்டி மழை பெய்வது எல்லாம் மேகத்தினின்றேயாம். கடலிலுள்ள ஆவியை இழுத்துக் கொண்டுவந்து பூமியில் மழையாகப்பெய்யும். இவ்வாறு மழைபெய்யாவிடில் என்ன? எல்லாம் நஷ்டம்

"விசும்பிற்றுளி வீழினல்லான்மற்றாங்கே
பசும்புற்றலை காண்பதரிது."

என்றபடி இவ்வுலகில் மழையில்லாவிட்டால் புல்லும்முளைக்கமாட்டாது.

மலைகளிலே பெய்கிறமழையானது பூமியில் நன்றாய்க்கசிந்து ஊற்று களாகவும், ஆறுகளாகவும்பெருகி உலகத்தாரை உஜ்ஜீவிக்கும். நமக்கு மே கமில்லாதிருந்தாலென்ன? மேகமில்லாதிருந்தால் உலகம் பாழ்த்துப்போகும். ஏனெனில், அதுதான் மழையாகப்பெய்கிறது. கோடைகாலத்தில் ஒவ்வோர் சமயங்களில் கார்மேகம் ஆகாயத்தில் ஒரே பெருங்கூட்டமாய்க்கூடி நிழலிட் டுச் சூரியனைமறைப்பதை நீங்கள் பார்த்ததில்லையா? மழைகாலத்திலோ வென் றால் சில வேளைகளில் சூரியனைக் கண்ணிற்பட வொட்டாமல் அந்தகாரமாய் மறைத்துவிடுவதுமுண்டு. ஒவ்வோர்வேளைகளில் மேகப்படலமானது வெ யில்மறைந்து உடம்பின்மேலே படாமல் குடைபோலமறைப்பதுமுண்டு.

## உபாத்தியாயர் கவனிக்க வேண்டிய சிலவிஷயங்கள்.

பின்சொல்வனவற்றில் அநேக சங்கதிகள் நடவடிக்கையில் கொண்டு வருவது சாத்தியமில்லாதவைகளாகத்தோன்றினும், நம் தொழிலைக்குறித்து மனதுருகி, இத்தொழிலின் பழக்கத்திலுள்ள கஷ்ட நிஷ்டூரங்களைநாம் வெளிப்படையாக நம்முடைய சாதகத்துக்கு எடுத்து விளக்கியிருக்கிற மகான்களுடைய அபிப்பிராயங்களைகண்டறிந்து, நம்மாலியன்றமட்டும் அச் சித்தாந்தங்களை அனுபவத்திற்குக் கொண்டுவருவது நமதுகடமை என்பது எமது அபிப்பிராயம்.

கோயதி என்பவர் சொல்வதாவது:—மிகவும [illegible] யாயும் புத்தி யை அதிக நுட்பத்துடன் பிரவேசிக்கச்செய்யும் [illegible] வைகளாயு முள்ளவைகளைக்கொண்டு திர்ப்தி அடைவதற்கு விரும்புகிறவைகளாயு கள் எண்ணம் செல்லும். இப்படிச்செய்வதால் புத்தியும், தீவிரமும் மழுங்



படும்; விந்தையும் பூர்ணமுமடைந்தவைகளில் ஞாபகம் பிரவேசியாது போம்; ஆனாலோ பின்சொன்னவைகளை அறியும் சக்தியை எவ்விதத்தேனும் வளரச்செய்ய முயலவேண்டியது ஒவ்வொருவர்கடமை. இன்பமுண்டாக் கத்தக்க இப்படிப்பட்ட அனுபவங்களை அனுபவியாது இருக்கயாருக்குத் தான் மனமொப்பும்? முதல் திறமானவைகளை ஆண்டு அனுபவித்து ருசி பார்க்காததால் தான், புதியவையாயிருந்தால் போதுமென் றெண்ணி வேறான்றி தெரிகொளிராத அற்பவிஷயங்களில் அனேக ஜனங்கள் சந்தோ ஷமடைகிறார்கள். இவ்விதமாக நெடுந்தூரஞ்சொல்லி, பிரதி மனிதனும், பிரதிதினமும், ஒரு சிறிய பாட்டுக்கேளாமலும், ஒரு சிறிய வெண்பாபடிக் காமலும், லட்சணமமைந்த ஒருபடத்தைப் பாராமலும், கூடுமானால் ஞாயா யத்துடன் சில வார்த்தைகள் பேசாமலுமிருக்க வொண்ணாதென்றுமுடிக்கிறார்.

உபாத்தியாயர்களாகிய நாம் இவ்விஷயங்களைப் பிரதிதினமும் ஞாப கத்துக்குக் கொண்டுவராமலிருத்தல் பிசகாகும். ஊர்க்குருவி சத்தமானாலும், சங்கீதம் காதில் தினேதினம் விழாமலிருக்கக்கூடாது. சிறியதானாலும், நற்கு ணம் போதிக்கும் வெண்பாவொன்று படிக்காமலிருக்கலாகாது. ஆலயத்தினு டைய அல்லது, போர்க்களத்தினுடைய படமொன்று கிடைக்காவிட்டாலும், அந்நலத்தை மனக்கண்ணாலாவது பார்வையிடவேண்டும். பேசுதற்குதக்க சிநேகிதர்களகப்படாவிட்டால் நம்முடைய மாணாக்கர்களிடத்தாவது பேசும ளவு நியாயத்துக்குட்பட்டு புத்தி சாதுரியமாய்ப் பேசவேண்டும். தினக்கட் டளையாகிய சங்கீதம், வெண்பா, படம், அறிவிற்சிறந்த வார்த்தைகள் எங்கு கிடைத்தாலும் அவ்விடஞ்சென்று தப்பாமல் அனுபவித்துவந்து, அவைகளை விசிதமாகப் பிறருக்கு வெளிப்படுத்தக் காலம்வரும்போது, நமக்கு மிக்க சந் தோஷமும் அறிவுமளித்த இவ்விலையற்ற ஆஸ்தியை நமது மாணாக்கருடன் நா மும் அனுபவிக்கவேண்டும். இவ்விஷயங்களைப் போதிக்குங்காலையில் நாமனு பவிக்குஞ் சந்தோஷத்துக்கு குறையாமலும், சில சமயங்களில் அதிகமாக வும், வகுப்பிலுள்ள மாணாக்கர்கள் சில வேளைகளில் உணருவதுண்டு. நெடு நாளும் ஞாயாபகமிருக்கும்படி அவர்கள் மனதில் சங்கதிகளை உணரச்செய் தற்குத் தருணமிதுவே. மனதிற்குச் சந்தோஷமும், கண்ணுக்கு நாணயமும் உடைய வஸ்துக்களை மனதில் பதியச்செய்வதற்கும் தருணமிதுவே; இத னால் நெடுநாளு மிருக்கத்தகுந்த ஒரு இன்பத்தை உண்டாக்குவதுந்தவிர, இதுபோன்ற வேறனேக இன்பங்களை உண்டாக்குங் கருவியாகும்.

ஒருவர்வீட்டுக்கு மற்றொருவர் வந்தகாலத்தில் நடக்கும் மரியாதையா லும் அன்பாலுமே ஒருவருக்கொருவர் பெரியவர்களில் சிநேகமுண்டாவது. தன் சிநேகிதர்களிடத்தில் நடந்துகொள்ளு மரியாதைபோல், தங்களையும் உபாத்தியாயர் நடத்தவேண்டுமென்கிற விருப்பம் மாணாக்கர்களுக்குண்டு. உபாத்தியாயர் நல்லெண்ணத்துடனும், மரியாதையுடனும் மாணாக்கர்களைச் சந் திக்குங்காலையில் அவர்களைச் சரிசமானமாய்நினைத்து அவர்களிடத்தில் பேசி னால், அதிலேயே அவர்களுக்கு ஒரு ஆனந்தம். இளைப்பாறும்பொருட்டு, சந் தோஷகரமும் தேகவலிமைக்கு சாதகமுமான வேலைகளில் (விளையாட்டுக ளில்) மாணாக்கர்களுடன் உபாத்தியாயர்கலப்பதினால் அவர்களுக்கு உண்டா கும் சந்தோஷம் இவ்வளவவ்வளவல்ல. மேலும், தன் வகுப்பில் படிக்கப்ப ட்ட பிள்ளைகளில் பெரியவர்களாயும் புத்தி கூர்மையுள்ளவர்களாயு மிருக்கிற மாணாக்கர்களைக் காலையிலாவது, விடுமுறை நாள்களிலாவது தன் வீட்டுக்கு

வரச்சொல்லி வேடிக்கையாயும் அறிவை விர்த்திசெய்யத் தக்கதாயுமுள்ள புத்தகங்களைத்தான் படிக்க அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கச்செய்யலாம். மேலும் தன் மாணாக்கர்களை வீட்டுக்கு விருந்தினராக வரவழைத்துத் தான் எழுதியிருக்கும் படங்களையும், தான் சேகரித்திருக்கிற சாமான்களையும் அதனதன் உபயோகத்தையும் அவர்களுக்குப் போதிக்கலாம். ஆனால் பள்ளிக்கூடத்தில் கற்பித்தது போதாதற்கு இவ்விடத்திலும் போதிக்கவேண்டுமென்று யாம் சொல்லவில்லை. உபாத்தியாயர் பேசுவதுபோல் பேசவும், அவர் நடப்பதுபோல் நடக்கவும், இன்னும் அவர்செய்யும் ஒவ்வொரு காரியம்போலும் தாமும் செய்யவேண்டுமென்கிற ஆவல் சிறுவர்களுக்கு அதிகமாக உளதாகையால், தான் நடந்து கொள்ளுகிறவிதமும், தாம் தம் ஓய்வுவேளைகளைச் செலவழிக்கும் மாதிரியும் அவர்களுக்குத் தெரிவிக்கும்பொருட்டு யாம் கூறினது. மேலும் இப்படிச்செய்வதில் பள்ளிக்கூடத்தில் கற்கும் வித்தையைவிட எண்மடங்கு அதிகமாகப்பள்ளிக்கூடத்துக்கு வெளியில் கற்கலாம் என்னும் சங்கதி உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அவர்கள் மனதில் பதியும். உபாத்தியாயர்செய்யும் விஷயங்களின் ஒவ்வொன்றும் சிறுவர்களுக்குத் தெளிவாய் அறியச்சக்தி இல்லையென்றாலும், தினம் தினம் செய்வதைவிடப்புத்தியிலும், கௌரவத்திலும் அதிகமானவிஷயங்கள் அனேகங் கற்கவேண்டியிருக்கிறது என்னும் விஷயம் அவர்கள் உள்ளத்தில் இருந்தால் போதுமானது.

(இன்னும் வரும்.)

## ப்ரோபெல்.

(முன்தொடர்ச்சி, பக்கம் 101.)

நாம் இறுவாயில் ப்ரோபெலாசிரியரின் வாழ்நாளைப்பற்றிச் சொன்னோம். இனி அவர் வித்தியாவிஷயமாக இவ்வுலகத்தாருக்குச் செய்த வேலை பெற்ற நன்மைகளனைத்தையும் ஒருவாறு விஸ்தரித்துச் சொல்லப் புகுவோம். கோட்பாடு, அநுஷ்டானம் என்று அவர் கொள்கை இருவகைப்படும்; இவ்விரண்டும் ஒன்றேயாம்; அது எவ்வாறெனில், கோட்பாடு பிழையுள்ளதாயிருந்தால் அதை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து பார்க்கும்போது அதனோடு அது சரியாய்வராது; அவ்வாறே அநுஷ்டானத்துக்கு ஏறு சரியாய்வராதேல் அது கோட்பாடாகாது தான்.

எல்லாம் கடவுளினிடமிருந்தே உண்டாகின்றன; அவை யாவும் அவராலேயே வரையறுக்கப்பட்டிருக்கின்றன; எவற்றிற்கும் இறைவன் கடவுளே என்பது அவர்கொண்ட முதலாவது கோட்பாடு. இந்தச் சித்தாந்தத்தைப் பரவச்செய்யும்படித் தான் அவர் தமது ஆயுள் காலமெல்லாம் உழைத்தார். இதை ரோமர் என்னும் ஞானியார் விதித்த விதியோடொத்துப் பார்ப்பது நன்று.

கடவுளின் செயலாலே தான் சராசரப் பொருள்கள் காணப்படுகின்றனவென்பது அவர் கொண்ட இரண்டாவது தத்துவம்.



கடவுள் எங்குமிருந்து வேலைசெய்துகொண்டே யிருக்கிறார்; அவர் செய்யுஞ் செயலுக்கு மறைவு கிடையாது; பொருள்களின் இயற்கையே அவர் என்பது அவர் கொண்ட மூன்றாவது தத்துவம்.

ப்ரோபெலாசிரியர்கொண்ட கொள்கை மிகச்சிறந்தது; அது உண்மையோ அல்லவோ என்று நாம் சிறிதும் சந்தேகப்படவே வேண்டாம். அவர் கொள்கையின் அருமையை அக்காலத்திலுள்ளோர் அறிந்துகொள்ளமாட்டாமையினாலேதான் அவர் பெருமை அப்பொழுது நன்றாய்ப் பலிப்பதற் கிடமில்லாமற்போயிற்று.

இவ்வுலகம் ஓர் பாடசாலை; மனிதன் அதில் கல்விபயிலும் மாணாக்கன்; ஆ இவ்வுலகம் ஓர் பாடசாலை எவையெனின்: பாடசாலையிலினால் அவன் அறிந்துகொள்ளவேண்டியவை எவையெனின்: பாடசாலையினால் மனிதனுக்கு என்ன பயனுண்டாகும்; மனிதனென்பதென்ன? அதனால் மனிதனுக்கு என்ன பயனுண்டாகும்; மதவிஷயமானபடிப் பென்றாலென்ன? படிக்கத்தக்க விஷயங்களெவை? கணித நூலைக் கற்பதனாலுண்டாகும் பௌதிகசாஸ்திரமென்றாலென்ன? கைத்தொழில்களின் பயனென்ன? பாஷைகளைக் கற்பதெப்படி? இவ்வுலகத்தின் இயற்கையைப்பற்றி ஆழ்ந்துபார்ப்பதனால் நமக்கறிவுண்டாவதெப்படி? ஆகாயத்தின் தன்மை எப்படிப்பட்டது? பலவகையான நிறங்களைப் பகுத்தறிந்து கொள்ளுவதெப்படி? விளையாட்டுகளென்னும் கதைகளைப் படிப்பதேன்? சிறிதுதூரமளவும் அல்லது நெடுந்தூரமட்டும் போய் வருவதினாலுண்டாகும் பயனென்ன? ஒன்று முதலிய இலக்கங்களை யறிவதனாலாகும் பயனென்ன? அவ்வாறே சதுரம், வட்டமுதலிய உருவங்களை யறிந்துகொள்ளவேண்டியதேன் என்கிற பலவிஷயங்களைப் பயின்று அவற்றை யாவர்க்கும் நன்றாய் விளக்கிக் காட்டும்படி ஏற்ற நியாயங்களால் இவை முற்றும் உண்மையென்று நன்றாய் விளக்கிக்காட்டுவார். சிறு குழந்தைப்பருவந்தொட்டே மனிதர் கல்விபயில வேண்டுமென்பது அவர் திண்ணமாகக் கொண்ட கோட்பாடு.

> "தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை
> தெண்ணீர்க்கயத்துச் சிறுமீன் சினையினும்
> நுண்ணிதேயாயி மண்ணல் யானை
> அணிதேர்ப் புரவியாட்பெரும் படையொடு
> மன்னர்க்கிருக்க நிழலாகும்மே."

என்று பெரியோருரைத்தவண்ணம், ஒரு குழந்தை மிகச் சிறிதாயிருப்பினும் இவ்வுலகத்தில் அற்புதமானவற்றைச் செய்யத்தக்க சாமர்த்தியம் அதனிடத்தில் அது பிறந்தது முதற்கொண்டே யிருக்கிறது. ஆனால் அது அப்பொழுது வெகு சூக்ஷ்மமாக விருக்கும். நுண்ணியதாகிய ஓர் ஆலம் வித்தை நாம் நல்ல பூமியிலிட்டு, அதற்குச் சிறிது தண்ணீர் வார்த்துவந்தால், அந்த வித்து மிருதுவாகி, முளைக்க ஆரம்பித்து, ஒரு முளை பூமிக்குட்சென்று, அதன்ஸாரத்தையுண்டு, நன்றாய் நிலத்திற்பரந்து, ஆழ்ந்து, வேராகின்றது; மற்றொரு முளைமேல்நோக்கிச்சென்று அந்த வித்தினின்று பூமிக்குள்ளே செல்லுகின்ற வேர்கள் உட்கொள்ளுகின்ற பூமியின் ரசத்தினாலும், தான் மேலே சென்று சூரியனுடைய வெப்பம், மழை, காற்று, ஒளி முதலியவற்றால் மரமாக ஓங்கி வளருகின்றது. அதன் பின்பு அந்தமரம் மிகப்பெரிதாகி ஆகாயத்தை முட்ட

வளர்ந்து, சாகோபசாகையாய்ச் செழித்துத் தளிர்த்துக் காய்த்துப் பழுத்துக்
குலுங்கும். ஒவ்வொரு பழத்திலும் ஆதியில் நாம் நிலத்திலிட்ட வித்தைப்
போல் எத்தனையோ வித்திருக்கும். அவ்வித்துகள் ஒவ்வொன்றிற்குள்
ளும், வேர், மரம், இலைகள், முகிழ்கள், காய்கள், கனிகள், வித்துகள் எவ்
வாறு அபிரிமிதமாயுண்டாகின்றன? சிறுவரும் இத்தன்மையானவரேயாம்.
ஆதியில் ஆலம்வித்தை நல்ல பூமிலேவிதைத்தால்மட்டும் அது நன்றாய்முளைத்
துத்தளிர்த்துச் செழித்தோங்கும்; அப்படிக்கின்றிக் களர் நிலத்திலானால்
பயன்படாது. இவ்வாறேஇவ்வுலகத்திலுள்ள ஒவ்வொருசிறுவரும் வித்துக்குச்
சமானம்; பற்பலவாகியவித்துகளை நல்லஸாரக்ஷேத்திரத்திலிட்டுப் பயிர்செய்
தால் எவ்வாறு சிறந்ததோட்டமாகுமோ, அப்படியே ஒவ்வொரு சிறுவரையும்
பிறந்தது முதற்கொண்டு அவர்கருத்துக் கிணங்கத்தக்க வண்ணமாய் நல்ல
ஆசிரியர்கள் அவர்களுக்குப் பாலசிக்ஷை செய்து வருவார்களேயாயின் "இளை
மையிற்கல்" என்ற ஔவை வாக்கியத்தின்படி அவர்களுக்குக் கல்வியறிவு நன்
றாயுண்டாகும். இவ்வாறு குழந்தைப் பருவமுதற்கொண்டே, மானிடத்தன்மை
இத்தன்மையதென்று அதன் கூறுபாடுகளையெல்லாம் பகுத்தறிந்த உத்தம
உபாத்தியாயர்களால் விளையாட்டைப்போலப் போதிப்பிக்கப்படுவதே சிறந்த
பாலசிக்ஷை. இப்படிச் செய்யவேண்டுமென்பதுதான் ப்ரோபெலாசிரிய
ரின் கொள்கை. ப்ரோபெலாசிரியர்காலத்திலே இதன் அருமையையும் பெரு
மையையும் அறியவல்லவர் மட்டாயிருந்ததனால், இதற்கு அவர்காலத்தில் அத்
தனைபிரசித்தி யில்லாமலிருந்தது; கல்வி கேள்விகளால் மிகுந்த சீர்திருத்
தம்பெற்றிருக்கிற இக்காலத்தில் இதன் பெருமையைக்கண்டு இவ்வுலகமெ
ங்கும் இந்தக்கொள்கையே சிறந்ததென்று இதைஎப்போதும் போல அநுஷ்
டித்துக்கொண்டு வருகின்றமையால், இதுவே சிறந்தபாலசிக்ஷையென்றுயார்க்
கும் கரதலாமலகம்போலவிளங்குகின்றது.

(இன்னும் வரும்.)

## பரீட்சைகள்.

பரீட்சைகளினால் உபயோகமுண்டென்றும் இல்லையென்றும், கெடுதி
யுண்டென்று மில்லையென்றும் அனேக விதமாய்த் தர்க்கிக்கலாம். சில விஷ
யங்களில் அவைகளால் மிகவும் நலமிருக்கிறதென்று உறுதியான காரணங்க
ளினால்ரூபிக்கலாமென்றாலோ, அவைகளால் பிரயோசனமில்லையென்பதற்கும்
தகுந்த காரணங்கள் கூறலாம். இவ்விஷயத்தைக்குறித்து தர்க்கிக்கும்
தீர்க்கதெரிசியாயிருப்பவர்கள் இருகட்சிக்கும் உள்ள ஞாயங்களை யெ
டுத்துரைத்து, பரீட்சைகளால் வித்தியாபிவிர்த்தியின் நல்ல எண்ணங்க
ளைக்கெடுப்பதற் கிடமுண்டென்றும் இல்லையென்றும் சொல்லி முடிப்பது
வழக்கம். ஆனால் நமது கடைமையோ, அவைகளால் விளையும் நன்மை
களையும் கெடுதல்களையும் சீர்தூக்கிப்பார்த்து, நமக்கு எவ்வளவுவரையில் நன்
மையுளதோ அவ்வளவுதூரம் அவைகளை உபயோகப்படுத்திக்கொண்டு,
கெடுதலென்று தோன்றும் பொழுதெல்லாம் கைவிட்டுவிடவேண்டும்.

அனேகச் சிறுவர்கள் கஷ்டப்பட்டுப் படிப்பதற்கு பரீட்சை தூண்டு
கோல்போல் உதவுகிறது என்பது அநுபோகமுடைய பிரதி உபாத்தியாயருக்
கும் தெரிந்தவிஷயமே. படிப்பின் ஆசையால் படிப்பவர் சிலர், போதிக்



கும் இனிய வண்மையால் அனேகரை படிப்பாகிய ஆகாரத்தை, ஆசையாகிய
பசியினால் தேடிச் சாப்பிடும்படிச் செய்யலாம். இப்படிப்பட்ட விஷயங்களில்
உபாத்தியாயருக்கு விசாரமில்லை. தங்களாலியன்றமட்டும் வித்தையைக் கற்
றுக்கொள்ளச் செய்யும் பொருட்டு மாணுக்கர்களுக்கு ஆசை மூட்டுதற்குரிய
இனிமையுடன் கற்பிப்பதற்கு ஒவ்வொரு பாடமும் தகுந்ததல்ல. மேலும்
அவர்கள் ருசிக்கேற்றாப்போல் வித்தையைச் சமையல்செய்யச் சக்தியுள்ளவர்
கள் சிலர் தான். தான் படிப்பதினால் அநுபவிக்கிற இன்பத்தின்பொருட்டு
மாணுக்கர்கள் படிக்காவிட்டால், இவர்களிடத்தில் வேலை வாங்குவதற்கு
வருஷக் கடையில்வருகிற பரீட்சையினாலுள்ள சாதகம் மற்றவைகளால் கி
டைக்கமாட்டாது. இப்பரீட்சையில் தங்கள் சிநேகிதர்களைவிட செம்மையா
ய்த் தேறவேண்டுமென்கிற ஆசையினால் அவர்கள் வகுப்பில் எடுத்துக்கொள்
ளுகிற சிரத்தை இவ்வளவவ்வளவல்ல.

ஒரு வகுப்பிலிருந்து மேல்வகுப்புக்கு மாற்றுவதற்குத் தகுதியுள்ளவனா
வென்று கண்டறியப் பரீக்ஷைசெய்யும் ஏற்பாடுபெருத்த அபாயகரமானதாயி
ருக்கின்றது. இது விஷயமாக நம்முடைய கோட்பாடுகள் மிகவும் தீர்மானமுள்
ளவைகளாகவே யிருக்கின்றன. மாணுக்கன் மேல்வகுப்புக்கு மாற்றப் படத்
தகுதி உள்ளவனாவென்று பரீட்சையின் முடிவினாலேயே தீர்மானிக்க வேண்
டுமென்பதில் எமக்கு நம்பிக்கையில்லை. மேல் வகுப்புக்கு மாற்றும் விஷயத்
தில் சொற்ப சாமர்த்தியத்தை, அல்லது ஞாபக சக்தியை எவ்வளவு கவனிக்
கிறோமோ அதேவிதமாக முயற்சியோடு படித்ததையும் கவனிக்கவேண்டும்.
மாணுக்கன் படித்ததை எவ்வளவுதூரம் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கி
றானோ அதைப்பார்க்கிலும் பொதுவாய் அவனறிவு விர்த்தி யடைந்திருப்ப
தைக்கொண்டே அவனுடைய யோக்கியதையை கணக்கிடவேண்டும். மா
ணுக்கர்கள் தெளிவாய் யோசிப்பது, படித்ததை ஞாபகத்துக்கு விரைவு
டன் கொண்டுவருவது, தடங்கலன்றி மறுமொழிகூறுவது ஆகிய இவைக
ளில் அவர்களுக்குள்ள சக்தி ஒரேமாதிரியானதல்ல; பலதரப்பட்டது; ஆகை
யால் இதுவிஷயத்தையும் நன்றாய்யோசிக்க வேண்டும். எல்லோருக்கும்
கடவுள் ஒரேவிதமான அறிவை அளிக்கிறதில்லை; ஆனால் இந்தபரீட்சை ஏற்
பாட்டில் இதுவிஷயங்களையும் நிலைமைகளையும் கவனிக்கிறதேயில்லை. பரீட்
சை செய்பவர் தாம் நடத்தும் பரீட்சையின் முடிவினால் மாத்திரமன்றி, சிறு
வர்கள் எப்படிப்படித்துக்கொண்டு வந்தார்களென்கிற விஷயத்தையும், அவ
ர்களின் சக்தியையும், யோசித்து மேல்வகுப்புக்கு மாற்றவேண்டும். அப்
படிச் செய்தால்தான் மேல்வகுப்புக்கு மாற்றுவதற்குகூட பரீட்சை நடத்
துவது நல்லகாரியமாகும். பரீட்சை ஒருதூண்டுகோலாக வைத்துக்கொள்
ளலாம். ஆனால் மேல்வகுப்புக்கு மாற்றுவதற்கு வேண்டிய யோக்கியதையை
அறியவேண்டுமானால் முக்கியமாய் மாணுக்கன் முயற்சியுள்ளவனா என்பது,
தினந்தோறும் சரிவரபடித்தவன்தானா வென்பது, பொதுவாய் நல்லநடத்
தையுள்ளவனா வென்பது முதலியவைகளையே ஆதாரமாகக் கொள்ளவேண்
டும். சுருக்கிப்பேசுவோமானால் பரீட்சை செய்கிறது சிறுவர்கள் படிப்புக்கு
நல்லதூண்டுகோலாய் இருக்கலாம்; வழக்கத்திலும அப்படித்தான் இருக்கின்
றது. ஆகிலும் அதையேகொண்டு நாம் நிச்சயமாய்த் தீர்மானிக்கவுங்கூடாது.
தீர்மானிக்க அது நல்ல கருவியுமல்ல. மேலும் ஊக்கமுடைய உபாத்தியாயர்
அவ்விதமாகவே செய்யக்கடவர்.

## கதைசொல்வது.

சாதுரியமாய்க் கதைசொல்வது மனத்தேற்றத்திலொன்றாம். கதைசொல்வதென்றால் பொழுது போகாத வீட்டுப்பெண்பிள்ளைகள் சொல்லிக் கொள்ளும்கதையல்ல. ஆனால் வகுப்பில் உபாத்தியாயர் அப்படிப்பட்ட கதைகள் சொல்லக் கூடாதென்பதுமல்ல. சொல்லும் சாதுரியம் மிகவும் ஆவசியகரமானது. உபாத்தியாயர் கதைசொல்லும் பொழுது தன் கதையைக்கேட்கும் மாணாக்கர்கள் தங்கள் ஞாபகத்தை வேறெங்கும் பிரவேசிக்க விடாமல் கதையின் இன்பநுபவத்தில் ஆழ்ந்து முழுகிக்கிடக்கச் செய்ய வல்லவராயின், பள்ளிக்கூடத்தில் சந்தடி யில்லாமையையும், பிள்ளைகளின் கவனத்தையும் வகிக்கப் பெருஞ்சக்தியுண்டாகும். கதைகேட்பவர்கள் பரவசமடையும்படி செய்வதும் ஓர்சக்தியாம். எல்லோருக்கும் சங்கீதஞான மிருப்பதரிது. அப்படி யிருப்பவரிலும் சங்கீத வித்துவான்களாய் இருப்பவர்கள் இன்னும்சிலர்: அதுபோலவே கதைசொல்லும் வித்துவான்களும் சிலர்தானிருப்பார்கள். இப்பழக்கத்திலும் தேர்ச்சி அடைதல், வேறு விஷயங்களுக்கு அநுகூலமா யிருக்குமாதலால், இவைகளைக்குறித்த சிலவிஷயங்களை பின்னெடுத்து உரைத்தலாயினது.

கேட்பவர்களின் கவனத்தை வசியப்படுத்திக் கொள்வதெப்படி? கதைகள் புத்தியையும், ஞானத்தையும் விர்த்திசெய்யக் கூடியதா யிருக்கவேண்டுமேயொழிய, துன்மார்க்க விஷயங்கள் அடங்கினதாயிருக்கக் கூடாது. மேலும் கதை சொல்பவன் கதை முழுமையும் சந்தேகங்களில்லாமல் அறிந்திருக்கவேண்டும். நன்றாய் அறிந்திராவிட்டால், தட்டுத் தடுமாறுகளும், பிழைகளும் உண்டாகும். அப்படியாவதால் மாணாக்கர்களுக்கு வெறுப்புண்டாகும். கதையின் சந்தர்ப்பங்களும், நடந்தகாலமும் இடமும், சங்கதிகளும் கதையில் வருபவர்களின் பெயர்களு மட்டுமறிந்திருந்தால் போதாது. பாஷையிலுள்ள வார்த்தைகளெல்லாம் பிரயோகித்தாலும் பிறருக்கு அறிவிக்கக்கூடாத மறைந்திருக்கும் உண்மையையும், ஸ்வாரஸியத்தையும் கிரகிக்க வேண்டும். உடலுக்கு ஆத்துமாபோல் கதையின் முக்கியபாகமெதுவென உணரவேண்டும். கதை சொல்லுகையில், கதையாகத்தோற்றாமல் வாஸ்தவத்தில் அதைநேரில் பார்ப்பவர்க்கு என்ன எண்ணங்க ளுண்டாகவேண்டுமோ அப்படிப்பட்ட எண்ணங்கள் உண்டாகும்படி சொல்லவேண்டும். சங்கதிகள் மட்டுந் தெரிந்திருந்தால் போதாதென்று முன்னமே சொன்னோம். கதையின் படிப்பினைதான் முக்கியம். அப்பொழுதுதான் மாணாக்கருக்குச் சொன்னால், உபாத்தியாயருக்கும் பிரயோஜனமுண்டு. கேட்கிறவர்கள் மனதிலும் எடுத்துக் காட்டாமலே பதியும்.

(இன்னும்வரும்.)



THE
VILLAGE SCHOOLMASTER.
உபாத்தியாயர்.

Vol. I.] MARCH, 1888. [No. 10.

## கதைசொல்வது.

(தொடர்ச்சி.)

ஆனால் கதை எதுவிஷயமா யிருக்க வேண்டுமென்பதைச் சற்றுகவனிப்போமாக. குழந்தைகள் சாதாரணமாய்ச் சொல்லிக் கொண்டிருக்கும் கதைகள் அவ்வளவாகப் பயன்பட மாட்டா. தேச சரித்திரங்கள், முற்கால தற்கால மகான்களுடைய சரித்திரம், விநோத கட்டுக்கதைகள், முதலானவைகளைக் குறித்திருப்பதே மேலானவைகளாகும். அவைகளைப் படிப்பவர்களுக்கு சொற்பமானதன்றி ஆழ்ந்த அறிவையே உண்டாக்குகின்றன. அவைகள் தானாகவே படிப்பினையை அறியும் சக்திஉண்டாக்குகின்றன. மேலும் படிப்பினை இன்னதென்று அறிவதற்கு அதிகபிரயாசை எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. சரித்திரம், பூகோளம், பலவாசகங்களை சேர்த்தெழுதச் செய்தல், முதலிய பாடங்கள் கற்பிக்கும்பொழுது உபகதைகளை எடுத்துச் சொல்வதற்குத் தக்க சந்தர்ப்பங்கள் நேரிடும். இவ்விதம் உபகதைகள் சொன்னால்தான் அந்தப்பாடங்கள் மாணாக்கர்களுக்கு வெறுப்புண்டு பண்ணாமல் இன்பந்தருவதாகும். பள்ளிக்கூடத்துக்குப் போகாத காலத்தில் சில சமயங்களில் மனத்தளர்ச்சி யுண்டாகும். அப்பொழுது ஏதாவது ஒருகதைகேட்க ஆவலுண்டாகும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் அதிகமாக உண்டாகாதபடிக்குச் செய்வது உபாத்தியாயர் கடமை. கேட்பவர்களுக்கே அறிவுபெருகுகிறதென்றால், சொல்பவருக்கு இன்னும் அதிகமாகவே பெருகு மென்பதற்குச் சந்தேகமில்லை. சொல்லும்பொழுது எளிதான நடையிலேயே பேசவேண்டும். அப்பொழுதுதான் கதையின் ஸாரம் இன்னதென்று கவனமாய்க் கேட்பவர்கள் அறியக்கூடும். 'மூத்தோர் சொல் வார்த்தையமிர்தம்' என்பதுபோல உபாத்தியாயர் சொல்வதெல்லாம் உண்மை யென்றே நம்புவது சிறுவர்களின் சுபாவம். ஆகையால் தாம் கதைசொல்வதற்கு தகுதியுள்ளவரோ அல்லவோ என்கிற அச்சம் தம் மனதில் உண்டாகி தம்மாலியன்றமட்டும் தக்கவண்ணமாய்ச் சொல்ல முயல்வது, தன் தொழிலில் நாட்ட முடைய உபாத்தியாயரின் நற்குணமாகும். நற்கதைகளனேகம் சொற்பதினங்களுக்

குள் அறிவது கூடாமையாகையால், அப்படிப்பட்ட கதைகளனேகத்தை அறிந்து சொல்லுகிறவர்களுக்கும் கேட்கிறவர்களுக்கும் உண்டாகும் நன்மை இவ்வளவுதானென்று கணக்கிடுவது கூடாமை. இது திண்ணம்.

## கணக்கு.

(தொடர்ச்சி)

### பைசாவாய்பாடு.

| பை. | அ. | பை. | பை. | அ. | பை. | பை. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | 1 | 1 | 41 | 3 | 5 | 69 | 5 | 9 |
| 14 | 1 | 2 | 42 | 3 | 6 | 70 | 5 | 10 |
| 15 | 1 | 3 | 43 | 3 | 7 | 71 | 5 | 11 |
| 16 | 1 | 4 | 44 | 3 | 8 | 72 | 6 | 0 |
| 17 | 1 | 5 | 45 | 3 | 9 | 73 | 6 | 1 |
| 18 | 1 | 6 | 46 | 3 | 10 | 74 | 6 | 2 |
| 19 | 1 | 7 | 47 | 3 | 11 | 75 | 6 | 3 |
| 20 | 1 | 8 | 48 | 4 | 0 | 76 | 6 | 4 |
| 21 | 1 | 9 | 49 | 4 | 1 | 77 | 6 | 5 |
| 22 | 1 | 10 | 50 | 4 | 2 | 78 | 6 | 6 |
| 23 | 1 | 11 | 51 | 4 | 3 | 79 | 6 | 7 |
| 24 | 2 | 0 | 52 | 4 | 4 | 80 | 6 | 8 |
| 25 | 2 | 1 | 53 | 4 | 5 | 81 | 6 | 9 |
| 26 | 2 | 2 | 54 | 4 | 6 | 82 | 6 | 10 |
| 27 | 2 | 3 | 55 | 4 | 7 | 83 | 6 | 11 |
| 28 | 2 | 4 | 56 | 4 | 8 | 84 | 7 | 0 |
| 29 | 2 | 5 | 57 | 4 | 9 | 85 | 7 | 1 |
| 30 | 2 | 6 | 58 | 4 | 10 | 86 | 7 | 2 |
| 31 | 2 | 7 | 59 | 4 | 11 | 87 | 7 | 3 |
| 32 | 2 | 8 | 60 | 5 | 0 | 88 | 7 | 4 |
| 33 | 2 | 9 | 61 | 5 | 1 | 89 | 7 | 5 |
| 34 | 2 | 10 | 62 | 5 | 2 | 90 | 7 | 6 |
| 35 | 2 | 11 | 63 | 5 | 3 | 91 | 7 | 7 |
| 36 | 3 | 0 | 64 | 5 | 4 | 92 | 7 | 8 |
| 37 | 3 | 1 | 65 | 5 | 5 | 93 | 7 | 9 |
| 38 | 3 | 2 | 66 | 5 | 6 | 94 | 7 | 10 |
| 39 | 3 | 3 | 67 | 5 | 7 | 95 | 7 | 11 |
| 40 | 3 | 4 | 68 | 5 | 8 | 96 | 8 | 0 |



149

### அணா வாய்பாடு.

| அணா. | ரூ. | அ. | அணா. | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| 17 | 1 | 1 | 49 | 3 | 1 |
| 18 | 1 | 2 | 50 | 3 | 2 |
| 19 | 1 | 3 | 51 | 3 | 3 |
| 20 | 1 | 4 | 52 | 3 | 4 |
| 21 | 1 | 5 | 53 | 3 | 5 |
| 22 | 1 | 6 | 54 | 3 | 6 |
| 23 | 1 | 7 | 55 | 3 | 7 |
| 24 | 1 | 8 | 56 | 3 | 8 |
| 25 | 1 | 9 | 57 | 3 | 9 |
| 26 | 1 | 10 | 58 | 3 | 10 |
| 27 | 1 | 11 | 59 | 3 | 11 |
| 28 | 1 | 12 | 60 | 3 | 12 |
| 29 | 1 | 13 | 61 | 3 | 13 |
| 30 | 1 | 14 | 62 | 3 | 14 |
| 31 | 1 | 15 | 63 | 3 | 15 |
| 32 | 2 | 0 | 64 | 4 | 0 |
| 33 | 2 | 1 | 65 | 4 | 1 |
| 34 | 2 | 2 | 66 | 4 | 2 |
| 35 | 2 | 3 | 67 | 4 | 3 |
| 36 | 2 | 4 | 68 | 4 | 4 |
| 37 | 2 | 5 | 69 | 4 | 5 |
| 38 | 2 | 6 | 70 | 4 | 6 |
| 39 | 2 | 7 | 71 | 4 | 7 |
| 40 | 2 | 8 | 72 | 4 | 8 |
| 41 | 2 | 9 | 73 | 4 | 9 |
| 42 | 2 | 10 | 74 | 4 | 10 |
| 43 | 2 | 11 | 75 | 4 | 11 |
| 44 | 2 | 12 | 76 | 4 | 12 |
| 45 | 2 | 13 | 77 | 4 | 13 |
| 46 | 2 | 14 | 78 | 4 | 14 |
| 47 | 2 | 15 | 79 | 4 | 15 |
| 48 | 3 | 0 | 80 | 5 | 0 |

முன் சொல்லியிருக்கும் வாய்ப்பாடுகளை ஒரேதடவையில் கற்பிக்க வேண்டியதில்லை. அப்போதப்போது கொஞ்சம் கொஞ்சமாய் கற்பித்தால் போதும். கழித்தலெல்லா மானபிறகுதான் வாய்ப்பாடுகளை ஆரம்பிக்க வேண்டுமென்னும் அவசியமொன்றுமில்லை. கூட்டல் கற்பிக்கும் போதும் கழித்தல் கற்பிக்கும்போதும் அங்கங்கே கொஞ்சம் கொஞ்சமாய்க் கற்பிக்க லாம். பெருக்கல் வாய்ப்பாடுகளை பிள்ளைகளைக்கொண்டே செய்விக்கவேண் டும். (உதாரணம்) நான்காம் வாய்ப்பாட்டைக் கற்பிக்க வேண்டுமானால், இர

ண்டுநான்கு எத்தனை என, பிள்ளைகள் 4+4=8 என்று சொல்லுவார்கள். அதை உடனே போர்ட்டில் எழுதவேண்டும்; இவ்விதமாய் வேண்டியவளைக் கும் கேட்டு பலதரம் படிக்கச்செய்து ஊரப்படுத்திவைக்கவேண்டும். பைசா வாய்பாடும், அணா வாய்பாடும் அப்போதப்போது பிள்ளைகளைக் கொண்டே செய்விக்கவேண்டும். ஒருவருஷத்துக்குள் தினம் கொஞ்சம் வந்தால்போ தும். ஆத்திரப்பட்டு எல்லாவற்றையும் ஒருகாலத்திற்குள் வரப்படுத்தி வாச் சொல்லக்கூடாது. பிள்ளைகளுக்கு அப்படிசெய்யச் சக்தி யுடையவர்களாயி னும் அது பயன்படாது. ஒவ்வொரு வாய்பாடும் பொறுமையாய் பிள்ளைக ளைக்கொண்டே செய்விக்கவேண்டும்.

## உபாத்திமைத்தொழிலின் பெருமை.

எனது அன்பிற் சிறந்த தீர்த்தருபசமமான கிராம பாடசாலை உபாத் தியாயர் பத்திராதிபரவர்களுக்கு அனேகவந்தனம் நாடித்தந்தனம்.

அடியில் வரைந்திருக்கும் சங்கதியைத் தங்கள் பத்திரிகையில் ஓர் கோணத்தில் அச்சிடும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

'உபாத்தியாயர்' அல்லது 'போதகாசிரியன்' என்னும் பதங்கள் வித்தியா குரு என்னும் பொருள் தரும். ஆசிரியர்கள் நூலாசிரியர்கள், உரையாசிரி யர்கள், போதகாசிரியர்கள் எனமூவகை யினராவார்கள். இவர்களுள் நூலாசி ரியரானவர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் பஞ்ச இ லக்கணங்களையும் இலக்கியங்களையும் தேர்ந்து "பலவகைத் தாதுவினுயிர்க் குடல் போற்பலசொல்லாற் பொருட் கிடனாகவுணர்வினின் வல்லோரணி பெறச் செய்வன செய்யுள்' என்ற விதிப்படி, பத்தியம், கத்தியம், என்னும் ருபங்களாகப் பலகாவியங்களை இயற்றும் வன்மையுள்ளவராம். உரையாசி ரியரானவர் நூலாசிரியர் கருத்தையும் தேர்ந்து தெளிந்து, யாவரும் பொ ருள் எளிதில் கிரகிக்கும்படி விரிந்துப் பொருள் உரைப்பவராவார். இனிப் போதகாசிரியரானவர் இவ்விருவர் கருத்தையும் நன்குதேர்ந்து இளைஞர் எளிதில் கிரகிக்கும்படி தாய்தன்மடியிலிருக்கும் குழந்தைக்கு கயந்து செவி யுணவாக இன்சொல்லமுது ஊட்டுவது போல, நூலாகிய பத்திய கத்தியங் களையும், அவற்றின் கருத்தையும் உபமான உபமேயங்களைச் சொல்லிப் பொருத்தியும் பலதார்ஷ்டாந்த திருஷ்டாந்தங்களை விளக்கிக் காட்டியும் இன் சொற்களால் போதிக்கின்றவரே போதகாசிரியராவார். இம்மூவகையாருள் போதகாசிரியரே உயர்ந்தவரென்பது தென்விதின் விளங்கும். இத்தகை அருமையான தொழிலை நமது இந்ததேசத்தில்மாத்திரம் மிக்குப் பயின்று விவேகம் முதிர்ந்த வித்வசிரோமணிகள் மேற்கொள்வதற்குப் பதிலாக வே லையற்றவர்களாகிய விவேகசூனியர்கள் மேற்கொண்டு அத்தொழிலின் பெ ருமையைக் கெடுத்துக்கொண்டு வந்தார்கள். இதுபற்றியே அல்லவா 'சமு தைகெட்டால் குட்டிச்சுவர், கணக்கன்கெட்டாற் பள்ளிக்கூடம்' என்னும் பழமொழியும் வழங்குகின்றது.



அந்தோ, பரிதாபம்! பரிதாபம்!! 'எத்துணையவாயினுங் கல்விஇடமறிந் துய்த்துணர்வில்லெனினில்லாகும்' என்ற கருத்தை ஆராய்ந்துசிறந்தவித்வான் களிடத்தில் சிசுருஷைசெய்து பயின்ற சிலரல்லது பலர் கல்வியில் நன்கு தேருமல் போகின்றார்கள். இவ்வாறுகல்வியில் நன்குதேருதவர்களாகி, எழுத் து மாத்திரம் கூட்டிவாசிக்கவும், பொருள் தெரியாமலே செய்யுட்களைத் தாட்டியாகப் படிக்கவும் தெரிந்தவர்கள் தங்களுக்கு வேறு அலுவல் கிடை யாதபோது பள்ளிக்கூடம் வைத்துக்கொள்ளுகிறார்கள். இப்படிப் பட்டவர் கள் போதிக்கும் பாடசாலையில் அல்லவா "யானையெருத்தம் பொலிய" என் னும் செய்யுட்ப் பொருள் விளங்காமல், எருத்தம் என்னும் சொல்லுக்கு எ ருது என்னும் பொருள் கொண்டு, யானையை எருது பொலிதல் கூடாமை யான காரியம். ஆகவே "ஆவை எருத்தம்பொலிய" என்றே இருக்க வேண்டும் என்று நூலாசிரியர் கருத்தையே உணராமல் திருத்திய உபாத் தியாயர்களும் உண்டு என்று கதைவழங்குகிறது. என்னவிபரீதம்! என்ன விபரீதம்!! இவ்வாருக நமது இந்ததேசத்தில் கல்வியானது மிகவும் சீர் கேடான நிலைமையில் இருக்கிறது என்பதை கவர்ன் மெண்டார் நன்கு சீர் தூக்கி, "கட்டில்கால் உபாத்தியாயனைப் போலாகிலும் இவ்வுபாத்தியாயர்க ளும், இவர்களிடத்தில் கல்விபயிலும் மாணாக்கர்களும் தேறட்டும்" என்னும் கருத்தால் ரிசல்ட் சிஸ்டம் ஒன்று ஏற்பாடுசெய்து, இன்ஸ்பெக்டிங் ஸ்கூல் மாஸ்டர்களால் அவ்வுபாத்திமார்களையும், பிள்ளைகளையும் திருத்தி, இன்ஸ் பெக்டர்களால் பிள்ளைகளைப் பரீட்சிப்பித்து, அப்பிள்ளைகளைத் தேறும்படி செய்த உபாத்தியாயர்கட்குச் சம்மானம் செய்து வருகின்றார்கள். இந்த இலாபத்தைக் கருதியே இப்பொழுது அனேகர் பாடசாலையை வைத்துக் கொண்டு உபாத்திமைத் தொழிலை நிர்வகிக்கிறார்கள்.

(இன்னும்வரும்.)

T. C. VENKATARAMANA AIYAR.

இன்னும் சில சங்கதிகளை எழுதுவதுடன் தங்கள் பத்திரிகை அதிக மாக செலவாகும்படி நாலுபக்கங்களிலும் உள்ள என் இஷ்டர்களுக்குத் தெரிவித்தும் தெரிவித்துக் கொண்டும் இருக்கிறேன்.

T. C. VENKATARAMANA AIYAR,

*Tirupur.*

இவ்விதமாக ஒவ்வொரு சந்தாதாரரும் பத்திரிகையை இன்னும் அனே கம்பேரைக்கொண்டு வாங்கச் சொல்வர்களென்று பத்திராதிபர் பூர்ணமாய் நம்புகிறார்.

வித்தியா விஷயங்களைப்பற்றி யாவர்க்கும் பொருள் விளங்கும்படி எளிய நடையில் சுருக்கமாய் எழுதியனுப்பினால் அவற்றை இந்தப் பத்திரிகை யில் யாவர்க்கும் பயன்படும்படி பிரசுரஞ்செய்யப்படும்.

## கரிப்பலகையைக்குறித்தபாடம்.

### எதால் செய்யப்பட்டது:—

உ. (கரிப்பலகையைக்காட்டி) இது என்ன?
மா. கரிப்பலகை.
உ. கரிப்பலகை என்று இதற்கு ஏன் பெயர்வந்தது?
மா. கருப்பாயிருப்பதினால்.
உ. இந்தப்பலகை முழுமையும் கருப்பாகவேயிருக்கிறதா?
மா. இல்லை; முன்பக்கமட்டும்.
உ. முன்பக்கத்தில்மட்டும் கருப்புநிறம் அதற்கு எப்படி உண்டாயிற்று?
மா. வர்ணங்கொடுத்ததால்.
உ. எல்லாவர்ணமும் கருப்புதானா?
மா. இல்லை.
உ. வேறு சிலவர்ணங்கள் சொல்லு?
மா. வெள்ளை.
உ. வெள்ளைவர்ணங் கொடுத்தவஸ்து இவ்விடமிருந்தால் காட்டு?
மா. அந்தஜன்னல்.
உ. வேறுசிலவர்ணங்கள் சொல்லு?
மா. பச்சை, நீலம், மஞ்சள், சிகப்பு.
உ. இந்தகருப்பு வர்ணத்தின்கீழ் என்ன இருக்கிறது?
மா. பலகை.
உ. என்னபலகை?
மா. ஜாதிக்காய்ப் பலகை.
உ. இந்தப்பலகை கனமுள்ளதா?
மா. ஆம்.
உ. நீ அதைத்தூக்குவாயா?
மா. கனமாயிருக்கிறபடியால் தூக்கமுடியாது.
உ. இந்த அளவு கருங்காலிப் பலகையைத் தூக்கமாட்டாயா?
மா. தூக்கமாட்டேன்.
உ. இவ்விரண்டு பலகைகளுள் அதிககனமுள்ளதெது?
மா. கருங்காலி.
உ. இவ்விரண்டினுள், லேசானதெது?
மா. ஜாதிக்காய்ப் பலகை.
உ. இவ்விரண்டு பலகைகள்தவிர இன்னும் சில பலகைகளின் பெயர் சொல்லு?
மா. தேக்கம்பலகை, மாம்பலகை.
உ. தேக்கம்பலகை, ஜாதிக்காய்ப்பலகை, இவ்விரண்டினில் கனமுள்ளதெது?
மா. தேக்கம்பலகை.
உ. இப்பொழுது சொல்லிக்கொண்டுவந்த பலகைகளில் எல்லாவற்றிலும் லேசானதெது?
மா. ஜாதிக்காய்ப்பலகை.
உ. ஆகையால், ஜாதிக்காய்பலகை கனமுள்ளதா, லேசானதா?
மா. லேசானது.

உ. ஆம், உங்களால் தூக்கமுடியாததா யிருந்தபோதிலும், பலகைலேசானதுதான்.

### எவ்விடங்களில் அகப்படும்.

உ. இந்த ஊரில் ஜாதிக்காய் பலகைகள் விலைக்கு அகப்பட்டபோதிலும் இவ்விடங்களில் இந்தமரம் பயிராகுகிறதில்லை. மிகுந்த குளிர்ந்த தேசங்களில் மட்டும் இந்த மரமகப்படும். அவ்விடங்களிலிருந்து இவ்விடம் வந்துசேருகிறது. காடென்றாலென்ன?
மா. அனேக மயில் நீளம் அகலத்திற்கு மரங்களால் சூழப்பட்டிருக்கிற இடம்.
உ. இப்படிப்பட்ட காடுகளில்தான் இந்த மரங்களகப்படுகின்றன. காடுகளிலிருக்கிற மரங்களை, மரம்வெட்டுபவர்களைக்கொண்டு வெட்டச்சொல்லி, மலைகளாலும், சமுத்திரத்தாலும் பிரிக்கப்பட்டிருக்கிற தேசங்களுக்கு எவ்விதமாக அனுப்புகிறது?
மா. கப்பல்களிலும் ரயில்களிலும் ஏற்றியனுப்புகிறது.
உ. கப்பலை ஓட்டுபவர்களுக்கு பெயரென்ன?
மா. மாலுமிகள்.
உ. இந்த கரடுமுரடான மரங்களை உபயோகப்படுத்திக்கொள்ள என்ன செய்யவேண்டியது?
மா. பலகைகளாக்கவேண்டும்.
உ. மரத்தை எதால் பலகைகளாக்குகிறது?
மா. ரம்பத்தால்.
உ. இந்தப் பலகை யாக்குவர்களுக்கு என்னபெயர்?
மா. தச்சன், பலகை யறுப்பவன்.
உ. பலகைகளாக அறுத்தபின் அதை வழவழுப்பாக்குவது எப்படி?
மா. இழைப்புளியால் இழைப்பதால்.
உ. இவைகளை நமக்கு வேண்டிய நீளமாக்குவதற்கு என்ன செய்யவேண்டும்?
மா. மறுபடியும் குருக்கே அறுக்கவேண்டும்.
உ. பலகைகளின் அகலம் குறைவாயிருப்பதால் நமக்குவேண்டிய அகலம் எவ்விதமாய்ப் பண்ணிக் கொள்வது?
மா. இரண்டு மூன்று பலகைகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.
உ. ஒன்றோடொன்று எவ்விதமாய் ஒட்டச் செய்வது?
மா. வச்சிரத்தைக்காய்ச்சி,சூட்டோடு தடவி ஒன்றோடொன்று சேர்த்தால் ஒட்டிக்கொள்ளும்.
உ. இப்படி யெல்லாம் செய்து கொடுப்பவனுக்கு என்ன பெயர்?.
மா. தச்சன்.
உ. உபயோகப் படுத்துவதற்கு இன்னு மென்ன செய்யவேண்டும்?
மா. வர்ணங் கொடுக்கவேண்டும்.
உ. பலகையில் விரிசலாவது பள்ளமாவதிருந்தால் என்னசெய்யவேண்டியது?
மா. லப்பத்தால் அடைத்துப் போடவேண்டியது.
உ. நாம் எழுதுவதற்குக் கரிப்பலகை எவ்விதமாய்க் கிடைக்கிறதென்பதை ஞாபகத்துக்குக் கொண்டுவருவோம். முதலில், குளிர்ந்த தேசங்களில் இருக்கிற ஜனங்கள் காட்டுக்குப் போய் மரங்களைக்

வெட்டுகிறார்கள். மரங்களைக் கப்பலிலேற்றி மாலுமிகள் வேறு தேசங்களுக்குக் கொண்டுவருகிறார்கள். பிற்பாடு மரமறுப்பவன் அவைகளைப் பலகைகளாக ரம்பத்தால் அறுக்கிறான். அவைகளைத் தச்சன் இழைத்து வேண்டிய நீளத்துக்குத் துண்டிட்டு, இரண்டு மூன்று பலகைகளை வச்சிரத்தால் சேர்த்து, வர்ணங்கொடுப்பவன் வர்ணங்கொடுக்கிறான்.

உபயோகம்.

உ. கரிப்பலகையின் பிரயோசனமென்ன ?
மா. எழுத.
உ. ஏன் கருப்புவர்ணங் கொடுக்கிறார்கள் ?
மா. சுண்ணாம்புக் கட்டியால் கருப்புவஸ்துகளில் எழுதினால் நன்றாய்த் தெரியவரும்.

## வெகுமதியும் தண்டனையும்.

**வெகுமதி, தண்டனைகள் ஆவசியகம்.**— வெகுமதியும் தண்டனையும், உலகத்தில் சுபாவமாகவே அவசியமானவைகளென்றும், சட்டசம்மதமானவையென்றும் யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட விஷயங்கள். அவைகள் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்து நடப்பதால் உண்டாகப்பட்ட பிரயோசனங்களல்லாவிடினும் கீழ்ப்படிந்து நடப்பதற்கு வேண்டிய நியாயமான தூண்டுகோல்களாயிருக்கின்றன. மனசாட்சிக்கு அவைகள் அவசியகமென்றே தோன்றுகின்றன. அதற்கு ஜாஸ்தியாகவே அவைகள் அவசியகமென்று எத்தேசத்திய சட்டதிட்டங்களிலு மேற்பட்டிருக்கின்றது. அவைகளன்றி சட்டங்கள் பிரயோசனப் படமாட்டாதாகையால் மொத்தத்தில் வெகுமதிகொடுப்பதும் தண்டனை விதிப்பதும் ஆவசியகமானவைகளென்பதற்கு யாதொரு ஆட்சேபனையுமில்லை. ஆனால் எத்தருணங்களில், எவ்விதமாக எவ்வளவுமட்டில் பிரயோகிக்கவேண்டுமென்பதைப்பற்றிப் பல அபிப்பிராயங்கள் இருக்கலாம். அவைகளன்றிப்பள்ளிக்கூடங்கள் பிரயோசனப்படமாட்டா. சிறுவர்களுக்கு இன்னதுதான் நல்லது ஆகையால் செய்யலாமென்றும், இன்னது கெட்டதாகையால் இதுசெய்யக்கூடாதென்றும் பகுத்தறியும்சக்தி அதிகமாகயிருக்காதாகையால், அவர்களுடைய கடமைகளைச் செய்ய வேறுவிதமான தூண்டுகோல்களிருக்கவேண்டியது ஆவசியகம். சிறுவர்கள் சரியாய்ப் பாடங்களைப் படிப்பதினால் இன்பமுண்டாவதாக அவர்கள் அறியவேண்டும். சரிவரச்செய்தால் ஏதாவதொருவித வெகுமானங் கிடைக்குமென்கிற எண்ணத்தை அவர்களிடத்தில் உண்டுபண்ணவேண்டும். வெகுமதி கொடுப்பதினாலுண்டாகும் பிரயோசனங்கள் பெரிதாயும் உபாத்தியாயருக்கு இன்பந்தரத்தக்கதாயும் இருக்கின்றன. ஆனால் வெகுமானம்அளிப்பதும், பெறுவதும் ஒருகட்டுப்பாட்டுக்குள் அடங்கினதாயிருக்கவேண்டும். சிறுவர்களின் சரீர பிரகிருதிகள் வெவ்வேறானது. மேலும் ஏய்ப்புகளுக்கு உட்படத்தகுந்தவர்களாகவும், மனப்போக்கின்படி நடக்கப் பிரியமுள்ளவர்களாயுமிருக்கிறார்கள் ஆகையால், உபாத்தியாயருக்கு உள்ள அதிகாரம் பலமாய் வசியப்படுத்தத் தக்கதாயிருப்பதைப்பார்க்கிலும், அதிகமாகவே தடையுள்ளதாயுமிருக்கிறது.



## ப்ரோபெல்.

சிறுகுழந்தைகளின் மனதையறிந்து அவர்களுக்கு விளையாட்டுப் போல எல்லாவிஷயங்களையும் எளிதாக அவர்கள் மனதிற்படும்படி உபதேசித்தற்பொருட்டு ப்ரோபெலாசிரியர் பலவகையான விளையாட்டுக் கருவிகளைச்செய்துகொடுத்திருக்கிறார். புழக்கடைமருந்து யாருக்கும் அலக்ஷியமாயிருப்பது போல, அவற்றுள் ஒவ்வொன்றும் பார்ப்பவர்களுக்கு மிகவும்அற்பமாகத் தோற்றினும், அவற்றாலுண்டாகும் பெரும்பயனை இவ்வளவென்று அளவிட்டுரைப்பது எளிதன்று. ஆயினும், அவற்றுட் சிலவற்றை எடுத்துச்சொல்லுவோம். அவற்றுள் ஒவ்வொன்றும் குழந்தைகளுக்குக் கொடுக்கும்படியான கொடையாதலால், அவற்றையெல்லாம் சிறுவர்களின் கொடையென்றே ப்ரோபெலாசிரியர் வழங்குகிறார்.

அவற்றுள்:— மிருதுவான தோற்பந்து; ஒருபெட்டிநிறைய ஆறுபந்துகளிருக்கும்; ஒவ்வொருபந்தும் வேறு வேறு நிறமுடையது. பெற்றோரும், உபாத்தியாயரும் குழந்தைகளின் தன்மையை நன்றாயறிந்து கொண்டதன்பின்பே இந்தப்பந்துகளை அவர்கள் கையிற் கொடுக்கவேண்டும்; சிறுகுழந்தைகளுக்கு விளையாட்டுப் பண்டங்களின்மேல் எப்பொழுதும் அதிக ஆசையாதலால், இவற்றின் மூலமாய் அவர்களை இளமைதொட்டே நன்றாய்க் கல்வி பயிற்றுவிக்கலாம். ஒரு சிறுகுழந்தை, மிருதுவும், அழகிய நிறமுடையதுமான பந்தைக் கண்டவுடனே அதற்கு அதைத்தான் தொட்டுப்பார்க்க வேண்டுமென்றுஆசையுண்டாவதியற்கையே. குழந்தையானது தான்பிறந்த மூன்றுமாதங்களுக்குள்ளெல்லாம் தன் தாய்முகத்தையும், தனக்குப்பால் கொடுக்கு முலைத்தாயின் உடையையும் நன்றாயறிந்துகொள்ளும்; இந்த வித்தியாசம் மற்றவர்களுக்கு நன்றாய்த் தெரியாவிடினும் குழந்தைகளுக்கு எளிதில் தெரியும். விளையாட்டுக்கருவிகளுள் எது குழந்தைகளுக்கு நன்றாய் பயன்படுமோ அதிலேதான் அவர்களுடைய திருஷ்டி அதிகமாகச் செல்லுமாகையால், அவைகளின் புத்திக்குள்ளே ஆழ்ந்துகிடக்கிற ஒவ்வொரு சங்கதியும் நன்றாய்வெளிப்படும். ஆதலினால் இவ்வாறு குழந்தைகளின் அறிவை முதலில் மேலு மேலும் வளர்ப்பதற்கு இந்தப்பந்தைப்போலச் சிறப்புடையது வேறொன்றுமில்லை. குழந்தைகள் வர்ணப்பந்துக்களைக் கண்டவுடனே தங்களுடைய பூங்கைகளை நீட்டி அவற்றைப்பிடிக்கப்போகும். பந்துகள் குழந்தைகள் கையில் எளிதில் அடங்கும் படியாய் மிகச் சிறியவைகளாகவும், அழகிய வர்ணமுடையவைகளாகவுமிருக்கவேண்டும். அவற்றைக்கண்டு குழந்தைகள் அவற்றின் நிறம், காத்திரம், உருவம் அவற்றாலுண்டாகுந்தொனி முதலியவற்றை விளையாட்டுப்போல நன்றாய்க்கற்றுக்கொள்வது எளிது. பந்தைமட்டும் வைத்துக்கொண்டு பார்த்தால் அது ஒருவிதமாயிருக்கும்; அதனோடு மற்றொன்றைச் சேர்த்துவைத்துப் பார்த்தால் வேறொருவிதமாயிருக்கும். அது தனியே யிருக்கும்போது அதுவேறாயிருக்கும்; மற்றொன்றோடு சேர்ந்திருக்கும்போது அதன் பங்காகும். பந்து ஒருநிலையில்நிற்கும்; குதிக்கும்; உருண்டோடும்; அதற்கு மையம் இன்னதென்று தெரிவதரிது; அது இவ்வுலகத்தின் கண்ணுள்ள அநேகம் பொருள்களுக்கு உபமானமாகும். பந்தையெடுத்தாடுவதினால், அது கருத்தைக் கவர்வதுமன்றி, நரம்புகளை அசையச்செய்து அவைகளுக்கு வேண்டிய வேலைகளை வைப்பதனால் அந்நரம்புகள் வலிமையுடையவைகளாகின்றன. அன்றியும், பந்து ஓடும்

போது அதன்பின் சென்று அதைப்பிடிக்கப் போகையில் உடம்பில்நன்றாய்ப் பலனுண்டாவதுமன்றி, மீண்டும் அப்பந்தை வீசியெறிவதனால் கை கால்கள் அதிக உறுதி யுடையவைகளாகின்றன. பந்து மூலைக்கு மூலை அவசியம்போகும். அதன் ஓட்டத்தைப் பார்ப்பதனால் கண்ணுக்கு நல்ல சுறுசுறுப்பு உண்டாகும்; பந்து கண்ணுக்குப் புலப்படாமல் தூரத்திற் போய்விடும்போது அதன் ஓசையினால் அது இன்னவிடத்தில் இருக்குமென்பதை யறிவிக்கின்றது.

சிறு குழந்தைகளுக்குச் சற்றே வயது முதிர்ந்தால் அக்குழந்தைகள் மற்றவர்களோடு சேர்ந்து பந்துவிளையாடக் கூடுமாகையால், அவர்கள் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்து விளையாடுகையில் பந்தினால் ஆடப்படும் பலவகையான விளையாட்டுகளினால் அவர்களுக்குண்டாகும் பெருமையைப் பற்றி ப்ரோபெலாசிரியர் பலவாறு வியந்து மொழிந்திருக்கிறார்; ஆனால் அவ்வாறு பந்தாடும்போது வரையறையின்றிக் கண்டபடி யெல்லாம் விளையாடாமல் நன்றாய்த்தெரிந்தாடினால் மட்டுமே தவறாது பயன்படும். விளையாட்டென்றால் அதில் குழந்தைகளுக்கெல்லாம் ஆனந்த முண்டாவதியற்கை.

பந்துவிளையாட்டினால் இத்தனை பெரும்பய னுண்டாகிறதென்று ப்ரோபெலாசிரியர் கண்கூடாய்க் கண்டறிந்தபடியினாலேதான் அவர் தமது கோட்பாட்டின்படி "சிறுவர் தோட்டம்" என்னும் பாடசாலை விளையாட்டுகளில் இவ்வாறு பந்தாடுவதே மற்றெல்லாவற்றுள்ளுஞ் சிறந்ததென்று அதுவே முதலாவது விளையாட்டாகவேண்டுமென்று திட்டஞ் செய்தார். பந்தினால் ஆடப்படும பற்பலவாகிய விளையாட்டுகளுள் ஒவ்வொரு விளையாட்டுக்குத்தக்கபடி பண்ணோடமைந்த எளிதான பல சிறுபாடல்களை யமைத்திருக்கிறார்; இவ்விளையாட்டுகளெல்லாம் ஸ்தன்னியபானம் பண்ணுகிற சிறு குழந்தைகள் விளையாடுவதற்கேயன்றி, பால்மறந்த சிறுவர்க்கும் நன்றாய்ப்பயன்படும். பந்தினால் விளையாடப்படும் பலவகையான விளையாட்டுகளைப் படங்களிலமைத்துக் காட்டாமல், அவற்றின் பெருமையைப்பற்றி எவ்வளவுதான் சொன்னாலும் பயன்படமாட்டாதென்பதுமெய். ஆயினும், மாதிரிக்கு இரண்டு மூன்றாவது எடுத்துச் சொல்லாமல்விடுவது நன்றன்று:— ஒருகயிற்றில்ஒருபந்தைத்தொங்கவிட்டு ஆட்டினால், அந்தப்பந்து அப்புறமும் இப்புறமுமாகச் செல்லும். அதைக் குழந்தைகள் கண்டு, அதோ அங்கேபந்துபோயிருக்கிறது; இதோ இங்கே பந்து வந்திருக்கிறதென்று, "அங்கு" "இங்கு" என்கிற பதங்களின் கருத்தை நன்றாய் அறிந்துகொள்ளுவார்கள். ஒருகயிற்றில் பந்தைக் கோத்துக் கூடியமட்டில் பெரிய வளையம்போலாக்கிச் சுற்றினால், அந்தக்கயிறு குறுகும்போது பெரிதானவளையமாகும்; அந்தப்பந்து அதிற் செல்லும்போது கயிறு குறுகுமாகையால், அதுகாரணமாக அதனாலாகிய வட்டஞ்சிறியதாகும். அப்பொழுது குழந்தையை அதைநன்றாய்க்கவனித்துப்பார்க்கும்படிசெய்தால், வட்டத்தைச் சிறிது, சிறிதென்று சொல்லும். பின்பு அந்தக் கயிற்றை நீட்ட நீட்ட, வட்டம் பெரிது, பெரிதென்று சொல்லும். அந்தக்கயிற்றை உருவிவிட்டால் அந்தப்பந்து தூரத்திலேபோய் விழுவதைக்கண்டு குழந்தை அதைத் தேடி யெடுத்துக்கொண்டு வரும்படிபோகும்.

இவ்வாறான பந்துகள் வெவ்வேறு நிறமுடையவைகளாயிருக்கலாம்; இவற்றை வரிசைக் கிரமமாய், நிரை நிரையாய், அழகாய்க் கோத்து வைப்பது நன்று. ஒரு வகையான நிறமாயிருப்பது நன்று. அவற்றுள் முக்கியமான நிறம் மூன்றும், கலப்புடைய நிறம் மூன்றுமாயிருந்தால் அழகாயிருக்கும். இவற்றைக்கொண்டு அளவற்ற விநோதங்களைச் செய்யலாம்; இவற்றை யெல்லாம் வரிசை வரிசையாகக் கோத்து வைத்துச்சுற்றினால், ரூபத்தின் மாத்திரையைப் புலப்படுத்துகின்ற கண் சவ்வில் பலவகையான உருவமும், நிறமும், ஒற்றுமையும், வேற்றுமையும், அழகும் பார்க்கப் பார்க்க இன்பந்தரத்தக்கதாயிருக்கும். நல்ல புத்திசாலிகளான தாய் தந்தையர்களும், உபாத்தியாயர்களுமே இவ்வாறு பந்துகளின் உபயோகம்இன்னதென்றுசிறுவர்க்கு நன்றாய்ப் பயன்படும்படி எளிதில் தெளிவாய்விளங்கும்படியாக எடுத்துக் காட்ட வல்லவராவர். இது தான் "சிறுவர் தோட்டம்" என்றுப்ரோபெலாசிரியர் பாடஞ் சொல்லுமுறையின் முதலாவது பாடமாம்.

ப்ரோபெலாசிரியரின் இரண்டாவது கொள்கையின் பாடம்:— இரண்டாவது உபகரணமானது முதலாவதினும் அதிகசிறந்தது; குழந்தைகளின் சாமர்த்தியத்தை எளிதில் நன்றாய் விருத்திசெய்யும்படியாக இது முதலாவதோடு ஒருவாறு கலந்திருக்கும். ஒருபந்தும், ஒரு உருளையும், ஒரு கனமும் ஆகிய இம்மூன்றுஞ்சேர்த்தது இரண்டாவது கொடையாகும். இவ்வுலகத்திலுள்ள பொருள்களுள் பெரும்பான்மையானவை இவ்வாறான உருவங்களுடையனவாகத்தானிருக்கும். இதிலுள்ள பந்து முன்போல வர்ணமுள்ள மிருதுவான தோற்பந்தல்லாமல் கெட்டியாயிருக்கும்; இதிலுள்ள உருளையும், கனமும் அப்படியேதான் கெட்டியாயிருக்கும். ஆனதினால், முன்பந்துக்கும்இவற்றிற்குமுள்ள வித்தியாசத்தைச் சிறுவர்நன்றாய் அறிந்து கொள்ளலாம். இதனாலே அறிவுவிருத்தி நன்றாயுண்டாகும். இவற்றுள் ஒவ்வொன்றிலும் சிறு சிறு துவாரங்கள் விடப்பட்டிருக்கும்; அவற்றின் வழியாகச் சிறியவடங்களை நுழைத்து வைக்கலாம். கனத்தின் நடுவேயுள்ள சிறு துவாரத்தில் சிறுவடமொன்றை நுழைத்து அதை வேகமாய்ச் சுற்றும்போது அது குழந்தையின் கண்ணுக்குப் பந்துபோலிருக்கும்; அவ்வாறே பந்தை வேகமாகச் சுற்றும்போது அது உருளைபோலிருக்கும். சதுரமான கனஉருவம், உருளை, பந்து இம்மூன்றும் ஒன்றற்கொன்று முற்றும்வேறாயினும், வேகமாய்ச் சுற்றும்போது பார்க்கையில் உருளை பந்து வடிவம்போலவும், கனமானது உருளைபோலவுந் தோற்றும். இதனால் சிறுகுழந்தைப் பருவந்தோட்டே, பொருள்களின் உண்மையான உருவும் வேறு, அவற்றின்தோற்றம் வேறென்று எளிதில் அறிந்துகொள்ளலாம். பின்பு வயது செல்லச்செல்ல எப்பொருள்களின் தன்மையையும் பற்றி நன்றாயறிந்துகொள்ளும். இந்தக்கொடையினால் செய்து காட்டுவனவெல்லாம் இந்திரஜாலம், மகேந்திரஜாலம்போலவே பார்வைக்குத் தோற்றும். இது இவ்வாறாகப் பண்டிதர்முதல் பாமரர் ஈறாக எல்லோருக்கும் ஆனந்தந் தரத்தக்கது. சிறு குழந்தைகளுக்கு ஊமன் கண்டகனவைப்போல வாயாற் சொல்லத் தெரியாவிடினும் அந்தப் பேதத்தை மட்டுமாவது நன்றாய் அறிந்து கொள்ளும்.

இவ்வுலகத்தில் ஆதியில் மனிதர் சிறுகச்சிறுகத்தான் நாகரீகம் பெறத் தலைப்பட்டார்கள். முதலில் பரும்படியானவற்றைச் செய்துதானபின்பு நன்றாய்ப் பழகினார்கள். சிறுவர்களும் அப்படித்தான். பழயகாலத்தில் ஈஜிப்த் நாட்டார் கனவடிவமுள்ள மூன்று உருவங்களை யெடுத்து ஒன்றின் ஒன்றாய் வைத்து, அவற்றை மூன்று அநுக்கிரகங்களென்று சொன்னார்கள். இவ்வாறே இப்பொழுது சிறுகுழந்தை மூன்று செப்பு, மூன்று தடிமுதலியவற்றையெடுத்து அடுக்கிவைத்துக்கொண்டு அவற்றிற்கு ஆடு, மாடு, குதிரை

னாயென்று விளையாட்டில் பேரிடுவதுமுண்டு. இவ்வாறு குழந்தைப் பருவத்திலே தானே பொருள்களை வேருக மனதில் பாவிக்கும் பாவனை யுண்டாகிறது. இந்த உபகரணங்களால் செய்யத்தக்கவைகளுள் சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துக்காட்டுகின்றோம்:—இந்தக் கெட்டிப் பந்தை யெடுத்து நிலத்தில் உருட்டிவிட்டால் குழந்தை, அது உருளுவதையும், அதின்வேகம் போகப்போக மட்டுப் படுவதையும், கடைசியில் அது நின்று விடுவதையும் கண்ணும் கருத்துமாய்க் காணும். அப்படிக் கின்றி அந்தப் பந்தைச் சாய்வான பூமியில் உருட்டிவிட்டால் போகப் அப்பந்தின் வேகம் அதிகப்படுவதைக் காணும். பின்பு அந்தச் சாய்வான பூமியில் கனத்தைவைத்து, அதன் முன்னே பந்தை வைத்தால், அந்தப் பந்தானது அந்தக் கனத்தின் உதைவினால் உருளாது நிற்கும். கனவடிவமான அந்தக் கட்டையைத் தள்ளிக்கொண்டு உருண்டுசெல்ல அந்தப் பந்துக்குக் கனம் போதாதென்று குழந்தை நன்ருய் அறிந்துகொள்ளும். உடனே அந்தப் பந்தை யெடுத்துச் சற்றுத் தூரத்திலேவைத்துப் பலமாய் உருட்டிவிட்டால், அது உருண்டுவரும். அதன் வேகத்தினால் அந்தக் கனமானது பள்ளம் நோக்கிச் செல்லும். ஒருசுவரின் ஓரமாய் அதன்விட்டமானது சுவரை பொட்டி யிருக்கும்படி அரை வட்டமொன்றை வரைந்து, அதைப் பாகைகளாக்கி, அந்த அரைவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிற அரைவிட்டத்தின் வழியாக உருட்டச்சொல்ல வேண்டும். அந்த நடுக்கோட்டின் வழியாகவந்து சுவரில் மோதியபின் நேரே ஒழுங்காய் எதிர்த்துத் திரும்பும். பின்பு அந்த அரைவிட்டத்திலுள்ள 45 பாகைகளின் வழியாக முன்போலப் பந்தை உருட்டிவிட்டால், அது முன் போல நேரே எதிர்த்துவந்த கோட்டின்வழியே திரும்பாமல், அதற்கு முற்றும் வேருன கோட்டின் வழியே செல்லும். நாம் மேலே வழங்கிய க்ஷேத்திரகணித பரிபாஷை சப்தங்கள், இவ்விடத்தில் பொருள் நன்ருய் விளங்கும்படியாகமட்டுமே வழங்கப்பட்டன.

இந்த உபகரணங்களால் பொருள்களின் ஒற்றுமை வேற்றுமையைச் சிறுவர்களுக்கு நன்ருய் விளக்கிக் காட்டவேண்டும். சிறுவர்களின் அறிவை மேலும் மேலும் அபிவிருத்திசெய்யதற் பொருட்டே இவ்வாறு ஆலோசித்துக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறபடியால், உபாத்தியாயர்கள் இவற்றின் உருவம், கோணம், பக்கம், மூலை, முனை முதலிய எல்லாவற்றையும் சிறுவர்களுக்கு நன்ருய்த் தெரியும்படி காட்டவேண்டும். இவற்றைக் கையில் வைத்துக் காட்டினால் நன்ருய்ப் புலப்படாது; கீழேவைத்துக் காட்டவேண்டும். இந்த விதமாய் அறிவுவிருத்தியடைந்தால் பின்பு க்ஷேத்திர கணிதத்தைக் கற்கும்போது வெகு சுலபமாகப் பொருள் விளங்கும்; இல்லாவிடில் கிளிப்பிள்ளைபோலப் பொருள் சிறிதும் விளங்காமல் பொட்டை லெட்டுருந் தான் போடவேண்டும். இதனோடு பொருட் பாடஞ்சொல்லப்புகுவது மிகவும் எளிதாகும். நாற்காலி, பெட்டி முதலிய பல பொருள்களின் தன்மையைப் பற்றிச் நன்ருய்க் கேள்வி கேட்கலாம். இவ்வாருன கேள்விகளுக்கு விடையானது மாணாக்கர்களால் ஏககாலத்திலாவது அல்லது தனித் தனியேயாவது சொல்லப்படலாம், உபாத்தியாயர் இரண்டொரு கேள்விகளைமட்டுங் கேட்டு விட்டிராமல், அவற்றின் பாகம், பொருள், நிறம் சம்பந்தமுதலிய எல்லாவற்றையும் பற்றி அதியோடந்தமாய் ஒன்றையும் விடாது கேட்க வேண்டும். இலக்கண வழுவான வாக்கியங்களைச் சிறுவர் வழங்காதிருக்கும்படி அப்போதைக்கப்போது கருத்தாய்ப் பார்த்துத் திருத்திக் கொண்டேவரவேண்டும்.

(இன்னும்வரும்.)



# உபாத்தியாயருக்கு அதிக ஓய்வுகாலம் உண்டா?

உபாத்திமைத்தொழிலில் அனேகருக்குப் பிரியமில்லாவிடினும், அத்தொழிலில் கிடைக்கும் ஓய்வும் விடுமுறையும் மற்றைய தொழில்களிலுள்ளவர்களின் எண்ணத்தைக்கவர்கிறது. தனமும் கவுரவமும் உண்டாக்கிற அரசிறை (Revenue) உத்தியோக குமாஸ்தாக்களை "இன்னமணிக்கு என்வீடு வந்து சேருங்களென்றும்" மேலதிகாரி சாயபு உத்திரவிடுவது சகஜம். மேலும் அங்குபோனல் காலைமுதல் அந்திப்பொழுது வரையிலும், அதற்குப் பின்னிட்டும் வேலைசெய்துகொண்டிருப்பது உலக நடவடிக்கை. ஆனல் உபாத்தியாயர் இன்ன இன்ன காலங்களில் தான் பள்ளிக்குப்போக வேண்டுமென்றுவரை யேற்படுத்தியிருப்பதற்கிசையவே அந்தக்காலங்களில் அங்குபோய்ச் சொற்பவேலைசெய்து வந்தால் போதுமென்றும், மற்றக்காலங்களை தன் மனப்போக்கின்படி விளையாடவோ, மழலைச்சொல் பேசும் தன் குழந்தையினிடத்தில் கொஞ்சவோ, அருகிலிருக்கப்பட்ட தன் சுற்றத்தார், சினேகிதரிடத்துப் போய்வரவோ, தன் வீட்டுப்புறங்கடையில் நல்லசெடிகள் வைத்துத் தோட்டம் பயிராக்கவோ, பெரிய உத்தியோகஸ்தன் பிள்ளைக்கு வீட்டில் பாடஞ்சொல்லிக்கொடுத்துத் தன் வரும்படியை விர்த்தி செய்து கொள்ளவோ, மேலே படித்து ஏதாவது பரீட்சைகளில் தேறவோ, அல்லது வேறெவ்விதத்திலோ செலவழிக்கலாமென்றும், மூச்சுவிடக்கூடச் சாவகாசமில்லாமலும், குனிந்ததலை நிமிராமலும் நாள்முழுதும் வேலைசெய்துவிட்டு எப்பொழுது வீடுபோய்ச் சேருவோமென்று ஊர்கிருப்போல் நடக்கிறகுமாஸ்தாவின் பிழைப்பு கஷ்டமென்றும், ஜனங்கள்நினைக்கிறார்கள். உபாத்தியாயருக்கு ஓய்வு அதிகமாயிருக்கிறதென்று எல்லோரும் நினைக்கிறபடியால், இச்சித்தாந்தத்தில் உண்மையில்லையென்று மறுத்துச் சொல்வது எம் கருத்தன்று. 'ரெவனியு' முதலான உத்தியோகத்தி லிருக்கப்பட்டவர்களுக்கு உபாத்தியாயர்களை விட அதிக கவுரவமில்லையென யாம் நம்புவதுபோல், தன் மனசாட்சிக்கு விரோதஞ் செய்யாதவர்களும் உழைப்பாளிகளுமான உபாத்தியாயர்களுக்கு மேற்கூறிய குமாஸ்தாக்களைவிட அதிக ஓய்வு உண்டென்று யாம் எண்ணவில்லை. பள்ளிக்கூடகாலம் சென்றபிறகு உபாத்தியாயர் செய்யவேண்டுவ தென்ன?

பிரதி தினமும் மறுநாட்சொல்லிக் கொடுக்கவேண்டிய பாடத்தைப் படிக்கவேண்டும். ஆனல் இந்தக்கடமையை எல்லோரும் சரிவரச் செய்து வருகின்றாரா? இல்லை; அனேகர் அசட்டை செய்கிறார்கள். அதினுலுண்டாகும் நலமறிந்தவர்கள்கூடச் சரிவரச் செய்கிறதில்லை. ஒருபாடம் தெரிந்திருந்தால் எப்பொழுது வேண்டுமானாலும், முன்யோசனை யில்லாமலே கற்பிக்கலாமென்று அனேகர் நினைக்கிறார்கள். ஆனல் இது தப்பெண்ணம். பாடமுழுமையும் சரிவரத் தெரிந்திருந்தாலொழிய, நமக்குத்தெரிந்த சங்கதிகளை நமது மாணாக்கருக்கு எப்பொழுது வேண்டுமானாலும் அறிவிக்கமுடியாது. முன்னமேபடித்துப் பாடத்திலுள்ள சங்கதிகளைப்பூரணமாய்க்கவனித்திராவிடில் கற்பித்தலென்பது முடியாதேயாம். முன்னமேபாடத்தைப் படித்திருந்தால், படியாமல் சொல்லிக்கொடுப்பதைவிட நன்ருய்ச் சொல்லிக் கொடுக்கலாம் என்னும் விஷயம் எல்லோரும் அங்கீகரிக்க கூடியதே. தனக்குத் தெரிந்த சில விஷயங்களைச சொல்லிக்கொடுத்தால் மட்டும் உபாத்தியாயர் கடமை நீங்கிவிடாது. சமயமறிந்து சங்கதிகளை அவர்களையே அறியச் செய்வதுடன்

கூட அவர்களின் புத்தியை விர்த்திசெய்வதிலேயே எண்ணமுள்ளவராயிருக்க வேண்டும். மாணாக்கர்களுக்கு எவ்விதமாய்ச் சொல்லிக் கொடுப்பதென்றும் எந்தச்சங்கதிகளை அவர்கள் மனதில் அழுந்தும்படி செய்யலாமென்றும், அவர்களுக்கு எவ்வித சந்தேகங்கள் உண்டாகலாமென்றும் முன்னதாகவே தீர்மானிக்கவேண்டும். இதற்கெல்லாம் தினந்தோறுங் கொஞ்சகாலம் செலவழிக்கவேண்டியது அவசியமே.

(இன்னும் வரும்.)

## உபாத்தியாயர் கவனிக்கவேண்டிய சில விஷயங்கள்.

(தொடர்ச்சி.)

ஜர்மனி தேசத்தில், விடுமுறை காலங்களில் பட்டணத்தைவிட்டு நாட்டுப்புறங்களுக்கு பிள்ளைகளெல்லோருமாக் ஒரு உபாத்தியாயருடன் போவது வழக்கம். இங்கிலாண்டு தேசத்தில் இச்சாதநத்தை விசேஷமாக அநுஷ்டிக்காவிட்டாலும் சில இடங்களில் சில காலங்களில் அப்படிச் செய்கிறார்கள். நமது தேசத்திலோ நாட்டுப்புறங்களிலிருந்த பட்டணங்களில் வந்து படிப்பவர்கள் தங்கள் வீட்டுக்குப் போகவேண்டுமென்றும், தங்கள் தாய் தகப்பன்மார்களைப் பார்க்கவேண்டுமென்றும், இதுபோன்ற ஆவலால் தனியாய்ப் போகிறார்களே ஒழிய, எல்லோரும் பட்டாளம்போல் சேர்ந்து தங்களுக்கு சேனாதிபதியாக தங்கள் உபாத்தியாயர்களில் ஒருவருடன் போகும் வழக்கம் யாம் கேட்டுமறியோம், பார்த்துமறியோம். தற்காலத்தில் நமது தேசஸ்திதிக்கு இதுமுடியாதென்றாலும், கடவுளின் இயற்கை அமைப்புகளை நேரில் பார்க்கச் செய்யும் பொருட்டு மாணாக்கர்களை விடுமுறை காலங்களில் வெளியூர்களுக்கு போகும்படி புத்திமதி கூறுவதுடன் கூட அவர்களை அப்படிச் செய்யும்படி தூண்டுவதும் சுலபம்; சிலசமயங்களில் தானும் அவர்களுடன் போகலாம். வஸ்துக்களிடத்திலிருந்து தங்களுக்கு சகலமும் அறிந்து கொள்ளுவது சிறுவர்களுக்கு இயற்கையாயிருந்தும், வயல்வெளிகளுக்கு அவர்கள் போகத்தூண்டும்படி நேரிடுவது ஆச்சரியமாகத்தோன்றும். பட்டணங்களிலேயே பிறந்து வளர்ந்த சிறுவர்களுக்கு,நாட்டுப்புறங்களில் காணப்படும் கடவுளமைப்புகளின் விந்தையும், பெருமையும் சற்றேனும் தெரியாதென்பது இவ்விஷயத்தைப் பற்றி ஒருசிறுவனை வினவுங்காலையில், அவன் சொன்னதாவது.—நான் போனமாதத்தில் சுமார் பத்துதினம் வெளியூருக்குப் போயிருந்தேன். அவ்விடத்தில் பொழுது போகாமல் நான் பட்டகஷ்டத்தை என்னவென்று சொல்வேன். எப்பொழுது திரும்பப் பட்டணம் போவேனென்றிருந்தது! பொழுதுபோகாததற்கு காரணம் அறிதல் வெகு சுலபம். மிகக் கருணையுடன் கடவுளமைத்திருக்கும் வஸ்துக்கள ஒன்றையும் அவன்பார்த்ததில்லை. பட்டணங்களில் இருபக்கத்திலுமுள்ள கடைகளில் இன்னசாமான்கள் விற்கிறார்களென்றும், இன்னாருடையதென்றும் அறிந்து கொள்ள விருப்பமில்லாமல் தெருவழியே போகும் சிலர்போல் இந்தச் சிறுவன் வெளியூருக்குப்போய் வந்திருக்க வேண்டும். ஆனால் இவ்விருவருக்கும் ஒருவண்ண மட்டும் பெதுவாய்த் தோன்றியிருக்கும். அதாவது, முன் சொன்னவனுக்கு



வழி தொலையாமல் உண்டாகுமலுப்புப் போலப் பின் சொன்ன சிறுவனுக்கு பொழுதுபோகாத அலுப்பிருந்திருக்கும். சிறுபிராயமுதற் கொண்டே கடவுளின் அமைப்பை நன்றாய்ஆராயும் பழக்கமுண்டுபண்ண வேண்டும். வயது சென்ற காலத்தில் வாழ்க்கையின் கஷ்டங்கள் மனதில் தோன்றும்பொழுதெல்லாம் இச்சிறு வயதில் கண்டறிந்த அமைப்பின் அதிசயம் வெகு சாதகமாயிருக்கும்.

(இன்னும் வரும்.)

161

## சிங்கத்தைக் குறித்த பாடம்.

[இப்பாடத்திலின்ன இன்னவிஷயங்கள் கற்பிக்கவேண்டுமென்று மட்டும் சொல்லியிருக்கிறோம். கேள்விகளுடனும், பதிலுடனும் இதை விவரித்துச் சந்தாதாரர்களில் எவரேனும் அனுப்பவேண்டுமென்று இவ்விதம் செய்தது. இதனால் அனேகருக்குச் சாதகமுண்டு. பலரனுப்பினால் மிகவும் நன்றாயிருப்பதை மட்டும் பத்திரிகையில் போடப்படும். மற்றவைகளைக் குறித்து எமக்குத் தோன்றுமபிப்பிராயத்தை கூறுவோம். தங்கள்பெயர் பலருக்கும் தெரியவிருப்பமில்லாதவர்கள் 'அறியவிரும்புவோன்,' 'சு. த' இதுபோன்ற மாறு பெயர்களும், குறிப்புகளும் உபயோகப்படுத்தலாம்.]

சிங்கம், புலி, சிறுத்தை, பூனை இவைகளினுடைய படங்கள்வேண்டும். பூனை எலி பிடிக்கும். பூனையைப்போல் அனேக மிருகங்களுண்டு. அவைகளாவன.—சிங்கம், புலி, சிறுத்தை.

பூனைஜாதியில் மிகப்பெரிதும், அதிக பராக்கிரமுமுள்ளது சிங்கம். சிங்கத்தின் நீளம் 10, 12 அடி. அதற்குள்ள பலம் அதிகமாகையால் தன் பாதத்தின் ஒரு அடியால் ஒரு குதிரையைக் கொல்லும்; ஒரு பெரிய ரிஷபத்தைத் தூக்கிக் கொண்டுபோய் விடும். பல், நாக்கு, உள்ளங்கால், தாடி இவைகளில் பூனைக்கும் சிங்கத்துக்கும் ஒற்றுமை உண்டு. ஆண்சிங்கத்திற்கு பிடரி உண்டு; பெண்சிங்கத்துக்கு அது இல்லை. சிங்கம் உஷ்ணதேசங்களில் தான் வாசஞ்செய்யும். ஆப்பிரிகா, ஆஷியா உஷ்ண கண்டங்கள். இவைகள் கூட்டம் கூட்டமாய் வாசஞ்செய்யா; எங்கேயாவது குகைகளில் ஆண் பெண் இரண்டு மட்டுமிருக்கும். பகல் முழுதும் தூங்கும்; இதற்குக் காரணம், பெண் சிங்கத்துக்கும், குட்டிகளுக்கும் தீனி கொண்டுவருவதற்காக நெடுந்தூரம் வரையில் இரவில் போவதால்; மேலும் அதின் பாதம் மிகவுமிருதுவாயிருத்தலால் சிறிது சத்தடிகூட செய்யாமல் போவதற்கு மிகவும் அனுகூலம்; அதற்குள்ள அதிக பலமானது அதன் இரையின் பேரில் தாவிப் பிடித்துக் கொள்ளுவதற்கு சாதகம். தான் ஜீவிக்குமிருகங்களை பிடித்துக் கொல்லுவதற்கு அதன் நகங்கள் அதற்கு உதவி; தான் பிடிக்கும் மிருகங்களைச் சதைவேறு தோல் வேறாக கிழிப்பதற்கு தன் பல்களினால் அதற்கு லகுவுண்டு. கிடைகளிலிருந்து ஆட்டையும் மாட்டையும் பிடித்துக் கொண்டு போகும்; ஆனால் மனிதன் அதற்குத் தீங்கு செய்ய முயலாவிட்டால் அவனை எதிர்க்காது; இப்படிக் கில்லாமலே மனிதனைப் பிடித்தால்

தாங்க முடியாத பசியின் கொடுமையால் செய்யும் காட்டு மிருகங்களில் மான், செம்புலி ஆடு முதலானவைகளைப் பிடிக்கும். எல்லாச் சிங்கங்களிலும் ஆப்பிரிகா தேசத்துச் சிங்கந்தான் மிகவும் பெரிதானது.

ஆட்டுமந்தை மாட்டு மந்தைகளுக்கு அதிக கெடுதல் நேரிடுவதால், சிங்கத்தைப் பிடிக்கிறது. இவைகளைப் பிடிப்பதில் அதிக அபாயமுண்டு. இதற்கு அனேக வழிகளுண்டு. குதிரைகளின் மேல் வேடர்கள் ஏறிக்கொண்டு சில நாய்களுடன் சிங்கத்தின் குகைக்குப் போய், மத்தியானம் அது தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது நாய்கள் அதை எழுப்பிவிடும். எழுந்தமாத்திரத்தில் இந்நாயைத் தூரத்தும். அப்பொழுது குதிரையின் மேலிருக்கும் வேடர்கள் குண்டினால் அவைகளைச் சுட்டுக்கொன்று விடுவார்கள். சிங்கம் இரைதேடப் போகும்போது அவைகளைக் கொல்வது முண்டு. ஆனால் அதில் அபாயமுண்டு. சிங்கம் மிகவும் கவுரவமுள்ளமிருகம்.

## தபால்பெட்டி.

நான் வகுப்பில் கூச்சலிடாவிட்டால், மாணாக்கர்கள் எனக்குக் கீழ்ப்படிகிறதில்லை. இதற்கு ஏதாவது வழிகூறுவீரென நம்புகிறேன்.

ம. ம.

மாணாக்கர்களைக் கீழ்படிந்து நடக்கச்செய்வதற்கு,கூச்சலிடுவதினால் பயனில்லை. கூச்சலிடுவது ஆவசிகமென்று நீர் நம்பும் பட்சத்தில், வேறுஏதோ பிழை யிருக்கிறது. மாணாக்கர்களைக் கீழ்ப்படியச்செய்வது, உம்முடையபேச்சின் தொனியாலல்ல; தீர்மானத்துடன் பேசுவதால். இவரிடம் 'நமது சாமர்த்தியம்' பலியாது என்று மாணாக்கர்கள் உணரும்படி நடந்துகொள்ளவும்; அப்படியே பேசவும்வேண்டும்

II. இவ்விடத்தில் சில உபாத்தியாயர்கள் சேர்ந்து உபாத்தியாய சங்கம் ஒன்று ஏற்பாடுசெய்வதாகத் தீர்மானித்திருக்கிறோம். நடந்து கொள்ளவேண்டிய சட்ட திட்டங்கள் இன்னவை எனத் தீர்மானஞ்செய்வதற்கு முன் தங்களை யோஜனைகேட்க விரும்புவதால், உமமுடைய அபிப்பிராயத்தை எங்களுக்குத் தெரிவிப்பீரென பிரார்த்திக்கிறோம்.

ம. த.

உபாத்தியாய சங்கங்கள் ஏற்படுத்துவதில் நமக்கு மிகவும் திருப்தி. சட்டங்கள் எவ்வளவு சுருக்கமாய் ஏற்படுத்துகிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு நலம். சங்கத்தலைவர் ஒருவரும், வாரம் வாரம் இன்னவேலைசெய்வதென்று தீர்மானிக்க காரியவிசாரணை சபையார் ஒன்றும் நியமிக்கவேண்டும். ஒவ்வொருவரும் தங்களாலியன்றமட்டும் பாடுபடுவதாய் உறுதிகூறவேண்டும். ஒரு காரியம் செய்வதற்குமுன், இன்னகாரியம் செய்யவேண்டுமென்றும், இன்னவிதமாய்ச் செய்வதென்றும், தீர்மானிக்கவேண்டும். உங்கள் எண்ணம் ஈடேறக்கடவதாக.



THE
VILLAGE SCHOOLMASTER.
உபாத்தியாயர்.

Vol. I.]. APRIL, 1888. [No. 11.

## தேகப்பயிற்சி.

சிறுவர்கள் தேகப்பயிற்சி செய்யும்படி செய்வது உபாத்தியாயரின் கட
மையாம். மாணாக்கரின் மனோவலிமையை விர்த்திசெய்வதற்கு பாடுபடுவது
போல் தேகவலிமைக்கும் பாடுபடவேண்டியது வித்தியாபோதகருக்கு இன்
றியமையாததாம். ஆனால் நமது பள்ளிக்கூடங்களில் மனதைத் தேற்றுவ
தற்கு மட்டுமே உபாத்தியாயர்கள் உழைக்கிறார்கள். தேகவலிமை, நன்னட
க்கை, மதசம்பந்தவிஷயம் ஆகிய இவைகளில் கவனம் செலுத்துகிறதில்லை;
இதுமட்டுமேயன்றி அலட்சியங்கூடச் செய்கிறார்கள். நமது சிறுவர்கள் எவ்வ
ளவுக் கெவ்வளவு புத்தி கூர்மையுள்ளவர்களா யிருக்கிறார்கள் என்று நாம் சந்
தோஷப்படும்படி இருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு, மிகவும் பலஹீனர்க
ளாயும், நன்னடக்கையும், தெய்வபக்தியும் அற்றவர்களாயு மிருக்கிறார்கள்
என்று மனஸ்தாபப் படவேண்டி வருகிறது. ஆகையால் இவ்விஷயங்களிலும்
அவர்களுக்கு பயிர்ச்சி உண்டாகும்படி செய்வது பெற்றோர்களுடையவும்,
உபாத்தியாயர்களுடையவும் முக்கியகருமமாம். தேக வலிமையில்லாவிடில்
மனதின் வலிமைகுறையும்; ஆகையால் நெடுநேரம் சில சங்கதிகளைக்குறித்து
யோசித்தல் கூடாமையாகும்; மனதுக்கும், தேகத்துக்கும் அதிக பொருத்த
மிருக்கிறபடியாலும், ஒன்று சரியாய் இல்லாவிடில் மற்றொன்று நன்றாக
விளங்காததலாலும், தேகப்பயிற்சி விஷயத்தில் நாம் அதிக சிரத்தை
எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது நமது இஷ்டம். துர் நாற்றமுள்ள
இடங்களிலிராமலும், அப்படிப்பட்ட வஸ்துக்கள் தம் தம் வீடுகளின் அருகா
மையில் சேரவிடாமலும், தினம் தினம் தேகத்தை சுத்தி படுத்திக் கொள்
ளவும், முறமுறப்பான ஆடைகள் உடுத்திக்கொள்ளவும், இன்னும் இது
போன்ற சரீரசுக விஷயங்களைக்குறித்த புஸ்தகங்கள் பள்ளிக் கூடங்களில்
பாடமாக கற்பிக்கவேண்டும். இப்பாடங்கள் சிறுவயதிலேயே ஆரம்பிக்கவே
ண்டும். மேலும் ஓடுதல், நீந்தல், பந்து விளையாடுதல், இவை போன்ற தேக
வலிமை உண்டாக்கும் விளையாட்டுகள் கற்பிக்கவேண்டும். நம்மவர்கள் இ
வைபோன்ற சில இயற்கையான விஷயங்கள் தெரியாமலும், அல்லது தெரி
ந்து செய்யாமலும், முதிர்ந்தோராகும்பொழுது மிக்க பலஹீனர்களும் சுருசு
றுப்பற்றவர்களு மாகிறார்கள். சிறுவயதில் துர்மார்க்க விஷயங்களில் அவர்
களெண்ணம் பிரவேசியாது கண்டித்து,மிகவும் பலிஷ்டர்களாகும்படி மிகவும்

ஜாக்கிறதையாய் நன்குய்ப் பார்த்துவரவேண்டும். நமது தேசம் இனி விர்த்திக்கு வருவதும், க்ஷேமமாயிருப்பதும் இச்சிறுவர்களாலேயே. ஆகையால், அவர்கள் தேகப்பயிற்சி விஷயத்தில் நாம் அதிக சாக்கிரதை பாராட்ட வேண்டுவதுமுக்கியமல்லவா? இங்கிலாண்டு முதலான தேசங்களில் சிறுவர்களின் தேகவலிமையின் விர்த்தி விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளுகிறுர்கள். அப்படியாகுல் இத்தேசத்தில் மட்டும் இவ்விஷயத்தை அசட்டைசெய்வதேனே?

## அன்றுசெய்த வேலையை ஞாபகத்துக்குக் கொண்டுவருவது.

அன்று நடந்த விஷயங்களை ஞாபகத்துக்கு கொண்டு வரும்பொருட்டு பிரதி தினஞ் சாயங்திரம் சிலகாலம் செலவழிப்பதால் ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் அதிக நன்மைவிளையும். தான்விர்த்தியடைவதற்கு தன்னை தானே பரீட்சை செய்து கொள்வதுபோல் சிரேஷ்டமான அளவுகோல் வேறென்றில்லை. இப்படிச் செய்வதால், தன் வேலையில் கவலையுடைய உபாத்தியாயருக்கு பெரும்பயனுண்டாகும். வேலையை இன்றைவிட நாளையதினம் சீராய்ச் செய்யும்பொருட்டு உபாத்தியாயர் முக்கியமாய் கவனிக்க வேண்டிய ஒருசங்கதி தினம் நடவாமலிராது. தன் எண்ணம்போல் பள்ளிக்கூடமிருக்க தான் எடுக்கும் முயற்சிகளில், தன் சிறு ராஜ்யத்தில் பிரதி தினமும் நடக்கும் விஷயங்களை தவருமல் ஞாபகத்துக்குக் கொண்டு வரும் வாடிக்கையைப்போல் பேருதவிசெய்வது வேறென்றுமில்லை. சரிவரச்செய்தாலொழிய இதனுல் அதிக பயன் உண்டாகமாட்டாது. தான் இப்படிச்செய்வதின் எண்ணம் இன்னகாரியம் சாதகமாவதற்கு என்று முன்னதாகவே தீர்மானித்து தன் தீர்மானத்தை அவசரப்படாமலும், உறுதியுடனும் நடவடிக்கையில் கொண்டுவரவேண்டும்.

இப்படிச் செய்வதால் தன் பிழைகளை திருத்திக் கொள்வதுடன் கூட தன் மாணக்கர்களிடத்து படிந்திருக்கும் கெட்டநடவடிக்கைகளையும் சீர்படுத்தலாம். இவ்வெண்ணம் நடவடிக்கையில் கொண்டுவருவதால் பலனுண்டாகும்படி ஒருவழிசொல்வோம். மாணக்கர்கள் ஒவ்வொருவரும் கிரமமாய் காலத்தில் பள்ளிக்கூடம்வருவது, சோம்பலின்றி கவனத்துடன் படிப்பது, புத்திசாலியாய் கற்பிக்கும் சங்கதிகளை நன்றாய் கிரகிப்பது, நல்லமாதிரியாய் நடந்துகொள்வது, இன்னு மிதுபோன்ற வேறெவ் விஷயங்களை குறித்துவைத்துக் கொள்ளவேண்டுமென்று தோன்றுகிறதோ அவ்விஷயங்களை ஒரு புத்தகத்தில் உபாத்தியாயர் எழுதிக்கொள்வதாய் எண்ணிக்கொள்வோம். இந்த தஸ்தவேஜும், அப்பொழுதைக் கப்பொழுது அவருடைய பார்வையில் வருகிற சங்கதிகளும், தினம் யோசிப்பதற்கு விஷயங்கள் வற்றுமலிருந்துகொண்டே இருக்கும். அப்படி செய்துகொண்டு வருவதால் உபயோகமுண்டு. பள்ளிக்கூடத்தின் உபயோகத்தை கெடுப்பதாக தோன்றும் விஷயங்களை வேருடன் களையவதற்கு ஏற்பாடுகள்செய்யசாதகம். இதரசங்கதிகளுடன் பின் வரும் விஷயங்களைக் கவனித்தல்நலம். இன்றையதினம் மாணக்கர்களெல்



லோரும் கிரமமான காலத்திற்குள் வந்தனர்களா? அவர்கள் நியமித்திருக்குங்
நேரத்துக்கு முன்பாகவே வரும்படிச்செய்ய என்னுலியன்றமட்டும் பாடுபட்
டேனு? மணிக்கு சரியாய் நான் வந்தேனு? ஒழுங்குக்கு விரோதமாய் இன்
றைக்கு ஏதேனும் நடந்ததா? கீழ்ப்படிந்துநடக்க எவ்விதமாக மாணக்கர்க
ளிருக்கவேண்டுமோ அப்படி நடந்தார்களா? சரியானபாடங்கள் நியமித்தே
னு? குறித்தபாடங்கள் சிறுவர்களுக்கு அறிவு விர்த்திசெய்யத்தகுந்ததா? வா
சகசக்தியில் அவர்கள் தேர்ச்சி அடைகிறுர்களா? அவர்கள் படித்தபாடத்
தின் அர்த்தம் தெரிந்துகொள்ளும்படி கேள்விகள் கேட்டேனு? எழுத்துப்
பிழைகளில்லாமல் எழுதுகிறுர்களா? மாணக்கர்களின் கையெழுத்துப் படிவ
தற்கு நான் முயற்சி எடுத்துக் கொள்ளுகிறேனு? ஏன் என்னும் வார்த்தை
உபயோகப்படுத்த நான் பழகுகிறேனு? மந்தபுத்தியுடையவர்களை படிக்க அ
ண்டுகிறேனு? கரிப்பலகையை உபயோகப்படுத்துகிறேனு? நான் உறுதியும்
பட்சமு முள்ளவனுயிருக்கிறேனு? பிள்ளைகளின் தேகப்பயிற்சியில் நான்சிர
த்தை யெடுத்துக்கொள்ளுகிறேனு? அவர்கள் நன்னெறியில் செல்லச்செய்கி
றேனு? தண்டனை விதிப்பதற்கு முன்னமே அதன் லோபா லோபத்தை கவ
னிக்கிறேனு? சுய விர்த்தியில் நான் சிரத்தை எடுத்துக் கொள்ளுகிறேனு?
என்தொழிலுக்கு சாதகமான பத்திரிகைகள் படிக்கிறேனு?

இதுபோன்ற அனேக கேள்விகளை தனக்குத்தானே பிரதி தினமும் கே
ட்டுக்கொள்ளவேண்டியது தன் தொழிலில் சிரத்தையுடைய உபாத்தியாய
ரின் முக்கிய கடமையாம்.

## மரங்களைக்குறித்த பாடம்.

வேரும், மற்றெல்லாபாகங்களும் உள்ள ஒருசிறியமரம். அனேகமரங்
களின் படங்கள். பின் குறித்திருக்கப்பட்ட சில சிறிதான இலைகள், பழங்கள்.

ஆரம்பம்:—சாதாரணமாய் மாணக்கர்கள் பார்க்கிற மரங்களின் உரு
வத்தைக்குறித்து சொல்லவும். சில சிறியவையாகவும் சில மிகப்பெரிதாக
வும், தன்னந்தனியே சில வளருவதையும் வேறு சில ஒன்ருய் அடர்ந்திருப்
பதையும், குளிர்காலத்தில் மொட்டையாயிருப்பதையும், உஷ்ண காலத்தில்
இலை நிறைந்து நிழல்தருவதையும், விஸ்தாரமான கிளைகளுடைத்தாயிருப்ப
தையும், தெரிவிக்கவும். இவைகள் மிக அழகும் உபயோகமுமுள்ளன. மிரு
கங்களுக்கும் பட்சிகளுக்கும் நிழல் தருகிறது. வெட்டினுல் அனேகவிதமான
சாமான்கள் பண்ணுவதற்கு மரமாகிறது; விறகாகிறது.

I. மரத்தின் பாகங்கள்.—வளரும்பொழுது ஒரு பாகம் பூமியில் மறை
ந்திருக்கிறது. அதன்பெயர்? வேர். பூமியில் நிலை வூன்றி நிற்பதின்பெயர்?
அடிமரம். இதிலிருந்து நாலுபக்கமும் படர்ந்திருப்பது—கிளைகள். இவைக
ளில் அனேககணுக்களுண்டு. இவைகளில்தான் இலைகள் முளைக்கின்றன.
அனேகமரங்களில், அவைகளின்மேல் தான் புஷ்பங்களுண்டாகின்றன.
இவைகள் மறைந்ததும், பழங்களுண்டாகின்றன. இவற்றுள் வித்திருக்கின்
றன. ஆக மரத்தின்பாகங்களாவன. வேர், அடிமரம், கிளை, இலை, புஷ்
பம், பழம், விதை.

மரத்தின் சிறு கொம்புகளின் பெயரென்ன? இவைகள் எங்கே முளைக்கின்றன? புஷ்பங்கள் மறைந்து என்ன உண்டாகின்றது? விதை எதிலிருக்கின்றது?

குறிப்பு:—இவைபோன்ற அநேக கேள்விகள் கேட்கவேண்டும். இந்தப் பாடத்தில் இன்னவிதமான கேள்விகள் கேட்கவேண்டுமென்று சிலமட்டும் குறிப்பாகக் காட்டுகிறோம்.

II. (1.) இப்பாகங்களின் உபயோகம்.—வேர் பூமியில் என்னசெய்கிறது? அதனிடத்தில் மரத்தை நிறுத்துகிறது. அதனால் வேர் பிரயோசனமுண்டா? ஒருசெடியின் வேரைவெட்டிவிட்டால் என்னஆகும்? வதங்கிஉலர்ந்துபோகும். ஆகையால் மரத்தை பசிரையா யிருக்கச்செய்வது வேர். ஆனால் இந்தசக்தி அதற்கு என்னவிதமாய் உண்டாகிறது? நீ தினம்மூன்றுவேளை சாப்பிடுவதால் வளருகிறாய். இதுபோலவே மரம் வளருவதற்கு அதற்கு ஆகாரம்வேண்டுவது அவசியமல்லவா? மரத்துக்கு வேண்டியஆகாரம் வேரின் மூலமாய்க் கிடைக்கிறது. (விவரித்து உரைக்கவும்.) வேரின் உபயோகங்களென்ன? மரம் வளருதற்குஅதற்கு ஆகாரமெப்படி?

(2.) அடிமரத்தாலென்ன பிரயோசனம்? வெளிச்சத்திலும், காற்றிலும் மரத்தை தாங்கிக்கொண்டிருக்கிறது. கிளைகளுக்கும், இலைகளுக்கும், ஆகாரமும், ஜலமும், எதின்மூலமாய்ப் போகிறது? அடிமரத்தின் மூலமாகவே ஆகையால் அடிமரத்தால் இரண்டு தினுசான பிரயோசனமுண்டு. அவைகளாவன? அடிமரத்தை தோலைப்போல் மூடிக்கொண்டிருப்பதின் பெயரென்ன? பட்டை. சில பட்டைகள் கரடுமுரடாயும், அழுத்தமாயுமிருக்கின்றன; வேறுசில தேகத்தின் தோல்போல் மெலிதாயிருக்கின்றன.

(3.) இலைகளில் எத்தனை இருக்கிறதுபார்! அவைகளின் உருவங்களும், வடிவங்களும், அநேக தினுசுள்ளவைகளாயிருப்பதைப்பார்! அகலமும், பெரிதும், உருண்டதும்; சில, நீண்டதும், அகலக் கட்டையானதும், கூரானதும், இது போன்ற அநேக வகையுள்ளது. கொம்புகள் வழவழுப்பும், முள்ளைப்போல் கூருள்ளதும், செடிகளுக்கு ஆகாரந்தருவித்து வளரச்செய்வதற்கு பிரயோசனமுள்ளது. அவைகளை யெல்லாம் கிள்ளிவிட்டால், செடிபட்டுப்போகும்.

(4.) புஷ்பங்கள். இவைகள் மிகவும்அழகுள்ளன. சிலவை கொத்துகளாகவும், சிலவை தனியாகவும் வளரும். சில கொத்துகள் செங்குத்தாய் நிற்கும். வேறு சில சங்கிலிகொலுசுகள்போல் கீழ்நோக்கிவளரும். இவைகளில் அநேகவர்ணங்களுண்டு. இவைகள் சடுதியில் போய்விடும். இவைகளின்மேல் இலைகள்காய்ந்து மறைந்துவிடும். உட்பாகம் பழங்களாகும்.

(5.) பழமென்றாலென்ன? தின்பதற்கு நன்றாயிருக்கும் வஸ்துசிலவற்றைச்சொல்லு? சில பழங்கள்தான் தின்னலாம். இவைகளும் பெரிதும் சிறிதுமாகவே இருக்கும். பழத்திற்குள்ளிருப்பதுதான்.

(6.) வித்து. (சிலபழங்களைக் கொய்து காண்பிக்கவேண்டும்.) விதைகளும், உருவத்திலும், வடிவத்திலும், வர்ணத்திலும், பேதப்படுகின்றன.

விதையின் பிரயோசனமென்ன? பூமியில் புதைந்திருந்து இருட்டிலே முளைகிளம்பி வளருகின்றன. சிறியவேர்கள் பூமியின் கீழ்ச்சென்று, ஒருசிறிய முளைமட்டும் மேல்நோக்கி, சிறியசெடியாகி பெருமரமாய் வளருகிறது.

III. மரத்தின் உபயோகம். வளரும்பொழுது அவைகள் அழகாயிருக்கின்றன. தின்பதற்கு பழங்கள் தருகின்றன. பட்சிகள் கூண்டுகட்டுவதற்கு இடந்தருகின்றன. அநேகஜந்துக்கள் தங்குவதற்கு நிழல்தருகின்றன. வீடும், கப்பலும் கட்டுவதற்கு மரமாகின்றன. வீட்டுக்குவேண்டிய சாமான்கள்பண்ணுவதற்கும், ஆயுதங்கள் செய்வதற்கும் உபயோகமாகின்றன. அடுப்பெரிப்பதற்கு கட்டையாகின்றன.

---

## கடிதங்கள்.

---

திருநெல்வேலி டிஸ்திரிக்ட்டு சங்கர நயினார்கோவில் தாலூக்கா சிவகிரி உபாத்தியாய சங்கத்துக்கு அக்கிராசனாதிபதி முத்துசாமியா பிள்ளை

மிகவும் வணக்கமா யெழுதிக்கொண்டமனு என்னவென்றால் நாளது மீ 27வ சனிக்கிழமை மாலை 2-மணிக்கு உபாத்தியாய சங்கத்தாரால் நடத்திய 7-மெம்பர் புரோசிடிங்ஸில் 1-வது தீர்மானத்தில் இப்போது சிலாவணியாகிக்கொண்டுவருகிற நூலாதாரம்-முதல்பிரிவு, 2-ம் பிரிவு, இரண்டாம்பாடபுத்தகம், மூன்றும் பாடப்புத்தகம், இவைகளின் விலை பழைய வழக்கப்படியே இருக்காமல் இப்பொழுது நூதனமாக ஒவ்வொரு புத்தகத்துக்கும் ஒவ்வொரு அணா அதிகமாய் ஏற்படுத்துவதைப் பார்த்தால் ரொம்பவும் அநியாயமாயிருக்கிறது.

2. அதாவது ஏழைகள் இனிமேல் மேற்படி புத்தகங்களை வாங்கிப்படிக்க வேண்டா மென்பதற்கு சாக்ஷியாகயிருக்கிறது.

3. ஆகையால் ஏழை மாணாக்கர்கள் விஷயமாயும் உபாத்தியாயர்களின் க்ஷேமமாகவும் தங்களுடைய, உபாத்தியாயரென்னும் பத்திரிகையிலாவது பிரஸ்தாபஞ்செய்தால் கௌர்மெண்டார்க்குச் செவியுற்று பழய வழக்கப்படிக்கு நூலாதாரம், முதல்பிரிவு, ஒரு அணாவும், இரண்டாம்பிரிவு ஒன்றரை அணாவாகவும், இரண்டாம்பாடப்புத்தகம் இரண்டணாவாகவும்,மூன்றும் பாடபுத்தகம் நாலணாவாகவும் மாற்றிக் கிருபைசெய்யார்களா என்கிற முழு நம்பிக்கையோடு தங்கள் பத்திரிகையில் பிரசுரஞ்செய்ய தாங்களைக் கோருகிறோம். இது விவரங்களை தாங்களும் கிருபைகூர்ந்து கௌர்ன்மெண்டாரைக் கேட்கும்படி பிரார்த்திக்கிறோம்.

29—5—88 சிவகிரி உபாத்தியாய சங்கம். } யம். முத்துசாமியாபிள்ளை. அக்கிராசனாதிபதி.

---

# தபால்பெட்டி.

எவ்வகைப்பட்ட மாணுக்கர்கள் வகுப்பில் அதிகத்தொந்திரவு கொடுக்கிறார்கள்? அவர்களை கீழ்ப்படியச் செய்வதெப்படி?

இங்கிலாண்டு முதலானதேசங்களில் மாணுக்கர்கள் உபாத்தியாயருக்குப் கொடுக்குந் தொந்திரவு இவ்வளவவ்வளவல்ல. உபாத்தியாயர்களுக்காகா பிரசுரமாகும் அத்தேசப்பத்திரிகைகளில் வாரந்தோறும், மாதந்தோறும் உபாத்தியாயர் மாணுக்கனை அடித்ததற்காக சிறுவன் தகப்பனார் அவர்பேரில் நியாயஸ்தானங்களில் நடவடிக்கை நிறைவேற்றுவதும், நியாயாதிபதி அவருக்கு அபராதம் விதிப்பதும் இதுமுதலான சங்கதிகள், யாம் படிக்கத் தவறுகிறதில்லை. மாணுக்கனை தலைமை உபாத்திமார்கள் தவிர மற்ற உபாத்திமார்கள் அடிக்கக் கூடாதென்கிற சட்டம் நம் தேசத்திலிருக்கிறதென்றாலும், இச்சட்டத்துக்கு விரோதமாக நடக்கிற உதவிஉபாத்திமார்கள் இப்பிழைக்காக தண்டிக்கப்படுகிறதில்லை. ஒருக்கால் தனிமையில் தலைமை உபாத்தியாயர் அவர்கள்பேரில் சினந்துகொண்டாலுங் கூட நியாயஸ்தானங்களுக்குப் போகும்படி சம்பவிக்காதவிஷயத்தில் எமக்கு மிக்க திருப்தியே. இவ்விஷயத்தைக்குறித்து மற்றொருசஞ்சிகையில் விவரித்துக்கூறுவோம். நம் தேசத்திலேயே மகம்மதிய சிறுவர்கள் அதிக துஷ்டர்கள். மகம்மதிய பள்ளி உபாத்திமார்களுக்கு பிள்ளைகள் ஒழுங்குபட்டு நடக்கச்செய்வதில் அதிக சிரமமுண்டு. இவைகளையெல்லாம் கவனித்துப் பார்க்குமளவில் நம் சிறுவர்கள் கீழ்ப்படிந்து நடக்கும் விஷயத்தில் யாம் மிகவும் ஆனந்தங் கொள்ளவேண்டும். ஆனால் சிலசமயங்களில் சில சிறுவர்கள் துஷ்டர்களாய்க் காணப்படுவது சகஜந்தான். உபாத்தியாயரை உபத்திரவிக்க வேண்டுமென்று துஷ்டத்தனமாய் நடந்துகொள்ளும் சிறுவர்களை யாம் பார்த்ததில்லை. சிறுவயதானவர்களுக்கு சுருசுருப்பதிகமுண்டு. ஆகையால் ஏதாவது செய்துகொண்டே இருக்கச்சொல்லும். தொந்திரவு செய்வதிலும் கீழ்ப்படியாமையிலும் அவர்களுக்குப்பிரியமில்லை. வேலைசெய்யாமல் சோம்பேறித்தனமாய் உட்கார்ந்திருப்பதலும், அவர்களுக்கு இஷ்டமில்லாத வேலையைச்செய்வதிலும் அவர்களுக்கு வெறுப்புண்டு. சாதாரணமாய் எவ்வளவு தேகசக்தி வேண்டுமோ அதற்கு அதிகமாகவே சிறுவர்களுக்கு உண்டாகையால் அதற்கு தக்குந்தாப் போல் அதிகவேலை அவர்களுக்கு கொடுக்கவேண்டும். சிறு குழந்தைகளை தாய்மார்கள் துஷ்டத்தனத்திற்காக தண்டிப்பது சகஜம். ஏனிப்படிச் செய்கிறார்களென்பதற்கு காரணம் மடமையே. அவர்களுக்கு வேண்டியமட்டும் வேலைசெய்ய விடாதிருத்தல் மூடத்தனமாய் முடியும். வளருகிற செடியை ஒரு சட்டியால் மூடிவைத்து அதை வளரச்செய்யாததை ஒக்கும். அங்கு மிங்கு போகாமல், எதையும் தொடாமல் உட்கார்ந்திருக்கச் சொல்லி என்னதான் கண்டித்தாலும் தண்டித்தாலும் அவைகள் இருக்கமாட்டா. விளையாடுவதற்கு சிறு விளையாட்டுக்கருவிகள் கொடுத்து விளையாடச்சொன்னால் அவ்விளையாட்டில் அதன் முழு எண்ணமும் செல்லுமாகையால் தொந்திரவு செய்யாது. இதுபோலவே அனேக கிராம பாடசாலை உபாத்தியாயர்கள் சிறுவர்களை கூச்ச லிடாமலிருங்களென்று கூறி தான் தூங்குவதும், தன் சினேகிதரிடத்துப் பேசுவதும் வழக்கம். இவர்மட்டும் வேலையா யிருந்தால் அச்சிறுவர்கள் எவ்விதமாய்ப் பேசாமல் ஊமைகள்போல் உட்கார்ந்திருப்பார்கள்? உபாத்தி



யாயர் அவர்களை ஏதாவது வேலைசெய்யச் சொல்லாவிடில் தங்களுக்குத் தாங்களே அவர்கள் வேலை தேடிக்கொள்வார்கள்; இது உபாத்தியாயருக்குத் தொந்திரவாய் முடிகிறது. ஆகையால் ஒவ்வொரு மாணுக்கனும் கவனிப்பதற்கோ செய்வதற்கோ ஏதாவது வேலை இருந்துகொண்டிருக்க வேண்டும். சில உபாத்தியாயர்கள் முதல் பையன் முதல் கடைப்பையன் வரையில் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டல் வழக்கம். இது மிகவும் தப்புவாடிக்கை. இப்படிச் செய்வதினால் உபாத்தியாயருக்கு அதிகதொந்திரவுண்டு. ஒவ்வொரு பையனுக்கும் தன்னை உபாத்தியாயர் இப்பொழுது கேள்வி கேட்பாரென்று சற்று நிதானமாய்த் தெரியுமாகையால் தனக்குக் கேள்விவருமளவும் தன் ஞாபகத்தை வேறுவிதத்தில் செலுத்துவான். அதனால் உபாத்தியாயருக்கு கோபமுண்டாகும். ஆகையால் தன்னை ஒவ்வொரு நிமிஷமும் கேள்வி கேட்பார் என்று ஒவ்வொருவனும் எண்ணிக்கொண்டிருக்கும் வண்ணம் முன்பாகவே இன்னபையன் மறுமொழி கூறுவானென்று குறித்துவிட்டு அப்புறம் கேள்வியைச் சொல்லாமல், கேள்வியைமுன்னதாகச் சொல்லிவிட்டு பிற்பாடு நீயென்று ஒருவனை பதில் சொல்லச்சொல்ல வேண்டும். வகுப்பு முழுமையிலும் கவனம் செலுத்தி எவன் அசாக்கிறதையாய் இருக்கிறானோ அவனை உடனே கேள்வி கேட்கவேண்டும். இப்படிச்செய்வதால் உபாத்தியாயருக்கு தொந்திரவு குறையும்.

பள்ளிக்கூட பாடங்களைப்படிப்பதில் சற்றேனும் கவனமில்லாத சிறுவர்கள் சிலருண்டு. அவர்கள் மேல்வகுப்புக்கு மாற்றப்படா விட்டாலும், வகுப்பில் கடையில் உட்கார்ந்திருந்தாலும், கவனியார்கள். ஆதியில் அவர்கள் படிப்பில் சிரத்தை இல்லாத சிறுவர்களுக்குள்ள குணங்களிது. இப்படிப்பட்ட சிறுவனை வகுப்புக்கு மத்தியில் உட்காரவைத்து மற்றவர்களுடன் அவனை கலக்கவிடாமல் செய்துகொண்டுவந்தால் போதுமானது. ஆனால் இக்குணங்களுடைய பலரிருந்தால் வேறுவிதமான தண்டனைதான் விதிக்கவேண்டும். ஆனால் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில்கூட உபாத்தியாயர், நீதியும் உறுதியும் உடையவராயிருந்தால் மனதிடமும், தான் கட்டளையிட்டதை மறுத்து நடப்பவர்களை தண்டிக்கும் தீர்மானமும், கண்டபடி இப்பொழுதுகொடுக்கும் உத்திரவுக்கு நேர்விரோதமாய் இன்னும் சற்றுநேரத்துக்குள் எல்லாம் வேறுத்திரவு கொடுக்காதவராயுமிருந்தால் தான் கற்பிக்கும் பாடங்களில் அவர்களுக்கு ஒரு விருப்பத்தை உண்டுபண்ணுவராயிருந்தால் தான் சமர்த்தரும் லக்ஷமுடையவருமாயிருந்தால் மாணுக்கர்கள் தொந்திரவு கொடுக்கமாட்டார்களென்று நாம் பூரணமாய் நம்புகிறோம்.

# ஒரு எலிமெண்டரி பாடசாலையின் தலைமை உபாத்தியாயருடைய கடமைகள் எவை?

ஒரு எலிமெண்டரி பாடசாலையின் தலைமை உபாத்தியாயருடைய கடமைகள் மேன்பார்வை, கற்பித்தல், பரீக்ஷை, தெண்டனை, சுற்றிப்பார்த்தல் முதலியவைகளேயாம்.

1. எலிமெண்டரி பாடசாலையின் சங்கதிகளைப்பற்றி யோசித்துப் பார்
க்கும்பொழுது ஒருவருடைய மேன்பார்வை யன்றியிருப்பது கூடாமை என்
றுதோன்றுகிறது. பாடசாலையின் பாலர்கள் ஒவ்வொருவனுக்கும் தனித்தனி
யே கவலையெடுத்து கற்றுக்கொள்ளவும், கெட்ட எண்ணங்களை விட்டொழிந்து
எப்பொழுதும் நல்ல எண்ணத்துடனேயே சரியான செய்கைகளைச் செய்
யும்படியும் கற்பிக்கவேண்டும். அவநம்பிக்கையும் சந்தேகமுமிருப்பது
எப்பொழுதும் கெடுதியே என்றாலும், ஆலோசனை யில்லாமை, புத்தியீனம்,
முதலியதுர்க்குணங்க ளிருப்பதனால் எப்பொழுதும் ஒருவர் மேல்பார்த்து
வரவேண்டியதான பாடசாலைகளுமிருக்கின்றன. ஒவ்வொருநாளும் உபாத்
தியாயர் மேல்பார்த்து வரவேண்டும். தான் வேலையிலிருந்தால் தனக்குக்
குக் கீழ்ப்பட்ட உபாத்தியாயர்களைக் கொண்டாவது அவ்வாறு பார்த்துவரு
ம்படி செய்யவேண்டும்.

2. இவ்வாறு மேன்பார்வை பார்ப்பதினால் பாடசாலையின் ஒவ்வொரு
பாகத்திலும் பரபரப்பு உண்டாகும். தலைமைஉபாத்தியாயர் ஒவ்வொரு வகுப்
புக்கும் வருதலினாலும் அவரது ஏற்பாடு முதலியவற்றாலும் யாவரும் சோம்
பலினின்றும்நீங்கி சுருசுருப்பாயிருப்பார்கள். வகுப்புகளில் ஒரு ஏற்பாடில்
லாமலும், பிள்ளைகள் அவலட்சணமாய் உட்கார்ந்துகொண்டும் ஏற்பட்ட
காலங்களில் தந்தம் வேலைகளைச் செய்யாமலும், ஒழுங்குதப்பி நடந்துவரு
வது இவைனின்றும் விடுவித்து சீர்திருத்த மடையச்செய்யும்.

3. சரியான மேலதிகாரி யில்லாதகாலத்தில் பாலர்கள் உபாத்திமைப்
பயிற்சி யில்லாதவர்களாலும், சட்டாம்பிள்ளைகளாலும் ஒழுங்குதப்பிபலவாறு
நடத்தப்படுவதினால் ஷேபாலர்களுடைய நன்னடத்தைக்கும் உபாத்தியாய
ருடைய அதிகாரத்திற்கும் கெடுதிநேரிடும். இதுகளினின்றும் காக்கவே
ண்டியது அவருடைய கடமை. அன்றியும் அவர் சன்மார்க்க முறைமை
உறுத்தல்வேண்டும். பிள்ளைகள் துர்மார்க்கமான வசனங்களை உபயோகிக்
காமல் செய்தலும் சுவர்முதலியவிடங்களில் அப்பேர்ப் பட்டவைஎழுதியிருக்
கின் அவைகளை நீக்கிவிடவும், பிறகு அவ்வாறு செய்யாமலிருக்கத்தக்க ஏற்
பாடுசெய்யவும், துர்க்குணமுள்ள பிள்ளைகளைப் பிரித்துவைக்கவும், கெடுதி
யுண்டாக்கக் கூடியவர்களை நீக்கிவிடவும் வேண்டியது அவசியம். மேலும்
பிள்ளைகளிருக்குமிடம், தேகப்பயிர்ச்சி காற்றோட்டம் முதலியவைகளுக்கு
அதிக கவனத்தைச் செலுத்தி அவர்கள் ஆரோக்கியமாயிருக்கும்படி செய்ய
முயலவேண்டும்.

கற்பித்தல் கற்பித்தற்கிடமாகிய ஒரு பாடசாலையின் தேர்ச்சிக்கு உத்திர
வாதியாகியஉபாத்தியாயர் பின்வரும் குறிப்புகளைக் கவனித்தல்வேண்டும்.

1. பற்பல வகுப்புகளுக்குத் தேவையானவைகளைக் கற்பிப்பதற் குரிய
பாடங்களைத் தெரிந்தெடுத்து வைக்கவேண்டும். மாணக்கர்கள் மனத்தேர்ச்
சியடையும் காலங்களுக்குத்தக்கபடி பேலினமாதிரியில் பாடங்கள் கற்பிக்கப்
படுகின்றனவாவென்றும், வாசிப்பு, எழுத்து, கணக்கு முதலியமுக்கியமான
பாடங்கள் விஷயமாக அதிகநேரம் சிரம மெடுக்கப்படுகின்றதா வென்றும்
உபாத்தியாயர் ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேண்டும்.



2. ஒவ்வொருபாடமும் அதற்குத் தக்கமாதிரியில் கற்பிக்கும் விஷயத்
தில் ரொம்பவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். ஏனென்றால் எலி
மெண்டரி பாடசாலைகளிலுள்ள கீழ் உபாத்தியாயர்கள் அவசியமாய் கற்பிக்
கும் முறைமை தெரியாமலிருப்பதினால் அவர்களுக்கு எவ்விதமாகக் கற்பிக்க
வேண்டுமென்றும், என்னென்ன கற்பிக்கவேணுமென்றும் எடுத்துக்காட்ட
வேண்டியது தலைமை உபாத்தியாயருடையகடமை. இது ஒருவாறுதானே
ஓர் உதாரணமாகக் கற்பித்துக்காட்டியும், கற்பிக்கும் முறைமைகளைப் பற்றிச்
சொல்லியும், அவர்களுடைய மாதிரிகளைக் கவனமாய்ப் பரிசோதித்தும் அ
வைகளிலுள்ள குற்றங்களை யெடுத்துக்காட்டியும் செய்யலாம்.

3. தலைமை உபாத்தியாயர் தானே கற்பிக்கவேண்டிய மாதிரியும் அள
வும் நாளெல்லாம் அவனை ஒரு எந்திரத் தலைவராக எண்ணிவந்தது
போகட்டும். அவர் சிப்பந்தியின் அதிகாரியாய் மாத்திரமல்லாமல் கற்
பிப்பவர் வித்தியாபோதனரென்ற ஸ்தானத்திலு மிருக்கிறார். இந்த முகாந்
தரத்தை அறிவதற்கு ஏதாவது சங்கதிகள் அவசியமாயிருந்தால் அவை உபாத்
தியாயர் புத்திகூர்மைசெய்தல், சன் மார்க்கப் பயிர்ச்சி செய்தல் இவைக
ளில் தான் தேற்சி அடைந்திருக்கிறதினால் அவரிடத்தில் பாலர்களுக்குண்
டாகும் பிரியமே. கீழ் உபாத்திமார்களுக்கு அவர் உதாரணமாகக் கற்
பிப்பதே. உபாத்தியாயர் ஒரேபாடத்தையாவது அல்லதுஒருபாடத்தை ஒரே
மாதிரியாகவாவது கற்பிக்கக்கூடாது.

4. கீழ் உபாத்தியாயர்கள் அவர் உதாரணத்தையும்அறிவுறுத்துதலையும்
அனுசரிக்க வேண்டும். உபாத்தியாயர் நாள்தோறும் படிப்பிக்குந்தன்மை
யைப்பற்றி பாடத்தின் பிரமாணத்தினாலும், அவனது படிப்பிக்குந்திறமையின்
குணத்தினாலும் அறியலாம். ஆனால் அவன் தினந்தோறும் ஒருதடவை யாவது
ஒவ்வொருபையனையும் தான் நேரில் பார்க்கும்படியான அதிகாரத்தைவகித்து,
அதைத் தன்னுடைய கடமையாக வைத்துக்கொள்ளவேண்டும். அவன்
பாடசாலையின் ஒவ்வொரு பாகத்திலும் உழைக்கவேண்டியதில் மத்தியவகுப்
பிலும் மற்றக் கீழ்வகுப்புகளிலும் அதிகமாய் உழைக்கவேண்டும். அவர் தின
ந்தோறும் காலையில் கற்பிக்கும் வேலையையும் மாலையில் மேல்பார்த்து வரும்
வேலையையும் வைத்துக்கொள்வதுநலம்.

## உபாத்திமைத் தொழிலின் சிறப்பு.

(தொடர்ச்சி.)

நம் தொழிலின் மதிப்புக் குன்றுவதற்கு இன்னமொரு காரணமுண்டு.
அதாவது பள்ளிக்கூட அதிகாரிகளும்,பரீட்சகர்களும் உபாத்தியாயர்கள் தங்க
ளுக்குமிகவும் கீழ்ப்படிந்துநடக்கவேண்டுமென்று கொள்ளுமெண்ணம் பரீட்
சகர்களில்அனேகர்புத்திகூர்மையும் தெளிவறிவுமுள்ளவர்களும், வித்தியாபி
விர்த்தியில் சிரத்தையுடையவர்களும், மாணக்கர்களின் தேகப்பயிற்சி மனப்ப
யிற்சிகளை விர்த்திசெய்யும் விதங்களில் தேர்ந்தவர்களுமாயிருக்கிறார்கள். ஆனா
ல் இவர்கள் கைகளைகட்டிவிட்டு வேலை செய்யச்சொன்னால் என்னசெய்வார்

கள்? நன்மை செய்பவர்களுக்கு சுயாதிகாரம் வேண்டாமோ? பள்ளிக்கூடங்களுக்கு முக்கியமான கருவிகளும், புத்தகங்களும், பத்திரிகைகளும் வாங்குவதற்கு லோகல்பண்ட் போர்டார் உத்திரவு அவசியம். இச்சங்கத்தார்கள் சாதாரணமாய் இவர்கள் இஷ்டம்போல் நடக்கவிடுகிறதில்லை. மேலும் பரீட்சகர்களிலேயே சிலர் உபாத்தியாயர்களைத் தங்கள் இஷ்டம்போல் உபயோகப்படுத்திக்கொள்ளத்தக்க ஆயுதங்களுக் கொப்பாக நினைக்கிறார்கள். இவவாறன்றி இவர்கள் நல்லெண்ணமுடையவர்களும் வித்தையில் தேர்ந்தவர்களுமா யிருந்தாலுங்கூட வித்தியாவிசாரணைத்தலைவர் உத்திரவு சரியோ தப்போ அவ்விதமே அவர்கள் நடக்கவேண்டிவருகிறது. இத்தலைவர் இன்னபுத்தகம் பள்ளிக்கூடங்களில் படிக்கவேண்டுமென்று நியமிக்கிறார். அப்புத்தகம் கெட்டதென்று இப்பரீட்சகர்களுக்குத் தோன்றினும், அப்புத்தகங் கெடுதலென்று மேலதிகாரிக்குத் தெரிவித்தால் இவர் உத்தியோகத்துக்குத் தீங்குவந்து சம்பவிக்கும் என்று பயந்து சந்தடி செய்யாமலிருக்கிறார்கள். இச்சங்கடங்களுடன்கூட நெடுநேரம் வேலைசெய்யவேண்டுவதும், மாணாக்கர்கள் வகுப்பில் மிதமிஞ்சியிருப்பதும், பரீட்சகர்களும் பெற்றோர்களும் தப்புக்கண்டு பிடித்தலும் உபாத்தியாயருக்குத் தன் தொழிலில் வெறுப்புண்டாக்குகிறது. பரீட்சகர்களும் பெற்றோர்களும் மிக்க கவனம் செலுத்துமளவும் இத்தொழிலுக்கு அதிகச் சிறப்புண்டாவதரிது. உண்டாகுமளவும் உபாத்தியாயர்களுக்கு யாம் சொல்லும்புத்தியாவது.—

நாம் செய்வதை சரிவரச்செய்தால் கடவுள் விட்டவழி விடட்டும்.

## சமாசாரக் குறிப்பு.

மூன்றாவது டிவிஷன் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டராகிய ஜே, டி, பௌலர்துரை அவர்களை வருகிற ஜூலை மாதம் 31௳ வரையில் வேலைபார்த்து வரும்படியாக கவர்ண்மெண்டில் உத்திரவாயிருக்கிறது.

***

இன்ஸ்பெக்டர்கள், டிப்டி இன்ஸ்பெக்டர்களில் சிலரை எடுத்துவிட்டு இவ்விருதிறத்தாருக்கும் மத்தியில் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்கள் வைக்கப்போகிறார்களென்று முன்னொருசஞ்சிகையில் சொன்னோம். இந்த ஏற்பாடுகளெல்லாம் சென்ற ஏப்ரில் ௴ ஆரம்பமுதல் நடவடிக்கையில் வந்திருக்கவேண்டியது தவறினபடியால் வருகிற செப்டம்பர் ௴ முதல் அனுஷ்டானத்துக்கு வருகிறதாம்.

***

ஐந்தாவது டிவிஷன் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டராகிய மன்றோ துரையை மத்தியமாகாணங்களின் வித்தியா விசாரணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறது.

***

நமதுதேசத்து வித்தியா விசாரணை தலைவர் ஆபீசு இப்பொழுது நுங்கம்பாக்கம், ஹாடோஸ் சாலை 5 கதவிலக்கமுள்ள பங்களாவுக்கு வந்தது. இவ்விடம்விட்டு மறுபடியும் பழையகாலேஜுக்கு வரப்போகிறதாம்.



***

சென்னை பச்சையப்பமுதலியார் பள்ளிக்கூடத்தில் பீ. யெ, பரீட்சை வகுப்புகள் ஏற்படுத்தப்போகிறார்களாம். இதைக்குறித்து விஸ்தமாய் மற்றோரிடத்தில் சொல்லியிருக்கிறோம்.

***

ஸ்பெஷல் அப்பர்ப்ரைமரி பரீட்சைக்கு இனிமேல் சுகாதார விளக்கத்துக்குப்பதிலாக சுகவழி என்னும் புத்தகம்படிக்கலா மென்று வித்தியா விசாரணைத் தலைவர் நியமித்திருக்கிறார்.

***

சில தினங்களில் வெளிவருமென்று யாம் முன்னொரு சஞ்சிகையில் கூறிய முதல்பாடபுத்தகம் தயாராயிருக்கிறது. இப்புத்தகம் விலை 6 பை. ஒரு ரூபாய் முன் பணமனுப்புவர்களுக்கு 38 புத்தகம் தபால் செலவில்லாமல் அனுப்பப்படும்.

## நமது பையன்களுக்கு யாது படிப்பிக்கலாம்.

பிரயோசன முள்ளவர்களா யிருக்கும்படி அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

உண்மை யுள்ளவர்களா யிருக்கும்படி அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

ஆண்மை உள்ளவர்களா யிருக்கும்படி அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

ஒழுக்கங்களில் மரியாதை உள்ளவர்களாய் இருக்கும்படி அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

காலத்தின் அருமையும், பணத்தினருமையும் அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

புகையிலையையும் மதுபானத்தையும் விலக்கும்படி அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

பத்திரமும் திட்டவட்டமுமான வேலைப் பழக்கங்களை யவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

காரியங்களை எப்படி நன்றாய்ச் செய்கிறதென்று முன்மாதிரியால் அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

கடன்படாதிருக்க அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

சுத்தம், நல்லொழுக்கம் என்பனவைகளின் வழக்கங்களை அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

அனுசாரமான பாஷையைத்தவிர்க்க அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

தங்கள் தோற்றத்தில் சுசிகரமும் யோக்கியமுமா யிருக்கப் போதிக்க வேண்டும்.

ஒருவருக்கொருவர் மரியாதைக்காரரும், ஏழைவர் பல வீனர்களுக்குச் சகாயம் செய்பவரும், பிராணிகளிடத்தில் பட்சமுள்ளவர்களுமா யிருக்கப் போதிக்கவேண்டும்.

(சுகுண போதினி)

## ஆசான் குறைகள்.

பலபாடசாலைகளிருக்கும் நகரங்களிலும் பட்டணங்களிலும், பெரிய கிராமங்களிலு முள்ள, உபாத்தியாயாகள் தம்மாணாக்கர் ஒழுங்காய்ப் பள்ளிக்கூடத்துக்கு வருவதில்லை, ஓடி யொளித்துக்கொண்டு விடுகிறார்கள், சம்பளங்கொடுக்கிறதேயில்லை-சர்க்கார்திரவிய சகாயமுங்குறைந்து போகிற தெனப் பலவாறாக முறையிடுவதை யாம் பலகால்கேட்டதுண்டு. இப்படி உபாத்திமார் குறைப்படுவதற்கு வெகுவாய்க் காரணமுண்டென்பதில் சந்தேகமில்லை. இக்குறைகளுக்குப் பரிகாரந்தேடுவது அத்தியாவசியகம். மாணாக்கர் இவ்வண்ணம் தாறுமாறாக நடப்பதற்குயாது காரண மெனச் சற்று விவரிப்போம். சிலமாணாக்கர் பள்ளிக்குவைக்கப்படுமுன் தாய்மாரால் செல்வமாய்ச் சீராட்டிப் பாராட்டப்பட்டவர்களாகையால் முதலில் கல்விகசந்திருப்பதைக்கண்டு பள்ளிக்குச் செல்லத்தயங்குகிறார்கள். சிலர் பாடசாலைக் கண்டனை தண்டனைகளுக்கும் உபாத்தியாயர் கடுமுகத்துக்கும் அஞ்சிக் களவடிக்கிறார்கள். கல்வியின் அருமை அறியாத சிலபெற்றோர் ஓதுவித்த கூலிகொடுக்கச் சோம்பித் தம்மக்களைப் பள்ளிக்குவிடாமல் நிறுத்திக்கொள்ளுகிறார்கள். சிலர் வீணன்புபாராட்டித் தம்மக்களை "எருதுநினைத்தவிடத்தில்" என்றதுபோல் அவர்கள் பிரியப்பட்ட பள்ளிக்கூடத்துக்குப் போய் வரட்டுமென்று விட்டுவிடுகிறார்கள். இவ்வாறு விளையுந் தீமை கணக்கிலடங்காது. ஆளுவார் அடக்குவாரில்லாமல் பிள்ளைகள் தான்தோன்றிகளாய்த்திரிவதனால் அவர்கள் நலங்கெட்டுப்போகிறார்கள். உருளுங்கல்லில் பாசி பற்றுமோ? மாறி மாறிப் பலபள்ளிக்கூடங்களுக்குப் போவதில் ஒரிடத்திலேனும் அறிவும் நற்குணமும் நல்லொழுக்கமும் சிறிதுங் கைப்பற்றவிடமின்றிக் கடைசியில் வீணராகித் தாங்கெடுவதன்றி தரித்திருந்து ஒழுங்காய்ப்படித்துவரும் பணிவுடைய மற்ற மாணாக்கரையுங் கெடுத்துவிடுகிறார்கள். உபாத்தியாயருக்கோசம்பளம்பிரிவதில்லை. உபாத்தியாயருக்குத் துட்டில்லாவிடினும்பெற்றோர் திட்டுக்குக் குறைவில்லை. "வாத்தியாரே நீர் படிப்பித்ததுபோதும். வட்டில் நீர் எழுதிய எழுத்தை எடுத்துக்கொண்டு ஓலையைக்கொடுத்து விடும்" என்ற ஆசியத்தைக் கேட்டிருக்கிறோமே. இம்மட்டுந்தானோ? இக்காலத்தில் பள்ளிக்கூடங்களுக்குத் திரவியசகாயசட்டம் ஏற்பாடானபின் உபாத்தியாயர்பாடு பெருந்திண்டாட்டமாய் விட்டது. பெற்றோர்கள் "சர்க்காரில் கொடுக்கும் உதவி போதாதா? ஒரு வேலைக்கு இரண்டு சம்பளமா? நாங்களும் சம்பளம் கொடுப்பானேன்" என்றுஞ்சொல்லத் தலைப்பட்டிருக்கிறார்கள். இன்னும் வெட்கக்கேடுவேறுண்டு. சர்க்கார் கிராண்டுக்கு ஆசைப்பட்டாவது சம்பளம் ஒருகாசும் வேண்டாமென்று வீடுவீடாய்ச் சென்று பெற்றோர்க்கு நல்வார்த்தை சொல்லிப் பிள்ளைகளை அழைத்துப்போய்ப் பள்ளிக்கூடத்திலிருத்தி வருஷமுழுதும் இராப்பகலாய்ப் பெரும்பாடுபட்டும் திரவியசகாய பரீக்ஷைநடக்கப்போகிற தருணத்தில் "வாத்தியாரே என்பிள்ளைக்காக சர்க்காரிலிருந்து ரூ 2-8-0 கிடைக்கப் போகிறதே, உம்மைவேண்டித்தானே பையனை உம்மிடத்தில் இத்தனை நாள் விட்டுவைத்திருந்தேன். அவனுக்காகக் கிடைக்கும்பணத்தில் பாதியை இங்கே கையில்போடும் இல்லாவிட்டால் அவன் பரீக்ஷைக்கு வரமாட்டான்" என்று முகத்தை மாறிவைத்துக்கொண்டு வன்கண்ணராய்ப் பேசும் புண்ணியவான்களுமுண்டென யாம்கேட்டதுண்டு:—(இன்னும்வரும்.)



## ஆதரவாய்க்கண்டித்தல்.

கண்டிக்கப்படுதலானது யாவருக்கும் குற்றமாகத் தோற்றப்படினும், நமக்குவேண்டியவர்கள் நமதுக்ஷேமத்தின்பொருட்டு அப்படிச் செய்தலானது இனிமையாகவே யிருக்கும். "உற்றார் அழ அழச்சொல்லுவார்; ஊரார் சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவார்." நமக்கு நன்மைபயக்குமவற்றை நமக்குவேண்டியவர்கள் சேய்யாமலிரார். அருந்தவஞ்செய்துபெற்ற குழந்தையெனினும், அக்குழந்தைக்கு வந்திருக்கும் நோய் நீங்குதற்பொருட்டுத் தாயானவள் உடனே வாந்தியெடுக்கத்தக்க மருந்தாயிருந்தாலும் அதைக் கொடாமலிருப்பாளோ? சிறந்த வைத்தியசாஸ்திரிகள் சிறிதுவேளைகளில் கை கால்முதலிய அவயவங்களை வெட்டிவிடுவது, நோயைநீக்கி உயிரைக் காத்தற் பொருட்டன்றோ? குழந்தை தன் தாயினிடத்திலுள்ள அன்பினால் அவள்கொடுக்கும் மருந்தைக் கூசாமல் வாங்கியுண்ணும்; அவ்வாறே நோயாளி வைத்தியனிடத்திலுள்ள நம்பிக்கையினாலே தன்னுடைய அங்கஞ்சேதப்படவுஞ் சம்மதிக்கிறான். நமதுசுகதுக்கங்களுக் குட்படாதவர் சொல்லுவதொ குளிர்ந்திருந்தாலும் கொன்றுவிடும்; வெங்காரம் புண்ணிற்பட்டவுடன் தேள் கொட்டினாற்போலச் சுரீரென்றெரிந்தாலும் அப்புண்ணை ஆற்றிவிடும். இனியவர் நம்மை என்னதான் சொன்னாலும் இனியதாகவேயிருக்கும். நமக்கு வேண்டாதவர்கள் எத்தனைதான் இனிதுபோலப் பேசினாலும் அது விஷத்தைப்போற் கொடியதாகவேயிருக்கும்.

"இனியவரென் சொலினும் மின்சொல்லே யின்னார்
கனியுமொழியுங் கடுவே-யனல்கொளுந்தும்
வெங்காரம்வெய்தெனினு நோய்தீர்க்கும்மெய் பொடிப்பச்
சிங்கிகுளிர்ந்துங் கொலும்."

தாயாகவிருந்தாலும், பிள்ளையாகவிருந்தாலும், வேண்டாதார் என்றும் வேண்டாதாரேயாம். நமக்கிதஞ் செய்கிறதிலேயே நாட்ட முடையவர்கள் வார்த்தை எப்பொழுதும் இனிமையாகவேயிருக்கும். தாய்மார்குழந்தைகளிடத்திலும், வயித்தியர் நோய்கொண்டவர்களிடத்திலும், அரசர் தங்கள் நாட்டில்வாழுங் குடிகளிடத்திலும் அன்பாயிருந்தால்மட்டுமே அவர்களுக்கு வேண்டியவர்களாவார். பெரியோர்கள் யாவரிடத்திலும் அருள்புரிந்து அவர்களைத் தீயவழியிற் செல்லவொட்டாமல் நயவசனங்களால் அடக்கிக் கொண்டே வருவார்கள். மனம்போன போக்கின்படி விட்டுவிடுவதினாலும், ஆகாதகாரியங்களைச் செய்வதினாலும் மனிதர்களுக்குத் தீமை விளைகிறது. குழந்தைப் பருவமுதற்கொண்டே ஒருவன் பகரும்படியான பாடங்களை எழுதிக்கொண்டேவந்தால் பின்பு எதைக்கண்டாலும் அவன் கை அதில் எழுதாதிராது; ஒருவன் சிறு குழந்தைப் பருவந்தொடங்கிக் கத்தியால்வெட்டிக் கொண்டிருக்கப் பழகிவிட்டால், அந்தப் பழக்கத்தினால் அவன் பெரியவனான பின்பும் நல்லதென்று பாராமல் பெட்டிமுதலிய எப்படிப்பட்ட உயர்ந்தபொருள்களிலும் புள்ளிவைத்துக் கெடுக்கும் வழக்கமேவிடும். மனிதன் பகுத்தறிவுடையவனாதலால் "பெருமையுஞ் சிறுமையுந் தான் தரவருமே." என்றபடி அவன் கெட்டுப்போவதற்கும் நல்லபெயரெடுப்பதற்கும் அவனே காரணமாவான். ஆதலினால் ஒருவேளை தனக்காகத்தெரியாவிட்டாலும், தனக்கிதமானவர்கள் சொல்லும் புத்தியைக் கேட்டாயினும் நல்ல…

பெயரெடுப்பது அவனைப் பொறுத்தகடனாகும். தங்குற்றத்தைத் தானே கண்டறிவது மிகவும் வருத்தமாகையால், மற்றவர்களால் கண்டுகேடிந்து கொள்ளப் படுவான் அக்குற்றம் நம்மைவிட்டு நீங்க வேண்டுமே யல்லது வேறுவழியில்லை. நாம்பிறருக்குத் தீங்கொன்றும் செய்யாமலிருக்கையில் அவர் நம்மை, அப்பா அவறு என்னும்படி நாம்வைத்துக்கொள்ளுவதும் ஓர் குற்றமாதலால், அவ்வாறான குற்றத்தினின்றும் நாம் நீங்கவேண்டும் உள்ளதைச் சொன்னால் எப்படிப்பட்டவர்களுக்குங் கோபமுண்டாகுமென்பது உலகத்தியற்கை யென்றாலும், குற்றமெடுத்துக் காட்டுபவர் யாவராயிருப்பினும் கோபித்துக்கொள்ளாமல் பொறுமையோடுகேட்டு அக்குற்றத்தினின்றும் விலக்குவதே அறிவோர்க்கழகு. மகாராணி.

## பாலவித்தியாப்பியாசம்.

பாலவித்தியாப் பியாசம், படிப்பிக்கப் படுபவரின் பிற்காலத்தியப் நன்மை, தீமை, நற்குணம். துற்குணம், பெருமை சிறுமை முதலியவற்றிற் கிடமாயிருப்பதே. இதன் உண்மை சரியாய் அறியப்படுகிறதில்லை. இல்லாவிடில் அறிவும் ஆலோசனையுமற்ற பல ஹீனர்களால் வித்தை கற்பிக்கப்படும்படி செய்யப்படமாட்டாது. ஓர் கட்டடம் அதின் அஸ்திபாரத்திற்குத் தக்கபடி உறுதியாயிருக்கும். அதுபோலவே ஒரு மனிதனுடைய நற்குணமுதலியவையும் அவனது இளமைப்பருவத்தில் சரியானபடி கல்வியறிவு அடைந்ததற்குத் தக்கபடியேயிருக்கும். ஓர் கட்டிடத்தின் அழகும் அலங்காரமும் மாத்திரம் காணப்படுமென்பது உண்மையே. ஆனால் அக்கட்டிடத்திற்குத் தக்கபடி அதன் அஸ்திபார விஷயமாய் அதனைக் கட்டிமுடித்த சிற்பசாஸ்திரியும் தன் புத்தியைச் செலுத்தியிருக்கவேண்டும்; குழந்தைகள் கெட்டகுணங்களுடன் பிறக்கவோ அல்லது அவர்களது எண்ணங்களும் குணங்களும் வரவர அடையப்படுகின்றன வென்பதும் நிச்சயமே.

2. எலிமெண்டரி வித்தியாப் பியாசமென்பது சாதாரணமாய்ப் படிக்கவும், எழுதக்கூட்டவு மாத்திரமென்றே அர்த்தமாகும். ஆனால் குழந்தைப்பருவத்தில் தாய்க் கடங்காதபிள்ளை, பள்ளிக்கூடத்திலும் அவ்வாறடங்காதென்பதும் நிச்சயமே. "ஐந்தில் வணங்காதது ஐம்பதில் வணங்குமா"? குழந்தைக்குப் பேசத்தெரிவதற்குமுன் அது அடையும் சீர்திருத்தத்திற்குத் தக்கபடியே அதன் புத்தி கூர்மையாகவோ அல்லது மழுங்கவோசெய்யும். சன்மார்க்க விஷயமாக மாத்திரமாவது அல்லது புத்தி கூர்மையாகும்படி மாத்திரமாவது கற்பிப்பதுகூடாது. ஒன்றன்னியில் மற்றொன்றை நன்றாகக் கற்பித்தலும் முடியாது; சன்மார்க்கவழியில் செல்வதற்கு சாதாரணமாய் வித்தையையும் அறிவையும் பூர்த்தியாய் அடைந்திருக்கவேண்டியது அவசியம். அறிவும் அநுபோகமும் இவ்விரண்டிற்கும் உரித்தானவைவே யாம். இவைவெவ்வேறானபோதிலும் ஒரே இடத்தில் உண்டானவையாம். பகுத்தறிவும் ஆலோசனையுமற்றவன் எப்பொழுதும் நல்ல ஞாபக சக்தியுள்ளவனைப்போல்க்கூட அவ்வளவு ஞானவானாகமாட்டான். ஆகையால், பற்பல விஷயங்களிலும் நாம் இவ்விதமாக மனதைச் செலுத்தவேண்டுமென்னும் அறிவைச் சம்பாதிப்பதில் இவ்விதமாக நடந்துகொள்ள வேண்டுமென்றும் நமக்குத்



தெரிவிக்கிற குணங்கள் ஆதிமுதல் ஒன்றுதான். இவைகளினின்று தான்
சன்மார்க்கத்தை யடைவதற்கும் புத்தியறிவை விர்த்திசெய்வதற்கும் வழி
யுண்டாகின்ற தாகையால்அவைகளை விர்த்தி செய்வதின்பொருட்டுச் சரியான
படி வித்தியாப்பியாசஞ் செய்யவேண்டு மென்பதைக் கைக்கொள்ளல் வேண்
டும். கடவுள்ஞானமாய் இயைத்திருக்கிறபடியே பால வித்தியாட்பியாசம் ஸ்தி
ரீகளால்தான் உண்டாகவேண்டும். அவர்களுடைய வழக்கங்களும் நடவ
டிக்கைகளும் இவைகளுக்குப் பிரத்தியேகமாய் இசைந்திருக்கின்றன - பாலி
யத்தில் செய்ய வேண்டிய நடவடிக்கைகளுக்கு ஸ்திரீகளே உரியவர்கள்.
குழந்தைகளின் பாலியநாட்களை கழிப்பதற்கான அற்பமான சங்கதிகளைச்சிர
த்தையும் பொருமையுமுடன் அவர்கள் தான் பொறுத்துக்கொள்ளவேண்டும்.
பார்வைக்கு அற்பமாகக் காணப்படுகிற இவைகளில் அவர்களைத் திருத்திவை
ப்பதுதான் அவர்களது பிற்காலத்திய பெருமைக்கும் நன்மைக்கும் காரண
மாகும். தற்காலத்தில் பெண்கள் படிப்பிக்கப்படும் மாதிரி, கடவுள் அவர்களை
எந்தவேலைக்காகச் சிருஷ்டித்திருக்கிறாரோ அதற்குத் தகுதியற்றவர்களாக்கி
விடுகிறது. பொருமை, மெதுவான மனத்திடம், அமர்ந்தகுணம், காப்பு,
அருமை, சாந்தமாய்ப் பகுத்தறிதல் இவைகளே பெண்களின் இலக்ஷணமா
கும். நிச்சயமாகவே இப்பேர்ப்பட்ட குணாதிசயங்கள் தான், முறண்டும்
கோபமுமுள்ள குழந்தைகளை யடக்கவும், இவைகளுக்கெல்லாம் மேலாகத்
தங்களுடைய பிற்காலத்தியசந்தோஷ முதலியவைகளுக்குத் தாயினது கவலை
யும், கவனமுமே காரணமாயிருக்கிற பாலர்களுக்கு நற்குணத்தையும் பகு
த்தறியுந் தன்மையையுமுண்டு பண்ணத் தக்க உதாரணங்களையுங் கொடுக்கத்
தக்கவையாம்.

"விளையும்பயிர் முளையிலே தெரியும்."

(இன்னும்வரும்.)

## 1886-ஆம் ஸ்பெழல் அப்பர் பிரைமரி பரீட்சை

## பூகோளம்.

I. (a) எந்த நாலு முக்கியமான தீவுகள் சேர்ந்து ஜப்பான்தேசமாகின்றது?

(b) அடியில் வருவனவற்றால் என்னென்ன இரண்டு பூபாகங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன? என்னென்ன இரண்டு ஜலபாகங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன?

(1) ஆர்ம்மஸ் ஜலசந்தி, (2) பாபெல்மான்டெப் ஜலசந்தி, (3) பீரிங்ஸ் ஜலசந்தி.

II. மாண்டலெ, டில்லி, கொழும்பு, ஹாங்கவு, ஏடன், கோவை இவை எங்கேயிருக்கின்றன? எதனால் பெயர்போனவை?

III. திபேத்துத் தேசத்தவர்கள் தங்கள் தேசத்திலுள்ள என்னென்ன சரக்குகளை இந்தியாவுக்குக் கொண்டுவருகிறார்கள்? இச்சரக்குகளை இமயமலை வழியாய் எப்படிக் கொண்டுவருகிறார்கள்? என்னென்ன இந்தியாதேசத்துச் சரக்குகளை அவர்கள் தங்கள் தேசத்துக்குக் கொண்டுபோகிறார்கள்?

IV. (a) அடியில் வருவனவற்றுக்குப் பெயர் சொல்லுக:—
(1) காமஸ்காட்காவின் அறத்தெற்கிலுள்ள முனை.
(2) ஜப்பான் மலைகளில் மிகவுயர்ந்தது.
(3) பார்ஸீகத்தின் ராஜதானி.
(4) சீனாவின் ஆறுகளில் இரண்டு மிகவும்பெரிய ஆறுகள்.

(b) ஆப்கானிஸ்தானத்து ஜனங்களுடைய சமயமென்ன? அவர்கள் பாஷையென்ன? அவர்கள் தொழிலென்ன? அவர்கள் அரசாட்சி முறையென்ன?

V. சுமாத்ரா (Sumatra), ஜாவா, இவற்றின் சீதோஷ்ண ஸ்திதியென்ன? அவற்றின் முக்கியமான இயற்கை விளைபொருள்கள் என்ன? இத்தீவுகளின் அன்னியதேசவர்த்தகம் எந்த ஐரோப்பிய சாதியாரோடு முக்கியமாய் நடக்கின்றது?

VI. (a) அடியில்கேட்ட மலைத்தொடருக்குப் பெயர் சொல்லுக:—
(1) ஐரோப்பியருஷியாவையும் ஸிபேரியாவையும் பிரிப்பது.
(2) நார்வே, ஸ்வீடன் தேசங்களைப் பிரிப்பது.
(3) பிரான்சு, ஸ்பேன் தேசங்களைப் பிரிப்பது.
(b) (1) வட அமெரிகாவிலுள்ள நதிகளில் மிகவும் நீண்டது எது?
(2) தென் அமெரிகாவிலுள்ள நதிகளில் மிகவும் நீண்டது எது?
(3) ஆபிரிக்காவின் நதிகளில் மிகவும் நீண்டது எது?
இந்த நதிகளில் ஒவ்வொன்றும் இன்ன கடலில் அல்லது சமுத்திரத்தில் கலக்கின்றதென்றுங் கூறுக.

## கிருஷி சாஸ்திரம்.

I. கீழ்ப்படைமண் என்றாலென்ன? கீழ்ப்படைமண்ணின் இயல்பால் நிலத்தில் என்ன வித்தியாசம் உண்டாகும்?

II. சரியான கலப்பையின் தொழில் என்ன? இத்தேசத்துக் கலப்பையின் தொழில் என்ன?

III. பலவகைப்பட்ட பயிர்த்தொழிலின் நோக்கமென்ன?

IV. எருப்போடுதலின் நோக்கங்கள் என்ன?

V. விசேஷ (ஸ்பேஷல் - special) எரு என்றாலென்ன? சாதாரணமான (ஜெனரல் - general) எரு என்றாலென்ன? வகைக்கொவ்வொன்றுக்குப் பெயர் சொல்லுக.

VI. கொறுகலப்பை (seed-drill) யின் உபயோகமென்ன?



179

## அங்ககணிதம்.

I. (a) 30491206, 40008099, 743568, 77102805 இவற்றைக் கூட்டு.

(b) 698217 இலிருந்து 55686 ஐக் கழிக்க.
விடைகளைச் சொல்லாலும் எண்களாலுங் குறிக்க.

II. (a) 109376 ஐ 9376 ஆல் பெருக்க.
(b) 1820799 ஐ 7493 ஆல் வகுக்க.

III. (a) 945, 1764 இவ்விரண்டிற்கும் உத்தம பொது அளவு (ஜி. ஸி. எம்.) என்ன?
(b) 28, 84, 96, 112, 144 இவற்றிற்கு அதம பொது மடங்கு (எல். ஸி. எம்.) என்ன?

IV. $\frac{3\frac{3}{7} + 1\frac{1}{14} \text{ இன் } 1\frac{3}{4}}{2 \text{ இன் } 2\frac{3}{14} - 5} \div \frac{9}{56}$, இதைச் சுருக்க.

V. ஒரு வர்த்தகனுக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம், நாலாம் வருஷங்களில் வந்த லாபம் முறையே ரூ. 5,209 - 13 - 0, ரூ. 7,480 - 3-6, ரூ. 11,354 - 8 - 0, ரூ. 2,096 - 6 -; ஐந்தாம், ஆறும், ஏழாம் வருஷங்களில் வந்த நஷ்டம் முறையே ரூ. 1,018 - 6 -0, ரூ. 3,234 - 8 - 3, ரூ. 3,946 - 8 - 0 ஆனால் மொத்தத்தில் அவனுக்கு ஏழுவருஷத்திலும் வந்த லாபம் அல்லது நஷ்டம் எவ்வளவு?

VI. (a) 1 கரிசை, 2 பறை, 3 மரக்கால், 4 படி, 5 ஆழாக்கு - இவற்றில் ஆழாக்கு எத்தனை?
(b) 100208 தோலாவில் எத்தனை கண்டி, மணங்கு, வீசை பலம் தோலா இருக்கின்றன?

VII. ஒரு கப்பலின் விலை ரூ. 1,98,000; இதில் $\frac{7}{13}$ பங்குள்ளவன் தன் பங்கில் $\frac{3}{7}$ ஐ விற்றுப்போட்டால் அவனுக்கு மீதியாயிருக்கிற பங்கு எத்தனை ரூபாய்க்குச் சரி?

VIII. ஒரு ரூபாய் 1ஷி. 5பெ. க்குச் சரியானால் 17 பவு. 0ஷி. $8\frac{1}{3}$பெ. க்கு எத்தனை ரூபாய் சரியாகும்?

## இந்துதேச சரித்திரம்.

I. (a) மகதராஜ்யத்தின் ராஜதானியின் பெயரென்ன?

(b) காரூர் (Kahror) யுத்தத்தில் ஜெயம்பெற்ற அரசன் யார்?

(c) கி. பி. 1191 இல் மகம்மதுகோரி வெற்றிகொண்ட சண்டை எது ?

(d) கி. பி. 1739 இல் டில்லிமேற் படையெடுத்துச் சென்று கொள்ளையடித்தவன் யார் ?

(e) ஈஸ்ட் இந்திய கம்பனியார் முதல் முதல் ஸ்தாபித்த இடங்கள் எவை ?

(f) அங்கிலேயரோடு எதிர்த்துப் போர்செய்து பெயர்பெற்ற இரண்டு பிராஞ்சுக்காரரும் யார் ?

(h) முதலாம் கவர்னர் ஜெனரல்யார் ? அவர் எந்த வருஷமுதல் எந்த வருஷம் வரையில் உத்தியோகம் செய்தார்?

(i) ஆக்பருக்குப் பின் அரசாண்ட இரண்டு மொகலாய அரசர்கள் இன்னின்னாரென்று பட்டத்துக்கு வந்த வரிசையாய்க் கூறுக.

(j) லார்ட் கார்ன்வாலிஸ் அதிகாரஞ் செலுத்தினகாலத்தில் நடந்த யுத்தம் எது ?

II. பானிப்பட்டு என்னுமிடத்தில் நடந்த மூன்று சண்டைகளின் வருஷம், இருகட்சியிலுமிருந்த தலைவர் பெயர், ஒவ்வொன்றிலும் வெற்றி பெற்றவர்களின் பெயர் - இவை யென்ன ?

III. (a) அடியில் விற்றிட்ட விடங்களில் சொற்கள் வைத்துப் பூர்த்தி செய்க : ஸிவாஜி

(i) ———அதிகாரத்தை ஸ்தாபித்தவன்.

(ii) ———த் தன் கையால் கொலைசெய்தவன்.

(iii) ———என்னுஞ் சக்கரவர்த்திக்கு விரோதமாய்ச் சண்டைசெய்தவன்.

(b) மேலே கொடுத்த வாக்கியங்கள் ஒவ்வொன்றுங் குறிக்குஞ் சங்கதியைப்பற்றித் தெரிந்ததை ஆறு வரிக்கு மேற்படாம லெழுதுக.

VI. 'பேஷ்வா' - என்னும் சொல்லுக்கு அர்த்தமென்ன ? முதல் மூன்று பேஷ்வாக்களுடைய பெயரும் என்ன ? ஒவ்வொருவரும் அதிகாரஞ் செலுத்தினகாலத்தில் நடந்த முக்கிய சங்கதி ஒவ்வொன்று கூறுக.

V. க்ளைவ (Clive) காத்த பட்டணம், அவர் பொருதல் பிரசித்தமான சண்டை, இவை இன்னின்னவென்று, சொல்லி ஒவ்வொன்றையும் பற்றித்,, தெரிந்ததைச் சருக்கமா யெழுதுக.



(8)

## சுகாதார விளக்கம்.

N.B.—இதிலுள்ள ஏழு கேள்விகளில் எவையாவது ஆறு கேள்விகளாகத் தெரிந்துகொண்டு அவ்வாறு கேள்விகளுக்குமாத்திரம் மறுமொழி யெழுதினால் போதும்.

I. சுத்தமான ஆகாயத்தில் என்னென்ன வாயுக்கள் சேர்ந்திருக்கின்றன ? அதில் சாதாரணமாக என்னென்ன அசுத்தமும் விஷமுமான வாயுக்கள் சேர்ந்து போகின்றன ?

II. அசுத்தமும் விஷமுமான வாயுக்கள் எக்காரணங்களினால் எவ்விதமாய் உற்பத்தியாகின்றன? அவைகள் மனுஷாள் சுவாசிக்கிறதினால் என்னென்ன கெடுதிகள் சம்பவிக்கும் ?

III. மனுஷாள் வாசம்பண்ணும் வீடுகளுக்குள்ளும் வீட்டைச்சுற்றிய இடங்களிலும் ஆகாயம் சுத்தமாயிருப்பதற்கும், விஷவாயுக்கள் உற்பத்தியாகாமலிருப்பதற்கும் மனுஷாள் செய்யவேண்டிய முக்கியமான நல்ல பிரயத்னங்கள் எவையென்று சொல்லுக ?

IV. ஜனங்கள் சாதாரணமாய்க் குடிக்கிற ஜலத்திற்கு ஆதாரமானகிணறுகள் அல்லது தாவுகள், குளங்கள், ஆறுகள் ஆகிய இவை எந்தெந்தக் காரணங்களினாலே என்னென்ன விதமாய் அசுத்தமாக்கப்படுகின்றன வென்று சொல்லுக.

V. இப்படி அசுத்தமாக்கப்படுகிற ஜலங்களைச்சாப்பிடுகிறதினால் ஜனங்களுக்கு என்ன கெடுதல்கள் சம்பவிக்கும்?

VI. அசுத்தமான ஜலங்களைச் சுத்தமாக்குவதற்கேற்ற முக்கியமான வகைகளெவை ?

VII. இத்தேசத்தில் ஜனங்கள் முக்கியமாய்ச் சாப்பிடுகிற தானியங்களெவை ? அத்தானியங்களில் யெவை சிரேஷ்டமென்று மெவை தாழ்வென்றும் காட்டுக. உயர்வு தாழ்வென்று சொல்லுவதற்கு முகாந்தரங்களையு மெழுதுக.

N. B. இவைகளுக்கு விடைகள் அடுத்த சஞ்சிகையில் வரும்.

## ஒன்றைப்பார்த்து எழுதும்போது கவனிக்க வேண்டிய சில விஷயங்கள்.

நமது வாழ்நாள் முழுமையும் நமக்கு அதிக பிரயோஜன முள்ளதாயிருக்கிற இந்த முக்கியமான சங்கதி பாடசாலைகளில் கவனிக்கப் படுகிறதேயில்லை. நாம் மாணாக்கர்களா யிருக்கும்பொழுது நம்மைப் பரீக்ஷிப்பவர்களின்

மனதிலும், நமது பிந்திய வாழ்நாட்களில் நம் எஜமானன் மனதிலும் பதியச் செய்யவேண்டிய முதற்சங்கதி கையெழுத்துதான். மை, பேனா, காகிதம் எழுதும்மாதிரி இவைகளே எழுத்தைச் சேர்ந்த நான்கு முக்கியபாகங்கள்.

முதலாவது சாமானாகிய, மை, உபயோகிப்பதில், இத்தேசத்தில் நாம் நமது வாழ்நாட்களிலெல்லாம் பின்வாங்கி யிருக்கிறோம்; இன்னமும், மை எப்படி இறகுகளில் தோய்க்கிறதென்றும், எவ்விதமாக எழுத ஆரம்பிக்கிறதென்றும் பெரியகாலேஜ் வகுப்புகளிலுள்ள மாணாக்கர்களுக்குக்கூடத் தெரியாது. இதற்குக்காரண மென்னவென்றால், நாம் கீழ்வகுப்புகளில் இருக்கும் பொழுது ஒரு உபாத்தியாயராவது இங்கிலாந்திலிருக்கிற வழக்கப்படி உபயோகிக்கிறதற்குக் கற்பித்திருப்பது கிடையாது. வாலிபர்களோ "பலமான ஆயுதமாகிய" இறகை மையில் தோய்க்கும்பொழுது அது மைக்கூட்டுக்குள்போகிறதற்கோ அல்லது போகும்படி செய்வதற்கோ தக்கபடி அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தோய்க்கப்படுகிறது. ஆகையால் நாம் பேனாவைத்தோய்த்து எடுத்து எழுத ஆரம்பிக்கும் பொழுது மை அதிகமாயிருந்தால் எழுத்து கனமாகவும் குறையக்குறைய வரிகள் இலேசாயும் ஆய்விடுகிறது. இந்தசங்கதியைப்பற்றிக் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், நாம் பேனாவை, மைக்கூட்டிலிருந்து எடுத்து எழுதப்போவதற்குமுன்னமே, அதை ஒரு விநாடி நேரம், மைக்கூட்டின் முகத்துவாரத்தில் வைத்திருந்து பிறகு எடுத்து எழுதுவதேயாம். இவ்விதமாக, நாம் மாணாக்கர்களாயிருக்கும் பொழுதே ஒருவாறப்பழகினால், பிறகு நமது வாழ்நாள்களிலெல்லாம் நமக்குத்தெரியாமலே பழக்கமாய் வருகிவருமேயாம். இச்சிறியபாடத்தைப் பற்றி இப்பத்திரிகைக்கு எழுதினவர்க்கு, அவர்படித்தபல பாடசாலைகளிலாவது காலீஜ்களிலாவது கற்பிக்கப்படாமல், பின்பு அவர் உத்தியோகமாயிருந்த பொழுது ஒருஸ்கோத்லாந்து டாக்டரவர்களால் சரியானபடி கற்பிக்கப்பட்டார். இச்சிறுபாடம் நமது பாடசாலைகளில் எப்பொழுதாவது கற்பிக்கப் படுகின்றதாவென்று அதிகமாய்ச் சந்தேகிக்கிறோம். இம்முக்கியமானபாடத்தை பாலியம் முதலே கற்பிக்கப் படாததினாலுண்டாகும் முடிவு, அதிகவயது சென்ற மாணாக்கர்களாலுங்கூட வெள்ளைக் கடுதாசிகளில் மையினால் தேய்த்துவிடுவதும், எழுதும் மேஜையில் கறுப்பு பொட்டுகளினால் நிறப்பிவிடுவதுமேயாம்.

இவ்விதமாக பேனாவானது இங்கிப்பெட்டியிலிருந்து திட்டமில்லாத மையுடன் வெளியேவரும்போது கொஞ்சநேரம் அதன் முகத்துவாரத்தில் வைக்கப்பட்டால் அதிகமான மை கீழேபோய் ஒருதிட்டமாக மை தோய்க்கப்பட்டிருக்குமே. இப்படியே ஒருதிட்டமாக மை தோய்க்கப் பட்டால் மாணாக்கராகிய ரைட்டர் சிறுபிராய முதற்கொண்டே ஒருவரியில் அதிகமாயும், அடுத்ததில் குறைவாகவும் மையை எழுதாமல் ஒருதிட்டமான மாதிரியில் எழுதப்பழகிவிடுகிறார்.

இத்துடன்கூட வாலிபமாணாக்கனுக்கு வேறு சேர்த்தியான வழக்கங்களும் பிடிபட்டுவிடுகின்றன. அவைகளில் அதிகமுக்கியமான தென்னவென்றால், அதிகமானமையை கூட்டிற்குள் விடுவதினால் தூரதேசத்திலோ அல்லது தன் சுயதேசத்திலோ செய்யப்படுகிற இம்மேன்மையான திரவத்தை ஒருதுளியாவது வீணாகப் போகச்செய்கிறதில்லை. இஃதன்றி அவன் தன் மேஜையையாவது, பனிக்குப்போல் பூசப்பட்டிருக்கிற தளத்தையாவது, அல்லது



அன்னம்போல வெண்மையாயிருக்கிற தனது உடுப்பையாவது அழுக்காக்குகிறதில்லை. அவன் மாணாக்கனாகவோ அல்லது உத்தியோகமாகவோ இருக்கையில் தன் எஜமான் வரும்பொழுது அவன் மேஜை, உடுப்பு, அவனைச்சுற்றியிருக்குமற்றெல்லா வஸ்துக்களும் சுத்தமாயிருப்பதைக் காண்கிறார். அனேகவிஷயங்களில் தன்னைச்சுற்றிச் சுத்தமாய்வைத்திருப்பது மனதையும் சுத்தமாக்கிவிடுகிறது.

இதற்கு நேர்விரோதமாக, வகுப்பில் இச்சிறியபாடம் ஒன்று இல்லாததினிமித்தம், எத்தனை மாணாக்கர்களும், உத்தியோகஸ்தர்களும், அதிக மை எடுப்பதற்காக தங்கள் பக்கத்தில் பேனாவை உதறுகிறதையும், இவ்விதமாகத் தங்களையும் தங்கள் மேஜைகள், தங்கள் பக்கத்திலிருப்பவர்களையும் கூட ஆபாசப்படுத்துவதை நாம்காண்கிறோம். தங்கள் அறைகளில் நேர்த்தியாய்க் கம்பளம், விரித்து வைத்திருக்கிற ஐரோப்பியர்களிடத்திலிருந்துவந்து அவர்கள் வேலைசெய்யும்பொழுது எப்படி மொழிகினாலும் போகமாட்டாத கறுப்புப்பொட்டுகளினால் தங்கள் ஸாட்ருன்ஜிகள் அழுக்காக அவ்வைரோப்பிய எஜமான்கள் எப்படிவிரும்புவார்கள்? ஆகையால் இவ்விதமாக மை தோய்த்துக்கொள்ளும் வழக்கத்தில் பாலியம் முதலே பழகவேண்டும். நாம்அப்படிச் செய்திராவிட்டால் இப்பொழுது தெரிந்ததுபோல தெரிந்தவுடனாவது அவ்வாறு செய்யத்தொடங்கவேண்டும். எல்லா இங்கிலீஷ் சிளர்க்குகளும் இவ்வாறே கற்பிக்கப்படுகிறார்கள். ஆனால் நமது இந்தியா மாணாக்கர்களும் இவ்வழக்கம் இனிமேல்தான் ஆரம்பிக்கவேண்டும்.

2. அடுத்தசாமான் பேனாவாகும். யாதொருபட்சியின் இறக்கைகளே கொஞ்சகால வெகுகாலமாய் எழுத உபயோகப்பட்டு வருகின்றன. ஆனால் பேனாக்கத்திற்கு முன்பு நாகரீகவிர்த்தியினால் பற்பலவிதமான உருக்குப் எழுதுவகள் செய்யப்பட்டு நமக்குக் கிடைத்திருக்கின்றன. முதல் முதல் தற்கு ஒருவன் ஆதிமுதல் வழங்கிவருகிற தூவலையே உபயோகிக்கவேண்டும். நம் பையன்களிலனேகர் முதலிலேயே உருக்குப்பேனாவை உபயோகித்து எழுத்தைக் கெடுத்துவிடுகிறார்கள். ஒருதரம் எழுத்துப் பிடிபட்டபிறகு அவரவர் மனதிற்கு இசைந்தபடி தூவலையோ உருக்குப்பேனாவையோ உபயோகிக்கலாம். ஆனால் முதலில் எழுதஆரம்பிக்கும்பொழுது தூவலையே உபயோகிக்கவேண்டும்.

3. காகிதம்.—கரடுமுரடாயுள்ள காகிதத்தில் முதலில் எழுத ஆரம்பிக்கவேண்டுமென்று நமக்கு பழக்கத்தினால் தெரியவருகிறது. ஒருமாணாக்கன் ஒன்றிரண்டுமாதம் இவ்வாறு எழுதிவிட்டபிறகு அவ்வளவு முரடாயில்லாத கடுதாசில் எழுத ஆரம்பித்து அப்படியே படிப்படியாய் எழுத்துப் பிடிபடுகிறவரையில் காகிதங்கள் மாற்றி உபயோகிக்கலாம்.

4. எழுதும்மாதிரி.—இதுதான் உபாத்தியாயர் அதிகமான யுக்தியைச் செலுத்தவேண்டிய முக்கியமானவிஷயம். ஒருவன் தன்கையின் ஓர்விதவளர்ச்சிக்குத்தக்கபடி, சாய்த்தோ, அல்லது, உருண்டையாகவோ, அல்லது நெட்டையாகவோ எழுத ஆரம்பிக்கிறான். கூர்மை யறிவுள்ள உபாத்தியாயர் அவனது இயற்கையான போக்குக்குத்தக்கபடி பாரம் வைத்துக்கொடுக்கவேண்டும். இதுதான் எல்லா இங்கிலிஷ்ப் பாடசாலைகளிலும் நாள்தோறும் செய்து வருகிறபடி நல்லஎழுத்துக்காறர்களாக்கி விடுவதற்குஒரேவழி.

கடைசியாய், இப்பத்திரிகையை வாசிப்பவர்கள் எல்லாரும் இவ்விடத்திற் சொல்லிய பற்பல விஷயங்களையும் கவனிக்க வேண்டுமென்பதாய் வேண்டிக் கொள்வோம். மேலும் அனேக பையன்கள் எழுத ஆரம்பிக்கும் பொழுது தங்கள்முகத்தை ஒருவிதமாகவலித்துக்கொள்வது வழக்கம்; சிலர் நாக்கைச்சுற்றுகிறதும், பலர்கண்களால் மேலும் கீழும் பார்ப்பதும் வழக்கம். இவ்வழக்கங்கள் அதிகஜாக்கிறதையாய்த்தடுக்கப்பட வேண்டும்; ஏனென்றால் இவ்விதமாக அனேகநாள் செய்துவந்தால் பையன்களுக்கு வயதான பிறகு அவர்களைப்பூராவும் திருத்துவது முடியாது.

ம-ா-ா-ஸ்ரீ, உபாத்தியாயர் பத்திராதிபரவர்களுக்கு வந்தனம்!

## உபாத்திமைத் தொழிலின் பெருமை

முன் தொடர்ச்சி.

முன்பத்திரிக்கையில் சொன்ன உபாத்தியாயருள் பலருக்கு ஒன்றும் தெரியாதென்பதை அடியில் வரும் நிதர்சனத்தால் விளக்குகிறேன். அதாவது ஒரு கிராம பாடசாலையைப் பரீட்சிக்கும்படி சில நாளுக்குமுன் ஒரு இன்ஸ்பெக்டர் வந்து பரீட்சிக்கும் சமயத்தில் ‘பண்டுமுளைப்பது அரிசியே ஆனாலும்’ என்ற பாட்டைக்கேட்டுப் பின்பு அப்பாடலிலுள்ள பண்டு என்ற பதத்திற்குப் பொருள் என்ன? என்று வினவினர். முதற்பிள்ளை ‘உமி நீங்குதற்குமுன்னே’ என்று பொருள்சொன்னான். மற்றவர்களைக்கேட்க, அவர்களும் அவ்வாறே சொன்னார்கள். பிறகு அந்த இன்ஸ்பெக்டரானவர் அப்பிள்ளைகளைப்பார்த்து, பண்டு என்பது ஒருமொழி, அந்த பதத்திற்குள்ள பொருள்மாத்திரம் சொல்லு என்று கேட்டனர். பின்பு அப்பிள்ளைகட்கு விளங்காமையால் அப்பிள்ளைகளுள் ஒருவன் ‘உமி’ என்றும், மற்றொருவன் ‘நீங்குவதற்கு’ என்றும், வேறு ஒருவன் ‘முன்னே’ என்றும் சொல்லினார்கள். இவர்களுக்கு உண்மையான பொருள் விளங்காமையால் உபாத்தியாயரைக்கேட்போம் என்று கேட்டனர். அவ்வுபாத்தியாயர் அச்சிட்ட அருத்த புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறபடி சொல்லவேண்டும்; சிறு பிள்ளைகள் கலங்கும்படி இவர் தாறுமாறாகப் பல கேள்விகேட்கிறார். பிள்ளைகள் மயங்கித் தனித்தனி ஒவ்வொருபதமாய்ச் சொல்லுகிறார்கள். அது தப்பு. நாம் அப்படிச் செய்யப்படாது; புஸதகத்திலுள்ளபடியே சொல்லவேண்டுமென்று துணிவுகொண்டு மயங்காதவராய், தைரியத்தோடு உரத்த சத்தமாய், ‘உமி நீங்குவதற்குமுன்னே’ என்றுரைத்தனர். இன்ஸ்பெக்டரவர்களுக்கு இது ஆச்சிரியத்தின்மேல் ஆச்சரியமாதலால், அறியாமையின் மிகுதி எவ்வளவாக இருக்கிறது, உபாத்தியாயர் எப்படியோ அப்படியே மாணாக்கரும் என்று உள்ளுறநினைத்துப் புன் சிரிப்புக்கொண்டு வெறுப்பாகத் திரும்பினர். இதைக் கண்ணுற்ற அந்த உபாத்தியாயர் அடுத்து நின்று வேடிக்கைபார்க்க வந்தவர்களிடத்தில் அருத்த புஸ்தகத்தை எடுத்துக்காட்டி, பிள்ளைகள் தப்பாகவா சொன்னார்கள். நான்தானென்ன தப்பாகவா சொன்னேன்? அச்சுப் புஸ்தகத்திலிருக்கிற அருத்தத்தை எடுத்துச்சொல்லியும், ஏளனமாகப் புன் சிரிப்புக்கொண்டும் வெறுத்தும்போயினாரே அல்லது முகாயச்சன்மானமாவது, சொற்சன்மானமாகிலும் சொன்னாரா? இவருக்குமாத்திரம் வேறு



அருத்தம் எங்கிருந்துமுளைக்கும்? எனக்குவரும் சுவரன்மெண்டாரது சன்மானத்தைக் கெடுக்கவல்லவா இவ்வாறு செய்கின்றார் என்றுசொல்லிக்கொண்டார் என்பதேயாம். இந்த நிதர்சனத்தால் இன்னார் மீது தவறு என்பதை நீங்களே யூகித்து அறியலாம். பண்டு என்னும் பதத்திற்கு ‘பழமை,’ ‘முன்’ என்ற இரண்டுபொருள் உண்டென்றும், அவைகளின் பேதம் இன்னதென்றும் தெரிந்துக்கொண்டிராத தன் குற்றத்தை அவ்வுபாத்தியாயர் எவ்வளவும் சிந்தித்தவரல்ல. மேற்செய்யுளில் முளைப்பது அரிசி என்று பதங்கள் வந்தமையால் ‘முன்’ என்னும் பொருளைத்தருகிற அந்த ‘பண்டு’ என்னும் பதத்திற்கு ‘உமி நீங்குவதற்கு’ என்னும் பதங்களை இசையெச்சமாக வருவித்து, ‘பண்டு’ என்னும் பதத்திற்கு ‘உமி நீங்குவதற்குமுன்னே’ என்று உரைகாரர் உரை எழுதியிருக்கிறார்கள். இவ்வளவாக ஆராய்ந்து அறியும் சக்தி இல்லாதவர்கள் அத்தொழிலை நிர்வகிப்பது கிரம்பவும் கஷ்டமாக இருக்குமாகையால் அக்கஷ்டத்தை நிவர்த்திக்கும் பொருட்டும், உபாத்திமைத் தொழிலுக்கு இன்றியமையாது வேண்டுவனவாகிய ஆதாரங்கள், பொது விதிகள், கற்பிக்கும் முறை, சிட்சை, தண்டனை, வெகுமதிமுதலிய உபாத்திமைத்தொழிலின் ஒழுக்கம், சில பலருக்கும், பல சிலருக்கும் தெரியாதிருக்குமாகையால், அக்குறைவுபாட்டை நிவர்த்திக்கும் பொருட்டாக, மானைக்காட்டி, மானைப்பிடிப்பதுபோல உபாத்தியாயராக விருந்து உபாத்தியாயர்கட்கு இன்றியமையாது வேண்டும் ஆதாரங்களையும் முறைகளையும் இம்மாதாந்தபத்திரிகை வாயிலாக உணர்த்தப்படுமாகையால், யாவரும் தாம்செய்யும் சிறு பொருளுதவியால் தம்பெயரையே நாமமாகப்பூண்ட இப்பத்திரிகையானது இடையறாது செழித்து வளரும்படி அன்புபூண்டு ஆதரிப்பார்களென அதிவிநயத்தோடும் வேண்டப்படுகின்றனர்.

**T. C. VENKATARAMANA AIYAR,**
*Schoolmaster,*
*Tirupur.*

திருக்காட்டுப்பள்ளி உபாத்திமார் சங்கத்தின் 13- மீட்டிங் புரொசிடிங்கஸ்

1888ளூ ஜூலை மீ 18உ

## 24 உபாத்திமார்கள் ஆஜரானார்கள்.

எல்லோருடைய கோரிக்கையின்படி ம-ா-ா-ஸ்ரீ துரைசாமி அய்யர் அவர்கள் அக்ராசனாதிபதியாய் வகித்தார்கள்.

1. முதல் நான்கு வகுப்பின கணிதபாடத்தில் சில சந்தேகம் தெளிவிக்கப்பட்டன.

2. 4 வது வகுப்பு கணிதபாடம் (c) இல் ஒரேவிதமான பிராக்ஷனை (Fractions of the same denomination) கூட்டல் என்பது சந்தேகம். டினாமினேட்டர் என்றிருக்கவேண்டும் என்பது சிலர் கட்சி.*

3. 3-வது வகுப்பு கணிதபாடம் (d) இல் குறிப்பிட்ட வகுத்தலுக்கும் 5-வது வகுப்பு (c) இல் குறிப்பிட்ட வகுத்தலுக்கும் தாரதம்மியம் செவ்வையாய்புலப்படவில்லை.

ஷை சந்தேகங்கள் இரண்டையும் ஞானதீப பத்திராதிபர் ஸ்கூல்மாஸ்டர் எடிட்டர்களுக்கு அறிவித்து, அவர்தம்பத்திரிகைகள் மூலமாய் தெளிவித்துக்கொள்வது சங்கத்தாருக்கு உறுதியும் மற்றவர்க்கு உதவியுமாம் என தீர்மானிக்கப்பட்டது.†

4. இச்சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்களின் உபயோகத்துக்காக 13 ஞானதீபமும், 12 ஸ்கூல்மாஸ்டர் பத்திரிகையும் இன்ஸ்பெக்டிங் ஸ்கூல்மாஸ்டர் மூலமாய் வருவித்துக்கொள்ளுகிறதென்று தீர்மானிக்கப்பட்டது.

5. மகராஜபுரம் நாராயணசாமி அய்யரால் சங்கத்தாருக்கு எழுதிக் கொள்ளப்பட்ட அடியில் கண்ட கடிதம் படிக்கப்பட்டது.—

சங்கத்தார்களே!

பாலர் வகுப்புக்குப் பன்னிரண்டு உயிரெழுத்துகள் தெரியவேண்டும். இவ்வகுப்புப் பிள்ளைகளைக்கொண்டு அடுத்த வருஷத்துக்குள் நூறு பக்கமடங்கிய நூலாதாரத்தைச் சாராம்சத்துடன் முடிக்கவேண்டும். வருஷத்தின் 52 வாரத்தில், லீவ் வகையராப்போக மீந்திருப்பது சுமார் 40 வாரம். (கார்தவேயிட் சக்கென்றீடர் மேற்கூறிய எல்கனைக்குக்கு ஆதாரம்) இந்த 40 வாரம் அல்லது 200 நாளில் நடத்தவேண்டியது பக்கம் 100. நாள் ஒன்றுக்குச் சராசரிபக்கம் ½, துவக்கத்தில் அரைக்கால் பக்கம் நடத்துவதாய்வைத்துக் கொள்வோம், முடிவில் முக்காலரைக்கால் பக்கம் நடத்தினுலொழிய வேலைமுடியாது, இது இந்தவகுப்புக்குச் சாத்தியமாய் இல்லை. 2, 3, 4-வகுப்புகளுக்கு சுமார் அறுபது அறுபது பக்கங்கள் ஏற்பட்டிருக்க இதற்குமட்டும் ஏன் நூறு நூறுபக்கம் ஏற்படவேண்டும். சிலகாள் இப்புத்தகத்தில பாதியென்று வழங்கிவந்த (ரூல்) எங்கேபோய் ஒளிந்தது. இதற்குத் தகுந்தசாதகம் கிடைக்கும்படியான முயற்சிதயவுடன் செய்யவேண்டும் இங்கிலீஷ் சக்கென்றீடரும் தாங்கமுடியாத சுமையாக இருக்கிறது. விதாயகம் பிறப்பிக்கச் செய்வது உங்கள் கடமை.

(5) மிடில் ஸ்கூல் எட்மாஸ்டரால் இதன்மேல் தனக்குள்ள அடியிற் கண்ட தகராறும் கேட்கப்பட்டது.

சங்கத்தார்களே!

இதைப்பற்றி நான் வெகுநாளாய் பிரஸ்தாபிக்கவேண்டுமென்று எண்ணியும் இதுவரையில் சந்தர்ப்பம் கிட்ட இல்லை. இதைத் தவிர வேறுசமயம் வாய்க்காது. ஆதலால் இப்போது சொல்லுகிறேன்.

6-வது ஸ்டாண்டர்க்கு 4-வது இங்கிலீஷ் ரீடர் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு என்று புலப்பட இல்லை. இவ்வளவு என்று அறிந்து தெரிவிக்கவேண்டும். குறிக்கப்படாததினுல் புஸ்தகம் முழுவதுந் தானென்று சொல்லுவீர்களாகில் சாத்தியம் அல்ல.



முன்னே மாரல்கிளாஸ் புக்கில் 80 பக்கந்தானே ஏற்பட்டிருந்தது? இப்போது ஒற்றை இரட்டையாகிறது. ஆதலால் ஷை நாராயணசாமி அய்யர் லட்டரோடே இதற்கும் முடிவு தெரிவிக்கவேண்டும்.

மேற்கண்ட விஷயங்களைப் பூர்த்தியாகப் பேசினதன்மேல்; தஞ்சாவூர் முன்சிபல் ஸ்கூல்களின் வாத்திமார் சங்கத்தின் சிக்ரெட்டரி அவர்களைக் கொண்டு இதர சங்கங்களிலிருந்தும், இது விஷயமாய் பிரதிநிதிகள் அழைத்து ஒரு பெரிய சங்கங்கூடி, தக்க ஏற்பாடு செய்விக்கும்படி மேற்படி சிக்ரெட்டரி அவர்களைக் கேட்டுக்கொள்வதாய்த் தீர்மானிக்கப்பட்டது.

7. சிச்ரெட்டரி அய்யாசாமி அய்யரால் சங்கத்தாருக்கு எழுதிக்கொள்ளப்பட்ட அடியில்க்கண்ட லட்டர் படிக்கப்பட்டது.

கிராண்டின் எயிட்கோட் III. 23 செக்ஷனைப்பற்றிச் சில மெம்பர்கள் சில சந்தேகம் கேட்டார்கள். அது என்னுல் தெளிவிக்க முடியாததாயிருப்பதால், உங்கள் முன்னிலையில் அறிக்கையிடலானேன். விதாயகம் சொல்லவேண்டும். வழக்கப்போல் ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்தில் சில ஸ்கூலும், பிப்ரவரி, மார்ச்சிமீ-த்தில் சில ஸ்கூலும் பரீட்சிக்கப்படாமல், இவ்வருஷத்தில் எல்லா ஸ்கூல்களையும் அக்டோபர் மாசத்திலேயே, பரீட்சிக்கிறதென்று பிரசுரமாயிருக்கிறது. முன் பரீட்சையாகிச் சுமார் 6-மாதம் ஆனவுடன் இப்போது பரீக்ஷிக்கப்படும். அதற்கும் ஆகவேண்டியபாடம் முழுவதும் ஆகவேண்டியதா? அல்லது ஆறுமாதத்திற்குறிய அரைவாசி ஆனால் போதுமா என்பது சந்தேகம்.

ஷை III. அதிகாரம் 23-வது செக்ஷனில் குறையும் மாதம் ஒவ்வொன்றுக்கும் 1/12 கிராண்டு பிடிபடும் என்றிருப்பதால், பாடம் ஆகும் அளவிற்குத் தக்கபடி கிராண்டு என்று யோசிக்கவேண்டியதாய் இருக்கிறது. அப்படிக்கில்லாமல் முழுவதும்தான் ஆகவேண்டும் என்போமானுல், 12-மாதத்துக்குப் பிள்ளைகளுக்குத்தான் பயன்படுமா. இதெல்லாம் போகட்டும்; இராப்பகல் உழைத்து குறித்தபாடத்தை முடிப்பவர்களுக்கு 4 கிராண்டு என்றால் யுக்திக்கு ஒவ்வ இல்லையே. இதற்கு விதாயகம் என்ன?

---

* DENOMINATION என்பது அச்சுப்பிழை DENOMINATOR (பின்னத்தின் கீழ் எண்) என்றிருக்கவேண்டுமென்பது எமது துணிவு. உத்தம பொது அளவும் [L. C. M] 5-வது வகுப்புக்கு விதிக்கப்பட்டிருக்கின்றன. 4-வது வகுப்புக்கு அல்ல; இவைகளை அறியாத 4-வது வகுப்பு மாணாக்கர் வெவ்வேறான கீழ எண்களுள்ள பின்னங்களைக் கூட்டலும் கழித்தலும் சாத்தியமன்று. அதமபொதுமடங்கும் [G. C. M.]

† 3-வது வகுப்புக்கு விதிக்கப்பட்ட வகுத்தல் முழு எண்களை முழு எண்களால் வகுத்தால், பின்னங்கள் சம்பந்தப்பட்ட வகுத்தலல்ல. 5-வது வகுப்புக்கு விதிக்கப்பட்டது முழு எண்களைப் பலவித பின்னங்களால் வகுத்தல். இவ்வகுத்தலின் பாகிதம் அல்லது ஈவு முழு எண்ணுயாவது கலப்பெண்ணுயாவது பின்னமாயாவது இருத்தல்வேண்டும். உதாரணம் $63 \div 7/2 = 18$. $63 \div 5/7 = 881/5$. $63 \div 511/2 = 18/73$.

ஷ சங்கதியைப்பற்றி, 4-வது பாராவின் கடைப்பிரதி கிரிச்சபைக்கு அறிவித்தும், 3-வது பாராவில் குறிப்பிட்ட பத்திராதிபர்களுக்கு எழுதியும் தெரிந்துகொள்வதாய்த் தீர்மானிக்கப்பட்டது. ‡

8. சேர்மனுக்கு வந்தனம் அளிக்கப்பட்டது.

## கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்கள்.

ஆங்கிலேய துரைத்தனத்திற்கும், மகம்மதிய துரைத்தனத்திற்கும் உள்ள தாரதம்மியத்தை விரித்துரைப்பது அனவசியம். ஆங்கிலேய அரசாட்சியில் சொத்துக்களுக்கு பயமில்லாமல் அவரவர் வருந்தி இறந்ததைத் தாமே ஆண்டு அனுபவிக்கிறோம். மகம்மதியர் அரசாண்ட நாளில் ராஜாக்கள் பிரஜைகளின் நன்மையைக் கருதாமல் அவர்கள் சொத்தைக் கொள்ளையிட்டனர். மேலும் ஆங்கிலேய துரைத்தனத்தார் சாலைகள்போட்டும், ஆறுகளுக்குப் பாலங்கள் கட்டியும், நியாயஸ்தலங்கள் ஏற்படுத்தியும், வைத்திய சாலைகள் உண்டாக்கியும், இருப்புப்பாதைகள் போட்டும், இன்னு மிவைபோன்ற வெகு நன்மைகள் செய்தும் செய்துகொண்டும் வருவதை நாம் காண்கிறோம். மேற்கூறிய எல்லாவற்றிற்கும் சிறந்ததாகிய வித்தியாபிவிர்த்தியிலும் அதிக சிறத்தையுடன் அனேக இடங்களில் தாங்களே பாடசாலைகள் ஏற்படுத்தியும், அப்படிச் செய்கிறவர்களுக்கு திரவியசகாயம் செய்தும் வருகின்றனர். இங்ஙனம் துரைத்தனத்தார் வித்தியாபிவிர்த்தியில் கவனம் செலுத்துவதற்கு முந்தியே இங்கிலாண்டு முதலான தேசங்களில் கிறிஸ்தவமதம் பரவச் செய்யும்பொருட்டு ஏற்படுத்தியிருக்கும் அனேக சங்கத்தார் இத்தேசத்துக்கு துரைகளை அனுப்பிப் பாடசாலைகள் ஏற்படுத்தியும், ஜனங்கள் கல்வி கற்பதற்கேற்ற வேறு சாதகங்கள் உண்டுபண்ணியும் வந்தனர்கள். இங்கு வியாபாரிகளால் நம் தேசத்திற்கு விளைந்த நன்மை அற்பசொற்பமல்ல. சொற்பகாலத்தில் கல்வியில் தேர்ந்த அனேகர் உண்டாயினது இவர்கள் உழைப்பாலேயே. நெடுங்கடலுக்கப்பால் இருப்பவர்கள் இவ்விதமாக இத்தேசத்தார் வித்தியாபிவிர்த்தியின் பொருட்டு தங்கள் பொருளை செலவழிப்பதின் காரணமென்ன? இந்துமதத்திற்கும் கிறிஸ்தவ மதத்திற்கும் அனேகவித்தியாசங்களுண்டு. அவைகளில் முக்கியமான தென்னவெனில் இதரமதஸ்தர்களை தங்கள் மதத்திற் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்பது இந்துக்கள் கருத்தாயிருக்க எல்லோரும் தங்கள் மதத்தின் சாதகத்தைப் பெரும்படியாய் செய்யவேண்டுமென்பது கிறிஸ்தவர்களின் கோட்பாடு. இவ்விரண்டினுள் எது நல்லதென்றும் எது கெடுதலென்றும் சொல்லப்புகுவது எம் கருத்துமன்று, இப்பத்திரிகைக்கு ஏற்றதுமன்று. இந்த பேதத்தை எடுத்துரைத்ததின் காரணம் ஆங்கிலேய தேசத்திலிருப்பவர்கள் நம் நன்மையைக்கருதி பணம் விரயஞ்செய்வதின் உட்கருத்தை வெளிப்படையாக்குவதற்கேயாம். இந்துக்களுக்கு யாதொரு மதமுமில்லை

---

‡ இந்த விஷயத்தைப்பற்றி வித்தியா விசாரணைத் தலைவர் 1882வருடம் ஜூன்மீ 16வ. உள்ள 338 நம்பர் புரொஸிடிங்கிஸில் விதாயகம் செய்திருக்கிறார்கள். அதாவது, பரீட்சகர் காலக்குறிப்பு இத்தேசித்தே பரீட்சிப்பது நியாயம். (ஞானதீபம்)

162063
Tirunelveli
MS7